# தமிழ்நாடு
# மாநில கூட்டுறவுச் சங்கங்களின்
# தேர்தல் ஆணையம்

## தமிழ்நாடு
## கூட்டுறவுச் சங்கங்களுக்கான
## தேர்தல்கள் *2023*

***2023 – தேர்தல் தொடர்பான சுற்றறிக்கைகள்***
***(2023 – Election Related Circulars)***

தமிழ்நாடு மாநில கூட்டுறவுச் சங்கங்களின் தேர்தல் ஆணையம், சென்னை-18

# 2023-தேர்தல் சுற்றறிக்கைகள்

## பொருளடக்கம்


| வ. எண் | ந.க.எண் | பொருள் | பக்கம் எண் |
|---|---|---|---|
| 1 | ந.க.825/2022/கூதே2 (1) நாள் 29.08.2022 | எதிர்வரும் ஒட்டு மொத்த தேர்தல்கள் 2023 – ஆரம்ப கட்ட நடவடிக்கைகள் (Preliminary Arrangements) மேற்கொள்ளல். | 1 |
| 2 | ந.க.825/2022/கூ.தே2 (2) நாள் 29.08.2022 | எதிர்வரும் ஒட்டு மொத்த தேர்தல்கள் 2023 – (Enmasse Election 2023) – ஆரம்ப கட்ட நடவடிக்கைகள் – சங்கத்துணைவிதி திருத்தங்கள் மேற்கொள்ளுதல். | 5 |
| 3 | ந.க.825/2022/கூதே2 (3) நாள் 29.08.2022 | எதிர்வரும் ஒட்டு மொத்த தேர்தல்கள் 2023 – (Enmasse Election 2023) – ஆரம்ப கட்ட நடவடிக்கைகள் – உறுப்பினர் பட்டியல் சரிசெய்தல் (Purification of Electoral Rolls). | 7 |
| 4 | ந.க.344/2018/கூதே5 நாள் 05.09.2022 | தேர்தலுக்கான நடத்தை விதிகள் (Code of Conduct) அமல்படுத்துதல். | 11 |
| 5 | ந.க.875/2022/கூதே1 (1) நாள் 12.09.2022 | மாநிலத் தேர்தல் அலுவலர்கள் – (State Election Officers) நியமன ஆணை வழங்குதல். | 15 |
| 6 | ந.க.875/2022/கூதே1 (2) நாள் 12.09.2022 | மாவட்டத் தேர்தல் அலுவலர்கள் – (District Election Officers) நியமன ஆணை வழங்குதல். | 19 |
| 7 | ந.க.897/2022/கூதே5 நாள் 26.09.2022 | தேர்தல் தொடர்பான பல்வேறு அலுவலர்களின் சட்டப்பூர்வ கடமைகளும் பொறுப்புகளும். | 54 |
| 8 | ந.க.1153/2020/கூதே3 நாள் 26.09.2022 | விதி எண் 52(18)(a) மற்றும் 53(11)(a)-ன் கீழ் சட்ட ஒழுங்கு எனக் காரணம் காட்டி தேர்தல் நடவடிக்கைகளை நிறுத்துதல். | 63 |
| 9 | ந.க.980/2022/கூதே5 நாள் 06.10.2022 | தேர்தல் நடவடிக்கைளின் போது உரிய பாதுகாப்பு மற்றும் சட்ட ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்ளுதல் (Sufficient Police Babdobast / Protection). | 70 |
| 10 | ந.க.1111/2022/கூதே5 நாள் 20.10.2022 | தேர்தல் நடவடிக்கைகள் குறித்த மனுக்கள் மற்றும் புகார்கள் – வருங்காலங்களில் இம்மாதிரி புகார்களுக்கு இடம் தராது செயல்படுதல். | 75 |
| 11 | ந.க.1157/2022/கூதே5 நாள் 03.11.2022 | கூட்டுறவுச் சங்கங்களின் பணியாளர்கள் மற்றும் அதிகாரிகளை தேர்தல் அலுவலர்களாக (Election Officers) நியமனம் செய்தல். | 81 |

| | | | |
|---|---|---|---|
| 12 | ந.க.540/2018/கூதே2<br>நாள் 04.11.2022 | மாற்றுத் திறனுடையோர் (Differently abled 1983–ம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவு சங்கங்கள் சட்டப்பிரிவு 34 (1) (i) –க்கான திருத்தம். | 85 |
| 13 | ந.க.1265/2022/கூதே3<br>நாள் 14.11.2022 | தேர்தல் ஆணையம் – வலைத்தளப்பக்கம் செயல்பாட்டில் உள்ளது – பயன்படுத்துதல் – தொடர்பாக. | 94 |
| 14 | ந.க.1285/2022/கூதே3<br>நாள் 16.11.2022 | தேர்தல் அறிவிப்பு (Notification) செய்த பின்னர் தேர்தல் அறிவிப்பில் குறிப்பிட்டுள்ள இடங்களை சட்ட விதிகளுக்கு முரணாக மாற்றுதல். | 95 |
| 15 | ந.க.1389/2022/கூதே3<br>நாள் 08.12.2022 | தேர்தல் நடவடிக்கைகள் பற்றிய புகார்கள் – தேர்தல் நடவடிக்கைகளுக்கான காணொளித் தொகுப்பு மேற்கொள்ளுதல் – அறிவுரைகள் வழங்குதல். | 97 |
| 16 | ந.க.1436/2022/கூதே5(2)<br>நாள் 20.12.2022 | நிர்வாகக்குழு உறுப்பினர்கள் மற்றும் தலைவர் / துணைத்தலைவர் தேர்தல்கள் – உள்ளாட்சி அமைப்புகள் மற்றும் பொதுத்தேர்தல்களில் முன்பு பயன்படுத்தப்பட்ட வாக்குப் பெட்டிகள் வழங்குதல். | 100 |
| 17 | ந.க.875/2022/கூதே1(1)<br>நாள் 26.12.2022 | மாநிலத் தேர்தல் அலுவலர்கள் – (State Election Officers)– கைத்தறி துறை – நியமன ஆணை வழங்குதல் | 101 |
| 18 | ந.க.875/2022/கூதே.1(2)<br>நாள் 26.12.2022 | மாநிலத் தேர்தல் அலுவலர்கள் – (State Election Officers)– துணிநூல் துறை – நியமன ஆணை வழங்குதல் . | 104 |
| 19 | ந.க.1462/2022/கூதே5<br>நாள் 28.12.2022 | ஒட்டு மொத்த தேர்தல்கள் 2023 – தேர்தல் தொடர்பான செலவினங்கள் – சங்கங்கள் மேற்கொள்ளுதல். | 107 |
| 20 | ந.க.875/2022/கூதே.1(1)<br>நாள் 28.12.2022 | கைத்தறி துறை – மாவட்ட தேர்தல் அலுவலர் நியமனம் – (District Election Officers) நியமன ஆணை மாற்றம் செய்து வழங்குதல். | 109 |
| 21 | ந.க.875/2022/கூதே.1(2)<br>நாள் 28.12.2022 | பட்டுவளர்ச்சி துறை – மாவட்ட தேர்தல் அலுவலர் நியமனம் மாற்றம் செய்து வழங்குதல். | 113 |
| 22 | ந.க.875/2022/கூதே.1<br>நாள் 06.01.2023 | துணிநூல் துறை – மாவட்ட தேர்தல் அலுவலர் நியமனம் செய்தல் (District Election Officer). | 116 |

| | | | |
|---|---|---|---|
| 23 | ந.க.875/2022/கூதே.1<br>நாள் 06.01.2023 | ஒட்டுமொத்த தேர்தல்கள் 2023 – பார்வையாளர்களுக்கான அதிகார வரம்பு எல்லை **(Observers Jurisdiction)** நிர்ணயம் செய்தல். | 120 |
| 24 | ந.க.1111/2022/கூதே.5<br>நாள் 10.01.2023 | கூட்டுறவுச் சங்க தேர்தல்கள் 2023 – மாண்பமை சென்னை உயர்நீதிமன்றம் மற்றும் அதன் மதுரை அமர்வு, கூட்டுறவு வழக்குகளுக்கான சிறப்பு மண்டலக் குழுக்கள் முன்பான தேர்தல் நடவடிக்கைகள் குறித்த மனுக்கள் மற்றும் புகார்கள் வருங்காலங்களில் இம்மாதிரி புகார்களுக்கு இடம்பெறாமல் செயல்படுதல் – **மீண்டும் அறிவுரை வழங்குதல்.** | 128 |
| 25 | ந.க.875/2022/கூதே.1 (1)<br>நாள் 11.01.2023 | பாலுற்பத்தி மற்றும் பால்பண்ணை மேம்பாட்டுத் துறை – புதிய 6 மாவட்டங்களுக்கான மாவட்ட தேர்தல் அலுவலர்கள் (District Election Officers) – தொடர்பாக. | 136 |
| 26 | ந.க.875/2022/கூதே.1 (2)<br>நாள் 11.01.2023 | சமூகநலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை – புதிய 6 மாவட்டங்களுக்கான மாவட்ட தேர்தல் அலுவலர்கள் நியமனம் (District Election Officers) **மாற்றம் செய்து ஆணை வழங்குதல்.** | 139 |
| 27 | ந.க.875/2022/கூதே.1 (3)<br>நாள் 11.01.2023 | தொழில் வணிகத்துறை – மாவட்ட தேர்தல் அலுவலர்கள் நியமனம் (District Election Officers) **மாற்றம் செய்து ஆணை வழங்குதல்.** | 143 |
| 28 | ந.க.875/2022/கூதே.1 (4)<br>நாள் 11.01.2023 | ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் துறை – மாவட்ட தேர்தல் அலுவலர்கள் நியமனம் (District Election Officers) **மாற்றம் செய்து ஆணை வழங்குதல்.** | 147 |
| 29 | ந.க.344/2018/கூதே.5<br>நாள் 11.01.2023 | கூட்டுறவுச் சங்க தேர்தல்கள் 2023 – தேர்தலுக்கான நடத்தை விதிகள் **(Code of Conduct)** அமல்படுத்துதல் – **சில தெளிவுரைகள் வழங்குதல்.** | 150 |

| | | | |
|---|---|---|---|
| 30 | ந.க.1111/2022/கூதே.5 நாள் 11.01.2023 | கூட்டுறவுச் சங்க தேர்தல் 2023– தேர்தல் புகார் மனு பதிவேடு (**Register for Election Complaint Petitions**) பராமரித்தல். | 151 |
| 31 | ந.க.134/2023/கூதே.3 நாள் 25.01.2023 | கூட்டுறவுச் சங்க தேர்தல் 2023– பள்ளி கட்டிடங்களை தேர்தல் நடவடிக்கைகளுக்கு பயன்படுத்துதல் – தொடர்பாக. | 155 |
| 32 | ந.க.135/2023/கூதே5 நாள் 01.02.2023 | கூட்டுறவுச் சங்கங்களின் தேர்தல்கள் – தேர்தல் ஆவணங்கள் ஒப்படைத்தல், பெறுதல், பாதுகாத்தல் மற்றும் அழித்தல் – அறிவுரைகள் வழங்குதல் – தொடர்பாக | 157 |
| 33 | ந.க.875/2022/கூதே1 நாள் 01.02.2023 | கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் – மாவட்ட தேர்தல் அலுவலர்கள் நியமனம் (District Election Officers) **மாற்றம் செய்து ஆணை வழங்குதல்**. | 159 |
| 34 | ந.க.136/2023/கூதே.5 நாள் 03.02.2023 | கூட்டுறவுச் சங்கங்களின் தேர்தல்கள் – நிர்வாகக்குழு உறுப்பினர்கள் மற்றும் தலைவர்/துணைத்தலைவர் தேர்தல்கள்– வாக்களர் –அடையாளம் (Voter Identity) அறிவுரைகள் வழங்குதல் – தொடர்பாக. | 166 |
| 35 | ந.க.1436/2022/கூதே5 நாள் 07.02.2023 | கூட்டுறவுச் சங்கங்களின் தேர்தல்கள் – சங்க நிர்வாகக்குழு உறுப்பினர்கள் மற்றும் தலைவர்/துணைத்தலைவர் தேர்தல்கள் – தேவைப்படும் வாக்குப்பெட்டிகளை மாவட்ட நிர்வாகம் வழங்கிட உரிய நடவடிக்கை மேற்கொள்ளுதல் | 168 |
| 36 | ந.க.875/2022/கூதே1 நாள் 07.02.2023 | கூட்டுறவுச் சங்கங்களின் தேர்தல்கள் – எதிர்வரும் 2023 ஒட்டுமொத்த தேர்தல் நடவடிக்கைகளை ஒருங்கிணைத்தல் – கூட்டுறவுச் சங்கங்களின் மண்டல இணைப்பதிவாளர்களின் சேவைகளை பயன்படுத்தல் | 170 |
| 37 | ந.க.77/2023/கூதே3 நாள் 07.02.2023 | கூட்டுறவுச் சங்கங்களின் தேர்தல்கள் 2023 – நிர்வாகக்குழு உறுப்பினர்கள் தேர்தல்கள் – வாக்களிப்பது, புகார்/ஆலோசனை தெரிவிப்பது குறித்து சுவரொட்டிகள் வெளியிடுதல் – தொடர்பாக. | 175 |

| | | | |
|---|---|---|---|
| 38 | ந.க.137/2023/கூதே5<br>நாள் 10.02.2023 | கூட்டுறவுச் சங்கங்களின் தேர்தல்கள் 2023 – தமிழ்நாடு மாநில கூட்டுறவுச் சங்கங்ளின் தேர்தல் ஆணையம் – அச்சு மற்றும் மின்னணு ஊடகங்களின் செய்தியாளர்களுக்கு தனியான அடையாள அட்டை வழங்குதல் தொடர்பாக. | 181 |
| 39 | ந.க.223/2023/கூதே3<br>நாள் 10.02.2023 | கூட்டுறவுச் சங்கங்களின் தேர்தல்கள் 2023 – நிர்வாகக்குழு உறுப்பினர்கள் மற்றும் தலைவர்/துணைத்தலைவர் தேர்தல்கள் – வாக்குச்சாவடிக்குத் தேவைப்படும் வாக்குப்பதிவுப் பொருட்கள் (Polling Materials) ஏற்பாடு செய்தல் – அறிவுரைகள் வழங்குதல் – தொடர்பாக. | 184 |
| 40 | ந.க.1436/2022/கூதே5<br>நாள் 13.02.2023 | கூட்டுறவுச் சங்கங்களின் தேர்தல்கள் 2023 – நிர்வாகக்குழு உறுப்பினர் மற்றும் தலைவர்/துணைத்தலைவர் தேர்தல்கள் – வாக்குச்சாவடிக்குத் தேவையான பொருட்கள் (Polling Materials) வாக்குச்சீட்டுகள் வழங்குதல் – தொடர்பாக. | 189 |
| 41 | ந.க.252/2023/கூதே1<br>நாள் 13.02.2023 | கூட்டுறவுச் சங்கங்களின் தேர்தல்கள் 2023 – நிர்வாகக்குழு உறுப்பினர் மற்றும் தலைவர்/துணைத்தலைவர் – தேர்தல் நடவடிக்கைகளை Whatsapp மூலம் கண்காணித்தல் – அலுவல் ரீதியான வாட்ஸ் ஆப் குழு (Whatsapp Group) உருவாக்குதல் – தொடர்பாக. | 197 |
| 42 | ந.க.250/2023/கூதே3<br>நாள் 14.02.2023 | கூட்டுறவுச் சங்கங்களின் தேர்தல்கள் 2023 – நிர்வாகக்குழு உறுப்பினர் மற்றும் தலைவர்/துணைத்தலைவர் தேர்தல்கள்– வாக்குச்சாவடிக்குத் தேவையான பொருட்கள் (Polling Materials) தாள் முத்திரை வழங்குதல் – தொடர்பாக. | 199 |
| 43 | ந.க.251/2023/கூதே3<br>நாள் 14.02.2023 | கூட்டுறவுச் சங்கங்களின் தேர்தல்கள் 2023 – நிர்வாகக்குழு உறுப்பினர்கள் மற்றும் தலைவர்/துணைத்தலைவர் தேர்தல்கள் – வாக்காளர் பட்டியல் அலுவலர் (Electoral Officer) மற்றும் தேர்தல் அலுவலர் (Election Officer) ஆகியோருக்கு பயிற்சி (Training) அளித்தல்– தொடர்பாக. | 201 |

| | | | |
|---|---|---|---|
| 44 | ந.க.259/2022/கூதே5<br>நாள் 14.02.2023 | கூட்டுறவுச் சங்கங்களின் தேர்தல்கள் 2023 – நிர்வாகக்குழு உறுப்பினர்கள் மற்றும் தலைவர்/துணைத்தலைவர் தேர்தல்கள் – வாக்காளர் பட்டியல் அலுவலர் (Electoral Officer) மற்றும் தேர்தல் அலுவலர் (Election Officer) நியமனம் பற்றிய அறிவுரைகள் வழங்குதல் – தொடர்பாக. | 203 |
| 45 | ந.க.875/2022/கூதே1<br>நாள் 14.02.2023 | கூட்டுறவுச் சங்கங்களின் தேர்தல்கள்– நிர்வாகக்குழு உறுப்பினர்கள் மற்றும் தலைவர்/துணைத்தலைவர் தேர்தல்கள் – துறை ஒருங்கிணைப்பாளர் (Coordinator) ஒருவரை ஆணையத்திற்கு அனுப்புதல் (Depute) – தொடர்பாக. | 208 |
| 46 | ந.க.773/2023/கூதே1<br>நாள் 14.06.2023 | கூட்டுறவுச் சங்கங்களின் தேர்தல்கள் – ஒட்டுமொத்த தேர்தல்கள் 2023 – மாண்பமை சென்னை உயர்நீதிமன்றம் முன்பான W.P.No.5171/2023–ன் மீதான ஆணை – **ஆறுமாதகால அவகாசத்திற்குள் உறுப்பினர் பட்டியல் சரிசெய்த பின்னர் ஆணையம் தேர்தல்கள் நடத்துதல்** – உடனடி நடவடிக்கைகள் மேற்கொள்ளுதல் – தொடர்பாக. | 210 |
| 47 | ந.க.773/2023/கூதே1<br>நாள் 11.08.2023 | கூட்டுறவுச் சங்கங்களின் தேர்தல்கள் – ஒட்டுமொத்த தேர்தல்கள் 2023 – கூட்டுறவு (வீட்டுவசதி) சங்கங்களின் உறுப்பினர்களின் ஆதார் அட்டை மற்றும் குடும்ப அட்டை விவரங்களைப் பெறுவதிலான இடர்பாடுகள் – – இவ்விவரங்களைப் பெற வழிவகை செய்ய கோரப்பட்டது – தொடர்பாக | 216 |
| 48 | ந.க.1143/2023/கூதே1<br>நாள் 19.09.2023 | கூட்டுறவுச் சங்கங்களின் தேர்தல்கள் – ஒட்டுமொத்த தேர்தல்கள் 2023 – மாண்பமை சென்னை உயர்நீதிமன்றம் முன்பான W.P.No.5171–2023–ன் மீதான ஆணை – **ஆறுமாதகால அவகாசத்திற்குள் உறுப்பினர் பட்டியல் சரிசெய்த பின்னர் ஆணையம் தேர்தல்கள் நடத்துதல்** – புதிய உறுப்பினர் சேர்க்கை பொறுத்த வரையில் கவனத்தில் கொள்ள வேண்டியவை – தோடர்பாக | 219 |

## தமிழ்நாடு மாநில கூட்டுறவுச் சங்கங்களின் தேர்தல் ஆணையம், சென்னை – 18.

**அனுப்புநர்**

திரு. தயானந்த் கட்டாரியா, இ.ஆ.ப.,
ஆணையர்,
தமிழ்நாடு மாநில கூட்டுறவுச்
சங்கங்களின் தேர்தல் ஆணையம்,
273 அண்ணாசாலை, தேனாம்பேட்டை,
சென்னை – 600 018.

**பெறுநர்**

1. கூட்டுறவு சங்கங்களின் பதிவாளர்,
2. அனைத்து செயற்பதிவாளர்கள்.

**ந.க.825/2022/கூதே2(1)** **நாள்: 29.08.2022**

**ஐயா/அம்மையீர்,**

பொருள்: கூட்டுறவு தேர்தல்கள் – எதிர்வரும் ஒட்டுமொத்த தேர்தல்கள் 2023 – (Enmasse Election 2023 ) - ஆரம்ப கட்ட நடவடிக்கைகள் (Preliminary Arrangements) மேற்கொள்ளல் – தொடர்பாக.

******

1) கூட்டுறவுச் சட்டப்பிரிவு 33(10)(a)-ன் படி தேர்ந்தெடுக்கப்பட்ட நிர்வாகக்குழுவின் பதவிக்காலம் 5 ஆண்டுகள் என்ற முறையில் ஒட்டு மொத்த தேர்தல் 2013-க்கு அடுத்ததாக ஒட்டுமொத்த தேர்தல் – 2018 (Enmasse Election 2018) என்ற வகையில் 18806 சங்கங்களுக்கான தேர்தல்களை ஆணையம் நடத்தியது. இவற்றில் பெரும் எண்ணிக்கையிலான (18,468) சங்கங்கள் தொடக்க நிலை சங்கங்களாகும்.

2) தற்போது 2018 ஒட்டுமொத்த தேர்தல்கள் நடைபெற்று அடுத்து வரும் 2023 ஆம் ஆண்டில் 5 ஆண்டுகள் முடிவுறும் நிலையில் ஒட்டு மொத்த தேர்தல் 2023 – ஐ (Enmasse Election 2023) ஆணையம் நடத்த வேண்டியுள்ளது.

3) கூட்டுறவு சட்டப்பிரிவு 33(11)(a)ன்படி வெளிச்செல்லும் சங்க நிர்வாகக்குழுவின் பதவிக்காலம் முடிவுறும் போது புதிதாக தேர்ந்தெடுக்கப்படும் நிர்வாகக்குழு உறுப்பினர்கள் பதவி பொறுப்பேற்கும் வகையில், அச்சங்கத் தேர்தல்கள் நடத்தப்பட வேண்டும் என்ற சட்டப்பூர்வ கட்டளை உள்ளது. இவ்வகையில் 2018 ஒட்டு மொத்த தேர்தல்கள் நடை பெற்றதில் பெரும் எண்ணிக்கையில் உள்ள முதற்கட்ட சங்கங்களின் (Primaries I$^{st}$ Phase) பதவிக்காலம் ஏப்ரல் 2023 முதல் ஆகஸ்ட் 2023 வரையான காலத்தில் முடிவடையவுள்ளதால் அதற்கு முன்பாகவே அச்சங்கங்களுக்கான தேர்தல்களை 2023-ம் ஆண்டில் நடத்த வேண்டியுள்ளது.

4) குறிப்பாக ஆணையம் தேர்தல் திட்ட அறிவிப்பு (Notification) செய்து தலைவர் / துணைத்தலைவர் தேர்தல் முடிவடையும் வரை மேற்கொள்ள வேண்டிய பல்வேறு தேர்தல் நடவடிக்கைகளுக்கு (Process) குறைந்தது 30 நாள் சட்டபூர்வ கால இடைவெளி தேவைப்படுகிறது. எனவே 2023 தேர்தலுக்கான ஆரம்பகட்ட நடவடிக்கைகளை தொடர்புடைய சங்கங்களின் நிர்வாக பொறுப்பிலுள்ள துறைத்தலைவர்கள் விரைந்து மேற்கொள்ள ஆணையம் அன்புடன் கேட்டுக்கொள்கிறது.

5) **ஆரம்பக்கட்ட பல்வேறு நடவடிக்கைகளில் அடியிற்கண்ட நடவடிக்கைகள் மிக முக்கியமானதாகும்.**

(i) கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் மற்றும் 14 இதர செயற்பதிவாளர்களிடமிருந்து தேர்தல் நடத்த வேண்டிய சங்கங்களின் பட்டியல் பெறுதல்.

(ii) தொடக்க நிலை, மத்திய மற்றும் தலைமை கூட்டுறவுச் சங்கங்களுக்கான 3 அடுக்குமுறை தேர்தல் நடத்த தேர்தல் திட்டம் தயாரித்தல்.

(iii) உறுப்பினர் பட்டியல், வாக்காளர் பட்டியல் சரியான முறையில் தயாரித்தலை ஒழுங்குப்படுத்துதல்.

(iv) தேர்தல் தொடர்பான துணை விதித்திருத்தங்கள் மேற்கொள்ளுதல்.

(v) தேவைப்படும் வாக்குப்பதிவு மையங்கள் எண்ணிக்கை அதற்கான இடங்கள் போன்றவற்றை முன்கூட்டியே திட்டமிடல்.

(vi) அதிக எண்ணிக்கையிலுள்ள தொடக்க கூட்டுறவுச் சங்கங்களின் தேர்தல்களை ஒரே நேரத்தில் நடத்தப்படலாம் என்பதைக் கருத்திற்கொண்டு வாக்காளர் பட்டியல் அலுவலர் மற்றும் தேர்தல் அலுவலர்கள் தேவை கணக்கிடுதல்.

(vii) தேர்தல் நடத்துவதற்கு சங்கத்திற்குத் தேவைப்படும் வாக்குப்பெட்டிகள், வாக்குச்சீட்டுகள் மற்றும் தேவையான இதர பொருட்கள் (Polling Materials) தேவையினை அறிதலும், அதற்கான ஏற்பாடுகள் ஒருங்கிணைத்தலும்.

(viii) மாவட்ட தேர்தல் அலுவலர்களுக்கு உரிய வழிகாட்டு நெறிமுறைகள், அறிவுரைகள் வழங்குதல்.

(ix) தேர்தல் பணியில் ஈடுபடும் அனைத்து அலுவலர்களுக்கும் தேர்தல் நடத்துதல் தொடர்பான பயிற்சி அளித்தல்.

6) கூட்டுறவு சட்டப்பிரிவு 3-ன் படி பதிவாளர்களாக நியமிக்கப்பட்டுள்ள கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் (RCS) உள்ளிட்ட இதர துறைத்தலைவர்கள், (Functional Registrar) அவர்களது நிர்வாகத்தின் கீழ் வரும் (Administrative Control) சங்கங்களைப் பொறுத்தவரை மாநில தேர்தல் அலுவலர்களாக (State Election Officer) விதி எண் 52-A(3)-ன்கீழ் ஆணையம் நியமிக்கிறது.

7) இவ்வாறு நியமிக்கப்படும் மாநிலத் தேர்தல் அலுவலர்கள் 1988 ம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்களின் விதிகள் விதி எண். 52-A(3)ன்படி ஆணையத்தின் கட்டுப்பாடு,

மேற்பார்வை, ஒழுங்குமுறைக்குட்பட்டு, (Control, Supervision and Discipline) அவரவர் கட்டுப்பாட்டின் கீழ் வரும் சங்கங்களின் வாக்காளர் பட்டியல் தயாரித்தல், வெளியிடுதல், சங்கத் தேர்தல் பணிகளை ஒருங்கிணைத்தல் மற்றும் மேற்பார்வை செய்தல் என்று கூறப்பட்டுள்ளது. ஒட்டுமொத்த தேர்தல் 2023-ஐ சுதந்திரமாகவும், நேர்மையாகவும், வெளிப்படையாகவும், சட்டவிதிகளுக்குட்பட்டும், (Free, Fair, Transparent and in accordance with act and rules) எவ்வித குறைபாடுகளுக்கும், புகார்களுக்கும் இடம்தராது, சிறப்பாகவும், சீராகவும் ஆணையம் நடத்திட கூட்டுறவுச் சங்கங்கள் தொடர்பான துறைத்தலைவர்கள் மற்றும் மாநில தேர்தல் அலுவலர்கள் என்ற முறையில் ஆணையத்துடன் இணைந்து செயலாற்றிட ஆணையம் தங்களை அன்புடன் கேட்டுக்கொள்கிறது.

இவ்வகையில் தங்களால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை குறித்து (Action taken report) 30.09.2022-க்குள் ஆணையத்திற்கு அறிக்கை அனுப்பிடவும் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

ஓம்/-
ஆணையர்

ஆணையருக்காக
29.08.2022

**Encl:**

Extract of the Provisions as referred to in the letter.

**நகல்:**

1. தலைமைச் செயலாளர், புனித ஜார்ஜ் கோட்டை, சென்னை-9
2. அரசு கூடுதல் தலைமை செயலாளர், கால்நடை பராமரிப்பு, பால்வளம் மற்றும் மீன்வளம் , மீனவர் நலத்துறை.
3. அரசு கூடுதல் தலைமை செயலாளர், சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை.
4. அரசு முதன்மை செயலாளர், கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு துறை.
5. அரசு முதன்மை செயலாளர், கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த்துறை.
6. அரசு முதன்மை செயலாளர், வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சித் துறை.
7. அரசு செயலாளர், குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை.
8. அரசு செயலாளர், வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை.
9. அலுவலக இருப்பு கோப்பு 2022.

## ANNEXURE

## PROVISIONS UNDER THE TNCS ACT, 1983 AND TNCS RULES 1988 AS REFERRED TO IN THE LETTER 825/2022/CE2 (1) DATE 29.08.2022

| | |
|---|---|
| Sec. 33(10) (a) : | The term of office of a member who is elected to any board constituted under this Act, the rules or the by-laws shall be five years |
| Sec. 33(11) (a) : | Not with standing anything contained in this Act, election of members to the board of a registered cooperative society shall be conducted before the expiry of the term of office of the members of the board so as to ensure that the newly elected members of the board assume office immediately on the expiry of the term of office of members of the outgoing board. |
| Sec. 33(11) (b) : | The superintendence, direction and control of the preparation of the electoral rolls for, and conduct of, all election to a cooperative society shall vest in the Tamil Nadu State Cooperative Societies Election Commission constituted under section 33-A. |
| Rule 52 A (3) | The Election Commission may appoint the officers appointed as the Registrars of Cooperative Societies by the Government under section 3 of the Act as the State Election Officers in respect of the Cooperative Societies under their respective administrative control. Subject to the superintendence, direction and control of the Election Commission, the State Election Officers, shall coordinate and supervise the preparation and publication of voters list and also the conduct of elections of members of the boards and the office bearers of the boards of societies under their respective administrative control. They shall also perform such other functions as may be entrusted to him by the Election Commission from time to time. |

**தமிழ்நாடு மாநில கூட்டுறவுச் சங்கங்களின் தேர்தல் ஆணையம், சென்னை – 18.**

அனுப்புநர்
திரு. தயானந்த் கட்டாரியா, இ.ஆ.ப.,
ஆணையர்,
தமிழ்நாடு மாநில கூட்டுறவுச் சங்கங்களின்
தேர்தல் ஆணையம்,
273 அண்ணாசாலை, தேனாம்பேட்டை,
சென்னை – 600 018.

பெறுநர்
1. கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர்,
2. அனைத்து செயற்பதிவாளர்கள்.

ந.க.825/2022/கூ.தே2(2) நாள்: 29.08.2022

ஐயா/அம்மையீர்

பொருள்: கூட்டுறவு தேர்தல்கள் – எதிர்வரும் ஒட்டுமொத்த தேர்தல்கள் 2023 (Enmasse Election 2023) - ஆரம்ப கட்ட நடவடிக்கைகள் – **சங்கத்துணைவிதி திருத்தங்கள் மேற்கொள்ளுதல் – தொடர்பாக.**

பார்வை
1) ஆணையத்தின் கடிதம் ந.க.825/2022/கூ.தே 2(1) நாள்: 29.08.2022.
2) ஆணையத்தின் கடிதம் ந.க.499/2021/கூ.தே2 நாள் 22.04.2021

******

கூட்டுறவுச் சங்கங்களுக்கான ஒட்டுமொத்த தேர்தல் 2023 (Enmasse Election) நடவடிக்கைகளை 2023-ல் தொடங்க வேண்டியது பற்றியும், அதற்காக மேற்கொள்ள வேண்டிய பொதுவான நடவடிக்கைகள் பற்றியும் பார்வை (1)ல் கண்ட ஆணையத்தின் கடிதத்தில் விவரிக்கப்பட்டுள்ளது.

அவற்றில் சங்கத்தின் தேர்தல் தொடர்பான துணைவிதிகள் சட்டவிதிகளுக்குட்பட்டு இருப்பதும் தேவையான நேர்வுகளில் துணை விதித்திருத்தங்கள் மேற்கொள்வதும் மிக அவசியமானதொன்றாகும்.

பல சங்கங்களின் தேர்தல் தொடர்பான துணைவிதிகள் 1983-ம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்களின் சட்டம் மற்றும் 1988-ம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவு சங்கங்களின் விதிகள்படி இல்லை, மற்றும் உறுப்பினர்கள் சேர்க்கைக்கான தகுதிகள், உறுப்பினர் சேர்த்தல், நீக்குதல் மற்றும் நிர்வாகக்குழு உறுப்பினர்கள் எண்ணிக்கை மற்றும் அமைப்பு (Constitution) போன்றவை தொடர்பாக சட்ட விதிகளை அனுசரித்து துணைவிதித் திருத்தங்கள் (Bylaw Amendments) மேற்கொள்ளப்படவில்லை என்பது போன்ற காரணங்களின் அடிப்படையில் அச்சங்கங்களின் தேர்தல் நடவடிக்கைகளை ரத்து செய்து மாண்பமை நீதிமன்றங்கள் ஆணை பிறப்பித்துள்ளன.

இவ்வாறு தேர்தல் நடவடிக்கைகள் ரத்து செய்யப்பட்டு சங்கத் தேர்தல் நடவடிக்கைகள் நிறுத்தப்படும் நிலையில், இதற்காகும் நீதிமன்ற வழக்குச் செலவுகளுடன், அதுவரை தேர்தல் நடவடிக்கைக்காகச் செலவிடப்பட்ட மனித சக்தி, நேரம், பணச்செலவு (Man power, Time, Cost) ஆகியவற்றுடன் மீண்டும் தேர்தல் நடத்துவதற்காகும் செலவினங்களையும் சங்கம் மேற்கொள்ள வேண்டிய நிலை உருவாகிறது. இது முற்றிலும் தவிர்க்கப்பட வேண்டியதும், தவிர்க்கப்பட கூடியதும் ஆகும் என ஆணையம் கருதுகிறது.

எனவே இம்மாதிரியான நிலைகள் ஏற்படாது தவிர்த்திட சங்க நிர்வாகக்குழு உறுப்பினர்கள் மற்றும் தலைவர்/துணைத் தலைவர் தேர்தல்கள் குறித்தும், மற்றும் உறுப்பினர்கள் சேர்த்தல், நீக்குதல் தொடர்பான சங்கத்தின் அனைத்து துணை விதிகளும் கூட்டுறவு சட்டவிதிகள்படி இருத்தல் உடனடியாக உறுதி செய்யப்பட வேண்டும் என்று ஆணையம் விரும்புகிறது.

பார்வை (2)ல் கண்ட ஆணையத்தின் கடிதத்தில் (நகல் இணைப்பு) இதுப்பற்றி ஆணையம் ஏற்கெனவே தெரிவித்துள்ளது என்பதையும் தங்களது கவனத்திற்கு கொண்டுவர ஆணையம் விரும்புகிறது.

துணைவிதித் திருத்தங்கள், பேரவைக் கூட்டத்தில் (General Body) மேற்கொள்ளப்படுவதால், அதற்கான கால அவகாசத்தை அனுசரித்து, துணைவிதி திருத்தங்கள் மேற்கொள்ள வேண்டிய நேர்வுகளில் அவற்றினை உடனடியாக எடுத்திட அவற்றிற்குப் பொறுப்பான அலுவலர்களுக்குத் தக்க அறிவுரைகள் வழங்கிட கேட்டுக் கொள்ளப்படுகிறது.

தவிரவும் கூட்டுறவு தேர்தல் தொடர்பான அனைத்து துணை விதித் திருத்தங்களும் தங்களது நிர்வாகக் கட்டுபாட்டில் உள்ள அனைத்து சங்கங்களிலும் மேற்கொள்ளப்பட்டுவிட்டன என்ற நிறைவு அறிக்கையினை (Completion Report) 27.10.2022-க்குள் அத்துணைவிதி திருத்தங்களுக்குப் பொறுப்பான அலுவலர்களிடமிருந்து பெற்று ஒட்டுமொத்த அறிக்கையினை ஆணையத்திற்கு 31.10.2022-க்குள் அனுப்பவும் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

இப்பணி சட்டபூர்வமான பணி என்பதினாலும், விரைவில் 2023 ஒட்டுமொத்த தேர்தலை எதிர் நோக்குவதாலும் நீதிமன்ற நடவடிக்கைகளுக்கும் வழக்குகளுக்கும் அவை உட்படும் வாய்ப்புகள் இருப்பதினாலும், இப்பணிகளை முடித்திட அறிவுறுத்திடவும், தவறும் அலுவலர்கள் மீது தக்க நடவடிக்கை மேற்கொள்ளவும், தங்களால் இது தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை விபரத்தினை 15.09.2022-க்குள் ஆணையத்திற்கு தெரிவித்திடவும் அன்புடன் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

ஒம்/-

ஆணையர்

ஆணையருக்காக

29.08.2022

நகல்: இருப்பு கோப்பு

**தமிழ்நாடு மாநில கூட்டுறவுச் சங்கங்களின் தேர்தல் ஆணையம், சென்னை – 18**

**அனுப்புநர்**

திரு.தயானந்த்கட்டாரியா, இ.ஆ.ப.,

ஆணையர்,

தமிழ்நாடுமாநிலகூட்டுறவுச்சங்கங்களின்

தேர்தல்ஆணையம்,

273, அண்ணாசாலை, தேனாம்பேட்டை,

சென்னை – 600 018.

**பெறுநர்**

1) கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர்,

2) அனைத்து செயற்பதிவாளர்கள்

**ந.க.825/2022/கூ.தே.2(3)** **நாள்: 29.08.2022**

**ஐயா/அம்மையீர்,**

**பொருள்:** கூட்டுறவுச் சங்கத் தேர்தல்கள் – எதிர்வரும் ஒட்டுமொத்த தேர்தல்கள் 2023 (Enmasse Election-2023) – ஆரம்பகட்ட நடவடிக்கைகள் – **உறுப்பினர் பட்டியல் சரிசெய்தல் (Purification of Electoral Rolls)** -தொடர்பாக.

**பார்வை:**
1) ஆணையக்கடிதம் ந.க825/2022/கூ.தே.2(1)நாள்: 29.08.2022
2) ஆணையக்கடிதம் ந.க.327/2013/கூ.தே.5 நாள்:19.03.2013
3) ஆணையக்கடிதம் ந.க.328/2013/கூ.தே.5 நாள்:19.03.2013
4) ஆணையக்கடிதம் ந.க.329/2013/கூ.தே.5 நாள்:19.03.2013, 10.06.2014,21.04.2015
5) ஆணையக்கடிதம் ந.க.931/2013/கூ.தே.5 நாள்:14.08.2014
6) ஆணையக்கடிதம் ந.க.1698/2014/கூ.தே.5 நாள்:25.09.2014
7) ஆணையக்கடிதம் ந.க.807/2013/கூ.தே.5 நாள்:16.06.2016
8) ஆணையக்கடிதம் ந.க.1062/2021/கூ.தே.5 நாள்:01.10.2021
9) ஆணையக்கடிதம் ந.க.1063/2021/கூ.தே.5 நாள்:01.10.2021

--//--

1) பார்வை(1)-ல்கண்டகடிதத்தில்கூட்டுறவுச்சங்கங்களுக்கானஒட்டுமொத்தேர்தல் 2023-ல் தொடங்க இருப்பதையும் அது தொடர்பாக மேற்கொள்ள வேண்டிய ஆரம்பகட்ட நடவடிக்கைகள் பற்றியும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

2)இவ்வகையில் தேர்தல் முன்னேற்பாடுகளில் மிகமிகமுக்கியமானது சங்க உறுப்பினர் பட்டியல் சரியான முறையில் சங்கத்தால் தயாரிக்கப்படுவதை உறுதி செய்வதாகும்.

F:\Sivakami\Member List Voter List.docx

3) 1988-ம் ஆண்டு தமிழ்நாடு மாநில கூட்டுறவு சங்கங்களின் (இனிச்சட்டம்) பிரிவு 33-A-ன் கீழ் அமைக்கப்பட்ட தமிழ்நாடு கூட்டுறவு சங்கங்களின் தேர்தல் ஆணையம் (இனி ஆணையம்) பிரிவு 33 (11)(b).ன் படி மாநிலத்தில் உள்ள கூட்டுறவுச் சங்கங்களின் தேர்தல்களை நடத்தும் அதிகாரம் படைத்தாகும்.

4)ஆணையம் கூட்டுறவு சங்கத் தேர்தல்களை சுதந்திரமாகவும், நியாயமாகவும், வெளிப்படைத்தன்மையுடனும் சட்ட விதிகளுக்குட்பட்டும் (Free, Fair, Transparent, as per Act and Rules) நடத்த வேண்டியது சட்டபூர்வ கட்டளையாகும்.

5) தவிரவும் பிரிவு 33 (11)(b).ல் குறிப்பிட்டுள்ளவாறு வாக்காளர் பட்டியல்கள் தயார் செய்தல் (Preparation of the Electoral Rolls) அவற்றுள் மிக முக்கிமானதாகும்.

6) மேலும் 1988-ம் ஆண்டு தமிழ் நாடு கூட்டுறவு சங்க விதிகள் (இனி விதி) விதி எண் 52-A (3) மற்றும்52-A (4) ன் படி ஆணையத்தால் நியமிக்கப்படும் துறைத்தலைவர்களாக உள்ள மாநிலத் தேர்தல் அலுவலர்கள் (State Election Officers) மற்றும் மாவட்டத் தேர்தல் அலுவலர்கள் ஆகியோர், சங்கங்களின் வாக்காளர் பட்டியல் தயாரித்தல் மற்றும் வெளியிடுதல், (Preparation and publication) ஒருங்கிணைத்தல் மற்றும் கண்காணித்திட (Coordination and Supervision) வேண்டும் என்றம் குறிப்பாகக் கூறப்பட்டுள்ளது.

7) இவ்வகையில் வாக்காளர் பட்டியல் தேர்தல் நடத்துவதற்கான மிக முக்கியமான அடிப்படை ஆதார ஆவணமாக உள்ளதென்பதையும் எனவே தேர்தலுக்கான வாக்காளர் பட்டியல் தயாரித்தல் மிக முக்கியமான பணியாகும், என்பதையும் மீண்டும் ஆணையம் வலியுறுத்த விரும்புகிறது.

8) **முந்தைய தேர்தல்களில் சங்க வாக்காளர் பட்டியல் சரிவரத் தயாரிக்கப்படவில்லை என்ற ஒரே காரணத்திற்காக சங்க தேர்தல் நடவடிக்கைகள் ரத்து செய்தும் சங்க வாக்காளர் பட்டியல்கள் சரிசெய்யப்பட வேண்டிய (Purification of the Electoral Rolls) அவசியத்தை வலியுறுத்தியும் பல வழக்குகளில் மாண்பமை நீதிமன்றங்கள் தீர்ப்புரை வழங்கி உள்ளன.**

9) வாக்காளர் பட்டியல் சரிவரத் தயாரிக்கப்படவில்லை என்று கூறப்படுவதற்கான **காரணங்களில் மிகமுக்கியமானது இறந்த உறுப்பினர்கள் பெயர்கள் நீக்கப்படாததும், சங்கத்தின் துணை விதிகளில் கூறப்பட்ட தகுதி இல்லாதவர்கள் உறுப்பினர்களாக உள்ளதும், சட்டவிதிகளில் கூறப்பட்டபடி உறுப்பினர் சேர்க்கை தொடர்பான ஆவணங்கள் இல்லாததும் / சரிவர இல்லாததும் ஆகும்.**

10) சங்கத் தேர்தல்களில் சங்க உறுப்பினர் பட்டியல்களின் முக்கியத்துவம் பற்றி ஏற்கனவே பார்வை (2) முதல் (9) வரைகாணும் ஆணைய கடிதங்களில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதனை ஆணையம் மீண்டும் வலியுறுத்த விரும்புகிறது.

F:\Sivakami\Member List Voter List.docx

எனவே வாக்காளர் பட்டியலுக்கு அடிப்படையான உறுப்பினர் பட்டியல் மாண்பமை நீதிமன்ற ஆணைகளில் குறிப்பிட்டபடி சரியான முறையில் இருத்தலையும் (Purification of Electoral Rolls) ஒவ்வொரு சங்கமும் தனது உறுப்பினர் பட்டியல், மற்றும் அது தொடர்பான விண்ணப்ப படிவங்கள், பதிவேடுகள் மற்றும் ஆவணங்கள் (Registers and Records), எத்தேதியிலும் (On any date) ஒழுங்காக பராமரித்தலையும் அதற்கு பொறுப்பான அலுவலர்கள் உறுதி செய்ய வேண்டியது மிக அவசர அவசியமானது என்று ஆணையம் கருதுகிறது.

11) உறுப்பினர் பட்டியலில் உள்ள இறந்த உறுப்பினர்கள் மற்றும் துணைவிதிப்படி தகுதியற்ற உறுப்பினர்களைக் கண்டறிந்து நீக்கும் பணிக்கு கால அவகாசம் தேவைப்படும் நிலையில் 2023 ஒட்டு மொத்தத் தேர்தல் அட்டவணை அறிவிக்கப்படும் வரை காத்திராமல் உடனடியாக அதற்கான பணியினை தொடங்குதல் அவசியமானதாகும் என்றும் ஆணையம் கருதுகிறது.

12) அவ்வகையில் தங்கள் கட்டுப்பாட்டில் கீழ்வரும் அனைத்து சங்கங்களுக்கான உறுப்பினர் பட்டியல் 31.08.2022 தேதி வரை சங்கத் துணை விதிகளின் படி சரி செய்யப்பட்டுள்ளன, என்பதை உறுதி செய்திடவும், அவ்வாறு சரிசெய்யப்பட்டுள்ளன என்பதற்கான நிறைவு அறிக்கையினை (Completion Report) அதற்கு பொறுப்பான அலுவலர்களிடமிருந்து பெற்று ஒட்டு மொத்த அறிக்கையினை (Consolidated Report) 30.09.2022-க்குள் ஆணையத்திற்கு அனுப்பிடவும் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

13) இப்பணி சட்டபூர்வமான பணி என்பதினாலும், விரைவில் 2023 ஒட்டுமொத்த தேர்தல்களை எதிர்நோக்குவதாலும் அவை நீதிமன்ற நடவடிக்கைகளுக்கும் வழக்குகளுக்கும் உட்படும் வாய்ப்புகள் இருப்பதினாலும், இப்பணிகளை முடித்திட அறிவுறுத்திடவும், தவறும் அலுவலர்கள் மீது தக்க நடவடிக்கை மேற்கொள்ளவும், தங்களால் இது தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை விபரத்தினை 15.09.2022-க்குள் ஆணையத்திற்கு தெரிவித்திடவும் அன்புடன் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

ஒம்/-

ஆணையர்

ஆணையருக்காக

29.08.2022

**Encl:** Extract of the Provisions as referred to in the letter.,

**நகல்:** இருப்புக் கோப்பு

# ANNEXURE

## PROVISIONS UNDER THE TNCS ACT, 1983 AND TNCS RULES 1988 AS REFERRED TO IN THE LETTER 825/2022/CE2 (3) DATE 29.08.2022

| | |
|---|---|
| Sec. 33(11) (b) : | The superintendence, direction and control of the preparation of the electoral rolls for, and conduct of, all election to a cooperative society shall vest in the Tamil Nadu State Cooperative Societies Election Commission constituted under section 33-A. |
| Rule 52 A (3) | The Election Commission may appoint the officers appointed as the Registrars of Cooperative Societies by the Government under section 3 of the Act as the State Election Officers in respect of the Cooperative Societies under their respective administrative control. Subject to the superintendence, direction and control of the Election Commission, the State Election Officers, shall coordinate and supervise the preparation and publication of voters list and also the conduct of elections of members of the boards and the office bearers of the boards of societies under their respective administrative control. They shall also perform such other functions as may be entrusted to him by the Election Commission from time to time. |
| Rule 52 A (4) | The Election Commission may appoint as many Officers of the Government not below the rank of a Deputy Registrar of Co-operative Societies in the Co-operative Department of the Government or not below such rank in other departments of the Government as the District Election Officers Subject to the superintendence, direction and control of the Election Commission, the District Election Officers shall co-ordinate and supervise the preparation and publication of Electoral rolls and the conduct of elections of members of the boards and office bearers of the boards of societies under their respective administrative control as specified by the Election Commission. They shall also perform such other functions as may be entrusted to them by the Election Commission from time to time. |

தமிழ்நாடு மாநில கூட்டுறவுச் சங்கங்களின் தேர்தல் ஆணையம், சென்னை – 18.

**அனுப்புநர்**

திரு. தயானந்த் கட்டாரியா, இஆப
ஆணையர்,
தமிழ்நாடு மாநில கூட்டுறவுச்
சங்கங்களின் தேர்தல் ஆணையம்,
273 அண்ணாசாலை, தேனாம்பேட்டை,
சென்னை – 600 018.

**பெறுநர்**

1) கூட்டுறவு சங்கங்களின்
பதிவாளர்/மாநில தேர்தல் அலுவலர்

2) அனைத்து
செயற்பதிவாளர்கள்/மாநில தேர்தல்
அலுவலர்கள்

ந.க.344/2018/கூதே.5 நாள்: 05.09.2022

ஐயா,

பொருள்: கூட்டுறவு சங்கத் தேர்தல்கள் – தேர்தலுக்கான நடத்தை விதிகள் (Code of Conduct) அமுல்படுத்துதல் – தொடர்பாக.

பார்வை: ஆணையத்தின் இதே எண்ணிட்ட கடிதம் நாள் 05 .03.2018.

******

கூட்டுறவு சங்கத் தேர்தல்கள் சுதந்திரமாகவும், நியாயமாகவும், வெளிப்படைத் தன்மையுடனும் 1983–ம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவு சங்கங்கள் சட்டம் மற்றும் 1988–ம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவு சங்கங்கள் விதிகளுக்குட்பட்டும் (இனி சட்டம் மற்றும் விதி எனப்படும்) தமிழ்நாடு கூட்டுறவு சங்கங்களின் தேர்தல் ஆணையம் (இனி ஆணையம்) நடத்த வேண்டிய அவசியத்தை முன்னிட்டு, ஆணையத்திற்கு விதி 52–A(9) ன் கீழ் வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தை கைக்கொண்டு பார்வையில் கண்ட கடிதத்தின் படி தேர்தல் நடத்தை விதிகளை ஆணையம் அறிவித்தது.

அவ்விதிகளில் சில மாற்றங்கள் செய்யப்பட்டு இணைப்பில் கண்டுள்ளவாறு புதிய நடத்தை விதிகள் அறிவிக்கப்படுகின்றன. இனிவரும் கூட்டுறவு சங்கத் தேர்தல் அறிவிப்புகளுக்கு இவ்விதிகள் பொருந்துவதாகும்.

தவிரவும் ஆணையத்தால் தேர்தல் திட்டம் வழங்கப்பட்டு தேர்தல் அறிவிப்பு செய்யப்பட்ட சில சங்கங்கள் ஆணையத்தால் அறிவிக்கப்பட்ட நடத்தை விதிகளை கைக்கொள்ளவில்லை என்றும், அவ்வாறு நடத்தை விதிகளை கைக்கொள்ளாது அவற்றிற்கு புறம்பாக மேற்கொள்ளப்பட்ட சங்க நடவடிக்கைகள் சட்டத்தின் முன் நிலை நிறுத்ததக்கதல்ல (Un Enforceable) என்றும், சட்ட விரோதமானதும், (Illegal, Ultra Vires) தாவாக்குரியதுமாகும் ( Arbitrary) என்றும் பாதிக்கப்பட்ட சிலர் நீதிமன்றங்களில் வழக்குகள் தாக்கல் செய்ததுடன், ஆணையத்தின் கவனத்திற்கும் கொண்டு வந்துள்ளனர்.

இவ்வாறு ஆணையத்தால் சங்க நிர்வாகத்திற்கு வழங்கப்பட்ட சட்டப்பூர்வ கட்டளைகளை (Law full Order Direction) செயல்படுத்தாது இருப்பது சட்டப்பிரிவு 157–ன்கீழ் சிறை தண்டனை மற்றும் அபராதம் (Imprisonment and fine) விதிக்கக்கூடிய குற்றமாகும் (Offence).

மேலும் இம்மாதிரி நடத்தை விதிகளை புறக்கணிப்பதன் மூலம் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ தேர்தல் நடவடிக்கைகளில் சாதக பாதக விளைவுகளை ஏற்படுத்துவதானது, சட்டப்பிரிவு 162–ன்கீழ் ஓராண்டு வரை சிறைத் தண்டனை (Imprisonment) மற்றும் ரூ.10000/– வரை அபராதம் (Fine) விதிக்கக்கூடிய குற்றமாகும்.

எனவே தேர்தல் திட்டம் அறிவிக்கப்பட்ட சங்கங்கள் இவ்வகையான நிகழ்வுகளுக்கு இடம்தராது, நடத்தை விதிகளை முழுவதுமாகவும் முறையாகவும் பின்பற்றிடவும், சங்கத்தின் தேர்தல்களை, சுதந்திரமாகவும், நேர்மையாகவும், வெளிப்படை தன்மையுடனும், சட்ட விதிகளுக்குட்பட்டு நடத்துவதையும், அவ்வாறு நடத்தப்படுவதை அனைத்து மாவட்ட தேர்தல் அலுவலர்களும் உறுதி செய்திடவும் தாங்கள் தங்கள் கட்டுப்பாட்டின் கீழ் வரும் சங்கங்களுக்கும், தொடர்புடைய அலுவலர்களுக்கும் உரிய அறிவுரைகள் வழங்கிட ஆணையம் அன்புடன் கேட்டுக்கொள்கிறது.

இது தொடர்பாக தங்கள் அளவில் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை பற்றிய அறிக்கையினை (Action taken Report) 20.09.2022க்குள் அனுப்பிடவும் ஆணையம் கேட்டுக்கொள்கிறது.

ஒம்/–
ஆணையர்

ஆணையருக்காக

**இணைப்பு : நடத்தை விதிகள் – 2 பக்கங்கள்**

# கூட்டுறவுச் சங்கத் தேர்தல்கள் – 2018

## நடத்தை விதிகள் அறிவிப்பு

முன்னிலை : திரு.தயானந்த் கட்டாரியா, இ.ஆ.ப.,
ஆணையர்.

ந.க.344/2018/கூ.தே.5 நாள் : 05.09.2022

பொருள் : கூட்டுறவுச் சங்க தேர்தல்கள் – கூட்டுறவு சங்கத் தேர்தல்கள் நடத்தை விதிகள் (Code Of Conduct) – அறிவித்தல்

-----

தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்களின் விதிகள் 1988, விதி எண். 52–A(9)–ல் அதிகாரமளிக்கப்பட்டபடி கூட்டுறவுச் சங்கத்தின் தேர்தல்களை நியாயமாகவும், சுதந்திரமாகவும் நடைபெறுவதற்கு தமிழ்நாடு மாநில கூட்டுறவுச் சங்கத் தேர்தல் ஆணையம் கீழ்காணும் தேர்தல் நடத்தை விதிகளை அறிவிக்கிறது.

1) அடியிற்குறிப்பிட்ட நடவடிக்கைகள் தடை செய்யப்படுகின்றன (Prohibited) :

i) சங்கம் நடத்துவது தொடர்பான வாடிக்கையான நடவடிக்கைகள் (Usual Business) தவிர்த்து கொள்கை முடிவுகள் ஏதும் ( Policy decision) நிர்வாகக்குழு எடுத்தல்;

ii) சங்கத்தின் பொதுப்பேரவைக் கூட்டம் கூட்டுதல்;

iii) புதிய கிளைகள் ஏதும் தொடங்குதல்;

iv) சங்க உறுப்பினர்கள் மற்றும் பணியாளர்களுக்கு நிதிச் சலுகைகள் (Financial Benefit) வழங்குதல்;

v) கூட்டுறவுச் சங்க பணியாளர்கள் தொடர்பான புதிய நியமன ஆணைகள், பணியிட மாறுதல்கள், பதவி உயர்வு ஆணைகள் ஏதும் வழங்குதல் (அயல் பணியில் (On Deputation) இருக்கும் அரசு அலுவலர்களுக்கு இது பொருந்தாது);

vi) புதிய திட்டங்கள் அறிவித்தல் (Announcement of any New Schemes);

vii) புதிய திட்டங்கள் மற்றும் கட்டடங்களுக்கான அடிக்கல் நாட்டுதல் ( Laying of Foundation Stones of Projects or Schemes of any kind); மற்றும்

viii) சங்கத்திற்கு சொந்தமான அல்லது ஆளுகையிலுள்ள இடங்கள், கட்டிடங்கள் உள்ளிட்ட அசையாச் சொத்துக்கள் மற்றும் வாகனம், தளவாடம் போன்ற அசையும் சொத்து எதுவாக இருப்பினும் அச்சொத்தினை சங்கத் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களோ அல்லது போட்டியிடும் வேட்பாளர்களுக்காக மற்றவர்களோ பயன்படுத்துதல் அல்லது பயன்படுத்த அனுமதித்தல்.

D:\RC 344-2018-CE5 code of conduct 05.03.2018.doc

2) நிர்வாகக்குழு உறுப்பினர்கள், தலைவர்/துணைத்தலைவர் ஆகியோருக்கு சங்கத்திலிருந்து வாகனங்கள் வழங்கப்பட்டிருப்பின் அவை திரும்பப் பெறவேண்டும்.

3) இத்தேர்தல் நடத்தை விதிகள் தேர்தல் திட்டம் வெளியிடப்பட்ட சங்கங்களுக்கு மட்டும் பொருந்தும். தேர்தல் திட்டம் வெளியிடப்பட்ட நாளிலிருந்து புதிய நிர்வாகக்குழு பொறுப்பேற்கும் வரை (Assume Office) வரை இந்நடத்தை விதிகள் அமலில் இருக்கும்.

4) சங்க நடவடிக்கைகள் தொடர்ந்து மேற்கொள்ள வேண்டிய அவசர அவசிய மற்றும் தவிர்க்க முடியாத நிலையில் அது குறித்த இனங்களில் தமிழ்நாடு மாநில கூட்டுறவுச் சங்கங்களின் தேர்தல் ஆணையத்தில் விபரங்கள் தெரிவித்து (Relief Reasons) அனுமதிக்கான கோரிக்கை அனுப்பலாம்.

5) ஆணையத்தின் சட்டபூர்வ கட்டளையான மேலே குறிப்பிட்ட இந்நடத்தை விதிகளை தேர்தல் நடத்தும் சங்கங்கள் மேற்கொள்ள தவறும் நிலையில் அதற்கு பொறுப்பானவர்கள் 1983-ம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவு சங்கங்கள் சட்டம், பிரிவு 157(2) மற்றும் பிரிவு 162 (h)-ன் கீழ் சிறைதண்டனை அல்லது அபராதம் அல்லது இவ்விரண்டுமோ விதித்து தண்டிக்கப்படதக்கவராவர் என்று தெரிவிக்கப்படுகிறது.

ஒம்/–
ஆணையர்

ஆணையருக்காக

D:\RC 344-2018-CE5 code of conduct 05.03.2018.doc

தமிழ்நாடு மாநில கூட்டுறவுச் சங்கங்களின் தேர்தல் ஆணையர் அவர்களின்
செயல்முறை ஆணை, சென்னை – 18.
முன்னிலை : திரு. தயானந்த் கட்டாரியா, இ.ஆ.ப.,
ஆணையர்.

ந.க.875/2022/கூதே1(1) நாள்: 12.09.2022

**பொருள்:** தமிழ்நாடு மாநில கூட்டுறவுச் சங்கங்களின் தேர்தல் ஆணையம் – கூட்டுறவுச் சங்கங்களுக்கான தேர்தல்கள் – ஒட்டுமொத்த தேர்தல்கள் (Enmasse Elections) மற்றும் இதர தேர்தல்கள் – மாநிலத் தேர்தல் அலுவலர்கள் (State Election Officers) – நியமன ஆணை வழங்குதல் – தொடர்பாக.

**பார்வை:**
1. தமிழ்நாடு மாநில கூட்டுறவுச் சங்கங்களின் தேர்தல் ஆணையர் அவர்களின் செயல்முறை ஆணை ந.க.9/2013/கூதே1, நாள்: 15.02.2013.
2. தமிழ்நாடு மாநில கூட்டுறவுச் சங்கங்களின் தேர்தல் ஆணையர் அவர்களின் செயல்முறை ஆணை ந.க.345/2018/கூதே1(1), நாள்: 05.03.2018.

*****

**ஆணை:**

பார்வை (1)–ல் சொல்லப்பட்ட ஆணையின்படி, இணைப்பில் கண்டுள்ளவாறு 1983–ம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்களின் சட்டம் பிரிவு 3–ன் கீழ் கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர்களாக அரசால் நியமனம் செய்யப்பட்ட கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் (Registrar of Cooperative Societies) மற்றும் செயற்பதிவாளர்களை (Functional Registrars), அவர்களின் நிர்வாகக் கட்டுப்பாட்டிற்குட்பட்ட கூட்டுறவுச் சங்கங்களுக்கு, 1988 –ம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் விதிகள் (இனி வரும் இடங்களில் விதி எனப்படும்) விதி எண் 52–A(3)–ன் கீழ் **மாநிலத் தேர்தல் அலுவலர்களாக (State Election Officers) தமிழ்நாடு மாநில கூட்டுறவுச் சங்கங்களின் தேர்தல் ஆணையம் நியமனம் செய்தது.**

பார்வை (2)–ல் கண்ட ஆணையில் பார்வை (1)–ல் கண்ட ஆணைப்படியான நியமனம் **தொடர்ச்சியாக இருந்துவரும் என்றும் ஆணையிடப்பட்டது**. இந்த இரு ஆணைகளையும் ஆணையம் மீண்டும் கவனமுடன் பரிசீலித்தது.

கூட்டுறவுச் சங்கங்களைப் பொறுத்து, ஒட்டுமொத்த தேர்தல்கள் (Enmasse Election) தவிர, புதிதாக பதிவு செய்யப்படும் சங்கங்கள் (Newly Registered Societies),

செயலாட்சியரிடமிருந்து தேர்ந்தெடுக்கப்படும் நிர்வாகக்குழுவிற்கு நிர்வாகம் மாறும் சங்கங்கள் (Administrators to Elected Board), புதுப்பிக்கப்படும் (Restore) சங்கங்கள், போன்றவற்றிற்கு முழு அளவிலான (Entire Board) தேர்தல்களையும் மற்றும் இறப்பு (Death), பதவி விலகல் (Resignation), வெளியேற்றுதல் (Expulsion), நீக்குதல் (Removal) போன்ற பலகாரணங்களினால் நிர்வாகக்குழு உறுப்பினர், தலைவர் மற்றும் துணைத்தலைவர் ஆகிய பதவிகளில் ஏற்படும் தற்செயல் காலி இடங்களுக்கான (Casual Vacancies) தேர்தல்களையும் **தொடர்ச்சியாக அனைத்து வகை கூட்டுறவுச் சங்கங்களிலும் ஆணையம் நடத்தி வருவதால் கூட்டுறவுச் சங்கத் தேர்தல்கள் ஒரு தொடர் நிகழ்வாக (Non–Stop; Continuous) இருந்து வருகின்றன.**

**இவ்வகையில் பார்வை (1)–ன் வழி, பெயராலன்றி பதவிமுறையில், நியமனம் செய்யப்பட்ட அனைத்து அலுவலர்களும், அவர்கள் நிர்வாகக்கட்டுப்பாட்டிற்குட்பட்ட கூட்டுறவுச் சங்கங்களின் மாநில தேர்தல் அலுவலர்களாக (State Election Officers) தற்போதும் தொடர்ந்து செயல்பட்டு வருகின்றனர்.**

எனவே, பார்வை (1) மற்றும் அதன் தொடர்ச்சியாக பார்வை (2)–ன் வழி ஆணையிடப்பட்ட மாநில தேர்தல் அலுவலர்கள் நியமனம், அவை தொடர்பாக **மாற்று ஆணை ஏதும் பிறப்பிக்கப்படாத வரை, புதிய நியமன ஆணைகள் ஏதும் தேவைப்படாத,** அவர்களது துறையின் கட்டுப்பாட்டின் கீழ் வரும் (Administrative Control) சங்கங்களின் ஒட்டுமொத்த தேர்தல் (Enmasse Elections) மற்றும் அவை தவிர்த்த இதர வகையிலான தேர்தல்கள் (Other than Enmasse Elections) மற்றும் காலியிடங்களுக்கான தேர்தல்கள் அனைத்திற்கும் பொருந்துவதாகும் என்றும் **அவர்கள் மாநில தேர்தல் அலுவலர்களாக தொடர்ச்சியாக இருந்து வருவார்கள் (Shall continue as SEO's) என்றும் புதிதாக நியமன ஆணை ஏதும் பிறப்பிக்க வேண்டிய அவசியம் இல்லை** என்றும் விதி எண் 52–A(3), 52–A(9) மற்றும் 52–A(10) ஆகியவற்றின் கீழ் அளிக்கப்பட்ட அதிகாரத்தினை கைக்கொண்டு ஆணையம் இதன் மூலம் ஆணையிடுகிறது.

இவ்வாறு விதி எண்.52–A(3)–ன் கீழ் ஆணையத்தால் நியமிக்கப்படும் மாநில தேர்தல் அலுவலர்கள் தேர்தல் ஆணையத்தின் மேற்பார்வை, கட்டளைகள் மற்றும் கட்டுப்பாட்டிற்குட்பட்டு, அவர்கள் சம்மந்தப்பட்ட நிர்வாக கட்டுப்பாட்டின்கீழ் உள்ள சங்கங்களை பொறுத்து, வாக்காளர் பட்டியல் தயாரித்தல், வெளியிடுதல் மற்றும் அச்சங்கங்களுக்கான நிர்வாகக்குழு உறுப்பினர்கள் மற்றும் அலுவல் நிர்வாகிகளுக்கான (Members of the Board and Office Bearers) தேர்தல் நடத்த ஒத்துழைத்து மற்றும் மேற்பார்வை செய்தல் வேண்டும் என்பதுடன், ஆணையத்தால் அவ்வப்போது அவர்களுக்கு ஒப்படைக்கப்படும் செயல்பாடுகளை செயற்படுத்துதல் வேண்டும் என்றும் விதி எண் 52–A(3)–ல் கட்டளையிடப்பட்டுள்ளது (Mandate) என்ற வகையில், கூட்டுறவுச் சங்க தேர்தல்களில் மாநில தேர்தல் அலுவலர்களின் பங்களிப்பும், கடமையும், பொறுப்பும் மிக முக்கியமானதாகும் என்றும் ஆணையம் அறிவிக்கிறது.

ஒம்/–
ஆணையர்,

ஆணையருக்காக

12/9/22

இணைப்பு : மேற்குறிப்பிட்டவாறு

பெறுநர்

1. கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர், சென்னை –10
2. ஆணையர், பால் உற்பத்தி மற்றும் பால்பண்ணை மேம்பாட்டுத் துறை, சென்னை–51.
3. மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை ஆணையர், சென்னை–35.
4. கைத்தறி துறை ஆணையர், சென்னை–108.
5. கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் (வீட்டுவசதி), சென்னை–7.
6. தலைமைச் செயல் அலுவலர், தமிழ்நாடு பனைபொருள் வளர்ச்சி வாரியம், சென்னை–108.
7. தொழில் ஆணையர் மற்றும் தொழில் வணிகத்துறை இயக்குநர், சென்னை–32.
8. தலைமை செயல் அலுவலர், தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம், சென்னை–108.
9. கால்நடை பராமரிப்பு மற்றும் மருத்துவப்பணிகள் இயக்குநர், சென்னை–6.
10. வேளாண்மைத் துறை ஆணையர், சென்னை–5.
11. சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை இயக்குநர், சென்னை–15
12. ஊரக வளர்ச்சி பஞ்சாயத்து ராஜ் இயக்குநர், சென்னை–15.
13. பட்டுவளர்ச்சித் துறை இயக்குநர், சேலம்–636 007.
14. இயக்குநர் மற்றும் குழும இயக்குநர், ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி பணிகள், சென்னை–113.
15. சர்க்கரைத் துறை ஆணையர், சென்னை–35.

நகல்

1. தலைமைச் செயலாளர், புனித ஜார்ஜ் கோட்டை, சென்னை–9
2. அரசு கூடுதல் தலைமைச் செயலாளர், கால்நடை பராமரிப்பு, பால்வளம் மற்றும் மீன்வளம், மீனவர் நலத்துறை, சென்னை–9.
3. அரசு கூடுதல் தலைமைச் செயலாளர், சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை, சென்னை–9.
4. அரசு முதன்மைச் செயலாளர், கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு துறை, சென்னை–9.
5. அரசு முதன்மைச் செயலாளர், கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த்துறை, சென்னை–9.
6. அரசு முதன்மைச் செயலாளர், வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சித் துறை, சென்னை–9.
7. அரசு செயலாளர், குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை, சென்னை–9.
8. அரசு செயலாளர், வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை, சென்னை–9.
9. அலுவலக இருப்புக் கோப்பு 2022.

இணைப்பு

ந.க.875/2022/கூதே1(1), தேதி 12.09.2022

1983-ம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் சட்டம் பிரிவு 3-ன் கீழ் பதிவாளர்களாக (Registrars) நியமனம் செய்யப்பட்டுள்ள அரசு துறைத் தலைவர்கள்

| வ.எண் | துறை | பதவி (Designation) |
|---|---|---|
| 1 | கூட்டுறவுத் துறை | கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் |
| 2 | பால்உற்பத்தி மற்றும் பால் பண்ணை மேம்பாட்டுத் துறை | ஆணையர், பால்உற்பத்தி மற்றும் பால் பண்ணை மேம்பாட்டுத் துறை |
| 3 | மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை | ஆணையர், மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை |
| 4 | கைத்தறி மற்றும் துணிநூல் துறை | ஆணையர், கைத்தறி மற்றும் துணிநூல் துறை |
| 5 | வீட்டு வசதி துறை | கூட்டுறவு சங்கங்களின் பதிவாளர் (வீட்டு வசதி) |
| 6 | தொழில் மற்றும் தொழில் வணிகத்துறை | தொழில் ஆணையர் மற்றும் தொழில் வணிகத்துறை இயக்குநர் |
| 7 | தமிழ்நாடு கதர் மற்றும் குடிசை தொழில் வளர்ச்சி வாரியம் | தலைமை செயல் அலுவலர், தமிழ்நாடு கதர் மற்றும் குடிசை தொழில் வளர்ச்சி வாரியம் |
| 8 | கால்நடை பராமரிப்பு மற்றும் மருத்துவ பணிகள் துறை | இயக்குநர், கால்நடை பராமரிப்பு மற்றும் மருத்துவ பணிகள் துறை |
| 9 | தமிழ்நாடு பனைப் பொருள் வளர்ச்சி வாரியம் | தலைமை செயல் அலுவலர், தமிழ்நாடு பனைப் பொருள் வளர்ச்சி வாரியம் |
| 10 | வேளாண்மைத்துறை | ஆணையர், வேளாண்மைத்துறை |
| 11 | இயக்குநர், சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை | இயக்குநர், சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை |
| 12 | இயக்குநர், பட்டு வளர்ச்சி துறை | இயக்குநர், பட்டு வளர்ச்சி துறை |
| 13 | ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி பணிகள் | இயக்குநர் மற்றும் குழும இயக்குநர், ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி பணிகள் |
| 14 | சர்க்கரைத் துறை | ஆணையர், சர்க்கரைத் துறை |
| 15 | ஊரக வளர்ச்சி பஞ்சாயத்து ராஜ் | இயக்குநர், ஊரக வளர்ச்சி பஞ்சாயத்து ராஜ் |

ஒம்/-
ஆணையர்

ஆணையருக்காக

12/9/22

**தமிழ்நாடு மாநில கூட்டுறவுச் சங்கங்களின் தேர்தல் ஆணையர் அவர்களின் செயல்முறை ஆணை, சென்னை – 18.**
**முன்னிலை : திரு. தயானந்த் கட்டாரியா, இ.ஆ.ப., ஆணையர்.**

ந.க.875/2022/கூதே1(2) நாள்: 12.09.2022

**பொருள்:** தமிழ்நாடு மாநில கூட்டுறவுச் சங்கங்களின் தேர்தல் ஆணையம் – கூட்டுறவுச் சங்கங்களுக்கான தேர்தல்கள் – ஒட்டுமொத்த தேர்தல்கள் (Enmasse Elections) மற்றும் இதர தேர்தல்கள் – மாவட்ட தேர்தல் அலுவலர்கள் (District Election Officers) – நியமன ஆணை வழங்குதல் – தொடர்பாக.

**பார்வை:**
1. தமிழ்நாடு மாநில கூட்டுறவுச் சங்கங்களின் தேர்தல் ஆணையர் அவர்களின் செயல்முறை ஆணை ந.க.9/2013/கூதே1(1), நாள்: 23.02.2013.
2. தமிழ்நாடு மாநில கூட்டுறவுச் சங்கங்களின் தேர்தல் ஆணையர் அவர்களின் செயல்முறை ஆணை ந.க.345/2018/கூதே1(2), நாள்: 05.03.2018.

*****

**ஆணை:**

பார்வை (1)–ல் சொல்லப்பட்ட ஆணையில் கண்டுள்ளபடியான அலுவலர்கள், அவர்களின் நிர்வாகக் கட்டுப்பாட்டிற்குட்பட்ட கூட்டுறவுச் சங்கங்களுக்கு, **மாவட்ட தேர்தல் அலுவலர்களாக (District Election Officers) தமிழ்நாடு மாநில கூட்டுறவுச் சங்கங்களின் தேர்தல் ஆணையம் நியமனம் செய்தது.**

பார்வை (2)–ல் கண்ட ஆணையில் பார்வை (1)–ல் கண்ட ஆணைப்படியான நியமனம் **தொடர்ச்சியாக இருந்துவரும் என்றும் ஆணையிடப்பட்டது.** இந்த இரு ஆணைகளையும் ஆணையம் மீண்டும் கவனமுடன் பரிசீலித்தது.

கூட்டுறவுச் சங்கங்களை பொறுத்து, ஒட்டுமொத்த தேர்தல்கள் (Enmasse Election) தவிர, புதிதாக பதிவு செய்யப்படும் சங்கங்கள் (Newly Registered Societies), செயலாட்சியரிடமிருந்து தேர்ந்தெடுக்கப்படும் நிர்வாகக்குழுவிற்கு நிர்வாகம் மாறும் சங்கங்கள் (Administrators to Elected Board), புதுப்பிக்கப்படும் (Restore) சங்கங்கள், போன்றவற்றிற்கு முழு அளவிலான (Entire Board) தேர்தல்களையும் மற்றும் இறப்பு (Death), பதவி விலகல் (Resignation), வெளியேற்றுதல் (Expulsion), நீக்குதல் (Removal) போன்ற பலகாரணங்களினால் நிர்வாகக்குழு உறுப்பினர், தலைவர் மற்றும் துணைத்தலைவர் ஆகிய பதவிகளில் ஏற்படும் தற்செயல் காலி இடங்களுக்கான (Casual Vacancies) தேர்தல்களையும் **தொடர்ச்சியாக அனைத்து வகை கூட்டுறவுச் சங்கங்களிலும்**

ஆணையம் நடத்தி வருவதால் கூட்டுறவுச் சங்கத் தேர்தல்கள் ஒரு தொடர் நிகழ்வாக (Non-Stop; Continuous) இருந்து வருகின்றன.

இவ்வகையில் பார்வை (1)-ன் வழி, பெயராலன்றி பதவிமுறையில், நியமனம் செய்யப்பட்ட அனைத்து அலுவலர்களும், அவர்கள் நிர்வாகக்கட்டுப்பாட்டிற்குட்பட்ட கூட்டுறவுச் சங்கங்களின் மாவட்ட தேர்தல் அலுவலர்களாக (District Election Officers) தற்போதும் தொடர்ந்து செயல்பட்டு வருகின்றனர்.

எனவே, பார்வை (1) மற்றும் அதன் தொடர்ச்சியாக பார்வை (2)-ன் வழி ஆணையிடப்பட்ட மாவட்ட தேர்தல் அலுவலர்கள் நியமனம், அவை தொடர்பாக மாற்று **ஆணை ஏதும் பிறப்பிக்கப்படாத வரை, புதிய நியமன ஆணைகள் ஏதும் தேவைப்படாத,** அவர்களது துறையின் கட்டுப்பாட்டின் கீழ் வரும் (Administrative Control) சங்கங்களின் ஒட்டுமொத்த தேர்தல் (Enmasse Elections) மற்றும் அவை தவிர்த்த இதர வகையிலான தேர்தல்கள் (Other than Enmasse Elections) மற்றும் காலியிடங்களுக்கான தேர்தல்கள் அனைத்திற்கும் பொருந்துவதாகும் என்றும் **அவர்கள் மாவட்ட தேர்தல் அலுவலர்களாக தொடர்ச்சியாக இருந்து வருவார்கள் (Shall continue as DEO's) என்றும் புதிதாக நியமன ஆணை ஏதும் பிறப்பிக்க வேண்டிய அவசியம் இல்லை** என்றும் விதி எண் 52-A(4), 52-A(9) மற்றும் 52-A(10) ஆகியவற்றின் கீழ் அளிக்கப்பட்ட அதிகாரத்தினை கைக்கொண்டு ஆணையம் இதன் மூலம் ஆணையிடுகிறது.

இவ்வாறு விதி எண்.52-A(4)-ன் கீழ் ஆணையத்தால் நியமிக்கப்படும் மாவட்ட தேர்தல் அலுவலர்கள் தேர்தல் ஆணையத்தின் மேற்பார்வை, கட்டளைகள் மற்றும் கட்டுப்பாட்டிற்குட்பட்டு, அவர்கள் சம்மந்தப்பட்ட நிர்வாக கட்டுப்பாட்டின்கீழ் உள்ள சங்கங்களை பொறுத்து, வாக்காளர் பட்டியல் தயாரித்தல், வெளியிடுதல் மற்றும் அச்சங்கங்களுக்கான நிர்வாகக்குழு உறுப்பினர்கள் மற்றும் அலுவல் நிர்வாகிகளுக்கான (Members of the Board and Office Bearers) தேர்தல் நடத்த ஒத்துழைத்து மற்றும் மேற்பார்வை செய்தல் வேண்டும் என்பதுடன், ஆணையத்தால் அவ்வப்போது அவர்களுக்கு ஒப்படைக்கப்படும் செயல்பாடுகளை செயற்படுத்துதல் வேண்டும் என்றும் விதி எண்.52-A(5)-ல் கட்டளையிடப்பட்டுள்ளது (Mandate) என்ற வகையில், கூட்டுறவுச் சங்க தேர்தல்களில் மாவட்ட தேர்தல் அலுவலர்களின் பங்களிப்பும், கடமையும், பொறுப்பும் மிக முக்கியமானதாகும் என்றும் ஆணையம் அறிவிக்கிறது.

ஒம்/-
ஆணையர்

ஆணையருக்காக

12/9/22

பெறுநர்

அனைத்து மாவட்ட தேர்தல் அலுவலர்கள்
(உரிய மாநில தேர்தல் அலுவலர்கள் மூலமாக).

நகல்

1. தலைமைச் செயலாளர், புனித ஜார்ஜ் கோட்டை, சென்னை-9
2. அரசு கூடுதல் தலைமைச் செயலாளர், கால்நடை பராமரிப்பு, பால்வளம் மற்றும் மீன்வளம், மீனவர் நலத்துறை, சென்னை-9.
3. அரசு கூடுதல் தலைமைச் செயலாளர், சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை, சென்னை-9.
4. அரசு முதன்மைச் செயலாளர், கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு துறை, சென்னை-9.
5. அரசு முதன்மைச் செயலாளர், கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த்துறை, சென்னை-9.
6. அரசு முதன்மைச் செயலாளர், வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சித் துறை, சென்னை-9.
7. அரசு செயலாளர், குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை, சென்னை-9.
8. அரசு செயலாளர், வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை, சென்னை-9.
9. அலுவலக இருப்புக் கோப்பு 2022.

# இணைப்பு

## ந.க.எண் 875/2022/கூதே1(2)

| வ.எண் | துறை | மாவட்டம் | சரகம் | பதவியின் பெயர் (Designation) |
|---|---|---|---|---|
| 1 | கூட்டுறவுத் துறை | அரியலூர் | அரியலூர் | கூட்டுறவுச் சங்கங்களின் சரக துணைப்பதிவாளர். |
| 2 | கூட்டுறவுத் துறை | சென்னை | சென்னை (கடன்) | கூட்டுறவுச் சங்கங்களின் சரக துணைப்பதிவாளர். |
| 3 | கூட்டுறவுத் துறை | | சென்னை (கடனற்றவை) | கூட்டுறவுச் சங்கங்களின் சரக துணைப்பதிவாளர். |
| 4 | கூட்டுறவுத் துறை | கோயம்புத்தூர் | கோயம்புத்தூர் | கூட்டுறவுச் சங்கங்களின் சரக துணைப்பதிவாளர். |
| 5 | கூட்டுறவுத் துறை | | பொள்ளாச்சி | கூட்டுறவுச் சங்கங்களின் சரக துணைப்பதிவாளர். |
| 6 | கூட்டுறவுத் துறை | கடலூர் | கடலூர் | கூட்டுறவுச் சங்கங்களின் சரக துணைப்பதிவாளர். |
| 7 | கூட்டுறவுத் துறை | | சிதம்பரம் | கூட்டுறவுச் சங்கங்களின் சரக துணைப்பதிவாளர். |
| 8 | கூட்டுறவுத் துறை | | விருத்தாச்சலம் | கூட்டுறவுச் சங்கங்களின் சரக துணைப்பதிவாளர். |
| 9 | கூட்டுறவுத் துறை | தருமபுரி | தருமபுரி | கூட்டுறவுச் சங்கங்களின் சரக துணைப்பதிவாளர். |
| 10 | கூட்டுறவுத் துறை | திண்டுக்கல் | திண்டுக்கல் | கூட்டுறவுச் சங்கங்களின் சரக துணைப்பதிவாளர். |
| 11 | கூட்டுறவுத் துறை | | பழனி | கூட்டுறவுச் சங்கங்களின் சரக துணைப்பதிவாளர். |
| 12 | கூட்டுறவுத் துறை | ஈரோடு | ஈரோடு | கூட்டுறவுச் சங்கங்களின் சரக துணைப்பதிவாளர். |
| 13 | கூட்டுறவுத் துறை | | கோபிசெட்டிப்பாளையம் | கூட்டுறவுச் சங்கங்களின் சரக துணைப்பதிவாளர். |
| 14 | கூட்டுறவுத் துறை | காஞ்சிபுரம் | செங்கல்பட்டு | கூட்டுறவுச் சங்கங்களின் சரக துணைப்பதிவாளர். |
| 15 | கூட்டுறவுத் துறை | | மதுராந்தகம் | கூட்டுறவுச் சங்கங்களின் சரக துணைப்பதிவாளர். |
| 16 | கூட்டுறவுத் துறை | | காஞ்சிபுரம் | கூட்டுறவுச் சங்கங்களின் சரக துணைப்பதிவாளர். |
| 17 | கூட்டுறவுத் துறை | கன்னியாகுமரி | நாகர்கோவில் | கூட்டுறவுச் சங்கங்களின் சரக துணைப்பதிவாளர். |
| 18 | கூட்டுறவுத் துறை | | தக்கலை | கூட்டுறவுச் சங்கங்களின் சரக துணைப்பதிவாளர். |

| வ.எண் | துறை | மாவட்டம் | சரகம் | பதவியின் பெயர் (Designation) |
|---|---|---|---|---|
| 19 | கூட்டுறவுத் துறை | கரூர் | குளித்தலை | கூட்டுறவுச் சங்கங்களின் சரக துணைப்பதிவாளர். |
| 20 | கூட்டுறவுத் துறை | | கரூர் | கூட்டுறவுச் சங்கங்களின் சரக துணைப்பதிவாளர். |
| 21 | கூட்டுறவுத் துறை | கிருஷ்ணகிரி | கிருஷ்ணகிரி | கூட்டுறவுச் சங்கங்களின் சரக துணைப்பதிவாளர். |
| 22 | கூட்டுறவுத் துறை | | ஓசூர் | கூட்டுறவுச் சங்கங்களின் சரக துணைப்பதிவாளர். |
| 23 | கூட்டுறவுத் துறை | மதுரை | மதுரை | கூட்டுறவுச் சங்கங்களின் சரக துணைப்பதிவாளர். |
| 24 | கூட்டுறவுத் துறை | | உசிலம்பட்டி | கூட்டுறவுச் சங்கங்களின் சரக துணைப்பதிவாளர். |
| 25 | கூட்டுறவுத் துறை | நாகப்பட்டினம் | மயிலாடுதுறை | கூட்டுறவுச் சங்கங்களின் சரக துணைப்பதிவாளர். |
| 26 | கூட்டுறவுத் துறை | | நாகப்பட்டினம் | கூட்டுறவுச் சங்கங்களின் சரக துணைப்பதிவாளர். |
| 27 | கூட்டுறவுத் துறை | நாமக்கல் | திருச்செங்கோடு | கூட்டுறவுச் சங்கங்களின் சரக துணைப்பதிவாளர். |
| 28 | கூட்டுறவுத் துறை | | நாமக்கல் | கூட்டுறவுச் சங்கங்களின் சரக துணைப்பதிவாளர். |
| 29 | கூட்டுறவுத் துறை | நீலகிரி | உதகமண்டலம் | கூட்டுறவுச் சங்கங்களின் சரக துணைப்பதிவாளர். |
| 30 | கூட்டுறவுத் துறை | புதுக்கோட்டை | புதுக்கோட்டை | கூட்டுறவுச் சங்கங்களின் சரக துணைப்பதிவாளர். |
இவ்வாறு நியமிக்கப்படும் மாநிலத் தேர்தல் அலுவலர்கள், மாவட்ட தேர்தல் அலுவலர்கள், மற்றும் பார்வையாளர்கள் மற்றும் தேர்தல் அதிகாரிகள் (Electoral Officers and Election Officers) அவ்விதிகளில் கூறப்பட்டபடி தேர்தல் ஆணையத்தின் மேற்பார்வை, கட்டளைகள் மற்றும் கட்டுப்பாட்டிற்குட்பட்டு தேர்தல்கள் நடத்த ஒத்துழைத்து மற்றும் மேற்பார்வை செய்தல் வேண்டும் என்றும் அவர்களுக்கு ஆணையத்தால் தேர்தல் தொடர்பாக ஒப்படைக்கப்படும் இதர பொறுப்புகளையும் செயல்பாடுகளையும் செயற்படுத்துதல் வேண்டும் என்றும் கட்டளை இடப்பட்டுள்ளது.

## சரிவர நடத்தப்படாத தேர்தல் நடவடிக்கைகள் – நீதிமன்றங்களின் கண்டனங்கள்

இவ்வாறு மாநிலத் தேர்தல் அலுவலர்கள் முதல் தேர்தல் அலுவலர்கள் வரை ஆணையம் கூட்டுறவுச் சங்கத் தேர்தல்களை சுதந்திரமாகவும், நியாயமாகவும், வெளிப்படைத் தன்மையுடனும் (Free, Fair & Transparent) நடத்துவதற்கு ஒத்துழைத்தும், மேற்பார்வை செய்தும், பொறுப்புகளை சரிவர ஆற்றிடவும் சட்டபூர்வ கடமை (Legal binding, obligation of

statutory duty) ஏற்படுத்தப்பட்டுள்ளது. இருப்பினும் ஆணையத்தால் அறிவிக்கப்பட்டு நடத்தப்பட்ட 2018-ஒட்டு மொத்த தேர்தல்களில் (Enmasse Elecltion 2018) சில சங்கங்களின் தேர்தல் நடவடிக்கைகள் சரிவர மேற்கொள்ளப்படவில்லை போன்ற பல்வேறு காரணங்களைக் குறிப்பிட்டு மாண்பமை சென்னை உயர்நீதிமன்றம் மற்றும் அதன் மதுரை அமர்வு மற்றும் மாண்பமை சென்னை உயர்நீதிமன்றத்தால் அமைக்கப்பட்ட ஓய்வு பெற்ற உயர்நீதிமன்ற நீதிபதிகளைத் தலைவர்களாகக் (Chairman) கொண்ட கூட்டுறவு வழக்குகளுக்கான மண்டலக்குழுக்கள் ஆகியவற்றின் முன்பாக வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டன. தவிரவும் ஆணையத்தால் நேரடியாகப் புகார் மனுக்களும் பெறப்பட்டன. அவற்றில் பெரும்பாலானவற்றில் வாக்காளர் பட்டியல் அலுவலர்கள், தேர்தல் அலுவலர்கள் மற்றும் மாவட்டத் தேர்தல் அலுவலர்கள் தேர்தல் நடவடிக்கைகளை சரிவர நடத்தவில்லை மற்றும் கண்காணிக்கவில்லை என்ற புகார்களே அதிக அளவில் தெரிவிக்கப்பட்டிருந்தன. இவ்வகையில் 5544 புகார் மனுக்கள் பெறப்பட்டு ஆணையத்தால் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளன. மேலும் மாண்பமை உயர்நீதிமன்றங்களில் 1706 ரிட் மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டன.

இம்மனுக்களை விசாரித்த மாண்பமை சென்னை உயர்நீதிமன்றம் மற்றும் அதன் மதுரை அமர்வு மற்றும் மாண்பமை சென்னை உயர்நீதிமன்றத்தால் அமைக்கப்பட்ட ஓய்வுப் பெற்ற உயர்நீதிமன்ற நீதிபதிகளைத் தலைவர்களாகக் கொண்ட (Chairman) கூட்டுறவு வழக்குகளுக்கான மண்டலக்குழுக்களும் தேர்தல் அலுவலர்கள், தன்னிச்சையான முறையிலும் (Arbitrary), சட்ட முரணாகவும் (Contrary to law), சட்ட விரோதமாகவும் (illegal), சட்டசம்மதமில்லாத (Ultravires) நிறைவேற்ற இயலாத ஆணைகளை (unenforceable) பிறப்பித்தும் தங்களுக்கு ஏற்பட்ட சட்ட பூர்வ கடமைகளிலிருந்து முழுமையாக தவறியுள்ளனர் என்றும் சட்ட விதிகளை முற்றிலும் புறக்கணித்துள்ளனர் என்றும் கடுமையாக தங்களது தீர்ப்புரைகளில் தெரிவித்துள்ளனர்.

மேலும் சில வேட்பாளர்களுக்குச் சாதகமாக செயல்பாடுகள் அமையும் வகையில் வேட்பு மனு தாக்கலுக்கென அறிவிக்கப்பட்ட இடத்தில், நேரத்தில் தேர்தல் அலுவலர்கள் இல்லாதிருந்துள்ளனர் என்றும் வேட்பு மனுக்களை ஆணையச் சுற்றறிக்கைக்கு புறம்பாக அற்ப காரணங்களுக்காக (Flimsy reasons) நிராகரித்துள்ளனர் எனவும் விதி எண் 52 (18) (a)-ன் கீழ் சொல்லப்பட்டதற்கு மாறாகவும் சட்ட ஒழுங்கு பிரச்சினை என்ற அனுமானத்தின் (Assumption / Apprehension) பேரில் சில சங்கங்களின் தேர்தல் நடவடிக்கைகளை தேர்தல் அலுவலர்கள் நிறுத்தி உள்ளனர் எனவும் மாண்பமை நீதிமன்ற ஆணைகளில் தெரிவிக்கப்பட்டுள்ளன.

<u>கூட்டுறவுத் தேர்தல் ஒரு தொடர் நிகழ்வு (a nonstop and continuous process) அலுவலர்கள் கடமைகளும், பொறுப்புகளும்</u>

கூட்டுறவுத் தேர்தல்களைப் பொறுத்து ஒட்டு மொத்த தேர்தல் (Enmasse) மட்டுமன்றி, ஐந்தாண்டு முடிவுற்ற சங்கங்கள், செயலாட்சியரிடமிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட நிர்வாகக்குழுவிற்கு நிர்வாகம் மாறும் சங்கங்கள், புத்துயிரூட்டப்படும் சங்கங்கள், நிர்வாகக்குழு உறுப்பினர்கள், தலைவர் மற்றும் துணைத்தலைவர் ஆகிய பதவிகளில் ஏற்படும் தற்செயல் காலியிடங்கள் (Casual Vacancies) என கூட்டுறவுச் சங்கத் தேர்தல்கள் தொடர்ச்சியாக நடைபெற்று வரும் ஒரு நிகழ்வாகும் (a non-stop and continuous)

இவ்வகையில் தேர்தல் பணிகளில் தொடர்ந்து ஈடுபட்டு வரும் மாநிலத் தேர்தல் அலுவலர்கள், மாவட்டத் தேர்தல் அலுவலர்கள், தேர்தல் அலுவலர்கள் மற்றும் பார்வையாளர்கள் ஆகிய அனைவரும் தங்கள் சம்பந்தப்பட்ட கூட்டுறவுச் சங்கத் தேர்தல்களை சுதந்திரமாகவும், நியாயமாகவும், வெளிப்படைத் தன்மையுடனும் ஆணையம் நடத்திட தங்களுக்கேற்பட்ட சட்டபூர்வ கடமைகளை எவ்வித விடுதலின்றியும், எவ்வித புகார்களுக்கும் இடம் தராமலும், சட்டவிதிகளின்படியும் தவறாது தம் கடமை ஆற்றிட அன்புடன் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

ஒழுங்கு நடவடிக்கை

தேர்தல் பணிகள் தொடர்பான தங்களுக்கேற்பட்ட சட்டபூர்வ கடமைகளை செய்ய மறுக்கும், செய்யத்தவறும், செய்யாமலிருக்கும், தவறுதலாகச் செய்யும் அலுவலர்கள் மீது ஒழுங்கு நடவடிக்கையும் (Disciplinary action) மற்றும் குற்றச் செய்கைகள் (Criminal offences) மேற்கொள்ளப்பட்டதாக முதன் நோக்கில் (Prima facie) தெரியவரும் நிலையில் இந்திய தண்டனைச் சட்டத்தின் கீழ் குற்றவியல் நடவடிக்கையும் மேற்கொள்வது குறித்து பரிசீலித்து குற்ற செய்கைகளின் அளவினையும் தன்மையையும் வகைப்பாட்டினையும் (Extent, gravity, classification) கருத்திற்கொண்டு அதற்கேற்ற ஒழுங்கு நடவடிக்கைகள் எவ்விதத்தயக்கமுமின்றியும், விருப்புவெறுப்புமின்றியும் உடனடியாக மேற்கொள்ள அறிவுறுத்தப்படுகிறது.

**மேலே சொல்லப்பட்டபடியான ஒழுங்கு நடவடிக்கைகள் தொடர்பான முறைகேடுகளை கீழ்கண்டவாறு வகைப்படுத்தலாம்:**

(i) கடமை தவறிய, (Dereliction of duty), நடத்தை தவறிய (Grave misconduct), கீழ்ப்படியாமை (Insubordination) போன்ற பெருந்தண்டனைக்குரிய குற்றங்களாக (Major Punishment) கண்டறியப்படுபவை தொடர்பாக குற்றத்தின் தன்மைக்கேற்ப அரசு துறை சார்ந்த அலுவலர்களாக இருப்பின் 1973-ம் ஆண்டு தமிழ்நாடு குடிமைப் பணிகள் விதிகள் (ஒழுங்குமுறை மற்றும் மேல்முறையீடு) [(Tamil Nadu Civil Services) (Discipline and Appeal) Rules, 1973)] கீழும் இதர நிறுவனங்களாக இருப்பின் அவர்கள் சார்ந்த நிறுவனத்தின் ஊழியர் பணி விதிகள் படியும் நடவடிக்கை எடுக்கவும்;

(ii) கூட்டுறவுச் சட்டத்தின்கீழ் பிறப்பிக்கப்பட்ட கட்டளைகளுக்கு (Direction) கீழ்படியாமை (Disobedience) குறித்து சட்டப்பிரிவு 157-ன் கீழ் நடவடிக்கை எடுக்கவும்;

(iii) ஒழுங்கீன செய்கைகள் (Corrupt practices) குறித்து சட்டப்பிரிவு 162-ன் கீழ் குற்றவியல் நடவடிக்கை தொடரவும்:

(iv) உள்நோக்குடன் ஆவணங்களைப் பொய்யாக்குதல் மற்றும் மோசடியாகத் திருத்துதல் (Forgery, Falsifications. Manipulations of records fraudulently with malafide intention) போன்ற குற்றச் செய்கை இருப்பின் அதற்காக இந்திய தண்டனை சட்டத்தின் கீழ் நடவடிக்கை மேற்கொள்ளவும்:

(v) தேர்தல் அலுவலரின் தவறான நடவடிக்கை உடனடியாக சரிசெய்யப்பட வேண்டிய நேர்வுகளில், சம்பந்தப்பட்ட அலுவலரை குற்றச்சாட்டு வனைவதை முன்னிறுத்தி (in contemplation of charges) பணி இடை நீக்கம் (Suspend) செய்தும், இதனால் தேர்தல் நடவடிக்கை தடைபடாது தொடர்ந்து நடத்திட மாற்று ஏற்பாடு செய்தும், அதற்கான அதிகாரம் அளிக்கப்பட்ட அலுவலர்களால் (Competent authority) ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்ளவும் அறிவுறுத்தப்படுகிறது.

விதி எண் 52-A(5)-ல் தேர்தல் பணிக்கு பணியமர்த்தப்பட்ட அதிகாரிகள் ஆணையத்தின் கட்டுப்பாடு மேற்பார்வை மற்றும் ஒழுங்கு முறைகுட்பட்டவர்களாக அத்தகைய அதிகாரி அப்பணி காலத்தில் அயல் பணிக்கு அனுப்பப்பட்டவராக கருதப்படுவர் என்று கூறப்பட்டுள்ள நிலையில் சட்ட முரணாகச் செயல்படும் அதிகாரிகளை அவசர அவசிய சூழ்நிலைக்கேற்ப (Circumstances warranting emergency / immediate action) விதி எண் 52-A(5)-ல் குறிப்பிட்ட அதிகாரத்தைக் கைக்கொண்டு ஆணையமே அவசியம் கருதி பணி இடை நீக்கம் செய்தும் தொடர் ஒழுங்கு நடவடிக்கைக்கு அதிகாரப்படுத்தப்பட்ட அலுவலருக்கு (Competent Authority) தேவையான கட்டளைகளை ஆணையம் பிறப்பிக்கும் என்றும் ஆணையம் அறிவிக்க விரும்புகிறது.

இவ்வகையில் தேர்தல் அலுவலர்கள் மீது மேற்கொள்ளப்பட்ட ஒழுங்கு நடவடிக்கை விபரத்தை ஆணையத்திற்கு உடனடியாக தெரிவித்திடவும், நடவடிக்கை மேற்கொள்ளப்பட்ட 6 மாத காலத்திற்குள் அதனை முடிவு கட்டவும், முடிவு கட்டுவதற்கு முன்னர் ஆணையத்தின் ஒப்புதலைப் (Concurrence) பெற்றிடவும் அறிவுறுத்தப்படுகிறது.

இவ்வாறு உடனடியாக ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்வதானது இம்மாதிரி தவறான செயல்பாடுகளை தொடர்புடையோர் மேற்கொள்ளாமல் இருப்பதற்கு ஒரு தடுப்பாகவும், எச்சரிக்கையாகவும் (Deterrent and warning) இருக்கும் என்பதுடன் இம்மாதிரி இனங்களில் ஆணையம் எவ்வித பொறுமையும் (Tolerance) காட்டாது என்பதை வலுவாகவும், தெளிவாகவும் ஆணையம் (Loud and clear) தெரிவிக்க விரும்புகிறது.

தங்கள் கட்டுப்பாட்டின் கீழ் பணியாற்றும் ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்ள அதிகாரம் அளிக்கப்பட்ட (Competent authority) அனைத்து அலுவலர்களுக்கும் இந்த அறிவுரைகளை (Instructions) தெரிவித்திடவும், அறிவுரைகளைப் பெற்றுக் கொண்டதற்கான ஒப்புதல்களை அவர்களிடமிருந்து தங்கள் அளவில் பெற்றிடவும் இது தொடர்பாக வழங்கப்பட்ட அறிவுரைகள் விபரத்தை (Action taken report) 15.10.2022-க்குள் ஆணையத்திற்கு அனுப்பிடவும் அன்புடன் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

ஒம்/-

ஆணையர்

26/9/22

ஆணையருக்காக

நகல்

26.09.2022

1. தலைமைச் செயலாளர், புனித ஜார்ஜ் கோட்டை, சென்னை-9
2. அரசு கூடுதல் தலைமைச் செயலாளர், கால்நடை பராமரிப்பு, பால்வளம் மற்றும் மீன்வளம், மீனவர் நலத்துறை, சென்னை-9.
3. அரசு கூடுதல் தலைமைச் செயலாளர், சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை, சென்னை-9.
4. அரசு முதன்மைச் செயலாளர், கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு துறை, சென்னை-9.

5. அரசு முதன்மைச் செயலாளர், கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த்துறை, சென்னை-9.

6. அரசு முதன்மைச் செயலாளர், வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சித் துறை, சென்னை-9.

7. அரசு முதன்மைச் செயலாளர், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை, சென்னை-9.

8. அரசு செயலாளர், குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை, சென்னை-9.

9. அரசு செயலாளர், வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை, சென்னை-9.

10. அனைத்து மாவட்டத் தேர்தல் அலுவலர்கள்.

11. அலுவலக இருப்புக் கோப்பு 2022.

**தமிழ்நாடு மாநில கூட்டுறவுச் சங்கங்களின் தேர்தல் ஆணையம், சென்னை – 18**

அனுப்புநர்:
திரு. தயானந்த் கட்டாரியா, இஆ.ப.,
ஆணையர்,
தமிழ்நாடு மாநில கூட்டுறவுச் சங்கங்களின்
தேர்தல் ஆணையம்,
273, அண்ணாசாலை, தேனாம்பேட்டை,
சென்னை – 600 018.

பெறுநர்:
1) கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர்,
2) அனைத்து செயற்பதிவாளர்கள்.

ந.க.1153/2020/கூ.தே.3 நாள்: 26.09.2022

ஐயா/அம்மையீர்,

பொருள்: கூட்டுறவுத் தேர்தல்கள் – விதி எண் 52(18)(a) மற்றும் 53(11)(a)–ன் கீழ் சட்டஒழுங்கு எனக்காரணம் காட்டி தேர்தல் நடவடிக்கைகளை நிறுத்துதல் – அறிவுரைகள் வழங்குதல் – தொடர்பாக.

பார்வை: ஆணையத்தின் கடிதம் ந.க.எண்.1153/2020/கூதே.3 நாள் 10.09.2020.

பார்வையில் கண்ட கடிதத்தில் (நகல் இணைப்பு) கூட்டுறவுச் சங்கங்களின் தேர்தல் அலுவலர்கள், சில சங்கங்களின் தேர்தல் நடவடிக்கைகளின் போது 1988–ம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவு சங்கங்கள் விதிகள், விதி எண்.52(18)(a) மற்றும் 53(11)(a)–ன் படி சங்கத் தேர்தல் நடவடிக்கைகளை நிறுத்தியது பற்றி ஆணையத்திற்கு அனுப்பியுள்ள அறிக்கைகளை ஆணையம் பரிசீலனை செய்து அவற்றில் கண்டறியப்பட்ட குறைபாடுகளை தெரிவித்தும், இந்நிலை மேலும் தொடராது காத்திடவும், தேர்தல் நடவடிக்கைகளை நிறுத்துவதற்கு தங்களுக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தினை முறையாகக் கையாண்டு, தேர்தல்களை சுதந்திரமாகவும், நியாயமாகவும் நடத்திடவும் அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன.

இருப்பினும் பல்வேறு சங்கத் தேர்தல் நடவடிக்கைகளில் தங்களுக்கு வழங்கப்பட்ட அதிகாரத்தினை தவறாக பயன்படுத்தி (Abuse and misuse of power and authority) தேர்தல் அலுவலர்கள் தாமாக (Suo motu), ஒருதலை பட்சமாக (Partisan), தங்களது விருப்பத்திற்கிணங்க (on their whims and fancies), சட்டத்திற்கு முரணாக, (Contrary to law), சட்டத்தின் முன் நிலைநிறுத்த முடியாத (unenforceable), நிறுத்தல் ஆணைகளை (Stop order) தற்போதும் பிறப்பிக்கின்றனர் என்பது ஆணையத்தின் கவனத்திற்கு வந்துள்ளது.

இந்நிலையினை ஆணையம் கவனத்துடன் பரிசீலித்து அதனடிப்படையில் ஏற்கெனவே பார்வையில் வழங்கப்பட்ட அறிவுரைகளுடன் கீழ்வரும் அறிவுரைகளை விதி எண்.52–A(9) மற்றும் (10)–ன் கீழ் வழங்கப்பட்ட அதிகாரத்தினைக் கைக்கொண்டு ஆணையம் வழங்குகிறது.

விதி எண்.52 (18) (a)–ல் சொல்லப்பட்டுள்ளதாவது :

> *"கலகம் அல்லது வெளிப்படையான வன்முறை தேர்தல் நடவடிக்கைகள் எந்தநிலையிலாவது குறுக்கீடு செய்யப்பட்டாலோ அல்லது தடுக்கப்பட்டாலோ அல்லது இயற்கை சீற்றத்தால் பேரிழப்பு காரணமாக மேற்கொண்டு தேர்தலை நடத்த முடியாது என்கிற நிலையில், அத்தகைய செயலுக்கான காரணங்களை, எழுத்தாலான பதிவு செய்து, தேர்தலை நிறுத்தி வைக்க, தேர்தல் அலுவலருக்கு அதிகாரம் உண்டு."*

விதி எண்.53 (11) (a)–ல் கூறப்பட்டுள்ளதாவது :

> *கலகம் விளைவிப்பவர்களால் அல்லது வெளிப்படையான வன்முறையினால், தேர்தல் நடவடிக்கைகள் எந்நிலையிலாவது குறுக்கீடு செய்யப்பட்டாலோ அல்லது தடுக்கப்பட்டாலோ அல்லது இயற்கை சீற்றத்தின் பேரிழப்பு காரணமாக, மேற்கொண்டு தேர்தலை நடத்த இயலாத நிலையில், அத்தகைய செயலுக்கான காரணங்களை, எழுத்தாலான பதிவு செய்து, தேர்தலை நிறுத்தி வைக்க, தேர்தல் அலுவலருக்கு அதிகாரம் உண்டு."*

மேலே சொல்லப்பட்ட விதி எண்.52 (18) (a) மற்றும் விதி எண்.53 (11) (a) ஆகியவற்றினை ஆணையம் மிக கவனமாக பரிசீலனை செய்ததில் :

*"கலகம் அல்லது வெளிப்படையான வன்முறை தேர்தல் நடவடிக்கைகள் எந்த நிலையிலாவது குறுக்கீடு செய்யப்பட்டாலோ அல்லது தடுக்கப்பட்டாலோ"* என்று மட்டுமே *கூறப்பட்டுள்ளது. அதாவது தேர்தல் அலுவலர் தேர்தல் நடவடிக்கை மேற்கொண்டிருக்கும் நிலையில் அவ்வகை சம்பவங்கள் ஏற்பட்டால் மட்டுமே (Only at*

*the time of) தேர்தல் அலுவலர் தேர்தலை நிறுத்தலாம் என்று அறியமுடிகிறது. அம்மாதிரி சம்பவங்கள் நிகழப்போவதாக எண்ணியோ, அல்லது அச்சத்தினாலோ (Anticipation, Assumption and Apprehension) தேர்தல் நடவடிக்கையை நிறுத்த தேர்தல் அலுவலருக்கு அவ்விதிகளின்* கீழ் அதிகாரம் வழங்கப்படவில்லை என்றும் இம்மாதிரி காரணங்களை கூறி விதிகளுக்குப் புறம்பாக தேர்தலை நிறுத்துவது சட்ட விரோதமானது. இம்மாதிரி செய்கைகள் ஆணையம் சுதந்திரமான, நேர்மையான, வெளிப்படையான தேர்தல் நடத்தும் தனது கடமையை செய்வதில் குறிக்கீடு செய்வதாகும் மற்றும் தடுப்பதாகும் என்றும் ஆணையம் கருதுகிறது.

இவ்வகையில் 2018 ஒட்டுமொத்த தேர்தல்களில் (Enmasse 2018) 115 சங்கங்களுக்கான தேர்தல்களை தேர்தல் அலுவலர்கள் நிறுத்தியுள்ளனர் என்பது மிகவும் கவலை தருவதாகும். இந்நிலை இனியும் தொடர இடம் தரலாகாது என்று ஆணையம் வலியுறுத்த விரும்புகிறது. தவிரவும் மீண்டும் தேர்தல்கள் நடத்துவதற்காகும் காலவிரயம், பணச்செலவும், பொருட்செலவு, மனித சக்தி வீணாதல் (Loss of Manpower) போன்ற எதையும் கருத்தில் கொள்ளாது மிகச் சாதாரணமாக அற்ப காரணங்களைக்காட்டி தேர்தல் நடவடிக்கைகளை நிறுத்துவது மிகவும் கண்டனத்திற்குரியதும் ஏற்றுக் கொள்ள இயலாததுமாகும் என்று ஆணையம் திடமாக கருதுகிறது.

எனவே இது தொடர்பாக வழங்கப்பட்ட அறிவுரைகளைக் கைக்கொள்ளாது, விதி.எண். 52(18)(a) மற்றும் விதி எண் 53(11)(a) ஆகியவற்றில் சொல்லப்பட்டவைக்கு முரணாக தேர்தல் அலுவலர் தேர்தல் நடவடிக்கையினை நிறுத்தம் செய்யும் நிலையில் விதி எண்.52(18) (a)–ல் அறிவுறுத்தப்பட்டவாறு தேர்தலை நிறுத்தப்பட்ட விபரத்தை தேர்தல் நிறுத்தப்பட்ட தினத்தன்றே மாலைக்குள் தேர்தல் அலுவலராலும், மாவட்ட தேர்தல் அலுவலராலும் உடனடியாக ஆணையத்திற்கு அறிக்கை (Report) செய்திட வேண்டும். மேலும் மாவட்ட தேர்தல் அலுவலர் அதனை உடனடியாக பரிசீலனை செய்து அந்நடவடிக்கை சட்ட முரணானதுதான் என்று உறுதியாகும் நிலையில் தேர்தல் அலுவலரின் சட்டவிரோத ஆணையினை உடனடியாக ரத்து செய்து, மாற்று தேர்தல் அலுவலரை நியமித்து தேர்தல் நடவடிக்கை எந்நிலையில் நிறுத்தப்பட்டதோ அதே நிலையில் மீண்டும் தேர்தல் நடவடிக்கையினை தொடர்ந்து மேற்கொள்ளவும், சட்ட முரணாக ரத்து செய்த அத்தேர்தல் அலுவலர் மீது பணி இடை நீக்கம் (Suspend) போன்ற உரிய ஒழுங்கு நடவடிக்கை எடுத்து ஆணையத்திற்கு உடனடியாக அறிக்கை அனுப்பவும் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

இதனை தங்கள் கட்டுப்பாட்டின் கீழ் வரும் அனைத்து அலுவலர்களுக்கும் தெரிவித்திடவும் தெரிவிக்கப்பட்ட விபரத்தை 10.10.2022-க்குள் ஆணையத்திற்கு அறிக்கை அனுப்பிடவும் அன்புடன் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

ஒம்/-
ஆணையர்

26/9/22
ஆணையருக்காக

26.9.2022

நகல் :

1. அரசு கூடுதல் தலைமைச் செயலாளர், கால்நடை பராமரிப்பு, பால்வளம் மற்றும் மீன்வளம், மீனவர் நலத்துறை, சென்னை-9.
2. அரசு கூடுதல் தலைமைச் செயலாளர், சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை, சென்னை-9.
3. அரசு முதன்மைச் செயலாளர், கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு துறை, சென்னை-9.
4. அரசு முதன்மைச் செயலாளர், கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த்துறை, சென்னை-9.
5. அரசு முதன்மைச் செயலாளர், வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சித் துறை, சென்னை-9.
6. அரசு முதன்மைச் செயலாளர், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை, சென்னை-9.
7. அரசு செயலாளர், குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை, சென்னை-9.
8. அரசு செயலாளர், வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை, சென்னை-9.
9. காவல்துறை இயக்குநர்.
10. மாவட்ட தேர்தல் அலுவலர்கள்.
11. அலுவலக இருப்புக் கோப்பு 2022.

தமிழ்நாடு மாநில கூட்டுறவுச் சங்கங்களின் தேர்தல் ஆணையம், சென்னை–18.

அனுப்புநர்
முனைவர் மு. ராஜேந்திரன், இ.ஆ.ப.,
ஆணையர்,
தமிழ்நாடு மாநில கூட்டுறவுச் சங்கங்களின்
தேர்தல் ஆணையம்,
273, அண்ணாசாலை, தேனாம்பேட்டை,
சென்னை-600 018.

பெறுநர்
1. கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் / மாநில தேர்தல் அலுவலர்
2. அனைத்து செயற்பதிவாளர்கள்/ மாநில தேர்தல் அலுவலர்கள்

ந.க 1153 /2020 /கூ.தே3 நாள்: 10.09.2020

ஐயா/அம்மையீர்,

பொருள்: கூட்டுறவுத் தேர்தல்கள் – நிர்வாகக் குழு உறுப்பினர்கள் மற்றும் தலைவர், துணைத்தலைவர் தேர்தல்கள் – 1988 –ம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவு சங்க விதிகள், விதி எண் 52(18)(a) மற்றும் விதி எண் 53(11)(a) ஆகியவற்றின் கீழ் தேர்தல் நடவடிக்கைகளை நிறுத்துதல் (Stop) – சில அறிவுரைகள் வழங்குதல் – தொடர்பாக

-----

தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்களின் தேர்தல் ஆணையத்தால் வழங்கப்படும் கூட்டுறவுச் சங்கங்களுக்கான தேர்தல் திட்டங்கள் மாவட்ட தேர்தல் அலுவலரால் வெளியிடப்பட்டு, அவரால் நியமிக்கப்படும் (Appoint) வாக்காளர் பட்டியல் அலுவலர் (Electoral Officer) மற்றும் தேர்தல் அலுவலர் (Election Officer) ஆகியோரால் 1988 –ம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்க விதிகள், (இனி விதி எனப்படும்) விதி எண் 52 மற்றும் 53 ஆகியவற்றின் கீழ் தேர்தல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

சில தேர்தல் நடவடிக்கைகளின் போது அவற்றை தொடர்ந்து நடத்த இயலாத சூழ்நிலைகளில் மேற்சொன்ன தேர்தல் நடத்தும் அலுவலர்கள் நிர்வாகக்குழு உறுப்பினர்கள் தேர்தல்களில் விதி எண் 52(18)(a) –ன் கீழும், தலைவர்,துணைத்தலைவர் தேர்தல்களில் விதி எண் 53(11)(a) –ன் கீழும் தங்களுக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தைக் கொண்டு தேர்தல் நடவடிக்கைகளை நிறுத்தி (Stop) ஆணையிடுகின்றனர். அவ்வாறு தேர்தல் நிறுத்தப்பட்ட விபரத்தினை அதற்கான காரணங்களைத் தெரிவித்து, விதி எண் 52(18)(b) மற்றும் விதி எண் 53(11)(b) –ன் கீழ் கட்டளையிட்டுள்ளபடி ஆணையத்திற்கு அறிக்கை (Report) அனுப்புகின்றனர்.

மேற்கூறப்பட்ட அறிக்கைகளை ஆணையம் மிகக்கவனமுடன் பரிசீலித்ததில், அவற்றில் விதிகள் பற்றி சரிவர அல்லது முற்றிலும் குறிப்பிடப்படாதும், விதியில் கூறப்படாத காரணங்களின் அடிப்படையில் தேர்தல் நடவடிக்கைகள் நிறுத்தப்பட்டிருப்பதும், நிறுத்தப்பட்ட பல இனங்களில் தேர்தல் அலுவலர்கள் உரிய கவனம் (Proper application of mind) செலுத்தாதும், இவ்வாறு நிறுத்தப்படும் நிலையில் எழும் சட்டப்பூர்வ விளைவுகள் மற்றும் தாக்கத்தை (Legal Consequences and Seriousness) கவனியாதும் மிகவும் வாலாயமாக தேர்தல் நடவடிக்கைகளை நிறுத்தி ஆணையிட்டிருப்பதும் மற்றும் பல குறைபாடுகளும் கண்டறியப்பட்டன.

தேர்தல் அலுவலர்களின் இச்செயல்பாடுகள் கூட்டுறவு சங்கதேர்தல்களை நடத்துவதில் கால விரயம், நிதி மற்றும் மனித சக்தி இழப்பு ஆகியவற்றை ஏற்படுத்துவதாகவும் அரசியலமைப்பு சட்டத்தின்படியான சட்டபூர்வ கடமையினை (Constitutional Obligation) ஆணையம் நிறைவேற்றுவதில் இடையூறு செய்வதாகவும் கருத இடமுள்ளன.

இவ்வாறு போதிய சட்டப்பூர்வ காரணங்களின்றி தேர்தல் நடவடிக்கைகள் தேர்தல் அலுவலர்களால் நிறுத்தப்படுவது குறித்து, மாண்பமை உயர்நீதிமன்றம் மற்றும் மாண்பமை கூட்டுறவு வழக்குகளுக்கான சிறப்புக் குழுக்கள் கடுமையாக விமர்சித்துள்ளது.

இந்நிலை மேலும் தொடராது காத்திடவும், தேர்தல் நடவடிக்கைகளை நிறுத்துவதற்கு தங்களுக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தினை தேர்தல் அலுவலர்கள் விதிகளுக்குட்பட்டு முறையாகக் (Proper) கையாண்டு தேர்தல்களை சுதந்திரமாகவும் நியாயமாகவும் (Free and fair) நடத்திடவும் கீழ்வரும் அறிவுரைகள் வழங்கப்படுகின்றன.

(1) எந்தவொரு தேர்தல் நடவடிக்கையினையும் விதி எண் 52(18)(a) மற்றும் 53(11)(a) ஆகியவற்றில் சொல்லப்பட்ட காரணங்களுக்காக மட்டிலுமே தேர்தல் அலுவலர் நிறுத்தலாம் (Shall have power to stop).

(2) தேர்தல் நடவடிக்கைகள் நடைபெற்று வரும் நிலையில் கலகம் (Riot) மற்றும் வெளிப்படையான வன்முறை (Open Violence), இயற்கை சீற்றத்தால் பேரிழப்பு போன்ற சம்பவங்களால் நடவடிக்கைகளை தொடர்ந்து மேற்கொள்ள இயலாத நிலையில் மட்டுமே அத்தேர்தல் நடவடிக்கையினை நிறுத்த அதிகாரம் வழங்கப்பட்டுள்ளதே தவிர, இச்சம்பவங்களை எதிர்நோக்கியோ (Anticipate) அல்லது ஊகம் செய்தோ (Presume or Assume) அல்லது உரிய வழிகாட்டுதல் இன்றி காவல் துறை அலுவலர் எவரிடமிருந்தாவது அறிக்கை பெற்றோ தேர்தல் நடவடிக்கையினை நிறுத்துவதற்கு விதி எண் 52(18)(a) மற்றும் விதி எண் 53(11)(a) –ல் வழிவகை செய்யப்படவில்லை என்பதை கவனத்தில் கொள்ளப்பட வேண்டும்.

(3) தேர்தல் நடவடிக்கைகள் நிறுத்தப்படும் நிலையில் அவ்வாறு நிறுத்தப்படுவதற்கான காரணங்கள் பதிவு செய்திடல் (Record) வேண்டும்.

(4) தேர்தல் நடவடிக்கை விதி எண் 52(18)(a) அல்லது விதி எண் 53(11)(a) கீழ் நிறுத்தப்பட்டுள்ள விபரம் (Fact) உடனடியாக அறிவிக்கப்பட வேண்டும் (Announce) .

(5) தேர்தல் நடவடிக்கை நிறுத்தப்பட்ட விபரம் மாவட்ட தேர்தல் அலுவலர், மாநில தேர்தல் அலுவலர் மற்றும் தேர்தல் ஆணையத்திற்கு உடனடியாக அறிக்கை (Report) செய்யவேண்டும்.

(6) தேர்தல் நடவடிக்கைகள் மேற்கொள்ளும் தேர்தல் அலுவலர்கள் தேர்தல் நடவடிக்கைகளை நிறுத்த விரும்பும் நிலையில் மேற்கூறப்பட்ட அறிவுரைகளை தவறாது கடைபிடித்தல் வேண்டும். தங்களுக்கு ஏற்பட்ட சட்டபூர்வ கடமைகளை செய்ய தவறுவதோ அல்லது தவறாக செய்வதோ (Nondoing or Misdoing) சட்ட மற்றும் ஒழுங்கு நடவடிக்கைகளுக்கு இடம் தருவதாக அமையும் என்பதை கவனத்தில் கொள்ள வேண்டும்.

(7) மாநில தேர்தல் அலுவலர்கள் விதி எண் 52(3)(c) –ன் கீழ் பொறுப்பாக்கப்பட்டுள்ளபடி, மாவட்ட தேர்தல் அலுவலர்கள் மற்றும் தேர்தல் அலுவலர்களுக்கு விதி எண் 52(18)(a)/53(11)(a) –ன் கீழ் தேர்தல் நடவடிக்கைகள் நிறுத்துவது தொடர்பான அறிவுரைகளை தவறாது கைக்கொள்ள அறிவுறுத்திடவும் இது தொடர்பாக மேற்கொண்ட நடவடிக்கை பற்றிய அறிக்கையினை 25.09.2020 க்குள் ஆணையத்திற்கு அனுப்பிடவும் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

ஒம்/–

ஆணையர்

ஆணையருக்காக
10.09.2020

10.09.2020

/ (11)

91.

# தமிழ்நாடு மாநில கூட்டுறவுச் சங்கங்களின் தேர்தல் ஆணையம், சென்னை – 18.

| அனுப்புநர் | பெறுநர் |
|---|---|
| திரு. தயானந்த் கட்டாரியா, இ.ஆ.ப., | காவல்துறை இயக்குநர், |
| ஆணையர், | 1, காமராஜ் சாலை, |
| தமிழ்நாடு மாநில கூட்டுறவுச் சங்கங்களின் | பிஷப் கார்டன், மயிலாப்பூர், |
| தேர்தல் ஆணையம், | சென்னை - 600 004. |
| 273, அண்ணாசாலை, தேனாம்பேட்டை, | |
| சென்னை - 600 018. | |

ந.க. 980/2022/கூ.தே.5 நாள்: 06.10.2022

ஐயா/அம்மையீர்,

பொருள்: கூட்டுறவுச் சங்கங்களின் தேர்தல்கள் - சட்ட ஒழுங்கு காரணம் காட்டி தேர்தல்கள் நிறுத்தப்படுதல் - தேர்தல் நடவடிக்கைகளின் போது உரிய பாதுகாப்பு மற்றும் சட்ட ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்ளுதல் (Sufficient Police Bandobast / Protection) - தொடர்பாக.

****

தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்களின் தேர்தல் ஆணையம் (இனி சுருக்கம் கருதி ஆணையம்) 1983-ம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் சட்டம் மற்றும் 1988-ம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் விதிகள் (இனி சுருக்கம் கருதி முறையே சட்டம் மற்றும் விதி எனப்படும்) தமிழ்நாட்டிலுள்ள அனைத்து வகை கூட்டுறவுச் சங்கங்களின் தேர்தல்களை நடத்துவதற்கு சட்டப்பிரிவு 33-A-ன் கீழ் அமைக்கப்பட்ட சட்டப்பூர்வ அமைப்பாகும் (Statutory Authority).

சட்டப்பிரிவு 33(11) - கீழும் விதி எண். 52, 52-A மற்றும் 53-ன்படியும் தமிழ்நாட்டிலுள்ள கூட்டுறவுச் சங்கங்களின் தேர்தல்களை சுதந்திரமாகவும், நேர்மையாகவும், வெளிப்படைத்தன்மையுடனும், அமைதியாகவும், ஒழுங்காகவும் (Free, Fair, Transparent, Peacefully and orderly) நடத்த வேண்டியது ஆணையத்திற்கேற்பட்ட சட்டப்பூர்வ கட்டளை மற்றும் கடமையாகும். (Statutorily mandated).

தமிழ்நாட்டில் கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் மற்றும் இதர வகை கூட்டுறவுச் சங்கங்களைத் தங்கள் கட்டுப்பாட்டில் கொண்ட 14 இதர துறை தலைவர்களை மாநிலத் தேர்தல் அலுவலர்களாகவும், அத்துறைகளின் மாவட்ட அளவிலான அலுவலர்களை மாவட்டத் தேர்தல் அலுவலர்களாகவும் ஆணையம் நியமித்து கூட்டுறவுச் சங்கங்களுக்கான தேர்தல்களை ஆணையம் நடத்தி வருகிறது.

ஆணையத்திற்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களில் கீழ் வருபவை மிக முக்கியமானதாகும்.

விதி எண் 52-A(1)(a) -ல் கூறப்பட்டுள்ளதாவது:

*"வாக்காளர் பட்டியல் தயாரித்தல் மற்றும் அனைத்து கூட்டுறவுச் சங்கங்களின் நிர்வாக சபைகள் மற்றும் அலுவல் நிர்வாகிகளுக்கான தேர்தல், தேர்தல் ஆணையத்தின் கண்காணிப்பு மற்றும் கட்டுப்பாட்டின் கீழ் நடைபெறும். அதனால் அவசியமென கருதப்படும் அத்தகைய கட்டளைகள், மாவட்ட ஆட்சியர் அல்லது மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அல்லது எந்த குற்றவியல் நிர்வாக நடுவர் அல்லது எந்த காவல் அதிகாரிக்கு வழங்க அதிகாரம் உண்டு."*

விதி எண் 52-A(5) -ல் கூறப்பட்டுள்ளதாவது:

*"மாவட்ட தேர்தல் அதிகாரிகள், வாக்காளர் பட்டியல் அலுவலர்கள், தேர்தல் அதிகாரிகள், வாக்குபதிவு அதிகாரிகள் மற்றும் இதர எந்த விதிகளின் கீழ் பணியமர்த்தப்பட்ட அதிகாரிகள், அப்போதைக்கு எந்த தேர்தல் நடைபெற மாநில அரசால் அமர்த்தப்பட்ட எந்த காவல் அதிகாரிகள், தேர்தல் ஆணையத்திற்கு அயல்பணியில் தொடக்க காலம் முதல் மற்றும் வாக்காளர் பட்டியல் தயாரிக்கும் தேதி முதல் அவை முடியும் வரை மற்றும் அத்தகைய தேர்தல் குறித்து அறிவிப்பு செய்யப்பட்ட தேதி முதல் மற்றும் அத்தகைய தேர்தல்கள் முடியும் தேதி வரை மற்றும் அந்த தேர்தல் ஆணையத்தின் கட்டுப்பாடு மேற்பார்வை மற்றும் ஒழுங்கு முறைக்குட்பட்டவர்களாக அத்தகைய அதிகாரி, அந்த காலத்தில் அயல் பணிக்கு அனுப்பப்பட்டவராக கருதப்படுவார்."*

தமிழ்நாட்டில் பதிவாளர் மற்றும் இதர செயற்பதிவாளர்களின் கட்டுப்பாட்டின்கீழ் 23,149 கூட்டுறவுச் சங்கங்கள் உள்ளன. இவற்றில் சுமார் 2,01,76,638 வாக்காளர்கள் பங்கேற்கும் 2,35,062 நிர்வாகக் குழு பதவியிடங்களுக்கான (Vacancies) தேர்தல்களும், அவ்வப்போது ஏற்படும் காலியிடங்களுக்கான தேர்தல்களையும் ஆணையம் தொடர்ச்சியாக நடத்தி வருகிறது.

இவ்வகையில் ஆயிரக்கணக்கான சங்கங்களில், லட்சக்கணக்கான இடங்களுக்கு, கோடிக் கணக்கான வாக்காளர்கள் பங்கேற்கும் மிகப் பிரமாண்டமான கூட்டுறவுத் தேர்தல் நடவடிக்கைகளில் காவல்துறையினர் பங்கேற்பும், பங்களிப்பும் (Participation and Performance) மிக மிக முக்கியமானதாகும் என்றும் ஆணையம் உறுதியாகக் கருதுகிறது.

ஆயின், நடந்து முடிந்த 2018 ஒட்டு மொத்த தேர்தல்களில் பல நேர்வுகளில் சட்ட ஒழுங்கு காரணம்காட்டி மிகச் சாதாரணமாக (in a very casual manner) தேர்தல் நடவடிக்கைகள் நிறுத்தப்பட்டுள்ளன.

இவற்றில் முக்கியமாக வேட்பு மனு தாக்கலின்போது ஒழுங்குபடுத்தப்படாத கூட்டம், சமூகவிரோதிகள் புகுந்து வேட்பு மனுவினை தாக்கல் செய்யவிடாமல் தடுப்பது, தேர்தல் அதிகாரியிடமிருந்து வேட்புமனு மற்றும் ஆவணங்களை பறிப்பது, கிழிப்பது போன்ற பல செய்கைகளினாலும், சட்ட ஒழுங்கு பிரச்சனை ஏற்படலாம் என்று காவல்துறையினர் வாய்மொழியாக அறிவுறுத்தியதன் பேரிலும், கேட்டுக் கொண்டதன் பேரிலும், தேர்தல் அலுவலர்கள் பல சங்கங்களின் தேர்தல் நடவடிக்கையினை நிறுத்தி உள்ளார்கள்.

இவ்வகையில் நடந்து முடிந்த தேர்தலில் 115 சங்கங்களின் தேர்தல்கள் நிறுத்தப்பட்டுள்ளன.

மாண்பமை சென்னை உயர்நீதிமன்றம் மற்றும் அதன் மதுரை அமர்வு மற்றும் மாண்பமை சென்னை உயர்நீதிமன்றத்தால் அமைக்கப்பட்ட ஓய்வு பெற்ற உயர்நீதிமன்ற நீதிபதிகளை தலைவர்களாகக் (Chairman) கொண்ட கூட்டுறவு வழக்குகளுக்கான மண்டலக்குழுக்களும் இதனை கடுமையாக விமர்சித்துள்ளன.

நிறுத்தப்படும் தேர்தல்களை மீண்டும் நடத்திடும் நிலையில், அரசு, ஆணையம், சங்கம் ஆகிய அனைத்து தரப்பினருக்கும், காலம், பணம், பொருள் மற்றும் மனித சக்தி போன்றவை வீணாகிறது. இதனைக் கருத்திற் கொள்ளாது, சட்ட ஒழுங்கு காரணம் காட்டி தேர்தல் நடவடிக்கைகள் நிறுத்தப்படுவதை ஆணையம் கவலையுடனும் கடுமையாகவும் நோக்குகிறது.

இவ்வகையில் கூட்டுறவுச் சங்கத் தேர்தல்கள் சட்ட ஒழுங்கு காரணம் காட்டி நிறுத்தப்படாமல் தடுப்பதற்கும் தேர்தல் நடவடிக்கைகள் அனைத்தும் ஒழுங்காகவும் அமைதியாகவும் (orderly and peaceful) நடைபெறுவதற்கும் காவல்துறையின் போதுமான அளவு பாதுகாப்பும் திறமையான கையாளுதலும் (Sufficient and efficient Police bandobast and protection) வேண்டும் என ஆணையம் உறுதியாக கருதுகிறது.

இவ்வகையில், தேர்தல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் அனைத்து இடங்களிலும், அனைத்து தேர்தல் நடவடிக்கைகளின் போதும், (During the entire process of election) குறிப்பாக தேர்தல் பணியில் ஈடுபட்டுள்ள அனைத்து அலுவலர்களுக்கும் தகுந்த பாதுகாப்பும் மற்றும் தேர்தல் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் இடங்கள், தேர்தல் நடவடிக்கைகளான வேட்புமனுதாக்கல், பரிசீலனை, இறுதி பட்டியல் வெளியிடுதல், வாக்குப்பதிவு, ஓட்டு எண்ணுகை போன்ற முக்கியமான தேர்தல் நடவடிக்கைகளின்போது சட்ட ஒழுங்கு (Law and Order) பிரச்சனை ஏற்படாது கண்காணித்தல் மற்றும் வாக்குச்சீட்டு, வாக்குப்பெட்டி மற்றும் தேர்தலுக்கான சாதனங்கள் (Election Materials) போன்ற அனைத்திற்கும் போதிய பாதுகாப்பு, சட்ட ஒழுங்கு பிரச்சினை ஏற்படக்கூடிய வாய்ப்பு இருக்கும் நிலையில் நுண்ணறிவு பிரிவு (Intelligence Wing) மூலம் அவற்றினை முன்கூட்டியே அறிந்து அதற்கான நடவடிக்கை மேற்கொள்ளுதல், சட்ட ஒழுங்கு பிரச்சினைகளைக் காரணமாகக் கொண்டும் எதிர்நோக்கியும் (Anticipation / Apprehension) காவல்துறை அலுவலர்கள் கேட்டுக்கொண்டதின் பேரிலும் தேர்தல் நடவடிக்கைகள் தேர்தல் அலுவலர்களால் நிறுத்தப்படுவதை தடுத்திடவும்/தவிர்த்திடவும் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

தவிரவும் சட்ட ஒழுங்கு பிரச்சினை காரணமாக தேர்தல் நிறுத்தப்படும் இனங்களில் அங்கு அச்சமயம் பணிப்பொறுப்பில் இருந்த காவலர்கள் தங்களது கடமையினைத் தவறாகச் செய்தோ, செய்யாமலிருந்தோ, (Commission / Omission / Dereliction of duty) தங்களது கடமையைச் செய்யத்தவறியுள்ளனர் என்ற நிலையில் கடமை தவறியவர்கள் மீது பணி இடை நீக்கம் போன்ற கடுமையான ஒழுங்கு நடவடிக்கை எடுத்திடவும் கேட்டுக்கொள்ளப்படுகிறது. ஒழுங்கு நடவடிக்கை அவசர அவசியமென ஆணையம் கருதும் இனங்களில் விதி எண்.52-A(1)(a) மற்றும் 52-A(5)-ல் தனக்களிக்கப்பட்டுள்ள அதிகாரத்தினைக் கைக்கொண்டு உரிய கட்டளைகள் மற்றும் ஆணைகளை ஆணையம் வழங்கும். ஆணையத்தின் இந்த அறிவுரைகளின் அடிப்படையில் கூட்டுறவுச் சங்க தேர்தல் நடவடிக்கைகளில் சிறப்பாகப் பணியாற்றிட தங்கள் கட்டுப்பாட்டிலுள்ள அனைத்து அலுவலர்களுக்கும் தக்க அறிவுரைகளை வழங்கிடவும் ஆணையம் அன்புடன் கேட்டுக் கொள்கிறது.

ஓம்/-

ஆணையர்

[signature] 6/10/22

ஆணையருக்காக

[signature] 06.10.2022

நகல்

1. கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர், சென்னை -10.
2. ஆணையர், பால் உற்பத்தி மற்றும் பால்பண்ணை மேம்பாட்டுத் துறை, சென்னை-51.

-95-

3. மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை ஆணையர், சென்னை-35.

4. கைத்தறி துறை ஆணையர், சென்னை-108.

5. கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் (வீட்டுவசதி), சென்னை-7.

6. தலைமைச் செயல் அலுவலர், தமிழ்நாடு பனைபொருள் வளர்ச்சி வாரியம், சென்னை-108.

7. தொழில் ஆணையர் மற்றும் தொழில் வணிகத்துறை இயக்குநர், சென்னை-32.

8. தலைமை செயல் அலுவலர், தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம், சென்னை-108.

9. கால்நடை பராமரிப்பு மற்றும் மருத்துவப்பணிகள் இயக்குநர், சென்னை-6.

10. வேளாண்மைத் துறை ஆணையர், சென்னை-5.

11. சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை இயக்குநர், சென்னை-15

12. ஊரக வளர்ச்சி பஞ்சாயத்து ராஜ் இயக்குநர், சென்னை-15.

13. பட்டுவளர்ச்சித் துறை இயக்குநர், சேலம்-636 007.

14. இயக்குநர் மற்றும் குழும இயக்குநர், ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி பணிகள், சென்னை-113.

15. சர்க்கரைத் துறை ஆணையர், சென்னை-35.

16. தலைமைச் செயலாளர், புனித ஜார்ஜ் கோட்டை, சென்னை-9

17. அரசு கூடுதல் தலைமைச் செயலாளர், கால்நடை பராமரிப்பு, பால்வளம் மற்றும் மீன்வளம், மீனவர் நலத்துறை, சென்னை-9.

18. அரசு கூடுதல் தலைமைச் செயலாளர், சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை, சென்னை-9.

19. அரசு முதன்மைச் செயலாளர், கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு துறை, சென்னை-9.

20. அரசு முதன்மைச் செயலாளர், கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த்துறை, சென்னை-9.

21. அரசு முதன்மைச் செயலாளர், வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சித் துறை, சென்னை-9.

22. அரசு முதன்மைச் செயலாளர், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை, சென்னை-9.

23. அரசு செயலாளர், குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை, சென்னை-9.

24. அரசு செயலாளர், வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை, சென்னை-9.

25. அனைத்து மாவட்டத் தேர்தல் அலுவலர்கள்.

26. அலுவலக இருப்புக் கோப்பு 2022.

தமிழ்நாடு மாநில கூட்டுறவுச் சங்கங்களின் தேர்தல் ஆணையம், சென்னை – 18

| அனுப்புநர்: | பெறுநர்: |
|---|---|
| திரு. தயானந்த் கட்டாரியா, இ.ஆ.ப., | 1. கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் / மாநில தேர்தல் அலுவலர், |
| ஆணையர், | 2. இதர செயற்பதிவாளர்கள் / மாநில தேர்தல் அலுவலர்கள். |
| தமிழ்நாடு மாநில கூட்டுறவுச் சங்கங்களின் தேர்தல் ஆணையம், | |
| 273, அண்ணாசாலை, தேனாம்பேட்டை, | |
| சென்னை – 600 018. | |

ந.க. 1111/2022/கூ.தே.5 நாள்: 20.10.2022

ஐயா / அம்மையீர்,

பொருள்: கூட்டுறவுச் சங்கத் தேர்தல்கள் – மாண்பமை சென்னை உயர்நீதிமன்றம் மற்றும் அதன் மதுரை அமர்வு, கூட்டுறவு வழக்குகளுக்கான சிறப்பு மண்டலக் குழுக்கள் முன்பான தேர்தல் நடவடிக்கைகள் குறித்த மனுக்கள் மற்றும் புகார்கள் – வருங்காலங்களில் இம்மாதிரி புகார்களுக்கு இடம் தராது செயல்படுதல் – அறிவுரைகள் வழங்குதல் - தொடர்பாக.

பார்வை:
1. ஆணையத்தின் தேர்தல் திட்டம் ந.க.321/2018/கூதே1, நாள்: 05.03.2018.
2. ஆணையத்தின் கடிதம் எண் ந.க.825/2022/கூதே2 (3), நாள்: 29.08.2022.
3. ஆணையத்தின் கடிதம் எண் ந.க.1153/2020/கூதே3, நாள்: 26.09.2022.
4. ஆணையத்தின் கடிதம் எண் ந.க.897/2022/கூதே5, நாள்: 26.09.2022.

****

பார்வை (1) - ல் கண்ட ஆணையத்தின் தேர்தல் திட்டப்படி 2018 - ஒட்டு மொத்த தேர்தல்கள் 18,806 சங்கங்களுக்குத் திட்டமிடப்பட்டு 18,244 சங்கங்களுக்கு 2,24,649 இடங்களுக்கு நடத்தி முடிக்கப்பட்டுள்ளன.

மேற்கண்ட தேர்தல் நடவடிக்கை தொடர்பாக மாண்பமை சென்னை உயர்நீதிமன்றம் மற்றும் அதன் மாண்பமை மதுரை அமர்வு ஆகியவற்றின் முன்பாக 1706 ரிட்மனுக்கள்

தாக்கல் செய்யப்பட்டன. இவை தவிர மாண்பமை ஓய்வு பெற்ற உயர்நீதிமன்ற நீதிபதிகளைத் தலைவர்களாகக் கொண்ட கூட்டுறவு வழக்குகளுக்கான சிறப்பு மண்டலக்குழுக்கள் முன்பாகவும் மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டன. மேலும் ஆணையத்தினால் நேரடியாக 5,544 புகார் மனுக்களும் பெறப்பட்டுள்ளன.

மாண்பமை உயர்நீதிமன்றங்களும், மண்டல குழுக்களும் புகார்களின் தன்மையை நன்கு பரிசீலித்து, பல இனங்களில் தேர்தல் அலுவலர்களின் தேர்தல் நடவடிக்கைகளை கடுமையாகக் கண்டனம் செய்தும், விமர்சித்தும், தேர்தலை ரத்து செய்தும், தேர்தல் அலுவலர்களின் மீது நடவடிக்கை எடுக்கக் கோரியும், தீர்ப்பாணைகள் வழங்கியுள்ளன.

இவ்வகையில் 21 சங்கங்களுக்கான தேர்தல்கள் மாண்பமை சென்னை உயர்நீதிமன்றம் மற்றும் அதன் மதுரை அமர்வு, மண்டலக்குழுக்கள் ஆகியவற்றாலும் 713 சங்கங்களுக்கான தேர்தல்கள் ஆணையத்தினாலும் ரத்து செய்யப்பட்டுள்ளன. இம்மாதிரியான நிலை மிகவும் வருத்தத்திற்குரியதாகும்.

மாண்பமை உயர்நீதிமன்றம் மற்றும் சிறப்பு மண்டலக்குழு முன்பான மனுக்கள், மற்றும் ஆணையத்தினால் நேரடியாகப் பெற்ற மனுக்களில் கூறப்பட்டுள்ள அனைத்து வகைப் புகார்களும் வகைப்படுத்தப்பட்டு இணைப்பில் தரப்பட்டுள்ளன.

வாக்காளர் பட்டியல் தொடர்பான பெரும்பாலான புகார்கள், சங்கங்கள் தங்களது உறுப்பினர் / வாக்காளர் பட்டியல்கள் சரிவரத் தயாரிப்பதை (Purification of Member list) பொறுப்பான அலுவலர்கள் உறுதி செய்வதினால் தவிர்க்கப்படும். இது தொடர்பாக பார்வை (2)-ல் காணும் கடிதத்தில் ஆணையத்தினால் தகுந்த அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன.

இதுபோன்று வேட்பு மனு பெறுதல் மற்றும் பரிசீலனை தொடர்பாகவும் ஆணையத்தால் தகுந்த அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன. மேலும் உண்மை நிலவரத்திற்கு மாறாக சட்ட ஒழுங்கினை காரணமாக காட்டி தேர்தல் நடவடிக்கைகள் நிறுத்துவது தொடர்பாக பார்வை (3)-ல் காணும் ஆணையத்தின் கடிதம் மூலம் அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன.

இருப்பினும், இம்மாதிரியான புகார்கள் தொடர்வதை, கூட்டுறவுச் சங்கத் தேர்தல்களை சுதந்திரமாகவும், நியாயமாகவும், வெளிப்படைத்தன்மையுடனும், விருப்பு வெறுப்பின்றியும், சட்டபூர்மாக நடத்த கடமைப்பட்ட ஆணையம், மிகவும் கவலையுடன் நோக்குகிறது.

தேர்தல் நடவடிக்கைகள் பற்றிய இம்மாதிரியான புகார்கள்இனியும் தொடராவண்ணம், தேர்தல் நடவடிக்கைகளில் ஈடுபடும் அனைத்து அலுவலர்களும் உறுதி செய்ய வேண்டியது மிகவும் அவசியமாகும்.

ஆணையத்தின் இது தொடர்பான அனைத்து அறிவுரைகளையும் புறந்தள்ளி தங்களுக்குரிய சட்டபூர்வ கடமைகளிலிருந்து தவறும் அலுவலர்களை, ஆணையத்தின் சட்டபூர்வ கடமையை நிறைவேற்றுவதில் இடையூறு மற்றும் கேடு (Vitiate)

விளைவிப்பவர்களாகவும், அதனைத் தடுப்பவர்களாகவும், ஆணையம் மற்றும் அரசின் நடவடிக்கைகளுக்கு களங்கம் விளைப்பவர்களாகவும் கருதி, தகுந்த ஒழுங்கு நடவடிக்கையினை பார்வை (4)-ல் கண்ட ஆணையத்தின் கடிதத்தில் தெரிவித்தபடி மேற்கொள்ள அறிவுறுத்தப்படுகிறது. இந்த அறிவுரைகளை தங்கள் கட்டுப்பாட்டின் கீழ் உள்ள அனைத்து அலுவலர்களுக்கும் தெரிவித்திடவும் அதன் விபரத்தை 10.11.2022-க்குள் ஆணையத்திற்குத் தெரிவித்திடவும் அன்புடன் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

ஒம்/-

ஆணையர்

20/10/22

ஆணையருக்காக

20.10.2022

இணைப்பு : மேற்கூறியவாறு

நகல் :

1. அரசு கூடுதல் தலைமைச் செயலாளர், கால்நடை பராமரிப்பு, பால்வளம் மற்றும் மீன்வளம், மீனவர் நலத்துறை, சென்னை-9.
2. அரசு கூடுதல் தலைமைச் செயலாளர், சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை, சென்னை-9.
3. அரசு முதன்மைச் செயலாளர், கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு துறை, சென்னை-9.
4. அரசு முதன்மைச் செயலாளர், கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த்துறை, சென்னை-9.
5. அரசு முதன்மைச் செயலாளர், வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சித் துறை, சென்னை-9.
6. அரசு முதன்மைச் செயலாளர், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை, சென்னை-9.
7. அரசு செயலாளர், குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை, சென்னை-9.
8. அரசு செயலாளர், வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை, சென்னை-9.
9. அனைத்து மாவட்டத் தேர்தல் அலுவலர்கள்.
10. அலுவலக இருப்புக் கோப்பு 2022.

5.

## இணைப்பு

ந.க.1111/2022/கூ.தே.5 நாள் : 20.10.2022

## தேர்தல் ஆணையத்தில் பெறப்பட்ட புகார்களின் தன்மைகள்

## (Nature of Complaints)

### I. உறுப்பினர்/வாக்காளர் பட்டியல் தொடர்புடையது :-

- உறுப்பினர் பட்டியல் அறிவிப்பு பலகையில் ஒட்டப்படவில்லை.
- வாக்காளர் பட்டியல் அலுவலர் வரவில்லை.
- உறுப்பினர் பட்டியல் தயாரிக்கப்படவில்லை.
- போலியான மற்றும் தகுதியற்ற, உறுப்பினர்கள் பட்டியலில் இடம் பெற்றிருத்தல்.
- கோருரிமை மற்றும் மறுப்புகள் பெறப்படவில்லை,
- இறுதி வாக்காளர் பட்டியல் அறிவிப்பு பலகையில் ஒட்டப்படவில்லை.
- உறுப்பினர் பட்டியலில் பெயர் விடுபட்டுள்ளது.
- இறந்த உறுப்பினர்கள் பெயர்கள் நீக்கப்படவில்லை.
- சங்க செயல் எல்லை (area of operation)யில் வசிக்காத / தொழில் செய்யாத / விவசாய நிலம் இல்லாத உறுப்பினர்கள் சங்கத்துணை விதிக்கு புறம்பாக உறுப்பினர் பட்டியலில் இடம் பெற்றிருத்தல்.

### II. வேட்புமனு தாக்கல் தொடர்புடையது :-

- வேட்புமனு நடவடிக்கைக்கான தேர்தல் அலுவலர் தேர்தல் அறிவிப்பின்படியான நாளில், இடத்தில், நேரத்தில் இல்லை.
- வேட்புமனு படிவம் (Form No.18) தரமறுத்தல்.
- குறிப்பிட்ட நபர்களுக்கு மட்டுமே வேட்பு மனு வழங்கப்படுதல்.
- தட்டச்சு, ஒளிநகல், கைப்பட எழுதுதல், பதிவிறக்கம் செய்யப்படுதல் போன்ற வகைகளில் உள்ள படிவம்-18ஐ ஏற்க மறுத்தல்.
- வேட்புமனு பெற மறுத்தல்.

- குறிப்பிட்ட நபர்களிடமிருந்து, குறிப்பிட்ட எண்ணிக்கையில் மட்டுமே வேட்பு மனுக்கள் பெறப்படுதல்.
- வேட்பு மனுத்தாக்கலுக்கு ஒப்புகை சீட்டு வழங்கவில்லை.
- வேட்புமனுதாக்கலுக்கு குறிப்பிட்ட நபர்களைத் தவிர வேறு எவரும் அனுமதிக்கப்படவில்லை.
- காவல்துறை பாதுகாப்பு போதுமான அளவு ஏற்பாடு செய்யப்படவில்லை.
- வீடியோ (Video Coverage) ஏற்பாடு இல்லை.
- வேட்பு மனு தாக்கலின் போது உண்மை நிலவரத்திற்கு மாறாக (Contrary to facts and circumstances) சட்ட ஒழுங்கினைக் காரணம் காட்டி தேர்தல் நடவடிக்கைகளை நிறுத்துதல்.

III. <u>வேட்புமனு பரிசீலனை தொடர்புடையது :-</u>

- அறிவிப்பின்படியான பரிசீலனைக்கான நாள், இடத்தில், நேரத்தில் தேர்தல் அலுவலர் இல்லை.
- வேட்புமனு தாக்கல் கையொப்பம் சரியில்லை, தொகுதி சரிவர நிரப்பப்படவில்லை, உறுதி மொழியினை அடிக்கவில்லை, வேட்புமனு சரிவர நிரப்பப்படவில்லை, உறுப்பினர் எண் சரியாக இல்லை மற்றும் இது போன்ற அற்ப காரணங்களுக்காக நிராகரிக்கப்படுதல்.
- வேட்பாளர்களுக்கு நிராகரிப்பதற்கான காரணங்கள் தெரிவிக்காமல் இருத்தல்.
- வேட்பாளர்களுக்கு அனைத்து வேட்பு மனுக்களையும் பார்வையிட்டு அதை சரியானதுதான் என்று அறிந்து கொள்ளும் வகையில் நியாயமான எவ்வித உதவியும் செய்யாமல் இருத்தல்.
- குறிப்பிட்ட நபர்களின் வேட்புமனுக்கள் மற்றும் அவை சரியாக இல்லாத நிலையிலும் ஏற்றுக்கொள்ளப்படுதல்.

7

- குறிப்பிட்ட எண்ணிக்கையிலான வேட்புமனுக்கள் மட்டுமே ஏற்றுக்கொள்ளப்படுதல்.
- தேர்தல் அலுவலர் சில வேட்பு மனுக்களில் தாங்களாகவே திருத்தம் மேற்கொண்டு அவற்றை நிராகரித்தல்.
- தேர்தல் அலுவலரால் படிவம் 20-ல் வேட்பாளர் பட்டியல் முறையாக வெளியிடப்படாமல் இருத்தல்.

ஒம்/-
ஆணையர்

20/10/22
ஆணையருக்காக

20.10.2022

**தமிழ்நாடு மாநில கூட்டுறவுச் சங்கங்களின் தேர்தல் ஆணையம், சென்னை – 600 018.**

| அனுப்புநர் | பெறுநர் |
|---|---|
| திரு. தயானந்த் கட்டாரியா, இ.ஆ.ப., | 1. கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் / |
| ஆணையர், | மாநில தேர்தல் அலுவலர், |
| தமிழ்நாடு மாநில கூட்டுறவுச் சங்கங்களின் | 2. இதர செயற்பதிவாளர்கள் / மாநிலத் |
| தேர்தல் ஆணையம், | தேர்தல் அலுவலர்கள் |
| 273, அண்ணாசாலை, தேனாம்பேட்டை, | |
| சென்னை – 600 018. | |

ந.க.1157/2022/கூ.தே.5 நாள் : 03.11.2022

ஐயா / அம்மையீர்,

**பொருள்:** கூட்டுறவுச் சங்கங்களின் தேர்தல்கள் – 1988-ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் விதிகள், விதி எண். 52(3)(a)-ன் கீழ் கூட்டுறவுச் சங்கத்தின் பணியாளர்கள் மற்றும் அதிகாரிகளை தேர்தல் அலுவலர்களாக (Election Officers) நியமனம் செய்தல் – அறிவுரைகள் வழங்குதல் - தொடர்பாக.

-----

கூட்டுறவுச் சங்கங்களின் தேர்தல்களை நடத்த மாவட்டத் தேர்தல் அலுவலர்களால் 1988-ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் விதிகள் (இனிவரும் இடங்களில் விதி எனப்படும்), விதி எண். 52(3)(a)-ன் கீழ் தேர்தல் அலுவலர்கள் நியமனம் செய்யப்படுகின்றனர்.

விதி எண். 52(3)(a) கூறுவதாவது :

> *"தேர்தல் ஆணையம் ஒரு மாவட்டத்திற்கு அல்லது ஒரு மாவட்டத்தின் ஒரு பகுதிக்கு, மாவட்ட தேர்தல் அதிகாரியாக பணியமர்த்தம் செய்யப்பட்டவர், அந்த மாவட்டத்தின் அல்லது அந்த மாவட்டத்தின் ஒரு பகுதி கூட்டுறவு சங்கங்களின், நிர்வாக சபை உறுப்பினர் தேர்தல் நடத்துவதற்காக, அரசு அதிகாரிகள் அல்லது அவரின் கீழ் பணியாற்றும் அதிகாரிகள் அல்லது கூட்டுறவு சங்கங்களின் அல்லது ஊராட்சி மன்றங்கள் அல்லது மத்திய அல்லது மாநில அரசுக்கு சொந்தமான நிறுவனங்கள் அல்லது கல்வி நிறுவனங்களின் பணியாளர்களை மற்றும் அதிகாரிகளை, தேவைப்படும் அத்தகைய அளவிலான தேர்தல் அதிகாரிகளை பணியமர்த்தம்*

*செய்யலாம். மாவட்டத் தேர்தல் அதிகாரி, மாற்று தேர்தல் அதிகாரி அல்லது அதிகாரிகளை கூட பணியமர்த்தம் செய்யலாம்."*

இவ்விதியில், 'கூட்டுறவுச் சங்கங்களின் பணியாளர்களை மற்றும் அதிகாரிகளை, தேவைப்படும் அத்தகைய அளவிலான தேர்தல் அதிகாரிகளாக பணியமர்த்தம் செய்யலாம்' என்று கூறப்பட்டுள்ளது. ஆயின் அவ்வாறு பணியமர்த்தம் செய்யப்படுபவர்கள் 'இப்பதவித் தரத்திற்கு குறையாத' என்று எப்பதவித் தரத்தையும் (Post) குறிப்பிடவில்லை. எனவே, சில மாவட்ட தேர்தல் அலுவலர்கள், பணியாளர்களின் பதவித் தரத்தினை (Post) கருத்தில் கொள்ளாது, சங்கத்தில் பணியாற்றி வருபவர் (Employee) என்ற ஒரே காரணத்தின் அடிப்படையில், தொகுப்பூதியம் மற்றும் ஒப்பந்த அடிப்படையில் பணி நியமனம் செய்யப்பட்டவர்களையும் மற்றும் பணிநிலை எதுவாக இருந்தாலும் அவர்களையும் சங்க தேர்தல் அலுவலர்களாக பணியமர்த்தம் செய்கிறார்கள்.

தவிரவும் ஒரு சங்கத்தின் பணியாளர்கள் அதே சங்கத்தின் தேர்தல் அலுவலர்களாகவும், சில இனங்களில் ஒரு சங்கத்தின் பணியாளர்கள் அவர்கள் முன்பு பணியாற்றிய சங்கங்களின் தேர்தல் அலுவலர்களாகவும் நியமனம் செய்யப்பட்டு அச்சங்கங்களின் தலைவர் / துணைத்தலைவர் உட்பட அனைத்து தேர்தல் நடவடிக்கைகளையும் மேற்கொண்டுள்ளனர்.

சங்கப் பணியாளர்களை தேர்தல் அலுவலர்களாக நியமித்திடும் இவ்வகை விவாதத்திற்குரிய, ஒழுங்குப்படுத்தப்படாத போக்கினால் கூட்டுறவுச் சங்கத் தேர்தல்களை சுதந்திரமாகவும், நேர்மையாகவும், வெளிப்படைத்தன்மையுடனும் ஆணையம் நடத்துவதில் நடைமுறை சிக்கல்களும், தேர்தல் அலுவலரின் நடவடிக்கை தொடர்பான புகார்களும், வழக்குகளும் ஆணையம் எதிர்கொள்ள வேண்டிய நிலை ஏற்படுகின்றன.

தேர்தல் அலுவலர்களாக பணியமர்த்தம் செய்யப்படுபவர்கள் நீதிமுறைசார்புடைய (Quasi Judicial) அலுவலராகச் செயல்படுவதால் இவர்களது நியமனத்தில் மிகுந்த கவனம் செலுத்த வேண்டியது மிக அவசியமானது என்று ஆணையம் கருதுகிறது.

மேலே சொல்லப்பட்ட சிரமங்களை (Difficulties) கருத்திற்கொண்டு விதி எண். 52-(3)(a)-ன் கீழ் கூட்டுறவுச் சங்கங்களின் பணியாளர்களை மற்றும் அதிகாரிகளை (Employees and Paid Officers) தேர்தல் அலுவலர்களாக மாவட்டத் தேர்தல் அலுவலர் நியமனம் செய்வது தொடர்பாக விதி எண்.52-A (9) மற்றும் (10) – ன் கீழ் தனக்கு வழங்கப்பட்ட அதிகாரத்தை கைக்கொண்டு கீழ்வரும் அறிவுரைகளை ஆணையம் வழங்குகிறது :

1. போதுமான அளவு அரசு அலுவலர்கள் (Officers of the Government or Officers Subordinate to the District Election Officer) இல்லாத நிலையில் மட்டுமே சங்கப் பணியாளர்கள் மற்றும் அதிகாரிகளை தேர்தல் அலுவலர்களாக பணியமர்த்தலாம்.

2. மாவட்டத் தேர்தல் அலுவலரால், தேர்தல் அலுவலராக பணியமர்த்தம் செய்யப்படும் கூட்டுறவுச் சங்கங்களின் பணியாளர்கள் மற்றும் அதிகாரிகள் (Employees and Officers):-

(i) செயலாளர்கள் (Secretaries), உதவி செயலாளர்கள், நிர்வாக அலுவலர்கள் (Executive officers), உதவி நிர்வாக அலுவலர்கள், மேலாளர்கள் (Managers), உதவி மேலாளர்கள் ஆகிய வகை (Category of posts) பதவிகளில் உள்ளவர்கள் மற்றும் அவ்வகைப் பதவிகளுக்கு குறையாதவகை (Not below such category of posts) பதவிகளில் உள்ளவர்களாக இருத்தல் வேண்டும்.

(ii) காலமுறை ஊதியம் உள்ள பணியிடத்தில் நியமனம் செய்யப்பட்டவராக இருத்தல் வேண்டும் (A post carrying a definite scale of pay).

(iii) சங்கத்தின் ஒப்பந்த மற்றும் தொகுப்பூதிய பணியாளராக இருத்தல் கூடாது.

(iv) ஒரு சங்கத்திற்கு தேர்தல் அலுவலராக பணியமர்த்தம் செய்யப்படுபவர் அச்சங்கத்தின் தற்போதைய அல்லது முன்னாள் (is or was) பணியாளராக இருத்தல் கூடாது.

(v) பெருந்தண்டனைக்குரிய குற்றங்கள் பற்றிய (Major Penalties) ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு நடவடிக்கை நிலுவையில் உள்ளவராக (Under disciplinary Proceedings and pending disposal) இருத்தல் கூடாது.

மேற்காண் அறிவுரைகளை தங்கள் கட்டுப்பாட்டின் கீழ்வரும் அனைத்து மாவட்ட தேர்தல் அலுவலர்களுக்கும் தெரிவித்திடவும், அது பற்றிய விவரத்தை 15.11.2022-க்குள் ஆணையத்திற்கு அறிக்கை அனுப்பிடவும் அன்புடன் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

ஒம்/-

ஆணையர்

[signature] 3/11/22

ஆணையருக்காக

[initials] 3-11-2022

நகல் :

1. அரசு கூடுதல் தலைமைச் செயலாளர், கால்நடை பராமரிப்பு, பால்வளம் மற்றும் மீன்வளம், மீனவர் நலத்துறை, சென்னை-9.

2. அரசு கூடுதல் தலைமைச் செயலாளர், சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை, சென்னை-9.

3. அரசு முதன்மைச் செயலாளர், கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு துறை, சென்னை-9.

4. அரசு முதன்மைச் செயலாளர், கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த்துறை, சென்னை-9.
5. அரசு முதன்மைச் செயலாளர், வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சித் துறை, சென்னை-9.
6. அரசு முதன்மைச் செயலாளர், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை, சென்னை-9.
7. அரசு செயலாளர், குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை, சென்னை-9.
8. அரசு செயலாளர், வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை, சென்னை-9.
9. அனைத்து மாவட்டத் தேர்தல் அலுவலர்கள்.
10. அலுவலக இருப்புக் கோப்பு 2022.
11. கூ.தே.3 பிரிவு.

**தமிழ்நாடு மாநில கூட்டுறவுச் சங்கங்களின் தேர்தல் ஆணையம், சென்னை - 600 018.**

அனுப்புநர்

திரு. தயானந்த் கட்டாரியா, இ.ஆ.ப.,
ஆணையர்,
தமிழ்நாடு மாநில கூட்டுறவுச் சங்கங்களின்
தேர்தல் ஆணையம்,
273, அண்ணாசாலை, தேனாம்பேட்டை,
சென்னை - 600 018.

பெறுநர்

1. கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் /
மாநில தேர்தல் அலுவலர்,
2. இதர செயற்பதிவாளர்கள் / மாநிலத்
தேர்தல் அலுவலர்கள்.

ந.க. 540/2018/கூ.தே.2 நாள் : 04.11.2022

ஐயா / அம்மையீர்,

**பொருள்:** கூட்டுறவுச் சங்கங்களின் தேர்தல்கள் - மாற்றுத் திறனுடையோர் (Differently abled) கூட்டுறவுச் சங்கங்களில் தேர்தல் நடவடிக்கையில் ஈடுபடுதல் — 1983-ம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவு சங்கங்கள் சட்டம், பிரிவு 34(1)(i)-க்கான திருத்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளது - தொடர்பாக.

**பார்வை :** 1. ஆணையத்தின் இதே எண்ணிட்ட கடிதம் நாள் 27.03.2018.
2. கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் அலுவலக Endt.18781/ 2018/ SA1 நாள் 08.03.2022 உடன் இணைத்து வரப்பட்ட அரசிதழ் எண் 83, நாள் 31.01.2022.

-----

பார்வை (1)-ல் கண்ட கடிதத்தில் கூட்டுறவுச் சங்கங்களின் தேர்தல்களில் மாற்றுத்திறனாளிகள் (Differently abled) குறிப்பாக பார்வை குறைபாடு உள்ளவர்கள் (Visually disabled) வேட்பு மனு தாக்கல் செய்வது தொடர்பாக அறிவுரைகள் ஆணையத்தால் வழங்கப்பட்டுள்ளது.

அக்கடிதத்தில் வரிசை எண் (4)-ன் கீழ் கூறப்பட்டுள்ளது வருமாறு :

*"இவ்வகையில் பார்வை திறன் குறைபாடு (Visually disabled) உள்ளவர்களிடமிருந்து வேட்பு மனு பெறப்பட்டிருந்தாலும் பரிசீலனையின் போது 1988-ம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவு சங்கங்கள் சட்டம் பிரிவு 34 (1) (i) மற்றும் உயர்நீதிமன்ற அமர்வு தீர்ப்பின் அடிப்படையில் அதனை நிராகரிக்கலாம் (Reject)."*

தற்போது பார்வை எண் (2)-ன் வழி தொடர்புறுத்தப்பட்ட அரசிதழ் எண் 83 நாள் 31.01.2022 (நகல் இணைப்பு)-ல் கண்டுள்ளபடி 1983-ம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவு சங்கங்கள் சட்டம், பிரிவு 34 (1) (i)-க்கான திருத்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இத்திருத்தத்தின்படி பிரிவு 34 (1) (i) சொல்லப்பட்ட தகுதியின்மை, பார்வைக் குறைபாடு (Visually impaired) உடைய மற்றும் உடல் தகுதியின்மை (Physical disability) காரணமாக எழுதத் தெரியாத (Unable to write) ஆகிய நபர்களுக்கு (Persons) பொருந்தாது எனக்கண்டுள்ளது.

எனவே கூட்டுறவுச் சங்கங்களின் வேட்பு மனு பெறுதல், பரிசீலித்தல், தள்ளுபடி செய்தல், ஏற்றுக் கொள்ளுதல் போன்ற வேட்பு மனு தொடர்பான நடவடிக்கைகளின் போது சட்டப்பிரிவு 34-ன்கீழ் நிர்வாக சபை அங்கத்தினர்களின் தகுதியின்மை பற்றிய இச்சட்டத்திருத்தத்தைக் கவனத்தில் கொண்டு பார்வைக்குறைபாடு (Visually impaired) மற்றும் உடல் தகுதியின்மை (Physical disability) காரணமாக எழுதத் தெரியாத நபர்கள் வேட்பு மனுத்தாக்கல் செய்யும் நிலையில் இந்த ஒரு காரணத்தினால் மட்டுமே அவரது வேட்பு மனுவினை நிராகரித்தல் கூடாது என்று தெரிவிக்கப்படுகிறது. இது தொடர்பாக தங்களின் கட்டுப்பாட்டின் கீழ் வரும் அனைத்து அலுவலர்களுக்கும் தக்க அறிவுரைகள் வழங்கிடவும், வழங்கிய விபரத்தை 15.11.2022-க்குள் ஆணையத்திற்குத் தெரிவித்திடவும் அன்புடன் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

ஓம்/-
ஆணையர்

ஆணையருக்காக

இணைப்பு : மேற்கண்டவாறு

நகல் :

1. அனைத்து மாவட்டத் தேர்தல் அலுவலர்கள்.
2. ஆணையர், மாற்றுத்திறனாளிகள் நல ஆணையரகம், சென்னை – 5.
3. அலுவலக இருப்புக் கோப்பு 2022.

தமிழ்நாடு மாநில கூட்டுறவுச் சங்கங்களின் தேர்தல் ஆணையம்

அனுப்புநர்
டாக்டர் மு. ராஜேந்திரன், இ.ஆ.ப.,
ஆணையர்,
தமிழ்நாடு மாநில கூட்டுறவுச் சங்கங்களின்
தேர்தல் ஆணையம்,
எண்.273, அண்ணாசாலை,
தேனாம்பேட்டை, சென்னை–18.

பெறுநர்
பதிவாளர் / மாநில தேர்தல் அலுவலர்,
செயற்பதிவாளர்கள் / மாநில தேர்தல்
அலுவலர்கள்.

ந.க.எண் : 540 / 2018 / கூதே2 நாள் : 27.03.2018

ஐயா,

பொருள் : கூட்டுறவுச் சங்கங்களின் தேர்தல்கள் 2018 – மாற்றுத்திறனுடையோர் சங்கங்களின் கூட்டு இயக்கத்தின் கோரிக்கை – நடவடிக்கை – தொடர்பாக.

பார்வை: (1) ஆணையத்தின் இதே எண்ணிட்ட கடிதம் நாள் : 21.03.2017.

(2) ஆணையத்தின் சட்டஆலோசகர் மூத்த வழக்கறிஞர் (Senior Advocate) திரு. N.R, சந்திரன், சட்டக் கருத்துரை.

---------

பார்வை (1)ல் கண்ட கடிதத்தின்படி, கூட்டுறவுச் சங்கத் தேர்தல்களில் மாற்றுத்திறனாளிகள் வேட்புமனுத் தாக்கல் செய்யும்போது அந்த ஒரு காரணத்தால் மட்டுமே அவ்வேட்பு மனுவை வாங்க மறுப்பது கூடாது என்று அறிவுரை வழங்கப்பட்டிருந்தது.

பெறப்பட்ட வேட்புமனுக்களைப் பரிசீலித்து (Scrutiny) முடிவெடுத்து இறுதியாக ஏற்றுக் கொள்ளப்பட்ட வேட்பாளர் பட்டியலை தேர்தல் அலுவலர் வெளியிடுவது தொடர்பாக ஆணையத்தால் பார்வை (2)ல் பெறப்பட்ட சட்டக் கருத்துரையின் (நகல் இணைப்பு) அடிப்படையில் ஆணையம் கீழ்வரும் அறிவுரைகள் வழங்குகிறது.

1) 1983–ம் ஆண்டு தமிழ்நாடு மாநில கூட்டுறவுச் சங்கங்களின் பிரிவு 34 (1) (i)–ன்படி தமிழ் எழுதப்படிக்கத் தெரியாத நபர்கள் நிர்வாகக்குழு உறுப்பினர்கள் தேர்தலுக்குப் போட்டியிட தகுதி உள்ளவர் அல்ல.
2) இதனை உறுதி செய்து சென்னை உயர் நீதிமன்ற அமர்வு W.P. 9391/2013 மற்றும் 9723/2013 தீர்ப்பளித்துள்ளது. (CDJ 2013 MHC 2823).

...............2

3) 2016-ம் ஆண்டு மாற்றுத்திறனாளிகள் உரிமைச் சட்டத்தின் கீழான மாற்றுத்திறனாளிகள (Disabilities) பார்வை குறைபாடு (visually disabled) கூட்டுறவுச் சட்டத்திற்கு குறிப்பாக நிர்வாகக்குழு உறுப்பினர் தேர்தலுக்கு பொருந்தாது.

4) இவ்வகையில் பார்வைத்திறன் குறைபாடு (visually disabled) உள்ளவர்களிடமிருந்து வேட்புமனு பெறப்பட்டிருந்தாலும் பரிசீலனையின்போது 1988–ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்களின் விதி 34 (1) (i) மற்றும் உயர் நீதிமன்ற அமர்வு தீர்ப்பின் அடிப்படையில் அதனை நிராகரிக்கலாம் (Reject).

ஒம் /–
ஆணையர்

ஆணையருக்காக

இணைப்பு :

திரு. N.R. சந்திரன் அவர்களின் சட்டக் கருத்து

27/3/18

Endt.18781/ 2018 SA1

Office of the Registrar of Cooperative Societies, Kilpauk, Chennai-10

278
14 MAR 2022

Dated: 08.03.2022
Maasi 24, Thiruvalluvarandu 2053

A Copy of the Tamil Nadu Cooperative Societies (Amendment) Act, 2022 (Act No.13/2022) published in Tamil Nadu Government Gazette Extraordinary No.83 dated 31.01.2022 – Part IV – Section 2 is communicated for information and necessary follow up action.

Sd/- A.Shanmuga Sundaram,
Registrar of Cooperative Societies

// By Order //

10/03/2022
For Registrar of Cooperative Societies
10/03/2022.

Encl: As above

**To.**

1. The Commissioner,
   Tamil Nadu State Cooperative Societies Election Commission,
   No.273, Anna Salai, Teynampet,
   Chennai-18.
2. The Additional Registrar of Cooperative Societies,
   Chennai Region.
3. All the Regional Joint Registrars
4. All the Circle Deputy Registrar of Cooperative Societies

**Copy to:**

All Officers in office.
All Administrative Sections in office.
Stock file 2022.

Reviewed on 02/03/2022 -123

AZADI KA AMRIT MAHOTSAV ... TAMIL NADU

Co-operation, Food &
Consumer Protection
Department, Secretariat
Chennai - 9.

Letter No. 6239/CJ1/2018- 26, dated:24.02.2022

12730

28 FEB 2022

From
Thiru. Md. Nasimuddin, I.A.S.,
Additional Chief Secretary to Government.

To

1. The Registrar of Co-operative Societies,
Chennai – 10. (w.e.)
2. The Chief Executive Officer,
Tamil Nadu Khadi and Village Industries Board,
Kuralagam,Chennai – 108. (w.e.)
3. The Chief Executive Officer,
Tamil Nadu Palm Products Development Board,
Kuralagam, Chennai – 108. (w.e.)
4. The Commissioner of Sugar,
V Floor, Periyar Building, 474, Anna Salai,
Chennai – 35. (w.e.)
5. The Director of Sericulture,
Nethaji Nagar, Hasthampatty,
Salem – 636 007. (w.e.)
6. The Registrar of Co-operative Societies (Housing),
48, Ritherdon Road, Vepery,
Chennai – 600 007. (w.e.)
7. The Director of Handlooms and Textiles,
Kuralagam, 2nd Floor, Chennai – 600 108.(w.e)
8. The Director of Agriculture,
Chennai – 5. (w.e.)
9. The Commissioner of Milk Production and Dairy
Development, Madhavaram Milk Colony,
Chennai – 51. (w.e.)
10. The Director cum Mission Director,
Integrated Child Development Services,
No. 1, Pammal Nallathambi Street, Taramani,
Chennai - 600 113.(w.e.)
11. The Director of Fisheries,
3rd Floor, Integrated Animal Husbandry and
Fisheries Building, Nandanam,
Chennai – 600 035. (w.e.)

12. The Principal Secretary/ Industries Commissioner and Director of Industries and Commerce,
Sidco Corporate Office,
II & III rd Floor, Thiru-vi-ka Industrial Estate, Guindy,
Chennai -600 032. (w.e.)
13. The Director of Animal Husbandry and Veterinary Services,
Veterinary Hospital Compound, Nandanam,
Chennai – 600 035. (w.e.)
14. The Director of Rural Development (Bhoodan Societies),
Panagal Building, Saidapet,
Chennai-600015. (w.e.)
15. The Director of Social Welfare,
2nd Floor, Panagal Buildng, Saidapet,
Chennai – 600015.(w.e.)

Sir/Madam,

Sub: Act and Rules - Tamil Nadu Co-operative Societies (Amendment) Act, 2022 (TN Act 13 of 2022) - Extraordinary Gazette - Communicated – Regarding.

Ref: The Tamil Nadu Government Gazette Extraordinary No. 83 dated: 31.01.2022.

-------

I am directed to enclose a copy of the Tamil Nadu Cooperative Societies (Amendment) Act, 2022, published in S.No.83 of Part IV – Section 2 of the Tamil Nadu Government Gazette Extraordinary dated: January 31, 2022, for information and necessary action.

Yours faithfully,

25/2/22

for Additional Chief Secretary to Government

24.2.22

**Copy to:**

The Additional Chief Secretary /Principal Secretary /
Secretary to Government,
Agriculture Department / Housing and Urban
Development Department / Animal Husbandry,
Dairying and Fisheries Department /
Industries Department / Micro Small and Medium Enterprises Department /
Handlooms, Handicraft Textiles and Khadi Department /
Social Welfare and Nutritious Meals Programme /
Rural Development and Panchayat Raj Department, Chennai-9 (w.e.)
Co-operation, Food and Consumer Protection (CC & CN) Department,
Chennai – 9.(w.e.)
Stock File/Spare Copy.

-129-

© GOVERNMENT OF TAMIL NADU
2022

[Regd. No. TN/CCN/467/2012-14.
[R. Dis. No. 197/2009.
[Price: Rs. 2.40 Paise.

# TAMIL NADU GOVERNMENT GAZETTE

EXTRAORDINARY PUBLISHED BY AUTHORITY.

No. 83] CHENNAI, MONDAY, JANUARY 31, 2022
Thai 18, Pilava, Thiruvalluvar Aandu–2053

## Part IV—Section 2

### Tamil Nadu Acts and Ordinances

CONTENTS

| | Pages. |
|---|---|
| ACTS: | |
| No. 12 of 2022—The Tamil Nadu Town and Country Planning (Amendment) Act, 2022. .. .. .. .. | 72 |
| No. 13 of 2022—The Tamil Nadu Co-operative Societies (Amendment) Act, 2022.. | 73-74 |
| No. 14 of 2022—The Tamil Nadu Public Service Commission (Additional Functions) Act, 2022. | 75-76 |

The following Act of the Tamil Nadu Legislative Assembly received the assent of the Governor on the 31st January 2022 and is hereby published for general information: —

## Act No. 13 of 2022.

**An Act further to amend the Tamil Nadu Co-operative Societies Act, 1983.**

Be it enacted by the Legislative Assembly of the State of Tamil Nadu in the Seventy-second Year of the Republic of India as follows:—

Short title and commencement.

1. (1) This Act may be called the Tamil Nadu Co-operative Societies (Amendment) Act, 2022.

(2) It shall come into force at once.

Tamil Nadu Act 30 of 1983.

Amendment of section 34.

2. In section 34 of the Tamil Nadu Co-operative Societies Act, 1983, in sub-section (1), the following proviso shall be added to clause (i), namely:—

"Provided that nothing contained in this clause shall apply to any person who is visually impaired or unable to write due to any physical disability.".

(By order of the Governor)

C. GOPI RAVIKUMAR,
*Secretary to Government (Legislation),*
*Law Department.*

## தமிழ்நாடு மாநில கூட்டுறவுச் சங்கங்களின் தேர்தல் ஆணையம், சென்னை – 18

அனுப்புநர்
திரு. தயானந்த் கட்டாரியா, இ.ஆ.ப.,
ஆணையர்,
தமிழ்நாடு மாநில கூட்டுறவுச்
சங்கங்களின் தேர்தல் ஆணையம்,
273, அண்ணாசாலை, தேனாம்பேட்டை,
சென்னை – 600 018.

பெறுநர்
1) கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர்,
2) அனைத்து செயற்பதிவாளர்கள்.

ந.க : 1265/2022/கூ.தே.3 நாள் : 14.11.2022

ஐயா/அம்மையீர்,

**பொருள் :** தமிழ்நாடு மாநில கூட்டுறவுச் சங்கங்களின் தேர்தல் ஆணையம் – வலைத்தளப் பக்கம் செயல்பாட்டில் உள்ளது – பயன்படுத்துதல் – தொடர்பாக.

--//--

தமிழ்நாடு மாநில கூட்டுறவுச் சங்கங்களின் தேர்தல் ஆணையத்தின் வலைத்தளம் (www.coopelection.tn.gov.in) சில தொழில் நுட்ப காரணங்களினால் (Technical Reasons) செயல்படாதிருந்த நிலையில் தற்போது சரிசெய்யப்பட்டு இயங்க தொடங்கியுள்ளது.

ஆணையத்தின் அவ்வலைத்தள பக்கங்களில் காணப்படும் தகவல்கள் மற்றும் விபரங்கள், தற்போது உள்ளபடி (updation) பதிவேற்றம் தமிழ்நாடு மின்ஆளுமை முகமை (TNeGA) வழி, ஆணையத்தால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது என்பதையும் இதனை சங்கங்கள் தக்கவாறு பயன்படுத்திக் கொள்ள தங்களது நிர்வாகக் கட்டுப்பாட்டின் கீழ் உள்ள அனைத்து அலுவலர்களுக்கும் உரிய அறிவுரை வழங்கிடவும் அவ்வாறு வழங்கிய விபரத்தை 30.11.2022–க்குள் ஆணையத்திற்கு தெரிவித்திடவும் அன்புடன் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

ஒம்/–
ஆணையர்

14/11/22
ஆணையருக்காக

நகல் :

1) அரசு முதன்மைச் செயலாளர்,
கூட்டுறவு உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை.
சென்னை – 9.
2) அனைத்து மாவட்ட தேர்தல் அலுவலர்கள்.

14.11.22

(16)

# தமிழ்நாடு மாநில கூட்டுறவுச் சங்கங்களின் தேர்தல் ஆணையம், சென்னை – 18

**அனுப்புநர்**
திரு. தயானந்த் கட்டாரியா, இ.ஆ.ப.,
ஆணையர்,
தமிழ்நாடு மாநில கூட்டுறவுச்
சங்கங்களின் தேர்தல் ஆணையம்,
273, அண்ணாசாலை, தேனாம்பேட்டை,
சென்னை – 600 018.

**பெறுநர்**
1) கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர்,
2) அனைத்து செயற்பதிவாளர்கள்.

**ந.க : 1285/2022/கூ.தே.3** **நாள் : 16.11.2022**

**ஐயா/அம்மையீர்,**

**பொருள் :** கூட்டுறவு சங்கத் தேர்தல்கள் – தேர்தல் அறிவிப்பு (Notification) செய்த பின்னர் தேர்தல் அறிவிப்பில் குறிப்பிட்டுள்ள இடங்களை சட்ட விதிகளுக்கு முரணாக மாற்றுதல் – அறிவுரைகள் வழங்குதல் – தொடர்பாக.

****

கூட்டுறவுச் சங்கத் தேர்தல்களுக்கான 1988–ம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவு சங்கங்களின் விதிகள், விதி எண்.52(5)(a)ன் கீழ் வழங்கப்படும் தேர்தல் திட்டங்களில், மாவட்டத் தேர்தல் அலுவலர்களால் வெளியிடப்படும் தேர்தல் அறிவிப்பில் (Notification) விதி எண்.52(6)(a) (iii), (iv) மற்றும் (v) ல் கூறப்பட்டுள்ளபடி வேட்புமனு, வாக்குப்பதிவு மற்றும் வாக்கு எண்ணுகை ஆகிய நடவடிக்கைகளுக்கான இடம் அறிவிப்புச் செய்யப்படுகிறது.

சில தருணங்களில் ஏற்கெனவே அறிவிப்புச் செய்யப்பட்ட இடங்கள் கிடைக்கவில்லை என்றோ அல்லது இடங்கள் பற்றி வேறு பல காரணங்களைக் கூறியோ அறிவிக்கப்பட்டுள்ள சங்கத் தேர்தல் நடவடிக்கை தேர்தல் அலுவலர்களால் நிறுத்தப்பட்டுள்ளது. இம்மாதிரி நிறுத்தங்களுக்கு தேர்தல் அலுவலர்களுக்கு எவ்வித சட்டபூர்வ அதிகாரமும் வழங்கப்படவில்லை. விதி எண்.52(18)(a)–ல் சொல்லப்பட்டதற்கு இது முற்றிலும் முரணானதாகும். இதுபற்றி மாண்பமை நீதிமன்றங்களும் கண்டனம் தெரிவித்துள்ளன.

எனவே இம்மாதிரியான நிகழ்வுகள் இனிவரும் காலங்களில் ஏற்படாது தடுத்திட கீழ்வரும் அறிவுரைகளை ஆணையம் வழங்குகிறது:

133

1) மாவட்ட தேர்தல் அலுவலரால் தேர்தல் அறிவிப்பில் அறிவிக்கப்பட்ட இடங்களை (Notified place) எந்தச் சூழ்நிலையிலும் மாற்றுவது கூடாது.

2) மிக மிக தவிர்க்க முடியாத இனங்களில் (Compelling and special reasons) ஏற்கெனவே அறிவிக்கப்பட்ட இடங்களில் தேர்தல் நடவடிக்கைகள் எவ்வகையிலும் மேற்கொள்ள இயலாது என்று உறுதியாகத் தெரிந்தால் மட்டுமே ஆணையத்தின் முன் அனுமதி பெற்று ஏற்கெனவே அறிவிக்கப்பட்ட இடத்திற்குப் பதிலாக மாற்று இடம் அறிவிக்கலாம்.

3) இவ்வாறு இடம் மாற்றம் செய்யப்படும் நிகழ்வுகளில் அவ்விபரத்தை சங்க வாக்காளர்கள் நன்கு அறிந்திடும் வகையில் சங்க அறிவிப்பு பலகையிலும் மற்றும் பொது இடங்களிலும் அறிவிப்புச் செய்தல், தேவைப்படும் நேர்வுகளில் நாளிதழில் வெளியீடு செய்தல் போன்ற தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும்.

இந்த அறிவுரைகளை தங்களது நிர்வாக கட்டுப்பாட்டிற்குட்பட்ட அனைத்து அலுவலர்களுக்கும் தவறாது தெரிவித்திடவும் அவ்விபரத்தை ஆணையத்திற்கு கூடிய விரைவில் தெரிவித்திடவும் அன்புடன் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

ஒம்/–
ஆணையர்

16/4/22

ஆணையருக்காக

நகல் :

1) அரசு முதன்மைச் செயலாளர்,
கூட்டுறவு உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை.
சென்னை – 9.
2) அனைத்து மாவட்ட தேர்தல் அலுவலர்கள்.
3) இருப்புக் கோப்பு 2022.

தமிழ்நாடு மாநில கூட்டுறவுச் சங்கங்களின் தேர்தல் ஆணையம், சென்னை-18.

அனுப்புநர்

திரு. தயானந்த் கட்டாரியா, இ.ஆ.ப.,
ஆணையர்,
தமிழ்நாடு மாநில கூட்டுறவுச் சங்கங்களின்
தேர்தல் ஆணையம்,
273, அண்ணாசாலை, தேனாம்பேட்டை,
சென்னை – 600 018.

பெறுநர்

1) கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர்/மாநில தேர்தல் அலுவலர்.
2) அனைத்து செயற்பதிவாளர்கள்/மாநில தேர்தல் அலுவலர்கள்.

ந.க.எண். 1389/2022/கூதே.3 நாள்: 08.12.2022

ஐயா/அம்மையீர்,

பொருள்: கூட்டுறவுச் சங்கத் தேர்தல்கள் - தேர்தல் நடவடிக்கைகள் பற்றிய புகார்கள் - தேர்தல் நடவடிக்கைகளுக்கான காணொளித் தொகுப்பு (Video Coverage) மேற்கொள்ளுதல் - அறிவுரைகள் - வழங்குதல் - தொடர்பாக.

*****

தமிழ்நாட்டின் கூட்டுறவுச் சங்கங்களின் தேர்தல்களை சுதந்திரமாகவும், நியாயமாகவும், வெளிப்படைத்தன்மையுடனும், முற்றிலும் சட்டவிதிகளுக்குட்பட்டும், நடத்திட வேண்டியது ஆணையத்தின் சட்டபூர்வ கடமையாகும்.

முந்தைய தேர்தல் நடவடிக்கைகள் பற்றி ஆணையத்தால் பெறப்பட்ட பல புகார் மனுக்களிலும், மாண்பமை நீதிமன்றங்களில் தாக்கல் செய்த ரிட் மனுக்களிலும், தேர்தல் அலுவலர்கள் அறிவிப்பு செய்த நேரத்தில், நாளில், இடத்தில் இல்லை என்றும் மற்றும் தேர்தல் நடவடிக்கைகளை சட்டத்திற்குப் புறம்பாக மேற்கொண்டனர் என்றும் தெரிவித்ததுடன் நேரடி விசாரணையின்போது அதற்கு ஆதார ஆவணமாக அவர்களால் எடுக்கப்பட்ட காணொளித் தொகுப்புகளையும் (Video Coverage) தாக்கல் செய்தனர். விசாரணையின்போது சங்கத்தின் சார்பிலும், தேர்தல் அலுவலர்கள் சார்பிலும் புகார்தாரர்களின் காணொளித் தொகுப்பு (Video Coverage) உண்மையானதல்ல என்று மறுக்கப்பட்டாலும், அதற்கான ஆதாரங்கள் இல்லாத நிலையில், அவர்களது தரப்பினை எடுத்துக்கூறும் 'காணொளித் தொகுப்புகள் இல்லாததால், புகார்தாரர்களின் புகார்களை தள்ளுபடி செய்ய இடமின்றி, சங்கத் தேர்தல் நடவடிக்கையினை ரத்து செய்ய வேண்டிய நிலையும் எழுந்தது.

\\TULASIRAMAN-HP\OSD Sir Files\Letter 05.12.2022.doc

இந்நிலையினை ஆணையம் தீவிரமாகப் பரிசீலனை செய்தது. காணொளித் தொகுப்பு (Video Coverage) சங்கம் மேற்கொள்வது சட்டபூர்வக் கட்டாயம் இல்லை என்றாலும், எவ்வித சந்தேகத்திற்கும் இடமின்றி தேர்தல் நடவடிக்கைகள் சட்டபூர்வமாக மேற்கொள்ளப்பட்டுள்ளது என்பதை எச்சூழ்நிலையிலும் உறுதி செய்திட வேண்டிய கட்டாயம் சங்கத்திற்கும் ஆணையத்திற்கும் உள்ளது. தவிரவும் தற்போது அனைத்து நிகழ்வுகளுக்கும் காணொளித் தொகுப்பு (Video Coverage) மேற்கொள்ளுதல் என்பது ஒரு பொதுவான நடைமுறையாக (Common Parlance/ Practice) உள்ளதாலும் கூட்டுறவுச் சங்கங்கள் தங்களது தேர்தல் தொடர்பான நடவடிக்கைகளை காணொளித் தொகுப்பு (Video Coverage) செய்வதானது மிகவும் அவசியமானதும், தவிர்க்க முடியாததும் ஆகும் என ஆணையம் திடமாகக் கருதுகிறது. அவ்வாறே தீர்மானிக்கிறது. அவ்வகையில் கீழ்காணும் அறிவுரைகள் வழங்கப்படுகின்றன :

1) தேர்தல் ஆணையத்தால் அறிவிக்கப்பட்ட சங்கத்தின் தேர்தல் திட்டப்படியான தேர்தல் நடவடிக்கைகளில் அடியிற் குறிப்பிட்ட தேர்தல் நடவடிக்கைகள் கட்டாயமாக (Compulsory/ Must) காணொளித் தொகுப்பு செய்யப்பட வேண்டும்.

    a) வேட்புமனு தாக்கல், (Filing of Nomination).
    b) வேட்புமனு பரிசீலனை (Scrutiny of Nomination).
    c) வாக்குப் பதிவு (Polling).
    d) வாக்கு எண்ணுகை மற்றும் முடிவு அறிவித்தல் (Counting and declaration of results).
    e) தலைவர்/துணைத்தலைவர் தேர்தல் நடவடிக்கை.

2) வாக்குப்பதிவு நடவடிக்கையின்போது வாக்காளர் வாக்களிக்கும் ரகசியம் (Secrecy of voting) காப்பாற்றப்பட வேண்டிய நிலையில் அந்நிகழ்வு காணொளிப்படப் பிடிப்பிற்குட்பட்டதல்ல.

3) இதற்காகும் செலவினை சங்கமே மேற்கொள்ள வேண்டும்.

4) எடுக்கப்பட்ட காணொளித் தொகுப்பு தேர்தல் ஆணையத்தின் ஒரு பகுதியாக கருதப்பட்டு (Deemed to be a part of election records) தேர்தல் ஆவணங்களுடன் தேர்தல் அலுவலரின் பொறுப்பிலும் பாதுகாப்பிலும் இருத்தல் வேண்டும்.

5) தேர்தல் ஆவணமாகக் கருதப்பட்டுள்ள, சங்க நிர்வாகக்குழு உறுப்பினர்கள் தேர்தல் நடவடிக்கைகள் தொடர்பான காணொளித் தொகுப்பு விதி எண்.52(22) (a) முதல் (c) வரையில் கூறப்பட்டபடியும், சங்க தலைவர் /துணைத்தலைவர் (Office Bearers)

தேர்தல் தொடர்பான காணொளித் தொகுப்பு விதி எண்.53(13)(a) முதல் (c) வரை கூறப்பட்டபடியும் கையாளப்பட வேண்டும்.

மேற்காணும் அறிவுரைகளை தங்களது நிர்வாகக் கட்டுப்பாட்டிற்குட்பட்ட அனைத்து அலுவலர்களுக்கும் தெரிவித்திடவும், இது தொடர்பாக தங்களால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை விபரத்தினை 20.12.2022-க்குள் ஆணையத்திற்கு தெரிவித்திடவும் அன்புடன் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

ஒம்/-

ஆணையர்

ஆணையருக்காக

நகல் :

1) அரசு முதன்மைச் செயலாளர்,
கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புதுறை,
தலைமைச் செயலகம், சென்னை - 600009.
2) அனைத்து மாவட்டத் தேர்தல் அலுவலர்கள்.
3) ஆணைய இருப்பு கோப்பு - 2022.

\\TULASIRAMAN-HP\OSD Sir Files\Letter 05.12.2022.doc

கூட்டுறவுத் தேர்தல்கள் - 2023

மிக அவசரம்

தமிழ்நாடு மாநில கூட்டுறவுச் சங்கங்களின் தேர்தல் ஆணையம், சென்னை – 18

அனுப்புநர்
திரு. தயானந்த் கட்டாரியா, இ.ஆ.ப.,
ஆணையர்,
தமிழ்நாடு மாநில கூட்டுறவுச் சங்கங்களின்
தேர்தல் ஆணையம்,
273 அண்ணாசாலை, தேனாம்பேட்டை,
சென்னை – 600 018.

பெறுநர்
1. கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் / மாநில தேர்தல் அலுவலர்.
2. இதர செயற்பதிவாளர்கள் / மாநில தேர்தல் அலுவர்கள்.

ந.க. 1436/2022/கூ.தே.5(2) நாள் : 20.12.2022

ஐயா / அம்மையீர்,

பொருள்: கூட்டுறவுச் சங்கங்களின் தேர்தல்கள் 2023 – நிர்வாகக்குழு உறுப்பினர்கள் மற்றும் தலைவர்/துணைத்தலைவர் தேர்தல்கள் - உள்ளாட்சி அமைப்புகள் மற்றும் பொதுத்தேர்தல்களில் முன்பு பயன்படுத்தப்பட்ட வாக்குப் பெட்டிகள் - வழங்குதல் - தொடர்பாக.

பார்வை: ஆணையத்தின் கடிதம் ந.க. 1435/2022/கூ.தே.1 நாள் 20.12.2022.

******

பார்வையில் கண்ட கடிதத்தில் ஏப்ரல் 2023-ல் 5 ஆண்டுகள் பதவிக்காலம் முடிவடையும் கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் இதர வகையில் ஏப்ரல் 2023-ல் தேர்தல்கள் நடத்த வேண்டிய கூட்டுறவுச் சங்கங்கள் ஆகியவற்றின் விபரம் கோரப்பட்டுள்ளன.

எனவே மாவட்ட தேர்தல் அலுவலர்கள் அவர்களது கட்டுப்பாட்டிற்குட்பட்ட தேர்தல் நடைபெற உள்ள சங்கங்களுக்கு தேவைப்படும் வாக்குப்பெட்டிகளை மாவட்ட நிர்வாகத்திடமிருந்து பெற்றுக் கொள்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள உரிய அறிவுரைகளை மாவட்டத் தேர்தல் அலுவலர்களுக்கு வழங்கிடவும், அது பற்றிய விபரத்தை ஆணையத்திற்கு 30.12.2022-க்குள் தெரிவித்திடவும் அன்புடன் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

ஒம்/-
ஆணையர்

20/12/22
ஆணையருக்காக

நகல்: 1. அனைத்து மாவட்ட தேர்தல் அலுவலர்கள்.
2. அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்கள்.

20.12.2022

தமிழ்நாடு மாநில கூட்டுறவுச் சங்கங்களின் தேர்தல் ஆணையர் அவர்களின்
செயல்முறை ஆணை, சென்னை – 18.

முன்னிலை : திரு. தயானந்த் கட்டாரியா, இ.ஆ.ப.,
ஆணையர்.

ந.க.875/2022/கூதே1(1) நாள் : 26.12.2022

பொருள் : கூட்டுறவுச் சங்கத் தேர்தல்கள் – 1983–ம் ஆண்டு தமிழ்நாடு மாநில கூட்டுறவுச் சங்கங்களின் சட்டம் பிரிவு 3–ன் கீழ் பதிவாளராக அரசால் நியமனம் செய்யப்பட்ட கைத்தறி ஆணையரை 1988–ம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்க விதிகள் விதி எண்.52–A(3)–ன் கீழ் மாநிலத் தேர்தல் அலுவலராக நியமித்தல் – ஆணை வழங்கப்படுகிறது.

பார்வை :
1. ஆணையத்தின் இதே எண்ணிட்ட செயல்முறை ஆணை நாள் 12.09.2022.
2. கைத்தறி ஆணையர் அலுவலக ந.க.எண்.20050/2022/எச்.1 நாள் 20.09.2022
3. அரசாணை எண்.181, கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் காதி (சி.1) துறை நாள் 28.11.2022.

******

பார்வை (1)–ல் கண்ட ஆணையத்தின் செயல்முறை ஆணையின்படி, கைத்தறி மற்றும் துணிநூல் ஆணையரை அவரின் நிர்வாகக் கட்டுப்பாட்டிற்குட்பட்ட கூட்டுறவுச் சங்கங்களுக்கு மாநில தேர்தல் அலுவலராக ஆணையம் நியமனம் செய்துள்ளது.

பார்வை (2)–ல் கண்ட கடிதத்தில் கைத்தறி மற்றும் துணிநூல் துறையினை கைத்தறித்துறை மற்றும் துணிநூல்துறை என்று தனித்தனி துறைகளாகப் பிரிக்கப்பட்டுவிட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பார்வை (3)–ல் கண்ட அரசாணைப்படி கைத்தறி ஆணையரை அவரது நிர்வாகக் கட்டுப்பாட்டிற்குட்பட்ட கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளராக நியமனம் செய்து அரசு ஆணை பிறப்பித்துள்ளது.

அதனடிப்படையில் 1988-ம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்க விதிகள் விதி எண்.52-A(3)-ல் தனக்களிக்கப்பட்ட அதிகாரத்தைக் கைக்கொண்டு கைத்தறி ஆணையரை அவரது நிர்வாகக் கட்டுப்பாட்டின்கீழ் வரும் கூட்டுறவுச் சங்கங்களின் மாநிலத் தேர்தல் அலுவலராக (State Election Officer) நியமனம் செய்து ஆணையம் ஆணையிடுகிறது.

இவ்வாறு நியமிக்கப்பட்ட மாநில தேர்தல் அலுவலர் நியமனம், அவை தொடர்பாக **மாற்று ஆணை ஏதும் பிறப்பிக்கப்படாத வரை, புதிய நியமன ஆணைகள் ஏதும் தேவைப்படாத**, அவர்களது துறையின் கட்டுப்பாட்டின் கீழ் வரும் (Administrative Control) சங்கங்களின் ஒட்டுமொத்த தேர்தல் (Enmasse Elections) மற்றும் அவை தவிர்த்த இதர வகையிலான தேர்தல்கள் (Other than Enmasse Elections) மற்றும் காலியிடங்களுக்கான தேர்தல்கள் அனைத்திற்கும் பொருந்துவதாகும் என்றும் **அவர்கள் மாநில தேர்தல் அலுவலர்களாக தொடர்ச்சியாக இருந்து வருவார்கள் (Shall continue as SEO's)** என்றும் **ஆணையம் அறிவிக்கிறது.**

இவ்வாறு விதி எண்.52-A(3)-ன் கீழ் ஆணையத்தால் நியமிக்கப்படும் மாநில தேர்தல் அலுவலர்கள் அவ்விதியில் கட்டளையிட்டுள்ளபடி (Mandate) தேர்தல் ஆணையத்தின் மேற்பார்வை, கட்டளைகள் மற்றும் கட்டுப்பாட்டிற்குட்பட்டு, அவர்கள் சம்மந்தப்பட்ட நிர்வாக கட்டுப்பாட்டின்கீழ் உள்ள சங்கங்களை பொறுத்து, வாக்காளர் பட்டியல் தயாரித்தல், வெளியிடுதல் மற்றும் அச்சங்கங்களுக்கான நிர்வாகக்குழு உறுப்பினர்கள் மற்றும் அலுவல் நிர்வாகிகளுக்கான (Members of the Board and Office Bearers) தேர்தல் நடத்த ஒத்துழைத்து மற்றும் மேற்பார்வை செய்தல் வேண்டும் என்பதுடன், ஆணையத்தால் அவ்வப்போது அவர்களுக்கு ஒப்படைக்கப்படும் செயல்பாடுகளை செயற்படுத்துதல் வேண்டும் என்றும் ஆணையம் அறிவிக்கிறது.

இவ்வகையில் இது தொடர்பாக ஏற்கெனவே வழங்கப்பட்டுள்ள பார்வை 1-ல் காணும் ஆணையத்தின் செயல்முறை ஆணை ரத்து செய்யப்படுகிறது.

ஒம்/-
ஆணையர்

[signature] 20/12/22
ஆணையருக்காக
[signature] 26.12.2022

பெறுநர்

ஆணையர்,
கைத்தறி துறை,
குறளகம், 2வது தளம்,
சென்னை – 600 108.

C:\Users\User\Desktop\CE 1\Revised\RC 875 2022-Handloom SEO Appointment 22.12.2022.doc

169-

நகல்

1) அரசு முதன்மைச் செயலாளர்,
கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்துறை,
சென்னை – 9.
2) அரசு முதன்மைச் செயலாளர்,
கூட்டுறவு உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை.
சென்னை – 9.
3) ஆணையர், துணி நூல் துறை.
4) இருப்புக் கோப்பு 2022.

தமிழ்நாடு மாநில கூட்டுறவுச் சங்கங்களின் தேர்தல் ஆணையர் அவர்களின் செயல்முறை ஆணை, சென்னை – 18.

முன்னிலை : திரு. தயானந்த் கட்டாரியா, இ.ஆ.ப., ஆணையர்.

ந.க.875/2022/கூதே1(2) நாள் : 26.12.2022

பொருள் : கூட்டுறவுச் சங்கத் தேர்தல்கள் – 1983–ம் ஆண்டு தமிழ்நாடு மாநில கூட்டுறவுச் சங்கங்களின் சட்டம் பிரிவு 3–ன் கீழ் பதிவாளராக அரசால் நியமனம் செய்யப்பட்ட துணிநூல் ஆணையரை 1988–ம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்க விதிகள் விதி எண்.52–A(3)–ன் கீழ் மாநிலத் தேர்தல் அலுவலராக நியமித்தல் – ஆணை வழங்கப்படுகிறது.

பார்வை :
1. ஆணையத்தின் இதே எண்ணிட்ட செயல்முறை ஆணை நாள் 12.09.2022.
2. துணிநூல் ஆணையர் அலுவலக ந.க.எண்.5524/2022/இ1 நாள் 28.10.2022.
3. துணிநூல் ஆணையர் அலுவலக ந.க.எண்.5760/2022/டி.2 நாள் 06.12.2022.
4. அரசாணை எண்.181, கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் காதி (சி.1) துறை நாள் 28.11.2022.

******

பார்வை (1)–ல் கண்ட ஆணையத்தின் செயல்முறை ஆணையின்படி, கைத்தறி மற்றும் துணிநூல் ஆணையரை அவரின் நிர்வாகக் கட்டுப்பாட்டிற்குட்பட்ட கூட்டுறவுச் சங்கங்களுக்கு மாநில தேர்தல் அலுவலராக ஆணையம் நியமனம் செய்துள்ளது.

பார்வை 2 மற்றும் 3–ல் கண்ட கடிதங்களில் கைத்தறி மற்றும் துணிநூல் துறை கைத்தறித்துறை மற்றும் துணிநூல்துறை என்ற தனித்தனி துறைகளாகப் பிரிக்கப்பட்டுவிட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பார்வை (4)-ல் கண்ட அரசாணைப்படி துணிநூல் ஆணையரை அவரது நிர்வாகக் கட்டுப்பாட்டிற்குட்பட்ட கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளராக நியமனம் செய்து அரசு ஆணை பிறப்பித்துள்ளது.

அதனடிப்படையில் 1988-ம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்க விதிகள் விதி எண்.52-A(3)-ல் தனக்களிக்கப்பட்ட அதிகாரத்தைக் கைக்கொண்டு துணிநூல் ஆணையரை, அவரது நிர்வாகக் கட்டுப்பாட்டின்கீழ் வரும் கூட்டுறவுச் சங்கங்களின் மாநிலத் தேர்தல் அலுவலராக (State Election Officer) நியமனம் செய்து ஆணையம் ஆணையிடுகிறது.

இவ்வாறு நியமிக்கப்பட்ட மாநில தேர்தல் அலுவலர் நியமனம், அவை தொடர்பாக மாற்று ஆணை ஏதும் பிறப்பிக்கப்படாத வரை, புதிய நியமன ஆணைகள் ஏதும் தேவைப்படாத, அவர்களது துறையின் கட்டுப்பாட்டின் கீழ் வரும் (Administrative Control) சங்கங்களின் ஒட்டுமொத்த தேர்தல் (Enmasse Elections) மற்றும் அவை தவிர்த்த இதர வகையிலான தேர்தல்கள் (Other than Enmasse Elections) மற்றும் காலியிடங்களுக்கான தேர்தல்கள் அனைத்திற்கும் பொருந்துவதாகும் என்றும் **அவர்கள் மாநில தேர்தல் அலுவலர்களாக தொடர்ச்சியாக இருந்து வருவார்கள் (Shall continue as SEO's) என்றும் ஆணையம் அறிவிக்கிறது.**

இவ்வாறு விதி எண்.52-A(3)-ன் கீழ் ஆணையத்தால் நியமிக்கப்படும் மாநில தேர்தல் அலுவலர்கள் அவ்விதியில் கட்டளையிட்டுள்ளபடி (Mandate) தேர்தல் ஆணையத்தின் மேற்பார்வை, கட்டளைகள் மற்றும் கட்டுப்பாட்டிற்குட்பட்டு, அவர்கள் சம்மந்தப்பட்ட நிர்வாக கட்டுப்பாட்டின்கீழ் உள்ள சங்கங்களை பொறுத்து, வாக்காளர் பட்டியல் தயாரித்தல், வெளியிடுதல் மற்றும் அச்சங்கங்களுக்கான நிர்வாகக்குழு உறுப்பினர்கள் மற்றும் அலுவல் நிர்வாகிகளுக்கான (Members of the Board and Office Bearers) தேர்தல் நடத்த ஒத்துழைத்து மற்றும் மேற்பார்வை செய்தல் வேண்டும் என்பதுடன், ஆணையத்தால் அவ்வப்போது அவர்களுக்கு ஒப்படைக்கப்படும் செயல்பாடுகளை செயற்படுத்துதல் வேண்டும் என்றும் ஆணையம் அறிவிக்கிறது.

இவ்வகையில் இது தொடர்பாக ஏற்கெனவே வழங்கப்பட்டுள்ள பார்வை 1-ல் காணும் ஆணையத்தின் செயல்முறை ஆணை ரத்து செய்யப்படுகிறது.

ஒம்/-
ஆணையர்

26/12/22
ஆணையருக்காக

26.12.2022

C:\Users\User\Desktop\CE 1\Revised\RC 875 2022-Handloom SEO Appointment 22.12.2022.doc

பெறுநர்

ஆணையர்,
துணிநூல் துறை,
கதீட்ரல் தோட்ட சாலை,
நுங்கம்பாக்கம்,
சென்னை – 600 034.

நகல்

1) அரசு முதன்மைச் செயலாளர்,
கைத்தறி, கைத்திறன் துணிநூல் மற்றும் கதர்துறை,
சென்னை – 9.
2) அரசு முதன்மைச் செயலாளர்,
கூட்டுறவு உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை.
சென்னை – 9.
3) ஆணையர், கைத்தறித் துறை.
4) இருப்புக் கோப்பு 2022.

# தமிழ்நாடு மாநில கூட்டுறவுச் சங்கங்களின் தேர்தல் ஆணையம், சென்னை – 18

அனுப்புநர்
திரு. தயானந்த் கட்டாரியா, இ.ஆ.ப.,
ஆணையர்,
தமிழ்நாடு மாநில கூட்டுறவுச் சங்கங்களின்
தேர்தல் ஆணையம்,
273, அண்ணாசாலை, தேனாம்பேட்டை,
சென்னை – 600 018.

பெறுநர்
1. கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் / மாநில தேர்தல் அலுவலர்.
2. இதர செயற்பதிவாளர்கள் / மாநில தேர்தல் அலுவலர்கள்.

ந.க. 1462/2022/கூதே.5 நாள் : 28.12.2022

ஐயா / அம்மையீர்,

பொருள்: கூட்டுறவுச் சங்கங்களின் தேர்தல்கள் – ஒட்டு மொத்த தேர்தல்கள் 2023 – தேர்தல் தொடர்பான செலவினங்கள் – சங்கங்கள் மேற்கொள்ளுதல் – தொடர்பாக.

****

2018 ஒட்டு மொத்த தேர்தல்கள் நடைபெற்று 5 ஆண்டுகள் பதவிக்காலம் ஏப்ரலில் முடிவடையும் சங்கங்களுக்கான 2023 ஒட்டு மொத்த தேர்தல்கள் மற்றும் இவற்றுடன் புதிதாகப் பதிவு செய்யப்பட்ட சங்கங்கள், ஏற்கனவே 5 ஆண்டுகள் பதவிக் காலம் முடிவுற்ற சங்கங்கள், செயல் ஆட்சியர் நிர்வாகத்திலுள்ள சங்கங்கள் போன்று இதர வகையிலும் கூட்டுறவுச் சங்கங்களுக்கான தேர்தல்களை ஆணையம் விரைவில் நடத்த வேண்டியுள்ளது. இதற்கான முன்னேற்பாடுகளை (Preliminary Arrangements) ஆணையம் மேற்கொண்டு வருகிறது.

கூட்டுறவுத் துறையின் துணைப்பதிவாளர் பணித்தரத்திற்குக் குறையாத கூட்டுறவுத்துறை மற்றும் இதர துறைகளைச் சேர்ந்த அலுவலர்களை ஆணையம் மாவட்ட தேர்தல் அலுவலர்களாக நியமனம் செய்து அவர்களது மேற்பார்வையில் சங்கங்களின் தேர்தல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

ஒரு கூட்டுறவுச் சங்கத்தின் தேர்தலைப் பொறுத்தவரை தேர்தல் அறிவிப்பு வெளியிடுதல் , தேர்தலுக்கான இடங்களை (சங்கம் அல்லாத) தேர்வு செய்தல், வாக்குச்சாவடி, வாக்குப்பதிவு, வாக்குப்பெட்டி, வாக்குச்சீட்டுகள் மற்றும் வாக்கு சாவடிக்குத் தேவையான இதர சாதனங்கள் (Polling Materials) கொள்முதல் செய்தல் தலைவர் / துணைத்தலைவர், கூட்டம் கூட்டுதல், தேர்தல் நடத்துதல், தேர்தல் அலுவலர்களுக்கு உண்டான படிச்செலவினம் (Remuneration) வழங்குதல் மற்றும் தேர்தல் நடவடிக்கைகளுக்கான காணொளித் தொகுப்பு (Video coverage) போன்ற பல்வேறு வகைச் செலவுகளை சங்கங்கள் மேற்கொள்ள வேண்டியுள்ளன.

சங்கங்கள் மேற்கொள்ள வேண்டிய செலவினங்கள் அனைத்தையும் சங்கங்கள் எவ்வித விடுதலின்றி மேற்கொள்ள தகுந்த நிதி ஆதாரங்களுடன் சங்கங்களிடம் இருப்பதை தங்கள் அளவில் கண்காணித்து உறுதி செய்திடவும் இது தொடர்பாக சங்கங்களுக்கு தக்க அறிவுரைகள் வழங்கிடவும் மற்றும் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளவும் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

இது தொடர்பாக தங்களால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் பற்றிய அறிக்கையினை 10.01.2023-க்குள் ஆணையத்திற்கு அனுப்பிட அன்புடன் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

ஒம்/-
ஆணையர்

ஆணையருக்காக
28.12.2022

நகல் :

1. மாவட்ட தேர்தல் அலுவலர்கள்.
2. இருப்பு கோப்பு - 2022
3. கணினி ஆளுமையாளர் (ஆணைய வலைத்தள பதிவேற்றம் செய்திடும் நடவடிக்கைக்காக).

தமிழ்நாடு மாநில கூட்டுறவுச் சங்கங்களின் தேர்தல் ஆணையர் அவர்களின்
செயல்முறை ஆணை, சென்னை – 18.

முன்னிலை : திரு. தயானந்த் கட்டாரியா, இ.ஆ.ப.,
ஆணையர்.

ந.க.875/2022/கூதே1(1) நாள் : 28.12.2022

பொருள் : கூட்டுறவுச் சங்க தேர்தல் 2023 – நிர்வாகக்குழு உறுப்பினர்கள் தலைவர் மற்றும் துணைத்தலைவர் தேர்தல்கள் – மாவட்ட தேர்தல் அலுவலர் நியமனம் (District Election Officer) – நியமன ஆணை வழங்குதல் – தொடர்பாக.

பார்வை :
1. தமிழ்நாடு மாநில கூட்டுறவுச் சங்கங்களின் தேர்தல் ஆணையத்தின் கடிதம் ந.க.875/2022/கூதே1, நாள் 12.09.2022.
2. கைத்தறி ஆணையர் அலுவலக ந.க.20050/2022/எச், நாள் 20.09.2022.

*****

ஆணை:

பார்வை 1–ல் காணும் ஆணையத்தின் செயல்முறை ஆணைப்படி, ஆணையர் கைத்தறி மற்றும் துணிநூல் துறையின் சரக அளவிலான நிர்வாகக் கட்டுப்பாட்டிற்குட்பட்ட கூட்டுறவு சங்கங்களுக்கான தேர்தல்களை நடத்திட மாவட்ட தேர்தல் அலுவலர்களை ஆணையம் நியமனம் செய்தது.

இந்நிலையில் பார்வை 2–ல் காணும் கடிதத்தின்படி கைத்தறி மற்றும் துணிநூல் துறையானது கைத்தறி துறை மற்றும் துணிநூல்துறை என இருவேறு துறைகளாகப் பிரிக்கப்பட்டுள்ளதாகவும் மேலும் கைத்தறி துறையின் மாவட்ட தேர்தல் அலுவலர்களின் நியமனத்தை பொறுத்த வரையில், சரக அலுவலர்கள் கைத்தறி துணை/உதவி இயக்குநர், நிர்வாகக் கட்டுப்பாட்டில் செயல்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் பார்வை 1–ல் காணும் மாவட்ட தேர்தல் அலுவலர்கள் பட்டியலில் கைத்தறி மற்றும் துணிநூல் துறை என்பதற்கு பதிலாக கைத்தறி துறை என மாற்றம் செய்தும், காஞ்சிபுரம் மற்றும் சேலம் சரகங்கள் துணை இயக்குநரால் நிர்வகிக்கப்பட்டு வருவதால், துணை இயக்குநர் என மாற்றம் செய்து வழங்கவும் கோரப்பட்டுள்ளது.

மேற்கண்ட கைத்தறி ஆணையரின் கோரிக்கையினை ஆணையம் கவனமுடன் பரிசீலித்து அதனை ஏற்று இணைப்பில் கண்டுள்ள அலுவலர்களை அவர்கள் நிர்வாகக் கட்டுப்பாட்டிற்குட்பட்ட கூட்டுறவுச் சங்கங்களின் மாவட்ட தேர்தல் அலுவலர்களாக 1988–ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்க விதிகள், விதிஎண்.52–A(4)–இன் கீழ் தனக்களிக்கப்பட்ட அதிகாரத்தினை கைக்கொண்டு ஆணையம் ஆணையிடுகிறது.

இவ்வாறு நியமிக்கப்பட்ட மாவட்ட தேர்தல் அலுவலர்கள் நியமனம், அவை தொடர்பாக மாற்று **ஆணை ஏதும் பிறப்பிக்கப்படாத வரை, புதிய நியமன ஆணைகள் ஏதும் தேவைப்படாத**, கைத்தறி துறையின் கட்டுப்பாட்டின் கீழ் வரும் (Administrative Control) சங்கங்களின் ஒட்டுமொத்த தேர்தல் (Enmasse Elections) மற்றும் அவை தவிர்த்த இதர வகையிலான தேர்தல்கள் (Other than Enmasse Elections) மற்றும் காலியிடங்களுக்கான தேர்தல்கள் அனைத்திற்கும் பொருந்துவதாகும் என்றும் **அவர்கள் மாவட்ட தேர்தல் அலுவலர்களாக தொடர்ச்சியாக இருந்து வருவார்கள் (Shall continue as DEO's) என்றும் அறிவிக்கப்படுகிறது.**

இவ்வாறு விதி எண்.52-A(4)-ன் கீழ் ஆணையத்தால் நியமிக்கப்படும் மாவட்ட தேர்தல் அலுவலர்கள் அவ்விதியில் சொல்லப்பட்டபடி, தேர்தல் ஆணையத்தின் மேற்பார்வை, கட்டளைகள் மற்றும் கட்டுப்பாட்டிற்குட்பட்டு, அவர்கள் சம்மந்தப்பட்ட நிர்வாக கட்டுப்பாட்டின்கீழ் உள்ள கூட்டுறவுச் சங்கங்களை பொறுத்து, வாக்காளர் பட்டியல் தயாரித்தல், வெளியிடுதல் மற்றும் அச்சங்கங்களுக்கான நிர்வாகக்குழு உறுப்பினர்கள் மற்றும் அலுவல் நிர்வாகிகளுக்கான (Members of the Board and Office Bearers) தேர்தல் நடத்த ஒத்துழைத்து மற்றும் மேற்பார்வை செய்தல் வேண்டும் என்பதுடன், ஆணையத்தால் அவ்வப்போது அவர்களுக்கு ஒப்படைக்கப்படும் செயல்பாடுகளை செயற்படுத்துதல் வேண்டும் என்றும் ஆணையம் அறிவிக்கிறது.

இவ்வகையில் இது தொடர்பாக ஏற்கெனவே வழங்கப்பட்டுள்ள பார்வை 1-ல் காணும் ஆணையத்தின் செயல்முறை ஆணை ரத்து செய்யப்படுகிறது.

ஒம்/-
ஆணையர்

28/12/22
ஆணையருக்காக

28.12.2022.

இணைப்பு : மேற்க்கண்டவாறு.

பெறுநர்

மாவட்ட தேர்தல் அலுவலர்கள்
(கைத்தறி ஆணையர்/ மாநில தேர்தல் அலுவலர் மூலமாக).

நகல்

1. தலைமைச் செயலாளர், புனித ஜார்ஜ் கோட்டை, சென்னை-9
2. அரசு முதன்மைச் செயலாளர், கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு துறை, சென்னை-9.
3. அரசு முதன்மைச் செயலாளர், கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த்துறை, சென்னை-9.

C:\Users\User\Desktop\CE 1\RC 875-2018-DEO appointment 22.12.2022.doc

| இணைப்பு | | | |
|---|---|---|---|
| ந.க.எண் 875/2022/கூதே1 (1) | | | |
| வ.எண் | துறை | சரகம் | பதவியின் பெயர் (Designation) |
| 1 | கைத்தறி துறை | கோயம்புத்தூர் | உதவி இயக்குநர், கைத்தறி துறை |
| 2 | கைத்தறி துறை | கடலூர் | உதவி இயக்குநர், கைத்தறி துறை |
| 3 | கைத்தறி துறை | திண்டுக்கல் | உதவி இயக்குநர், கைத்தறி துறை |
| 4 | கைத்தறி துறை | ஈரோடு | உதவி இயக்குநர், கைத்தறி துறை |
| 5 | கைத்தறி துறை | காஞ்சிபுரம் | துணை இயக்குநர், கைத்தறி துறை |
| 6 | கைத்தறி துறை | கரூர் | உதவி இயக்குநர், கைத்தறி துறை |
| 7 | கைத்தறி துறை | கும்பகோணம் | உதவி இயக்குநர், கைத்தறி துறை |
| 8 | கைத்தறி துறை | மதுரை | உதவி இயக்குநர், கைத்தறி துறை |
| 9 | கைத்தறி துறை | நாகர்கோவில் | உதவி இயக்குநர், கைத்தறி துறை |
| 10 | கைத்தறி துறை | பரமக்குடி | உதவி இயக்குநர், கைத்தறி துறை |
| 11 | கைத்தறி துறை | சேலம் | துணை இயக்குநர், கைத்தறி துறை |
| 12 | கைத்தறி துறை | திருச்செங்கோடு | உதவி இயக்குநர், கைத்தறி துறை |
| 13 | கைத்தறி துறை | திருவாரூர் | உதவி இயக்குநர், கைத்தறி துறை |
| 14 | கைத்தறி துறை | திருவண்ணாமலை | உதவி இயக்குநர், கைத்தறி துறை |

| வ.எண் | துறை | சரகம் | பதவியின் பெயர் (Designation) |
|---|---|---|---|
| 15 | கைத்தறி துறை | திருப்பூர் | உதவி இயக்குநர், கைத்தறி துறை |
| 16 | கைத்தறி துறை | திருநெல்வேலி | உதவி இயக்குநர், கைத்தறி துறை |
| 17 | கைத்தறி துறை | திருவள்ளூர் | உதவி இயக்குநர், கைத்தறி துறை |
| 18 | கைத்தறி துறை | திருச்சி | உதவி இயக்குநர், கைத்தறி துறை |
| 19 | கைத்தறி துறை | வேலூர் | உதவி இயக்குநர், கைத்தறி துறை |
| 20 | கைத்தறி துறை | விருதுநகர் | உதவி இயக்குநர், கைத்தறி துறை |

ஒம்/-

ஆணையர்

28/12/22

ஆணையருக்காக

28.12.2022

தமிழ்நாடு மாநில கூட்டுறவுச் சங்கங்களின் தேர்தல் ஆணையர் அவர்களின்
செயல்முறை ஆணை, சென்னை – 18.

முன்னிலை : திரு. தயானந்த் கட்டாரியா, இ.ஆ.ப.,
ஆணையர்.

ந.க.875/2022/கூதே1(2) நாள் : 28.12.2022

பொருள் : கூட்டுறவுச் சங்க தேர்தல் 2023 – நிர்வாகக்குழு உறுப்பினர்கள் தலைவர் மற்றும் துணைத்தலைவர் தேர்தல்கள் – மாவட்ட தேர்தல் அலுவலர் நியமனம் (District Election Officer) வழங்கியது – திருத்தம் செய்து வழங்கக் கோரியது – தொடர்பாக.

பார்வை :
1. தமிழ்நாடு மாநில கூட்டுறவுச் சங்கங்களின் தேர்தல் ஆணையத்தின் கடிதம் ந.க.875/2022/கூதே1, நாள் 12.09.2022.
2. இயக்குநர் பட்டு வளர்ச்சித்துறை கடிதம் ந.க.17369/தொ.கூ–1/2022 நாள் 20.10.2022.

*****

ஆணை:

பார்வை 1–ல் காணும் ஆணையத்தின் செயல்முறை ஆணைப்படி, இயக்குநர் பட்டு வளர்ச்சித்துறையின் சரக அளவில் நிர்வாகக் கட்டுப்பாட்டிற்குட்பட்ட கூட்டுறவு சங்கங்களுக்கான தேர்தல்களை நடத்திட மாவட்ட தேர்தல் அலுவலர்களை ஆணையம் நியமனம் செய்தது.

மேலும் பார்வை 2–ல் காணும் மாவட்ட தேர்தல் அலுவலர்கள் பட்டியலில் சேலம் உதவி இயக்குநர், பட்டுவளர்ச்சித்துறையின் பெயர் விடுபட்டும் காஞ்சிபுரம் மாவட்ட தேர்தல் அலுவலராக துணை இயக்குநர், அரசு அண்ணா பட்டு பரிமாற்றகம் என மாற்றம் செய்து வழங்கவும் கோரப்பட்டுள்ளது.

மேற்கண்ட இயக்குநர் பட்டுவளர்ச்சித்துறையின் கோரிக்கையினை ஆணையம் கவனமுடன் பரிசீலித்து அதனை ஏற்று இணைப்பில் கண்டுள்ள அலுவலர்களை அவர்கள் நிர்வாகக் கட்டுப்பாட்டிற்குட்பட்ட கூட்டுறவுச் சங்கங்களின் மாவட்ட தேர்தல் அலுவலர்களாக 1988–ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்க விதிகள், விதி எண்.52–A(4)–இன் கீழ் தனக்களிக்கப்பட்ட அதிகாரத்தினை கைக்கொண்டு ஆணையம் ஆணையிடுகிறது.

இவ்வாறு நியமிக்கப்பட்ட மாவட்ட தேர்தல் அலுவலர்கள் நியமனம், அவை தொடர்பாக மாற்று ஆணை ஏதும் பிறப்பிக்கப்படாத வரை, புதிய நியமன ஆணைகள் ஏதும்

தேவைப்படாத, பட்டுவளர்ச்சித் துறையின் கட்டுப்பாட்டின் கீழ் வரும் (Administrative Control) சங்கங்களின் ஒட்டுமொத்த தேர்தல் (Enmasse Elections) மற்றும் அவை தவிர்த்த இதர வகையிலான தேர்தல்கள் (Other than Enmasse Elections) மற்றும் காலியிடங்களுக்கான தேர்தல்கள் அனைத்திற்கும் பொருந்துவதாகும் என்றும் அவர்கள் மாவட்ட தேர்தல் அலுவலர்களாக தொடர்ச்சியாக இருந்து வருவார்கள் (Shall continue as DEO's) என்றும் அறிவிக்கப்படுகிறது.

இவ்வாறு விதி எண்.52–A(4)–ன் கீழ் ஆணையத்தால் நியமிக்கப்படும் மாவட்ட தேர்தல் அலுவலர்கள் அவ்விதியில் சொல்லப்பட்டபடி, தேர்தல் ஆணையத்தின் மேற்பார்வை, கட்டளைகள் மற்றும் கட்டுப்பாட்டிற்குட்பட்டு, அவர்கள் சம்மந்தப்பட்ட நிர்வாக கட்டுப்பாட்டின்கீழ் உள்ள கூட்டுறவுச் சங்கங்களை பொறுத்து, வாக்காளர் பட்டியல் தயாரித்தல், வெளியிடுதல் மற்றும் அச்சங்கங்களுக்கான நிர்வாகக்குழு உறுப்பினர்கள் மற்றும் அலுவல் நிர்வாகிகளுக்கான (Members of the Board and Office Bearers) தேர்தல் நடத்த ஒத்துழைத்து மற்றும் மேற்பார்வை செய்தல் வேண்டும் என்பதுடன், ஆணையத்தால் அவ்வப்போது அவர்களுக்கு ஒப்படைக்கப்படும் செயல்பாடுகளை செயற்படுத்துதல் வேண்டும் என்றும் ஆணையம் அறிவிக்கிறது.

இவ்வகையில் இது தொடர்பாக ஏற்கெனவே வழங்கப்பட்டுள்ள பார்வை 1–ல் காணும் ஆணையத்தின் செயல்முறை ஆணை ரத்து செய்யப்படுகிறது.

ஒம்/–
ஆணையர்

28/12/22
ஆணையருக்காக

இணைப்பு : மேற்கண்டவாறு.

28.12.2022

பெறுநர்

மாவட்ட தேர்தல் அலுவலர்கள்
(இயக்குநர், பட்டுவளர்ச்சித்துறை / மாநில தேர்தல் அலுவலர் மூலமாக).

நகல்

1. தலைமைச் செயலாளர், புனித ஜார்ஜ் கோட்டை, சென்னை–9
2. அரசு முதன்மைச் செயலாளர், கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு துறை, சென்னை–9.
3. அரசு முதன்மைச் செயலாளர், கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த்துறை, சென்னை–9.
4. இருப்புக் கோப்பு – 2022.

| இணைப்பு | | | | |
|---|---|---|---|---|
| ந.க.எண் 875/2022/கூதே1 (2) | | | | |
| வ.எண் | துறை | மாவட்டம் | . சரகம் | பதவியின் பெயர் (Designation) |
| 1 | பட்டுவளர்ச்சித் துறை | கிருஷ்ணகிரி | ஓசூர் | உதவி இயக்குநர், பட்டுவளர்ச்சித் துறை |
| 2 | பட்டுவளர்ச்சித் துறை | | கிருஷ்ணகிரி | உதவி இயக்குநர், பட்டுவளர்ச்சித் துறை |
| 3 | பட்டுவளர்ச்சித் துறை | தருமபுரி | தருமபுரி | உதவி இயக்குநர், பட்டுவளர்ச்சித் துறை |
| 4 | பட்டுவளர்ச்சித் துறை | | பென்னாகரம் | உதவி இயக்குநர், பட்டுவளர்ச்சித் துறை |
| 5 | பட்டுவளர்ச்சித் துறை | கோயம்புத்தூர் | கோயம்புத்தூர் | உதவி இயக்குநர், பட்டுவளர்ச்சித் துறை |
| 6 | பட்டுவளர்ச்சித் துறை | ஈரோடு | தாளவாடி | உதவி இயக்குநர், பட்டுவளர்ச்சித் துறை |
| 7 | பட்டுவளர்ச்சித் துறை | திருப்பத்தூர் | வாணியம்பாடி | உதவி இயக்குநர், பட்டுவளர்ச்சித் துறை |
| 8 | பட்டுவளர்ச்சித் துறை | திருவண்ணாமலை | திருவண்ணாமலை | உதவி இயக்குநர், பட்டுவளர்ச்சித் துறை |
| 9 | பட்டுவளர்ச்சித் துறை | திருச்சி | திருச்சி | உதவி இயக்குநர், பட்டுவளர்ச்சித் துறை |
| 10 | பட்டுவளர்ச்சித் துறை | திண்டுக்கல் | திண்டுக்கல் | உதவி இயக்குநர், பட்டுவளர்ச்சித் துறை |
| 11 | பட்டுவளர்ச்சித் துறை | தென்காசி | தென்காசி | உதவி இயக்குநர், பட்டுவளர்ச்சித் துறை |
| 12 | பட்டுவளர்ச்சித் துறை | காஞ்சிபுரம் | காஞ்சிபுரம் | துணை இயக்குநர், அரசு அண்ணா பட்டு பரிமாற்றகம் |
| 13 | பட்டுவளர்ச்சித் துறை | சேலம் | சேலம் | உதவி இயக்குநர், பட்டுவளர்ச்சித் துறை |

ஒம்/-

ஆணையர்

28/12/22

ஆணையருக்காக

28.12.2022

தமிழ்நாடு மாநில கூட்டுறவுச் சங்கங்களின் தேர்தல் ஆணையர் அவர்களின்
செயல்முறை ஆணை, சென்னை – 18.

முன்னிலை : திரு. தயானந்த் கட்டாரியா, இ.ஆ.ப.,
ஆணையர்.

ந.க.875/2018/கூதே1 நாள் : 06.01.2023

பொருள் : கூட்டுறவுச் சங்க தேர்தல் 2023 – நிர்வாகக்குழு உறுப்பினர்கள் தலைவர் மற்றும் துணைத்தலைவர் தேர்தல்கள் – துணிநூல் துறை – மாவட்ட தேர்தல் அலுவலர் நியமனம் (District Election Officer) – நியமன ஆணை வழங்குதல் – தொடர்பாக.

பார்வை :
1. தமிழ்நாடு மாநில கூட்டுறவுச் சங்கங்களின் தேர்தல் ஆணையத்தின் கடிதம் ந.க.875/2022/கூதே1, நாள் 12.09.2022.
2. துணிநூல் ஆணையர் அலுவலக ந.க.5142/2022/டி1 , நாள் 06.10.2022.

*****

ஆணை:

பார்வை 1–ல் காணும் ஆணையத்தின் செயல்முறை ஆணைப்படி, ஆணையர் கைத்தறி மற்றும் துணிநூல் துறையின் சரக அளவிலான நிர்வாகக் கட்டுப்பாட்டிற்குட்பட்ட கூட்டுறவுச் சங்கங்களுக்கான தேர்தல்களை நடத்திட மாவட்ட தேர்தல் அலுவலர்களை ஆணையம் நியமனம் செய்தது.

இந்நிலையில் பார்வை 2–ல் காணும் கடிதத்தின்படி கைத்தறி மற்றும் துணிநூல் துறையானது கைத்தறி துறை மற்றும் துணிநூல் துறை என இருவேறு துறைகளாகப் பிரிக்கப்பட்டுள்ளதாகவும் துணிநூல் துறையின் நிர்வாகக் கட்டுப்பாட்டின்கீழ் திருப்பூர், சேலம், கரூர், மதுரை ஆகிய இடங்களில் மண்டல துணை இயக்குநர் அலுவலங்கள் செயல்பட்டு வருவதாகவும் இவர்கள் நிர்வாக கட்டுப்பாட்டின்கீழ் 6 மத்திய வகை (Central type) கூட்டுறவு நூற்பாலைகள் மற்றும் மாநில அளவிலான தலைமைச் சங்கமான தமிழ்நாடு கூட்டுறவு நூற்பாலைகளின் இணையம் (TANSPIN) சென்னையில் செயல்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் பார்வை 1–ல் கண்ட ஆணையத்தின் செயல்முறை ஆணையின்படி ஒருங்கிணைந்த கைத்தறி மற்றும் துணிநூல் துறையைச் சார்ந்த உதவி இயக்குநர்களை மாவட்ட தேர்தல் அலுவலர்களாக நியமனம் செய்து ஆணை வரப்பெற்றுள்ளதாகவும், தற்போது துணிநூல் துறை தனியே பிரிக்கப்பட்டு இயங்கி வருவதால் மத்திய வகை சங்கங்களான கூட்டுறவு நூற்பாலைகள் உள்ளிட்ட கூட்டுறவுச் சங்கங்களுக்கான

தேர்தல் நடத்துவதற்கு துணிநூல் துறைக்கு மாவட்ட அளவில் மாவட்ட தேர்தல் அலுவலர்களை நியமனம் செய்து ஆணை வழங்குமாறு கோரப்பட்டுள்ளது.

மேற்க்கண்ட துணிநூல் ஆணையரின் கோரிக்கையினை கவனமுடன் பரிசீலித்து அதனை ஏற்று இணைப்பில் கண்டுள்ள அலுவலர்களை அவர்கள் நிர்வாகக் கட்டுப்பாட்டிற்குட்பட்ட கூட்டுறவுச் சங்கங்களின் மாவட்ட தேர்தல் அலுவலர்களாக 1988-ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்க விதிகள், விதிஎண்.52-A(4)இன் கீழ் தனக்களிக்கப்பட்ட அதிகாரத்தினை கைக்கொண்டு ஆணையம் ஆணையிடுகிறது.

இவ்வாறு நியமிக்கப்பட்ட மாவட்ட தேர்தல் அலுவலர்கள் நியமனம், அவை தொடர்பாக மாற்று **ஆணை ஏதும் பிறப்பிக்கப்படாத வரை, புதிய நியமன ஆணைகள் ஏதும் தேவைப்படாத,** துணிநூல் துறையின் கட்டுப்பாட்டின் கீழ் வரும் (Administrative Control) சங்கங்களின் ஒட்டுமொத்த தேர்தல் (Enmasse Elections) மற்றும் அவை தவிர்த்த இதர வகையிலான தேர்தல்கள் (Other than Enmasse Elections) மற்றும் காலியிடங்களுக்கான தேர்தல்கள் அனைத்திற்கும் பொருந்துவதாகும் என்றும் **அவர்கள் மாவட்ட தேர்தல் அலுவலர்களாக தொடர்ச்சியாக இருந்து வருவார்கள் (Shall continue as DEO's) என்றும் அறிவிக்கப்படுகிறது.**

இவ்வாறு விதி எண்.52-A(4)-ன் கீழ் ஆணையத்தால் நியமிக்கப்படும் மாவட்ட தேர்தல் அலுவலர்கள் அவ்விதியில் சொல்லப்பட்டபடி தேர்தல் ஆணையத்தின் மேற்பார்வை, கட்டளைகள் மற்றும் கட்டுப்பாட்டிற்குட்பட்டு, அவர்கள் சம்மந்தப்பட்ட நிர்வாக கட்டுப்பாட்டின்கீழ் உள்ள கூட்டுறவுச் சங்கங்களை பொறுத்து, வாக்காளர் பட்டியல் தயாரித்தல், வெளியிடுதல் மற்றும் அச்சங்கங்களுக்கான நிர்வாகக்குழு உறுப்பினர்கள் மற்றும் அலுவல் நிர்வாகிகளுக்கான (Members of the Board and Office Bearers) தேர்தல் நடத்த ஒத்துழைத்து மற்றும் மேற்பார்வை செய்தல் வேண்டும் என்பதுடன், ஆணையத்தால் அவ்வப்போது அவர்களுக்கு ஒப்படைக்கப்படும் செயல்பாடுகளை செயற்படுத்துதல் வேண்டும் என்றும் ஆணையம் அறிவிக்கிறது.

இவ்வகையில் இது தொடர்பாக ஏற்கெனவே வழங்கப்பட்டுள்ள பார்வை 1-ல் காணும் ஆணையத்தின் செயல்முறை ஆணை ரத்து செய்யப்படுகிறது.

ஒம்/-

ஆணையர்

ஆணையருக்காக

இணைப்பு : மேற்கண்டவாறு.

பெறுநர்

மாவட்ட தேர்தல் அலுவலர்கள்

(துணிநூல் ஆணையர்/ மாநில தேர்தல் அலுவலர் மூலமாக).

நகல்

1. தலைமைச் செயலாளர், புனித ஜார்ஜ் கோட்டை, சென்னை–9
2. அரசு முதன்மைச் செயலாளர், கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு துறை, சென்னை–9.
3. அரசு முதன்மைச் செயலாளர், கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த்துறை, சென்னை–9.

| இணைப்பு | | | | |
|---|---|---|---|---|
| ந.க.எண் 875/2022/கூதே1 | | | | |
| வ. எண் | துறை | மாவட்டம் | சங்கத்தின் பெயர் | பதவியின் பெயர் (Designation) |
| 1 | துணிநூல் துறை | மதுரை | அண்ணா கூட்டுறவு நூற்பாலை M.H.161 | துணை இயக்குநர்/மாவட்ட தேர்தல் அலுவலர் |
| 2 | துணிநூல் துறை | | பாரதி கூட்டுறவு நூற்பாலை TNH 101 | |
| 3 | துணிநூல் துறை | | கன்னியாகுமரி மாவட்ட கூட்டுறவு நூற்பாலை Y-238 | |
| 4 | துணிநூல் துறை | | இராமநாதபுரம் மாவட்ட கூட்டுறவு நூற்பாலை R.H.153 | |
| 5 | துணிநூல் துறை | கரூர் | புதுக்கோட்டை மாவட்ட கூட்டுறவு நூற்பாலை | துணை இயக்குநர்/மாவட்ட தேர்தல் அலுவலர் |
| 6 | துணிநூல் துறை | சேலம் | கிருஷ்ணகிரி மாவட்ட கூட்டுறவு நூற்பாலை SA 108 | துணை இயக்குநர்/மாவட்ட தேர்தல் அலுவலர் |
| 7 | துணிநூல் துறை | சென்னை | தமிழ்நாடு கூட்டுறவு நூற்பாலைகளின் இணையம் | துணை இயக்குநர்/மாவட்ட தேர்தல் அலுவலர் |

ஓம்/-
ஆணையர்

4/1/23

ஆணையருக்காக

6/1/23

தமிழ்நாடு மாநில கூட்டுறவுச் சங்கங்களின் தேர்தல் ஆணையம், சென்னை – 18.

அனுப்புநர்
திரு. தயானந்த் கட்டாரியா, இஆப,
ஆணையர்,
தமிழ்நாடு மாநில கூட்டுறவுச் சங்கங்களின்
தேர்தல் ஆணையம்,
273 அண்ணாசாலை, தேனாம்பேட்டை,
சென்னை – 600 018.

பெறுநர்
1. கூட்டுறவு சங்கங்களின் பதிவாளர்,
2. அனைத்து செயற்பதிவாளர்கள்

ந.க. 875/2022/கூதே.1 நாள்: 06.01.2023

ஐயா/அம்மையீர்,

பொருள்: கூட்டுறவுச் சங்கத் தேர்தல்கள் – பார்வையாளர்கள் (Observers) நியமனம் – பார்வையாளர்களுக்கான அதிகார வரம்பு எல்லை (Jurisdiction) நிர்ணயம் செய்தல் – தொடர்பாக.

******

தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்களின் தேர்தல் பார்வையாளராக (Observers) 1988-ம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் விதிகள், விதி எண் 52-A (6)ன் கீழ் ஒரு அரசு அதிகாரியை (an Officer of the Government) ஆணையம் நியமனம் செய்கிறது.

இவ்வாறு விதி எண் 52-A (6)ன் கீழ் நியமனம் செய்யப்படும் பார்வையாளர் அவ்விதியில் சொல்லப்பட்டபடி ஒரு மாவட்டம் அல்லது ஒரு வருவாய் கோட்டம் (Revenue Division) அல்லது வருவாய் கோட்டத்தின் ஒரு பகுதியில் உள்ள ஒரு கூட்டுறவுச் சங்கம் அல்லது ஒரு தொகுப்பு கூட்டுறவுச் சங்கங்களின் தேர்தல் அல்லது தேர்தல்கள் (a Co-operative society or a group of Co-operative societies) நடைபெறுவதை கண்காணிக்கும் ஒரு அரசு அதிகாரியாக இருப்பார் மற்றும் தேர்தல் ஆணையத்தால் அவரிடம் ஒப்படைத்த பொறுப்பு மற்றும் அத்தகைய இதர செயல்பாடுகளை அவர் செயல்படுத்துதல் வேண்டும்.

தமிழ்நாட்டில் நாளது தேதியில் கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் மற்றும் செயற்பதிவாளர்களிடமிருந்து பெறப்பட்ட அறிக்கைகள்படி 23,149 கூட்டுறவு சங்கங்கள் உள்ளன.

ஏற்கெனவே 2018 ஒட்டு மொத்த தேர்தல்கள் நடைபெற்ற சங்கங்களின் நிர்வாகக் குழு உறுப்பினர்கள் பதவிக்காலம் 2023-ல் முடிவடைவதாலும், இதர வகையிலும் கூட்டுறவுச் சங்கங்களுக்கான தேர்தல்கள் ஆணையத்தால் நடத்தப்பட உள்ளன.

கூட்டுறவுச் சங்கத் தேர்தல்களை சுதந்திரமாகவும், நேர்மையாகவும் வெளிப்படைத் தன்மையுடனும் (Free, Fair and Transparent) ஆணையம் சிறப்புற நடத்திட பார்வையாளர்களின் பங்களிப்பு மிகவும் முக்கியமானதாகும்.

இவ்வகையில் ஒரு மாவட்டத்திலுள்ள அனைத்து சங்கங்களுக்கும் ஒரு பார்வையாளர் என்ற தற்போதைய நிலையினை மாற்றி 52 – A (6)-ல் கூறப்பட்டபடி ஒரு வருவாய் கோட்டத்திற்கு உட்பட்ட அனைத்து துறையின் கட்டுப்பாட்டின் கீழ் உள்ள அனைத்து வகை கூட்டுறவுச் சங்கங்களுக்கும் ஒரு பார்வையாளர் நியமனம் செய்ய ஆணையம் உத்தேசித்து அதன்படி இணைப்பில் தரப்பட்ட மாவட்டம் மற்றும் அதற்குட்பட்ட வருவாய் கோட்டம் பார்வையாளர்களின் அதிகார வரம்புக்கான எல்லையாக (Jurisdiction), ஆணையம் விதி எண் 52-A (9)-ன் கீழ் தனக்கு வழங்கப்பட்ட அதிகாரத்தைக் கொண்டு, நிர்ணயம் செய்கிறது.

இணைப்பில் கண்டபடியான வருவாய் கோட்டத்திற்கு பார்வையாளர்களாக நியமனம் செய்யப்படுபவர்கள் விதி எண் 52-A (5) மற்றும் 52-A (6) மற்றும் அதில் கூறப்பட்ட விளக்கத்திற்கும் (Explanation) உட்பட்டவர்களாவர். வருவாய் கோட்டத்திற்கான பார்வையாளர்கள் நியமனம் ஆணையத்தால் தேர்தல் திட்டம் அறிவிப்பு செய்யும் போது தனியே மேற்கொள்ளப்படும்.

ஒம்/-
ஆணையர்

6/1/23
ஆணையருக்காக

இணைப்பு : மேற்கண்டவாறு

நகல் :

1. அரசு முதன்மைச் செயலாளர்,
   கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை,
   சென்னை – 600 009.
2. அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்கள்.
3. அனைத்து மாவட்ட தேர்தல் அலுவலர்கள்.
4. இருப்பு கோப்பு 2022.

## APPOINTMENT OF OBSERVER

| S.NO | District Jurisdiction | Name of the Revenue Divisions | Name of the Taluk |
|---|---|---|---|
| 1 | Ariyalur 1 | Ariyalur | Ariyalur |
| 2 | Ariyalur 2 | Udayarpalayam | Udayarpalayam |
| | | | Andimadam |
| | | | Sendurai |
| 3 | Chengalpattu 1 | Tambaram | Pallavaram |
| | | | Tambaram |
| | | | Vandalur |
| 4 | Chengalpattu 2 | Chengalpattu | Chengalpattu |
| | | | Thiruporur |
| | | | Tirukkalukundram |
| 5 | Chengalpattu 3 | Madhuranthakam | Madhuranthakam |
| | | | Cheyyur |
| 6 | Chennai 1 | North Chennai | Tondiarpet |
| | | | Tiruvotriyur |
| | | | Perambur |
| | | | Madhavaram |
| | | | Pursawalkam |
| 7 | Chennai 2 | Central Chennai | Ambattur |
| | | | Ayanavaram |
| | | | Egmore |
| | | | Aminjikarai |
| | | | Mambalam |
| | | | Maduravoyal |
| 8 | Chennai 3 | South Chennai | Guindy |
| | | | Alandur |
| | | | Sholinganallur |
| | | | Mylapore |
| | | | Velachery |
| 9 | Coimbatore 1 | Coimbatore North | Mettupalayam |
| | | | Coimbatore North |
| | | | Annur |
| 10 | Coimbatore 2 | Coimbatore South | Coimbatore South |
| | | | Perur |
| | | | Madukarai |
| | | | Sulur |
| 11 | Coimbatore 3 | Pollachi | Pollachi |
| | | | Kinathukadavu |
| | | | Valparai |
| | | | Anaimalai |
| 12 | Cuddalore 1 | Cuddalore | Panruti |
| | | | Cuddalore |
| | | | Kurinjipadi |
| 13 | Cuddalore 2 | Chidambaram | Chidambaram |
| | | | Kattumannarkoil |
| | | | Bhuvanagiri |
| | | | Srimushnam |
| 14 | Cuddalore 3 | Vridhachalam | Vridhachalam |
| | | | Titagudi |
| | | | Veppur |
| 15 | Dharmapuri 1 | Harur | Harur |
| | | | Pappireddipatti |

| S.NO | District Jurisdiction | Name of the Revenue Divisions | Name of the Taluk |
|---|---|---|---|
| 16 | Dharmapuri 2 | Dharmapuri | Dharmapuri |
| | | | Palacode |
| | | | Pennagaram |
| | | | Nallampalli |
| | | | Karimangalam |
| 17 | Dindigul 1 | Dindigul | Dindigul East |
| | | | Dindigul West |
| | | | Natham |
| | | | Athoor |
| | | | Nilakottai |
| 18 | Dindigul 2 | Palani | Palani |
| | | | Oddenchatram |
| | | | Vedasandur |
| | | | Gujiliamparai |
| 19 | Dindigul 3 | Kodaikanal | Kodaikanal |
| 20 | Erode 1 | Erode | Erode |
| | | | Perundurai |
| | | | Modakkurichi |
| | | | Kodumudi |
| 21 | Erode 2 | Gobichettipalayam | Gobichettipalayam |
| | | | Sathyamangalam |
| | | | Bhavani |
| | | | Anthiyur |
| | | | Thalavadi |
| | | | Nambiyur |
| 22 | Kallakurichi 1 | Tirukkoilur | Tirukkoilur |
| | | | Ulundurpet |
| 23 | Kallakurichi 2 | Kallakurichi | Kallakurichi |
| | | | Sankarapuram |
| | | | Chinnaselam |
| | | | Kalvarayan Hills |
| 24 | Kancheepuram 1 | Kancheepuram | Kancheepuram |
| | | | Walajabad |
| | | | Uthiramerur |
| 25 | Kancheepuram 2 | Sriperumbudur | Sriperumbudur |
| | | | Kundrathur |
| 26 | Kanyakumari 1 | Nagercoil | Agastheeswaram |
| | | | Thovalai |
| 27 | Kanyakumari 2 | Padmanabhapuram | Kalkulam |
| | | | Vilavancode |
| | | | Thiruvattar |
| | | | Killiyoor |
| 28 | Karur 1 | Karur | Karur |
| | | | Aravakurichi |
| | | | Pugalur |
| | | | Manmangalam |
| 29 | Karur 2 | Kulithalai | Kulithalai |
| | | | Krishnarayapuram |
| | | | Kadavur |
| 30 | Krishnagiri 1 | Krishnagiri | Krishnagiri |
| | | | Pochampalli |
| | | | Uthangarai |
| | | | Bargur |

| S.NO | District Jurisdiction | Name of the Revenue Divisions | Name of the Taluk |
|---|---|---|---|
| 31 | Krishnagiri 2 | Hosur | Hosur<br>Denkanikottai<br>Shoolagiri<br>Anchetty |
| 32 | Madurai 1 | Madurai | Madurai North<br>Madurai West<br>Vadipatti |
| 33 | Madurai 2 | Usilampatti | Usilampatti<br>Peraiyur |
| 34 | Madurai 3 | Melur | Melur<br>Madurai East<br>Madurai South |
| 35 | Madurai 4 | Thirumangalam | Thirumangalam<br>Thirupparankundram<br>Kalligudi |
| 36 | Mayiladuthurai 1 | Mayiladuthurai | Mayiladuthurai<br>Kuthalam |
| 37 | Mayiladuthurai 2 | Sirkazhi | Sirkazhi<br>Tharangambadi |
| 38 | Nagapattinam 1 | Nagapattinam | Nagapattinam<br>Kilvelur |
| 39 | Nagapattinam 2 | Vedaranyam | Thirukkuvalai<br>Vedaranyam |
| 40 | Namakkal 1 | Namakkal | Namakkal<br>Rasipuram<br>Sendamangalam<br>Kolli Hills<br>Mohanur |
| 41 | Namakkal 2 | Tiruchengodu | Paramathi Velur<br>Thiruchengodu<br>Kumarapalayam |
| 42 | Perambalur | Perambalur | Perambalur<br>Alathur<br>Veppanthattai<br>Kunnam |
| 43 | Pudukkottai 1 | Pudukkottai | Pudukkottai<br>Alangudi<br>Gandarvakottai<br>Tirumayam<br>Karambakudi |
| 44 | Pudukkottai 2 | Illupur | Illuppur<br>Kulathur<br>Ponnamaravathi<br>Viralimalai |
| 45 | Pudukkottai 3 | Aranthangi | Aranthangi<br>Avadaiyarkoil<br>Manamelkudi |
| 46 | Ramanathapuram 1 | Ramanathapuram | Ramanathapuram<br>Tiruvadanai<br>Rameswaram<br>Kilakarai<br>R. S. Mangalam |

| S.NO | District Jurisdiction | Name of the Revenue Divisions | Name of the Taluk |
|---|---|---|---|
| 47 | Ramanathapuram 2 | Paramakudi | Paramakudi<br>Kadaladi<br>Mudukulathur<br>Kamuthi |
| 48 | Ranipet 1 | Ranipet | Walajah<br>Arcot<br>Kalavai<br>Sholingur |
| 49 | Ranipet 2 | Arakkonam | Arakkonam<br>Nemili |
| 50 | Salem 1 | Salem | Salem<br>Salem West<br>Salem South<br>Yercaud<br>Valapady |
| 51 | Salem 2 | Attur | Attur<br>Gangavalli<br>Pethanaickenpalayam |
| 52 | Salem 3 | Mettur | Mettur<br>Omalur<br>Kadayampatti |
| 53 | Salem 4 | Sankari | Sankari<br>Edappadi |
| 54 | Sivagangai 1 | Sivagangai | Sivagangai<br>Ilayankudi<br>Kalaiyarkovil<br>Manamadurai<br>Tiruppuvanam |
| 55 | Sivagangai 2 | Devakottai | Devakottai<br>Thirupattur<br>Karaikudi<br>Sigampunari |
| 56 | Thanjavur 1 | Thanjavur | Thanjavur<br>Thiruvaiyaru<br>Budalur<br>Orathanad |
| 57 | Thanjavur 2 | Kumbakonam | Kumbakonam<br>Papanasam<br>Thiruvidaimaruthur |
| 58 | Thanjavur 3 | Pattukkottai | Pattukkottai<br>Peravurani |
| 59 | The Nilgiris 1 | Coonoor | Kotagiri<br>Coonoor |
| 60 | The Nilgiris 2 | Udhagai | Kundah<br>Udhagai |
| 61 | The Nilgiris 3 | Gudalur | Gudalur<br>Pandalur |
| 62 | Tenkasi 1 | Tenkasi | Tenkasi<br>Kadayanallur<br>Shencottai<br>Alangulam<br>V.K.Pudur |

| S.NO | District Jurisdiction | Name of the Revenue Divisions | Name of the Taluk |
|---|---|---|---|
| 63 | Tenkasi 2 | Sankarankovil | Sankarankovil |
| | | | Thiruvengadam |
| | | | Sivagiri |
| 64 | Theni 1 | Periyakulam | Periyakulam |
| | | | Theni |
| | | | Aundipatti |
| 65 | Theni 2 | Uthamapalayam | Uthamapalayam |
| | | | Bodinayakanur |
| 66 | Tiruchirappalli 1 | Tiruchirappalli | Thiruchirappalli West |
| | | | Thiruchirappalli East |
| | | | Thiruverumbur |
| 67 | Tiruchirappalli 2 | Srirangam | Srirangam |
| | | | Manapparai |
| | | | Marungapuri |
| 68 | Tiruchirappalli 3 | Musiri | Musiri |
| | | | Thuraiyur |
| | | | Thottiam |
| 69 | Tiruchirappalli 4 | Lalgudi | Lalgudi |
| | | | Mannachanallur |
| 70 | Tirunelveli 1 | Tirunelveli | Tirunelveli |
| | | | Manur |
| | | | Palayamkottai |
| 71 | Tirunelveli 2 | Cheranmahadevi | Cheranmahadevi |
| | | | Ambasamuduram |
| | | | Tisaiyanvilai |
| | | | Nanguneri |
| | | | Radhapuram |
| 72 | Thirupathur 1 | Thirupathur | Natrampalli |
| | | | Thirupathur |
| 73 | Thirupathur 2 | Vaniyambadi | Vaniyambadi |
| | | | Ambur |
| 74 | Tiruppur 1 | Tiruppur | Tiruppur North |
| | | | Tiruppur South |
| | | | Avinashi |
| | | | Uthukuli |
| | | | Palladam |
| 75 | Tiruppur 2 | Dharapuram | Dharapuram |
| | | | Kangeyam |
| 76 | Tiruppur 3 | Udumalpet | Udumalpet |
| | | | Madathukkulam |
| 77 | Tiruvallur 1 | Tiruvallur | Avadi |
| | | | Poonamallee |
| | | | Tiruvallur |
| | | | Uthukottai |
| 78 | Tiruvallur 2 | Ponneri | Ponneri |
| | | | Gummidipoondi |
| 79 | Tiruvallur 3 | Tiruttani | Tiruttani |
| | | | Pallipattu |
| | | | RK Pet |
| 80 | Tiruvannamalai 1 | Tiruvannamalai | Tiruvannamalai |
| | | | Chengam |
| | | | Thandarampet |
| | | | Kilpennathur |

| S.NO | District Jurisdiction | Name of the Revenue Divisions | Name of the Taluk |
|---|---|---|---|
| 81 | Tiruvannamalai 2 | Arni | Arni |
| | | | Polur |
| | | | Kalasapakkam |
| | | | Jamunamarathoor |
| 82 | Tiruvannamalai 3 | Cheyyar | Cheyyar |
| | | | Vandavasi |
| | | | Chetpet |
| | | | Vembakkam |
| 83 | Tiruvarur 1 | Tiruvarur | Tiruvarur |
| | | | Kudavasal |
| | | | Nannilam |
| | | | Valangaiman |
| 84 | Tiruvarur 2 | Mannargudi | Needamangalam |
| | | | Tiruthuraipoondi |
| | | | Mannargudi |
| | | | Koothanallur |
| 85 | Thoothukudi 1 | Thoothukudi | Thoothukudi |
| | | | Srivaikundam |
| 86 | Thoothukudi 2 | Kovilpatty | Kovilpatty |
| | | | Ottapidaram |
| | | | Ettayapuram |
| | | | Vilathikulam |
| | | | Kayathar |
| 87 | Thoothukudi 3 | Tiruchendur | Tiruchendur |
| | | | Sattankulam |
| | | | Eral |
| 88 | Vellore 1 | Vellore | Vellore |
| | | | Anaicut |
| | | | Katpadi |
| 89 | Vellore 2 | Gudiyatham | Gudiyatham |
| | | | Pernambut |
| | | | K V Kuppam |
| 90 | Viluppuram 1 | Viluppuram | Viluppuram |
| | | | Vanur |
| | | | Vikkiravandi |
| | | | Thiruvennainallur |
| | | | Kandachipuram |
| 91 | Viluppuram 2 | Tindivanam | Tindivanam |
| | | | Gingee |
| | | | Marakkanam |
| | | | Melmalaiyanur |
| 92 | Virudhunagar 1 | Arupukottai | Virudhunagar |
| | | | Aruppukottai |
| | | | Kariyapatti |
| | | | Tiruchuli |
| 93 | Virudhunagar 2 | Sivakasi | Sivakasi |
| | | | Srivilliputhur |
| | | | Watrap |
| 94 | Virudhunagar 3 | Sattur | |
| | | | Sattur |
| | | | Vembakkottai |
| | | | Rajapalayam |

தமிழ்நாடு மாநில கூட்டுறவுச் சங்கங்களின் தேர்தல் ஆணையம் – 600 018.

அனுப்புநர்

திரு.தயானந்த் கட்டாரியா, இ.ஆ.ப.,
ஆணையர்,
தமிழ்நாடு மாநில கூட்டுறவுச் சங்கங்களின்
தேர்தல் ஆணையம்,
273. அண்ணாசாலை, தேனாம்பேட்டை,
சென்னை – 600 018.

பெறுநர்

1. கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் / மாநில தேர்தல் அலுவலர்,
2. அனைத்து செயற்பதிவாளர்கள் / மாநில தேர்தல் அலுவலர்கள்

ந.க. 1111/2022/கூ.தே.5 நாள் : 10.01.2023

ஐயா / அம்மையீர்,

பொருள்: கூட்டுறவுச் சங்கத் தேர்தல்கள் 2023 – மாண்பமை சென்னை உயர்நீதிமன்றம் மற்றும் அதன் மதுரை அமர்வு, கூட்டுறவு வழக்குகளுக்கான சிறப்பு மண்டலக் குழுக்கள் முன்பான தேர்தல் நடவடிக்கைகள் குறித்த மனுக்கள் மற்றும் புகார்கள் – வருங்காலங்களில் இம்மாதிரி புகார்களுக்கு இடம் தராது செயல்படுதல் – அறிவுரை வழங்குதல் – தொடர்பாக.

பார்வை:
1. ஆணையத்தின் செயல்முறை ஆணை ந.க.321/2018/கூ.தே1 நாள் 19.07.2018.
2. ஆணையத்தின் இதே எண்ணிட்ட சுற்றறிக்கை நாள் 20.10.2022.

*****

கூட்டுறவுச் சங்கத் தேர்தல்களில் பெரும்பாலான இனங்களில், வேட்பு மனு பரிசீலித்தல், நிராகரித்தல் போன்ற வேட்பு மனு தொடர்பான அனைத்து நடவடிக்கைகளிலும் சட்ட விதிகள் முறையாகக் கடைப்பிடிக்கப்படவில்லை என்றும் அவ்வகையில் அச்சங்கங்களின் தேர்தல்களை ரத்து செய்தும் மாண்பமை சென்னை உயர்நீதிமன்றம் மற்றும் அதன் மதுரை அமர்வு, மற்றும் மாண்பமை சென்னை உயர்நீதிமன்றத்தால் அமைக்கப்பட்ட கூட்டுறவு வழக்குகளுக்கான 4 சிறப்பு மண்டலக் குழுக்களும் ஆணை பிறப்பித்துள்ளன.

மேற்படி ஆணைகளில் வேட்பு மனு தொடர்பாக கூட்டுறவு சட்ட விதிகளில் கூறப்பட்டவை தவிர, தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்களின் தேர்தல் ஆணையத்தால் வழங்கப்பட்டுள்ள அறிவுரைகளையும், குறிப்பாக பார்வை (1)-ல் கூறப்பட்ட அறிவுரைகளையும் தவறாது கைக்கொள்ள வேண்டும் என்றும் ஆணையிடப்பட்டுள்ளது.

வேட்பு மனு தொடர்பான பார்வை (1)-ல் கண்ட அறிவுரைகளைத் தொடர்ந்து பார்வை 2-ல் கண்ட ஆணையத்தின் கடிதத்திலும் இது தொடர்பான அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன.

எதிர்வரும் 2023 - ஒட்டு மொத்தத் தேர்தல்களில், வேட்பு மனு தொடர்பான நடவடிக்கைகள் எவ்விதப் புகார்களுக்கும் இடமின்றியும், அவை சட்ட விதிகளின் படியும், ஆணையச் சுற்றறிக்கைகளின் படியும் நடைபெறுவதை உறுதி செய்திட வேண்டியது மாநிலத் தேர்தல் அலுவலர்கள் மற்றும் மாவட்டத் தேர்தல் அலுவலர்கள் ஆகியோரின் சட்ட பூர்வ கடமையாகும்.

இவ்வகையில் பார்வை (1) மற்றும் (2)-ல் கண்ட சுற்றறிக்கைகளில் கூறப்பட்டவற்றை மீண்டும் வலியுறுத்தி அவற்றின் நகல்கள் தக்க நடவடிக்கைக்காக இத்துடன் இணைத்து அனுப்பப்படுகின்றன.

இதனை உரிய அலுவலர்களுக்கு தக்க அறிவுரைகளுடன் வழங்கிடவும், அவ்வாறு வழங்கப்பட்டதற்கான விபரத்தை 20.01.2023-க்குள் ஆணையத்திற்குத் தெரிவித்திடவும் அன்புடன் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

ஒம்/-

ஆணையர்

11/1/23

1/18 ஆணையருக்காக

இணைப்பு: மேற்கூறியவாறு

11/01/23

நகல் :

1) அனைத்து மாவட்ட தேர்தல் அலுவலர்கள்
2) கணினி ஆளுமையாளர்
3) இருப்பு கோப்பு – 2023

# தமிழ்நாடு மாநில கூட்டுறவுச் சங்கங்களின் தேர்தல் ஆணையர் அவர்களின் செயல்முறை ஆணை

முனைவர் மு. ராஜேந்திரன், இ.ஆ.ப.,
ஆணையர்

ந.க. 321 /2018/கூதே.1

நாள். 19.07.2018

பொருள் : கூட்டுறவுச் சங்கத் தேர்தல்கள் 2018 – நிர்வாகக்குழு உறுப்பினர்கள், தலைவர் மற்றும் துணைத்தலைவர் தேர்தல் நடவடிக்கைகள் – தேர்தல் நடவடிக்கைகள் ரத்து செய்யப்பட்ட சங்கங்கள் – மீண்டும் நடவடிக்கைகள் தொடருதல் – நடவடிக்கைகள் முறையாக சட்டபூர்வமாக நடத்துதல் – அறிவுரைகள் வழங்குதல்

பார்வை:
1. ஆணையத்தின் தேர்தல் திட்டம் ந.க.322 முதல் 334/ 2018/கூதே1, நாள் 05.03.2018.
2. ஆணையத்தின் தேர்தல் திட்டம் ந.க.321/2018/கூதே1, நாள் 21.04.2018.

---***----

ஆணை :

பார்வை (1) மற்றும் (2)–ல் கண்ட ஆணையத்தின் தேர்தல் திட்டங்கள்படி தேர்தல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்ட சங்கங்களில் சில சங்கங்களின் தேர்தல் நடவடிக்கைகள் முழுவதுமாகவோ அல்லது சில நிலைகளிலோ ஆணையத்தால் ரத்து செய்யப்பட்டு ஆணை வழங்கப்பட்டன. அச்சங்கங்களின் தேர்தல் நடவடிக்கைகள் தொடர்ந்து நடத்திட மாண்பமை உயர்நீதிமன்ற ஆணைக்குப் பின்னர், அதனடிப்படையில் ஆணையம் தனியே ஆணை வழங்க உள்ளது.

பெரும்பாலான கூட்டுறவுச் சங்கங்களின் தேர்தல் நடவடிக்கைகள் வேட்புமனு தாக்கல், பரிசீலனை, நிராகரித்தல் போன்ற வேட்புமனு நடவடிக்கைகள் பற்றிய புகார்கள் காரணமாக ரத்து செய்யப்பட்டுள்ளன.

ரத்து செய்யப்பட்ட சங்கங்களின் தேர்தல் நடவடிக்கைகள் தொடர்ந்து நடத்திட ஆணையம் ஆணை வழங்கும் நிலையில், வேட்புமனு தொடர்பான நடவடிக்கைகள் மிகச் சரியாக, விதிகளுக்குட்பட்டு, எவ்விதப்புகார்களுக்கும் இடம் தராது நியாயமாகவும், சுதந்திரமாகவும், சரியாகவும் நடைபெறுவதை உறுதி செய்யும் விதமாக, ஏற்கனவே தேர்தல் அலுவலர்களுக்கான கையேடு, துணைக்கையேடு, ஆணையச் சுற்றறிக்கைகள் கையேடு பகுதி 1 மற்றும் பகுதி 2 ஆகியவற்றில் வேட்புமனு தொடர்பாக வழங்கப்பட்டுள்ள அறிவுரைகளைத் தொடர்ந்து கீழ்வரும் அறிவுரைகளையும் ஆணையம் வழங்குகிறது.

1. வேட்புமனு பரிசீலித்தல், நிராகரித்தல், மீளப்பெறுதல் போன்ற வேட்புமனு தொடர்பான அனைத்து நடவடிக்கைகளின் போதும் தேர்தல் அலுவலர் அறிவிக்கப்பட்ட நாட்களில், இடங்களில், நேரங்களில் கண்டிப்பாக இருத்தல் வேண்டும். குறிப்பிட்ட நேரங்கள் தவறாது பின்பற்றப்பட வேண்டும்.
2. காவல்துறை பாதுகாப்பு தவறாது இருத்தல் வேண்டும்.
3. வேட்புமனுக்கள் மற்றும் தொடர்புடைய ஆவணங்கள் வேறு எவரும் கையாள்வதற்கோ, எடுத்துச்செ ல்வதற்கோ, சேதப்படுத்துவதற்கோ சிறிதும் இடம் தரக்கூடாது.
4. வேட்புமனு பெற விரும்பும் அனைவருக்கும் வேட்புமனு அளித்திடல் வேண்டும்.

5. தேர்தல் அலுவலரிடமிருந்து மட்டுமே வேட்புமனு பெறவேண்டும் என்பது அவசியமல்ல. இது தொடர்பாக ஆணையத்தால் ஏற்கனவே வழங்கப்பட்ட அறிவுரைப்படி வேட்புமனு தட்டச்சு, ஒளிநகல், கைப்பட எழுதுதல், பதிவிறக்கம் செய்யப்படுதல் போன்று எவ்வகையிலும் இருக்கலாம். ஆயினும் படிவம் 18–ன்படி இருத்தல் அவசியம்.

6. வேட்புமனு பெறும் பொழுதே, வேட்புமனுவில் காணப்படும் உறுப்பினர் எண், போட்டியிடும் தொகுதி பற்றிய சரியான விவரம், கையெழுத்து விடுதல், கையெழுத்து தவறான இடத்தில் போட்டிருத்தல், மனுவில் சில விவரங்கள் நிரப்பப்படாதிருத்தல், உறுப்பினர் எண் விடுதல், தவறாக இருத்தல் போன்றவற்றை சரி செய்தும், வாக்காளர் பட்டியலில் உள்ள பதிவுகளுக்கேற்ப பதிவு செய்தும் பெறுதல் வேண்டும். இது போன்ற சிறுவிடுதல்களுக்காக வேட்புமனுவை நிராகரிக்கக் கூடாது.

7. வேட்புமனு சரியாக நிரப்பப்படவில்லை, உறுப்பினர் எண் சரியாகக் குறிப்பிடவில்லை, கையெழுத்தில் மாறுபாடுள்ளது, கையொப்பம் தவறான இடத்தில் இடப்பட்டுள்ளது போன்ற சிறிய அற்பக் காரணங்களுக்காக நிராகரிக்கக் கூடாது. வாக்காளர் பட்டியலில் உள்ளவரும் வேட்புமனு தாக்கல் செய்பவரும் ஒருவரே என்று தேர்தல் அலுவலர் விசாரித்து மன நிறைவு கொள்வாராயின், வேட்புமனுவினை நிராகரித்தல் கூடாது.

8. ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கு ஒதுக்கப்பட்ட இடங்களுக்குப் போட்டியிடும் வேட்பாளர் படிவம் 18–ல் அளித்திடும் உறுதிமொழியே (Candidate's Declaration) போதுமானது. ஆவணச் சான்றுகள் கோருதல் கூடாது. மறுப்பாளர்கள் இருப்பின், வேட்பாளர்களால் மறுக்க இயலாத மிகவும் வலுவுடைய ஆதாதரங்களை காண்பித்தல் மட்டுமே நிராகரிக்க வேண்டும்.

9. வரிசை எண்.3ல் கலம் 5,6 பூர்த்தி செய்யவில்லை என்ற காரணத்திற்காக நிராகரித்தல் கூடாது. ஆதிதிராவிடர் / பழங்குடியினர் இனத்தை சார்ந்தவர் மட்டுமே நிரப்பப்பட வேண்டிய கலம் அது.

10. ஆதிதிராவிடர் / பழங்குடியினர் இனத்தவர் அல்லாதவர்கள் உறுதிமொழியினை அடிக்கவில்லை என்ற காரணத்தால் நிராகரிக்கக் கூடாது.

11. வேட்புமனு பெறும் பொழுது வேட்புமனுவில் வரிசை எண், நேரம், நாள் ஆகியவற்றை தேர்தல் அலுவலர் குறிப்பிட்டு தேதியுடன் கூடிய தனது சுருக்கொப்பத்தையும் இடுதல் வேண்டும்.

12. வேட்புமனு தாக்கல் செய்வோருக்கு அதனைப்பெற்றுக் கொண்டதற்கான ஒப்புகைச் சீட்டு வழங்கிட வேண்டும்.

13. வேட்புமனுத் தாக்கலின்போது கூட்ட நெரில் ஏற்படாமல் கவனித்துக்கொள்ள வேண்டும். கூட்டநெரிசலால் ஏற்படும் சிரமங்களைத் தவிர்த்திட வேட்புமனு தாக்கல் செய்பவர் உள்ளிட்ட ஐந்து நபர்களுக்கு மேல் அனுமதித்தல் கூடாது.

14. வேட்புமனு ஏற்றுக்கொள்ளப்படுமேயாயின் ஏற்றுக் கொள்ளப்பட்டது என்றும், தள்ளுபடி செய்யப்படுமேயாயின் அதற்கான காரணங்களை சுருக்கமாகவும், தெளிவாகவும் வேட்புமனுவில் பதிவு செய்திடல் வேண்டும்.

15. ஒரு வேட்பாளர், தான் போட்டியிடும் ஒரு உறுப்பினர் இடத்தைத்தவிர இதர இடங்களுக்கு முன்மொழிபவராகவோ வழிமொழிபவராகவோ கையொப்பமிடலாம். அந்த காரணத்திற்காக வேட்புமனுவினை நிராகரித்தல் கூடாது. உதாரணத்திற்கு 11 நிர்வாகக்குழு உறுப்பினர் இடங்களைக் கொண்ட சங்கங்களில், தான் போட்டியிடும் ஒரு இடத்தைத் தவிர்த்து மீதி 10 இடங்களுக்கு முன்மொழிபவராகவோ, வழிமொழிபவராகவோ கையொப்பம் இடலாம்.

16. நிர்வாகக்குழு உறுப்பினர் வேட்புமனு தாக்கல், பெறுதல், பரிசீலனை போன்றவை தொடர்பாக விதி எண் 52(8)–ல் சொல்லப்பட்டவை கண்டிப்பாக பின்பற்றப்பட வேண்டும்.

17. வேட்புமனுக்களில் எக்காரணம் கொண்டும் தேர்தல் அதிகாரிகளால் திருத்தம் மேற்கொள்ளப்படக்கூடாது.

18. அனைத்து தேர்தல் அலுவலர்களும் வேட்புமனு தாக்கல், பரிசீலனை, செல்லத்தக்க வேட்புமனுக்கள் பட்டியல் வெளியிடுதல், வேட்பு மனு திரும்பப்பெறுதல் மற்றும் போட்டியிடும் வேட்பாளர் இறுதிப்பட்டியல் வெளியிடுதல் போன்ற வேட்புமனு தொடர்பான அனைத்து நடவடிக்கைகளின் போதும், இது தொடர்பாக சட்ட விதிகளில் சொல்லப்பட்டவை மற்றும் ஆணையத்தின் அறிவுரைகளைத் தவறாது கைக்கொண்டு எவ்விதப் புகார்களுக்கும் இடமின்றி செய்யப்படுவதையும் தேர்தல் சுதந்திரமாகவும் நியாயமாகவும் நடைபெறுவதையும் மாவட்ட தேர்தல் அலுவலர்களை உறுதி செய்ய வேண்டும்.

ஒம்/–
ஆணையர்

வி. தேவகி
ஆணையருக்காக

பெறுநர் :

19/07/18

1) கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் / மாநில தேர்தல் அலுவலர். சென்னை.
2) அனைத்து செயற்பதிவாளர்கள் / மாநில தேர்தல் அலுவலர்கள்.
3) அனைத்து மாவட்ட தேர்தல் அலுவலர்கள்.
4) அனைத்து தேர்தல் பார்வையாளர்கள்.

# இணைப்பு

ந.க.1111/2022/கூ.தே.5 நாள் : 20.10.2022

## தேர்தல் ஆணையத்தில் பெறப்பட்ட புகார்களின் தன்மைகள்

## (Nature of Complaints)

### I. உறுப்பினர்/வாக்காளர் பட்டியல் தொடர்புடையது :-

- உறுப்பினர் பட்டியல் அறிவிப்பு பலகையில் ஒட்டப்படவில்லை.
- வாக்காளர் பட்டியல் அலுவலர் வரவில்லை.
- உறுப்பினர் பட்டியல் தயாரிக்கப்படவில்லை.
- போலியான மற்றும் தகுதியற்ற, உறுப்பினர்கள் பட்டியலில் இடம் பெற்றிருத்தல்.
- கோருரிமை மற்றும் மறுப்புகள் பெறப்படவில்லை,
- இறுதி வாக்காளர் பட்டியல் அறிவிப்பு பலகையில் ஒட்டப்படவில்லை.
- உறுப்பினர் பட்டியலில் பெயர் விடுபட்டுள்ளது.
- இறந்த உறுப்பினர்கள் பெயர்கள் நீக்கப்படவில்லை.
- சங்க செயல் எல்லை (area of operation)யில் வசிக்காத / தொழில் செய்யாத / விவசாய நிலம் இல்லாத உறுப்பினர்கள் சங்கத்துணை விதிக்கு புறம்பாக உறுப்பினர் பட்டியலில் இடம் பெற்றிருத்தல்.

### II. வேட்புமனு தாக்கல் தொடர்புடையது :-

- வேட்புமனு நடவடிக்கைக்கான தேர்தல் அலுவலர் தேர்தல் அறிவிப்பின்படியான நாளில், இடத்தில், நேரத்தில் இல்லை.
- வேட்புமனு படிவம் (Form No.18) தரமறுத்தல்.
- குறிப்பிட்ட நபர்களுக்கு மட்டுமே வேட்பு மனு வழங்கப்படுதல்.
- தட்டச்சு, ஒளிநகல், கைப்பட எழுதுதல், பதிவிறக்கம் செய்யப்படுதல் போன்ற வகைகளில் உள்ள படிவம்-18ஐ ஏற்க மறுத்தல்.
- வேட்புமனு பெற மறுத்தல்.

- குறிப்பிட்ட நபர்களிடமிருந்து, குறிப்பிட்ட எண்ணிக்கையில் மட்டுமே வேட்பு மனுக்கள் பெறப்படுதல்.
- வேட்பு மனுத்தாக்கலுக்கு ஒப்புகை சீட்டு வழங்கவில்லை.
- வேட்புமனுதாக்கலுக்கு குறிப்பிட்ட நபர்களைத் தவிர வேறு எவரும் அனுமதிக்கப்படவில்லை.
- காவல்துறை பாதுகாப்பு போதுமான அளவு ஏற்பாடு செய்யப்படவில்லை.
- வீடியோ (Video Coverage) ஏற்பாடு இல்லை.
- வேட்பு மனு தாக்கலின் போது உண்மை நிலவரத்திற்கு மாறாக (Contrary to facts and circumstances) சட்ட ஒழுங்கினைக் காரணம் காட்டி தேர்தல் நடவடிக்கைகளை நிறுத்துதல்.

III. <u>வேட்புமனு பரிசீலனை தொடர்புடையது :-</u>

- அறிவிப்பின்படியான பரிசீலனைக்கான நாள், இடத்தில், நேரத்தில் தேர்தல் அலுவலர் இல்லை.
- வேட்புமனு தாக்கல் கையொப்பம் சரியில்லை, தொகுதி சரிவர நிரப்பப்படவில்லை, உறுதி மொழியினை அடிக்கவில்லை, வேட்புமனு சரிவர நிரப்பப்படவில்லை, உறுப்பினர் எண் சரியாக இல்லை மற்றும் இது போன்ற அற்ப காரணங்களுக்காக நிராகரிக்கப்படுதல்.
- வேட்பாளர்களுக்கு நிராகரிப்பதற்கான காரணங்கள் தெரிவிக்காமல் இருத்தல்.
- வேட்பாளர்களுக்கு அனைத்து வேட்பு மனுக்களையும் பார்வையிட்டு அதை சரியானதுதான் என்று அறிந்து கொள்ளும் வகையில் நியாயமான எவ்வித உதவியும் செய்யாமல் இருத்தல்.
- குறிப்பிட்ட நபர்களின் வேட்புமனுக்கள் மற்றும் அவை சரியாக இல்லாத நிலையிலும் ஏற்றுக்கொள்ளப்படுதல்.

7

- குறிப்பிட்ட எண்ணிக்கையிலான வேட்புமனுக்கள் மட்டுமே ஏற்றுக்கொள்ளப்படுதல்.
- தேர்தல் அலுவலர் சில வேட்பு மனுக்களில் தாங்களாகவே திருத்தம் மேற்கொண்டு அவற்றை நிராகரித்தல்.
- தேர்தல் அலுவலரால் படிவம் 20-ல் வேட்பாளர் பட்டியல் முறையாக வெளியிடப்படாமல் இருத்தல்.

ஒம்/-
ஆணையர்

20/10/22

ஆணையருக்காக

20.10.2022

தமிழ்நாடு மாநில கூட்டுறவுச் சங்கங்களின் தேர்தல் ஆணையர் அவர்களின்

செயல்முறை ஆணை, சென்னை – 18.

முன்னிலை : திரு. தயானந்த் கட்டாரியா, இ.ஆ.ப.,

ஆணையர்.

ந.க.875/2022/கூ.தே1(1) நாள் : 11.01.2023

பொருள் : கூட்டுறவுச் சங்க தேர்தல் 2023 – நிர்வாகக்குழு உறுப்பினர்கள் மற்றும் தலைவர்/துணைத்தலைவர் தேர்தல்கள் - பாலுற்பத்தி மற்றும் பால் பண்ணை மேம்பாட்டுத் துறை - மாவட்ட தேர்தல் அலுவலர்கள் நியமனம் வழங்கியது - புதிதாக பிரிக்கப்பட்ட மாவட்டங்களுக்கான மாவட்ட தேர்தல் அலுவலர் நியமனம் - தொடர்பாக.

பார்வை :

1. தமிழ்நாடு மாநில கூட்டுறவுச் சங்கங்களின் தேர்தல் ஆணையத்தின் செயல்முறை ஆணை ந.க.875/2022/கூ.தே1, நாள் 12.09.2022.
2. தமிழ்நாடு மாநில கூட்டுறவுச் சங்கங்களின் தேர்தல் ஆணையத்தின் கடிதம் ந.க. 1437/2022/கூ.தே.3 நாள் 20.12.2022

*****

ஆணை:

பார்வை 1-ல் காணும் ஆணையத்தின் செயல்முறை ஆணைப்படி, ஆணையர் பாலுற்பத்தி மற்றும் பால் பண்ணை மேம்பாட்டுத் துறையின் மாவட்ட அளவிலான நிர்வாகக் கட்டுப்பாட்டிற்குட்பட்ட கூட்டுறவுச் சங்கங்களுக்கான தேர்தல்களை நடத்திட மாவட்ட தேர்தல் அலுவலர்களை ஆணையம் நியமனம் செய்தது.

இந்நிலையில் கூட்டுறவுத் தேர்தல் 2023 தொடர்பாக 05.01.2023 அன்று பிற்பகல் 3.00 மணியளவில் ஆணையர், பாலுற்பத்தி மற்றும் பால்பண்ணை மேம்பாட்டுத் துறை / மாநில தேர்தல் அலுவலருக்கான ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் கலந்து கொண்ட ஆணையர், பாலுற்பத்தி மற்றும் பால்பண்ணை மேம்பாட்டுத் துறையால் புதிதாக பிரிக்கப்பட்ட செங்கல்பட்டு, இராணிபேட்டை, திருப்பத்தூர், கள்ளக்குறிச்சி, தென்காசி மற்றும் மயிலாடுதுறை ஆகிய 6 புதிய மாவட்டங்களுக்கான மாவட்டத் தேர்தல் அலுவலர் நியமனம் குறித்து கருத்து தெரிவிக்கப்பட்டது. அதில் 6 புதிய மாவட்டங்களுக்கு என தனியாக துணைப்பதிவாளர்கள் (பால்வளம்) இதுவரை நியமிக்கப்படாத நிலை இருப்பதாகவும், இப்புதிய மாவட்டங்களுக்கு உரிய மாவட்ட தேர்தல் அலுவலர்களாக ஏற்கனவே உள்ள மாவட்ட தேர்தல் அலுவலர்கள் செயல்படலாம் என்றும் கருத்து தெரிவித்து அதற்கு தனியே மாவட்ட தேர்தல் அலுவலர் நியமனம் வழங்குமாறும் ஆணையர், பாலுற்பத்தி மற்றும் பால்பண்ணை மேம்பாட்டுத் துறையினரால் கோரப்பட்டது.

மேற்படி ஆலோசனைக் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்ட இக்கோரிக்கையினை ஆணையம் கவனமுடன் பரிசீலித்து அதனை ஏற்று இணைப்பில் கண்டுள்ள அலுவலர்களை அவர்கள் நிர்வாகக் கட்டுப்பாட்டிற்குட்பட்ட 6 புதிய மாவட்டங்களுக்கான மாவட்ட தேர்தல் அலுவலர்களாக 1988-ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்களின் விதிகள் **விதி எண்.52-A-(4)-ல் கீழ்** தனக்களிக்கப்பட்ட அதிகாரத்தினை கைக்கொண்டு நியமனம் செய்து ஆணையம் ஆணையிடுகிறது.

இவ்வாறு நியமிக்கப்பட்ட மாவட்ட தேர்தல் அலுவலர்கள் நியமனம், அவை தொடர்பாக **மாற்று ஆணை ஏதும் பிறப்பிக்கப்படாத வரை, புதிய நியமன ஆணைகள் ஏதும் தேவைப்படாத**, பாலுற்பத்தி மற்றும் பால் பண்ணை மேம்பாட்டுத் துறையின் நிர்வாகக் கட்டுப்பாட்டின் கீழ் வரும் (Administrative Control) சங்கங்களின் ஒட்டுமொத்த தேர்தல் (Enmasse Elections) மற்றும் அவை தவிர்த்த இதர வகையிலான தேர்தல்கள் (Other than Enmasse Elections) மற்றும் காலியிடங்களுக்கான தேர்தல்கள் அனைத்திற்கும் பொருந்துவதாகும் என்றும் **அவர்கள் மாவட்ட தேர்தல் அலுவலர்களாக தொடர்ச்சியாக இருந்து வருவார்கள் (Shall continue as DEO's) என்றும் ஆணையம் அறிவிக்கிறது.**

இவ்வாறு விதி எண்.52-A(4)-ன் கீழ் ஆணையத்தால் நியமிக்கப்படும் மாவட்ட தேர்தல் அலுவலர்கள் அவ்விதியில் கட்டளையிட்டுள்ளபடி (Mandate) தேர்தல் ஆணையத்தின் மேற்பார்வை, கட்டளைகள் மற்றும் கட்டுப்பாட்டிற்குட்பட்டு, அவர்கள் சம்மந்தப்பட்ட நிர்வாக கட்டுப்பாட்டின்கீழ் உள்ள சங்கங்களை பொறுத்து, வாக்காளர் பட்டியல் தயாரித்தல், வெளியிடுதல் மற்றும் அச்சங்கங்களுக்கான நிர்வாகக்குழு உறுப்பினர்கள் மற்றும் அலுவல் நிர்வாகிகளுக்கான (Members of the Board and Office Bearers) தேர்தல் நடத்த ஒத்துழைத்து மற்றும் மேற்பார்வை செய்தல் வேண்டும் என்பதுடன், ஆணையத்தால் அவ்வப்போது அவர்களுக்கு ஒப்படைக்கப்படும் செயல்பாடுகளை செயற்படுத்துதல் வேண்டும் என்றும் ஆணையம் அறிவிக்கிறது

ஒம்/-
ஆணையர்

11/1/23
ஆணையருக்காக

இணைப்பு : மேற்கண்டவாறு

பெறுநர்

மாவட்ட தேர்தல் அலுவலர்கள்
(ஆணையர், பாலுற்பத்தி மற்றும் பால் பண்ணை மேம்பாட்டுத் துறை/ மாநில தேர்தல் அலுவலர் மூலமாக).

நகல்

1. தலைமைச் செயலாளர், புனித ஜார்ஜ் கோட்டை, சென்னை-9
2. அரசு முதன்மைச் செயலாளர், கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு துறை, சென்னை-9.
3. அரசு கூடுதல் தலைமைச் செயலாளர், கால்நடை பராமரிப்பு, பால்வளம் மற்றும் மீன்வளம், மீனவர் நலத்துறை, சென்னை-9.
4. அலுவலக இருப்புக் கோப்பு.
5. கணினி ஆளுமையாளர்.

## இணைப்பு

### ந.க.எண் 875/2022/சுவ.தே1(1)

| வ.எண் | துறை | புதிதாக பிரிக்கப்பட்ட மாவட்டம் | நியமனம் செய்யப்படும் மாவட்ட தேர்தல் அலுவலர் பதவியின் பெயர் (Designation) |
|---|---|---|---|
| 1 | பாலுற்பத்தி மற்றும் பால் பண்ணை மேம்பாட்டுத் துறை | செங்கல்பட்டு | துணைப்பதிவாளர் (பால்வளம்). காஞ்சிபுரம் |
| 2 | பாலுற்பத்தி மற்றும் பால் பண்ணை மேம்பாட்டுத் துறை | திருப்பத்தூர் | துணைப்பதிவாளர் (பால்வளம்). வேலூர் |
| 3 | பாலுற்பத்தி மற்றும் பால் பண்ணை மேம்பாட்டுத் துறை | இராணிப்பேட்டை | |
| 4 | பாலுற்பத்தி மற்றும் பால் பண்ணை மேம்பாட்டுத் துறை | கள்ளக்குறிச்சி | துணைப்பதிவாளர் (பால்வளம்). விழுப்புரம் |
| 5 | பாலுற்பத்தி மற்றும் பால் பண்ணை மேம்பாட்டுத் துறை | தென்காசி | துணைப்பதிவாளர் (பால்வளம்). திருநெல்வேலி |
| 6 | பாலுற்பத்தி மற்றும் பால் பண்ணை மேம்பாட்டுத் துறை | மயிலாடுதுறை | துணைப்பதிவாளர் (பால்வளம்). திருவாரூர் |

ஒம்/-
ஆணையர்

ஆணையருக்காக

தமிழ்நாடு மாநில கூட்டுறவுச் சங்கங்களின் தேர்தல் ஆணையர் அவர்களின் செயல்முறை ஆணை, சென்னை – 18.

முன்னிலை : திரு. தயானந்த் கட்டாரியா, இ.ஆ.ப., ஆணையர்.

ந.க.875/2022/கூ.தே1(2) நாள் :11.01.2023

பொருள் : கூட்டுறவுச் சங்க தேர்தல் 2023 – நிர்வாகக்குழு உறுப்பினர்கள் தலைவர் மற்றும் துணைத்தலைவர் தேர்தல்கள் – சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை - மாவட்ட தேர்தல் அலுவலர் நியமனம் வழங்கியது – மாற்றம் செய்து மாவட்ட தேர்தல் அலுவலர்கள் நியமனம் செய்தல் – தொடர்பாக.

பார்வை :
1. தமிழ்நாடு மாநில கூட்டுறவுச் சங்கங்களின் தேர்தல் ஆணையத்தின் கடிதம் ந.க.875/2022/கூ.தே1, நாள் 12.09.2022.
2. சமூக நல இயக்குநர் அலுவலக ந.க.024825/சி.தி-2/2022, நாள் 11.01.2023.

*****

ஆணை:

பார்வை 1-ல் காணும் ஆணையத்தின் செயல்முறை ஆணைப்படி, சமூக நல இயக்குநர், சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறையின் மாவட்ட அளவிலான நிர்வாகக் கட்டுப்பாட்டிற்குட்பட்ட கூட்டுறவு சங்கங்களுக்கான தேர்தல்களை நடத்திட மாவட்ட தேர்தல் அலுவலர்களை ஆணையம் நியமனம் செய்தது.

இந்நிலையில் பார்வை 2-ல் காணும் கடிதத்தின்படி சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறையில் புதிதாக பிரிக்கப்பட்ட செங்கல்பட்டு, இராணிபேட்டை, திருப்பத்தூர், கள்ளக்குறிச்சி, தென்காசி மற்றும் மயிலாடுதுறை ஆகிய 6 புதிய மாவட்டங்களுக்கும் அந்தந்த மாவட்ட சமூக நல அலுவலர்களை கூட்டுறவுச் சங்கங்களின் தேர்தல்களுக்கான மாவட்ட தேர்தல் அலுவலராக நியமனம் செய்து ஆணை வழங்கிடுமாறு கோரப்பட்டுள்ளது.

மேற்கண்ட சமூக நல இயக்குநர், சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறையின் கோரிக்கையினை ஆணையம் கவனமுடன் பரிசீலித்து அதனை ஏற்று இணைப்பில் கண்டுள்ள அலுவலர்களை அவர்கள் நிர்வாகக் கட்டுப்பாட்டிற்குட்பட்ட கூட்டுறவுச் சங்கங்களின் மாவட்ட

தேர்தல் அலுவலர்களாக 1988-ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்க விதிகள், விதிஎண்.52-A(4)-இன் கீழ் தனக்களிக்கப்பட்ட அதிகாரத்தினை கைக்கொண்டு ஆணையம் ஆணையிடுகிறது.

இவ்வாறு நியமிக்கப்பட்ட மாவட்ட தேர்தல் அலுவலர்கள் நியமனம், அவை தொடர்பாக மாற்று **ஆணை ஏதும் பிறப்பிக்கப்படாத வரை, புதிய நியமன ஆணைகள் ஏதும் தேவைப்படாத,** சமூக நலன் மற்றும் மகளிர் உரிமை துறையின் மாவட்ட அளவிலான நிர்வாகக் கட்டுப்பாட்டின் கீழ் வரும் (Administrative Control) சங்கங்களின் ஒட்டுமொத்த தேர்தல் (Enmasse Elections) மற்றும் அவை தவிர்த்த இதர வகையிலான தேர்தல்கள் (Other than Enmasse Elections) மற்றும் காலியிடங்களுக்கான தேர்தல்கள் அனைத்திற்கும் பொருந்துவதாகும் என்றும் **அவர்கள் மாவட்ட தேர்தல் அலுவலர்களாக தொடர்ச்சியாக இருந்து வருவார்கள் (Shall continue as DEO's) என்றும் அறிவிக்கப்படுகிறது.**

இவ்வாறு விதி எண்.52-A(4)-ன் கீழ் ஆணையத்தால் நியமிக்கப்படும் மாவட்ட தேர்தல் அலுவலர்கள் அவ்விதியில் சொல்லப்பட்டபடி, தேர்தல் ஆணையத்தின் மேற்பார்வை, கட்டளைகள் மற்றும் கட்டுப்பாட்டிற்குட்பட்டு, அவர்கள் சம்மந்தப்பட்ட நிர்வாக கட்டுப்பாட்டின்கீழ் உள்ள கூட்டுறவுச் சங்கங்களை பொறுத்து, வாக்காளர் பட்டியல் தயாரித்தல், வெளியிடுதல் மற்றும் அச்சங்கங்களுக்கான நிர்வாகக்குழு உறுப்பினர்கள் மற்றும் அலுவல் நிர்வாகிகளுக்கான (Members of the Board and Office Bearers) தேர்தல் நடத்த ஒத்துழைத்து மற்றும் மேற்பார்வை செய்தல் வேண்டும் என்பதுடன், ஆணையத்தால் அவ்வப்போது அவர்களுக்கு ஒப்படைக்கப்படும் செயல்பாடுகளை செயற்படுத்துதல் வேண்டும் என்றும் ஆணையம் அறிவிக்கிறது.

இவ்வகையில் இது தொடர்பாக ஏற்கெனவே வழங்கப்பட்டுள்ள பார்வை 1-ல் காணும் ஆணையத்தின் செயல்முறை ஆணை ரத்து செய்யப்படுகிறது.

ஒம்/-
ஆணையர்

ஆணையருக்காக 4/1/23

11/1/23

இணைப்பு : மேற்கண்டவாறு.

பெறுநர்

மாவட்ட தேர்தல் அலுவலர்கள்
(சமூக நல இயக்குநர், சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை/மாநில தேர்தல் அலுவலர் மூலமாக).

நகல்

1. தலைமைச் செயலாளர், புனித ஜார்ஜ் கோட்டை, சென்னை-9
2. அரசு முதன்மைச் செயலாளர், கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு துறை, சென்னை-9.
3. அரசு கூடுதல் தலைமைச் செயலாளர், சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை, சென்னை-9.
4. அலுவலக இருப்புக் கோப்பு
5. கணினி ஆளுமையாளர்.

| இணைப்பு | | | |
|---|---|---|---|
| ந.க.எண் 875/2022/கூதே1(2) | | | |
| வ.எண் | துறை | சரகம் | பதவியின் பெயர் (Designation) |
| 1 | சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை | அரியலூர் | மாவட்ட சமூகநல அலுவலர் |
| 2 | சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை | சென்னை | மாவட்ட சமூகநல அலுவலர் |
| 3 | சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை | கோயம்புத்தூர் | மாவட்ட சமூகநல அலுவலர் |
| 4 | சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை | கடலூர் | மாவட்ட சமூகநல அலுவலர் |
| 5 | சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை | தருமபுரி | மாவட்ட சமூகநல அலுவலர் |
| 6 | சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை | திண்டுக்கல் | மாவட்ட சமூகநல அலுவலர் |
| 7 | சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை | ஈரோடு | மாவட்ட சமூகநல அலுவலர் |
| 8 | சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை | கரூர் | மாவட்ட சமூகநல அலுவலர் |
| 9 | சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை | கன்னியாகுமரி | மாவட்ட சமூகநல அலுவலர் |
| 10 | சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை | காஞ்சிபுரம் | மாவட்ட சமூகநல அலுவலர் |
| 11 | சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை | கிருஷ்ணகிரி | மாவட்ட சமூகநல அலுவலர் |
| 12 | சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை | மதுரை | மாவட்ட சமூகநல அலுவலர் |
| 13 | சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை | நீலகிரி | மாவட்ட சமூகநல அலுவலர் |
| 14 | சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை | நாகப்பட்டினம் | மாவட்ட சமூகநல அலுவலர் |
| 15 | சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை | நாமக்கல் | மாவட்ட சமூகநல அலுவலர் |
| 16 | சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை | பெரம்பலூர் | மாவட்ட சமூகநல அலுவலர் |
| 17 | சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை | புதுக்கோட்டை | மாவட்ட சமூகநல அலுவலர் |
| 18 | சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை | சேலம் | மாவட்ட சமூகநல அலுவலர் |
| 19 | சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை | சிவகங்கை | மாவட்ட சமூகநல அலுவலர் |

| வ.எண் | துறை | சரகம் | பதவியின் பெயர் (Designation) |
|---|---|---|---|
| 20 | சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை | இராமநாதபுரம் | மாவட்ட சமூகநல அலுவலர் |
| 21 | சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை | தேனி | மாவட்ட சமூகநல அலுவலர் |
| 22 | சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை | திருவண்ணாமலை | மாவட்ட சமூகநல அலுவலர் |
| 23 | சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை | தஞ்சாவூர் | மாவட்ட சமூகநல அலுவலர் |
| 24 | சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை | திருவாரூர் | மாவட்ட சமூகநல அலுவலர் |
| 25 | சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை | திருநெல்வேலி | மாவட்ட சமூகநல அலுவலர் |
| 26 | சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை | திருவள்ளூர் | மாவட்ட சமூகநல அலுவலர் |
| 27 | சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை | திருப்பூர் | மாவட்ட சமூகநல அலுவலர் |
| 28 | சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை | திருச்சி | மாவட்ட சமூகநல அலுவலர் |
| 29 | சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை | தூத்துக்குடி | மாவட்ட சமூகநல அலுவலர் |
| 30 | சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை | வேலூர் | மாவட்ட சமூகநல அலுவலர் |
| 31 | சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை | விழுப்புரம் | மாவட்ட சமூகநல அலுவலர் |
| 32 | சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை | விருதுநகர் | மாவட்ட சமூகநல அலுவலர் |
| 33 | சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை | செங்கல்பட்டு | மாவட்ட சமூகநல அலுவலர் |
| 34 | சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை | இராணிப்பேட்டை | மாவட்ட சமூகநல அலுவலர் |
| 35 | சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை | திருப்பத்தூர் | மாவட்ட சமூகநல அலுவலர் |
| 36 | சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை | கள்ளக்குறிச்சி | மாவட்ட சமூகநல அலுவலர் |
| 37 | சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை | தென்காசி | மாவட்ட சமூகநல அலுவலர் |
| 38 | சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை | மயிலாடுதுறை | மாவட்ட சமூகநல அலுவலர் |

ஒம்/-

ஆணையர்

ஆணையருக்காக 11/1/23

11/1/23

தமிழ்நாடு மாநில கூட்டுறவுச் சங்கங்களின் தேர்தல் ஆணையர் அவர்களின்
செயல்முறை ஆணை, சென்னை – 18.

முன்னிலை : திரு. தயானந்த் கட்டாரியா, இ.ஆ.ப.,
ஆணையர்.

ந.க.875/2022/கூ.தே1(3) நாள் : 11.01.2023

பொருள் : கூட்டுறவுச் சங்க தேர்தல் 2023 – நிர்வாகக்குழு உறுப்பினர்கள் மற்றும் தலைவர்/துணைத்தலைவர் தேர்தல்கள் - தொழில் வணிகத்துறை - மாவட்ட தேர்தல் அலுவலர் நியமனம் வழங்கியது – மாற்றம் செய்து மாவட்ட தேர்தல் அலுவலர்கள் நியமனம் செய்தல் – தொடர்பாக.

பார்வை :
1. தமிழ்நாடு மாநில கூட்டுறவுச் சங்கங்களின் தேர்தல் ஆணையத்தின் செயல்முறை ஆணை ந.க.875/2022/கூ.தே1, நாள் 12.09.2022.
2. தொழில் ஆணையர் மற்றும் தொழில் வணிகத்துறை கடித எண்.ந.க.26235/ICA/2022-1 நாள் 10.01.2023.

*****

ஆணை:

பார்வை 1-ல் காணும் ஆணையத்தின் செயல்முறை ஆணைப்படி, தொழில் ஆணையர் தொழில் வணிகத்துறை இயக்குநரின் மாவட்ட அளவிலான நிர்வாகக் கட்டுப்பாட்டிற்குட்பட்ட கூட்டுறவு சங்கங்களுக்கான தேர்தல்களை நடத்திட மாவட்ட தேர்தல் அலுவலர்களை ஆணையம் நியமனம் செய்தது.

மேலும் பார்வை 2-ல் காணும் கடிதத்தின்படி மாவட்ட தேர்தல் அலுவலர்கள் பட்டியலில் திருப்பூர், பொதுமேலாளர், மாவட்ட தொழில் மையம் அவர்களை மாவட்ட தேர்தல் அலுவலராக சேர்த்தும், நீலகிரி மாவட்ட தேர்தல் அலுவலராக இணை இயக்குநர் (IC) (Tea) என மாற்றம் செய்து வழங்கவும் கோரப்பட்டுள்ளது.

இக்கோரிக்கையினை ஆணையம் கவனமுடன் பரிசீலித்து அதனை ஏற்று இணைப்பில் கண்டுள்ள அலுவலர்களை அவர்கள் நிர்வாக கட்டுப்பாட்டிற்குட்பட்ட கூட்டுறவுச் சங்கங்களின் மாவட்ட தேர்தல் அலுவலராக 1988-ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்களின் விதிகள் விதி எண்.52-A(4)-ன் கீழ் தனக்களிக்கப்பட்ட அதிகாரத்தினை கைக்கொண்டு நியமனம் செய்து ஆணையம் ஆணையிடுகிறது.

இவ்வாறு நியமிக்கப்பட்ட மாவட்ட தேர்தல் அலுவலர்கள் நியமனம், அவை தொடர்பாக மாற்று ஆணை ஏதும் பிறப்பிக்கப்படாத வரை, புதிய நியமன ஆணைகள் ஏதும் தேவைப்படாத, தொழில்

வணிக துறையின் மாவட்ட அளவிலான நிர்வாகக் கட்டுப்பாட்டின் கீழ் வரும் (Administrative Control) சங்கங்களின் ஒட்டுமொத்த தேர்தல் (Enmasse Elections) மற்றும் அவை தவிர்த்த இதர வகையிலான தேர்தல்கள் (Other than Enmasse Elections) மற்றும் காலியிடங்களுக்கான தேர்தல்கள் அனைத்திற்கும் பொருந்துவதாகும் என்றும் **அவர்கள் மாவட்ட தேர்தல் அலுவலர்களாக தொடர்ச்சியாக இருந்து வருவார்கள் (Shall continue as DEO's) என்றும் ஆணையம் அறிவிக்கிறது.**

இவ்வாறு விதி எண்.52-A(4)-ன் கீழ் ஆணையத்தால் நியமிக்கப்படும் மாவட்ட தேர்தல் அலுவலர் அவ்விதியில் கட்டளையிட்டுள்ளபடி (Mandate) தேர்தல் ஆணையத்தின் மேற்பார்வை, கட்டளைகள் மற்றும் கட்டுப்பாட்டிற்குட்பட்டு, அவர்கள் சம்மந்தப்பட்ட நிர்வாக கட்டுப்பாட்டின்கீழ் உள்ள சங்கங்களை பொறுத்து, வாக்காளர் பட்டியல் தயாரித்தல், வெளியிடுதல் மற்றும் அச்சங்கங்களுக்கான நிர்வாகக்குழு உறுப்பினர்கள் மற்றும் அலுவல் நிர்வாகிகளுக்கான (Members of the Board and Office Bearers) தேர்தல் நடத்த ஒத்துழைத்து மற்றும் மேற்பார்வை செய்தல் வேண்டும் என்பதுடன், ஆணையத்தால் அவ்வப்போது அவர்களுக்கு ஒப்படைக்கப்படும் செயல்பாடுகளை செயற்படுத்துதல் வேண்டும் என்றும் ஆணையம் அறிவிக்கிறது

இவ்வகையில் இது தொடர்பாக ஏற்கெனவே வழங்கப்பட்டுள்ள பார்வை 1-ல் காணும் ஆணையத்தின் செயல்முறை ஆணை ரத்து செய்யப்படுகிறது.

ஒம்/-
ஆணையர்

ஆணையருக்காக 11/1/23

11/1/23

இணைப்பு : மேற்கண்டவாறு

பெறுநர்

மாவட்ட தேர்தல் அலுவலர்கள்
(தொழில் துறை ஆணையர் தொழில் வணிகத்துறை இயக்குநர்/ மாநில தேர்தல் அலுவலர் மூலமாக).

நகல்

1. தலைமைச் செயலாளர், புனித ஜார்ஜ் கோட்டை, சென்னை-9
2. அரசு முதன்மைச் செயலாளர், கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு துறை, சென்னை-9.
3. அரசு செயலாளர், குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை, சென்னை - 9.
4. அலுவலக இருப்புக் கோப்பு.
5. கணினி ஆளுமையாளர்.

| இணைப்பு | | | |
|---|---|---|---|
| ந.க.எண் 875/2022/கூதே1 (3) | | | |
| வ.எண் | துறை | மாவட்டம் | பதவியின் பெயர் (Designation) |
| 1 | தொழில் வணிகத்துறை | அரியலூர் | பொதுமேலாளர், மாவட்ட தொழில் மையம் |
| 2 | தொழில் வணிகத்துறை | சென்னை | துணை இயக்குநர் (தொழில் கூட்டுறவு) |
| 3 | தொழில் வணிகத்துறை | செங்கல்பட்டு | பொதுமேலாளர், மாவட்ட தொழில் மையம் |
| 4 | தொழில் வணிகத்துறை | கோயம்புத்தூர் | பொதுமேலாளர், மாவட்ட தொழில் மையம் |
| 5 | தொழில் வணிகத்துறை | கடலூர் | பொதுமேலாளர், மாவட்ட தொழில் மையம் |
| 6 | தொழில் வணிகத்துறை | தருமபுரி | பொதுமேலாளர், மாவட்ட தொழில் மையம் |
| 7 | தொழில் வணிகத்துறை | திண்டுக்கல் | பொதுமேலாளர், மாவட்ட தொழில் மையம் |
| 8 | தொழில் வணிகத்துறை | ஈரோடு | பொதுமேலாளர், மாவட்ட தொழில் மையம் |
| 9 | தொழில் வணிகத்துறை | கள்ளக்குறிச்சி | பொதுமேலாளர், மாவட்ட தொழில் மையம் |
| 10 | தொழில் வணிகத்துறை | காஞ்சிபுரம் | பொதுமேலாளர், மாவட்ட தொழில் மையம் |
| 11 | தொழில் வணிகத்துறை | கரூர் | பொதுமேலாளர், மாவட்ட தொழில் மையம் |
| 12 | தொழில் வணிகத்துறை | கிருஷ்ணகிரி | பொதுமேலாளர், மாவட்ட தொழில் மையம் |
| 13 | தொழில் வணிகத்துறை | மதுரை | பொதுமேலாளர், மாவட்ட தொழில் மையம் |
| 14 | தொழில் வணிகத்துறை | மயிலாடுதுறை | பொதுமேலாளர், மாவட்ட தொழில் மையம் |
| 15 | தொழில் வணிகத்துறை | நாகப்பட்டிணம் | பொதுமேலாளர், மாவட்ட தொழில் மையம் |
| 16 | தொழில் வணிகத்துறை | நாகர்கோவில் | பொதுமேலாளர், மாவட்ட தொழில் மையம் |
| 17 | தொழில் வணிகத்துறை | நாமக்கல் | பொதுமேலாளர், மாவட்ட தொழில் மையம் |
| 18 | தொழில் வணிகத்துறை | நீலகிரி | இணை இயக்குநர், (IC) (Tea) |
| 19 | தொழில் வணிகத்துறை | பெரம்பலூர் | பொதுமேலாளர், மாவட்ட தொழில் மையம் |
| 20 | தொழில் வணிகத்துறை | புதுக்கோட்டை | பொதுமேலாளர், மாவட்ட தொழில் மையம் |
| 21 | தொழில் வணிகத்துறை | இராணிபேட்டை | பொதுமேலாளர், மாவட்ட தொழில் மையம் |
| 22 | தொழில் வணிகத்துறை | இராமநாதபுரம் | பொதுமேலாளர், மாவட்ட தொழில் மையம் |
| 23 | தொழில் வணிகத்துறை | சேலம் | பொதுமேலாளர், மாவட்ட தொழில் மையம் |
| 24 | தொழில் வணிகத்துறை | சிவகங்கை | பொதுமேலாளர், மாவட்ட தொழில் மையம் |
| 25 | தொழில் வணிகத்துறை | தஞ்சாவூர் | பொதுமேலாளர், மாவட்ட தொழில் மையம் |
| 26 | தொழில் வணிகத்துறை | தேனி | பொதுமேலாளர், மாவட்ட தொழில் மையம் |

| வ.எண் | துறை | மாவட்டம் | பதவியின் பெயர் (Designation) |
|---|---|---|---|
| 27 | தொழில் வணிகத்துறை | தூத்துக்குடி | பொதுமேலாளர், மாவட்ட தொழில் மையம் |
| 28 | தொழில் வணிகத்துறை | திருநெல்வேலி | பொதுமேலாளர், மாவட்ட தொழில் மையம் |
| 29 | தொழில் வணிகத்துறை | திருவண்ணாமலை | பொதுமேலாளர், மாவட்ட தொழில் மையம் |
| 30 | தொழில் வணிகத்துறை | தென்காசி | பொதுமேலாளர், மாவட்ட தொழில் மையம் |
| 31 | தொழில் வணிகத்துறை | திருவள்ளூர் | பொதுமேலாளர், மாவட்ட தொழில் மையம் |
| 32 | தொழில் வணிகத்துறை | திருப்பத்தூர் | பொதுமேலாளர், மாவட்ட தொழில் மையம் |
| 33 | தொழில் வணிகத்துறை | திருவாரூர் | பொதுமேலாளர், மாவட்ட தொழில் மையம் |
| 34 | தொழில் வணிகத்துறை | திருச்சி | பொதுமேலாளர், மாவட்ட தொழில் மையம் |
| 35 | தொழில் வணிகத்துறை | வேலூர் | பொதுமேலாளர், மாவட்ட தொழில் மையம் |
| 36 | தொழில் வணிகத்துறை | விழுப்புரம் | பொதுமேலாளர், மாவட்ட தொழில் மையம் |
| 37 | தொழில் வணிகத்துறை | விருதுநகர் | பொதுமேலாளர், மாவட்ட தொழில் மையம் |
| 38 | தொழில் வணிகத்துறை | திருப்பூர் | பொதுமேலாளர், மாவட்ட தொழில் மையம் |

ஒம்/-

ஆணையர்

4/1/23

ஆணையருக்காக

11/1/23

தமிழ்நாடு மாநில கூட்டுறவுச் சங்கங்களின் தேர்தல் ஆணையர் அவர்களின்

செயல்முறை ஆணை, சென்னை – 18.

முன்னிலை : திரு. தயானந்த் கட்டாரியா, இ.ஆ.ப.,

ஆணையர்.

ந.க.875/2022/கூதே1(4) நாள் : 11.01.2023

பொருள் : கூட்டுறவுச் சங்க தேர்தல் 2023 – நிர்வாகக்குழு உறுப்பினர்கள் மற்றும் தலைவர்/துணைத்தலைவர் தேர்தல்கள் - ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி திட்டப்பணிகள் - மாவட்ட தேர்தல் அலுவலர்கள் நியமனம் வழங்கியது - மாற்றம் செய்து மாவட்ட தேர்தல் அலுவலர்கள் நியமனம் செய்தல் - தொடர்பாக.

பார்வை :

1. தமிழ்நாடு மாநில கூட்டுறவுச் சங்கங்களின் தேர்தல் ஆணையத்தின் செயல்முறை ஆணை ந.க.875/2022/கூதே1, நாள் 12.09.2022.
2. இயக்குநர் மற்றும் குழும இயக்குநர், ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி திட்டப்பணிகள் அலுவலக ந.க8064.என்சி.2022 நாள் 11.01.2023.

*****

ஆணை:

பார்வை 1-ல் காணும் ஆணையத்தின் செயல்முறை ஆணைப்படி, இயக்குநர் மற்றும் குழும இயக்குநர், ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி பணிகள் துறையின் மாவட்ட அளவிலான நிர்வாகக் கட்டுப்பாட்டிற்குட்பட்ட கூட்டுறவு சங்கங்களுக்கான தேர்தல்களை நடத்திட மாவட்ட தேர்தல் அலுவலர்களை ஆணையம் நியமனம் செய்தது.

பார்வை 2-ல் காணும் கடிதத்தின்படி ஏற்கனவே உள்ள மாவட்ட தேர்தல் அலுவலர்கள் பட்டியலில் புதிதாக தோற்றுவிக்கப்பட்ட செங்கல்பட்டு, இராணிபேட்டை மற்றும் கள்ளக்குறிச்சி ஆகிய மூன்று மாவட்ட திட்ட அலுவலர்களை மாவட்ட தேர்தல் அலுவலர்களாக பார்வை 2-ல் காணும் கடிதத்துடன் இணைத்து வரப்பெற்ற பட்டியல்படி நியமன ஆணை வழங்கிட கோரப்பட்டுள்ளது.

இக்கோரிக்கையினை ஆணையம் கவனமுடன் பரிசீலித்து அதனை ஏற்று இணைப்பில் கண்டுள்ள அலுவலர்களை அவர்கள் நிர்வாக கட்டுப்பாட்டிற்குட்பட்ட கூட்டுறவுச் சங்கங்களின் மாவட்ட தேர்தல் அலுவலர்களாக 1988-ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் விதிகள், விதி எண்.52-A(4)-ன்கீழ் தனக்களிக்கப்பட்ட அதிகாரத்தினை கைக்கொண்டு நியமனம் செய்து ஆணையம் ஆணையிடுகிறது.

இவ்வாறு நியமிக்கப்பட்ட மாவட்ட தேர்தல் அலுவலர்கள் நியமனம், அவை தொடர்பாக மாற்று ஆணை ஏதும் பிறப்பிக்கப்படாத வரை, புதிய நியமன ஆணைகள் ஏதும் தேவைப்படாத, ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி திட்டப்பணிகள் துறையின் நிர்வாகக் கட்டுப்பாட்டின் கீழ் வரும் (Administrative Control) சங்கங்களின் ஒட்டுமொத்த தேர்தல் (Enmasse Elections) மற்றும் அவை தவிர்த்த இதர வகையிலான தேர்தல்கள் (Other than Enmasse Elections) மற்றும் காலியிடங்களுக்கான தேர்தல்கள் அனைத்திற்கும் பொருந்துவதாகும் என்றும் **அவர்கள் மாவட்ட தேர்தல் அலுவலர்களாக தொடர்ச்சியாக இருந்து வருவார்கள் (Shall continue as DEO's) என்றும் ஆணையம் அறிவிக்கிறது.**

இவ்வாறு விதி எண்.52-A(4)-ன் கீழ் ஆணையத்தால் நியமிக்கப்படும் மாவட்ட தேர்தல் அலுவலர் அவ்விதியில் கட்டளையிட்டுள்ளபடி (Mandate) தேர்தல் ஆணையத்தின் மேற்பார்வை, கட்டளைகள் மற்றும் கட்டுப்பாட்டிற்குட்பட்டு, அவர்கள் சம்மந்தப்பட்ட நிர்வாக கட்டுப்பாட்டின்கீழ் உள்ள சங்கங்களை பொறுத்து, வாக்காளர் பட்டியல் தயாரித்தல், வெளியிடுதல் மற்றும் அச்சங்கங்களுக்கான நிர்வாகக்குழு உறுப்பினர்கள் மற்றும் அலுவல் நிர்வாகிகளுக்கான (Members of the Board and Office Bearers) தேர்தல் நடத்த ஒத்துழைத்து மற்றும் மேற்பார்வை செய்தல் வேண்டும் என்பதுடன், ஆணையத்தால் அவ்வப்போது அவர்களுக்கு ஒப்படைக்கப்படும் செயல்பாடுகளை செயற்படுத்துதல் வேண்டும் என்றும் ஆணையம் அறிவிக்கிறது

இவ்வகையில் இது தொடர்பாக ஏற்கெனவே வழங்கப்பட்டுள்ள பார்வை 1-ல் காணும் ஆணையத்தின் செயல்முறை ஆணை ரத்து செய்யப்படுகிறது.

ஓம்/-
**ஆணையர்**

11/1/23
**ஆணையருக்காக**

11/1/23

இணைப்பு : மேற்கண்டவாறு

**பெறுநர்**

மாவட்ட தேர்தல் அலுவலர்கள்
(இயக்குநர் மற்றும் குழும இயக்குநர், ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி திட்டப்பணிகள் துறை/ மாநில தேர்தல் அலுவலர் மூலமாக).

**நகல்**

1. தலைமைச் செயலாளர், புனித ஜார்ஜ் கோட்டை, சென்னை-9
2. அரசு முதன்மைச் செயலாளர், கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு துறை, சென்னை-9.
3. அரசு கூடுதல் தலைமைச் செயலாளர், சமூகநலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை, சென்னை - 9.
4. அலுவலக இருப்புக் கோப்பு.
5. கணினி ஆளுமையாளர்.

| இணைப்பு | | | |
|---|---|---|---|
| ந.க.எண் 875/2022/கூதே1(4) | | | |
| வ.எண் | துறை | மாவட்டம் | பதவியின் பெயர் (Designation) |
| 1 | ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சி திட்டப் பணிகள் துறை | சென்னை | மாவட்ட திட்ட அலுவலர் |
| 2 | ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சி திட்டப் பணிகள் துறை | காஞ்சிபுரம் | மாவட்ட திட்ட அலுவலர் |
| 3 | ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சி திட்டப் பணிகள் துறை | திருவள்ளூர் | மாவட்ட திட்ட அலுவலர் |
| 4 | ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சி திட்டப் பணிகள் துறை | வேலூர் | மாவட்ட திட்ட அலுவலர் |
| 5 | ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சி திட்டப் பணிகள் துறை | திருவண்ணாமலை | மாவட்ட திட்ட அலுவலர் |
| 6 | ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சி திட்டப் பணிகள் துறை | கள்ளக்குறிச்சி | மாவட்ட திட்ட அலுவலர் |
| 7 | ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சி திட்டப் பணிகள் துறை | கடலூர் | மாவட்ட திட்ட அலுவலர் |
| 8 | ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சி திட்டப் பணிகள் துறை | புதுக்கோட்டை | மாவட்ட திட்ட அலுவலர் |
| 9 | ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சி திட்டப் பணிகள் துறை | திருச்சி | மாவட்ட திட்ட அலுவலர் |
| 10 | ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சி திட்டப் பணிகள் துறை | மதுரை | மாவட்ட திட்ட அலுவலர் |
| 11 | ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சி திட்டப் பணிகள் துறை | திண்டுக்கல் | மாவட்ட திட்ட அலுவலர் |
| 12 | ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சி திட்டப் பணிகள் துறை | திருநெல்வேலி | மாவட்ட திட்ட அலுவலர் |
| 13 | ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சி திட்டப் பணிகள் துறை | தூத்துக்குடி | மாவட்ட திட்ட அலுவலர் |
| 14 | ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சி திட்டப் பணிகள் துறை | விருதுநகர் | மாவட்ட திட்ட அலுவலர் |
| 15 | ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சி திட்டப் பணிகள் துறை | சிவகங்கை | மாவட்ட திட்ட அலுவலர் |
| 16 | ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சி திட்டப் பணிகள் துறை | இராமநாதபுரம் | மாவட்ட திட்ட அலுவலர் |
| 17 | ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சி திட்டப் பணிகள் துறை | கோயம்புத்தூர் | மாவட்ட திட்ட அலுவலர் |
| 18 | ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சி திட்டப் பணிகள் துறை | சேலம் | மாவட்ட திட்ட அலுவலர் |
| 19 | ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சி திட்டப் பணிகள் துறை | செங்கல்பட்டு | மாவட்ட திட்ட அலுவலர் |
| 20 | ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சி திட்டப் பணிகள் துறை | இராணிபேட்டை | மாவட்ட திட்ட அலுவலர் |

ஒம்/-

ஆணையர்

ஆணையருக்காக

தமிழ்நாடு மாநில கூட்டுறவுச் சங்கங்களின் தேர்தல் ஆணையம், சென்னை – 18.

அனுப்புநர்
திரு. தயானந்த் கட்டாரியா, இஆப
ஆணையர்,
தமிழ்நாடு மாநில கூட்டுறவுச் சங்கங்களின்
தேர்தல் ஆணையம்,
273 அண்ணாசாலை, தேனாம்பேட்டை,
சென்னை – 600 018.

பெறுநர்
1) கூட்டுறவு சங்கங்களின் பதிவாளர்/மாநில தேர்தல் அலுவலர்
2) அனைத்து செயற்பதிவாளர்கள்/மாநில தேர்தல் அலுவலர்கள்

ந.க.344/2018/கூ.தே 5 நாள்: 11.01.2023

ஐயா / அம்மையீர்,

பொருள்: கூட்டுறவு சங்கத் தேர்தல்கள் – தேர்தலுக்கான நடத்தை விதிகள் (Code of Conduct) அமுல்படுத்துதல் – சில தெளிவுரைகள் வழங்குதல் - தொடர்பாக.

பார்வை: ஆணையத்தின் இதே எண்ணிட்ட கடிதம் நாள் 05.09.2022 மற்றும் நடத்தை விதிகள் அறிவிப்பு நாள் : 05.09.2022.

******

பார்வையில் கண்ட அறிவிப்பில் தெரிவிக்கப்பட்ட நடத்தை விதிகள் தொடக்கக் கூட்டுறவுச் சங்கங்கள் (Primary) தவிர இதர மத்திய (Central) மற்றும் தலைமைச் (Apex) சங்கங்களுக்கும் பொருந்துவதாகுமா (applicable) என்ற ஐயப்பாடு எழுப்பப்பட்டது.

இது தொடர்பாக கீழ்வருவனவற்றை ஆணையம் தெரிவித்துக் கொள்கிறது.

பார்வையில் கண்ட நடத்தை விதிகள் அறிவிப்பில் வ.எண் (3)-ல் இத்தேர்தல் நடத்தை விதிகள் தேர்தல் திட்டம் வெளியிடப்பட்ட சங்கங்களுக்கு மட்டும் பொருந்தும் என்று குறிப்பிடப்பட்டுள்ளதே தவிர தொடக்கச் சங்கங்களுக்கு மட்டும் பொருந்தும் என்று குறிப்பிடப்படவில்லை. எனவே அவ்வகையில் தேர்தல் திட்டம் வழங்கப்பட்டுள்ள தொடக்க (Primary), மத்திய (Central), மற்றும் தலைமை (Apex) போன்ற அனைத்து வகைச் சங்கங்களுக்கும் (Class / Category) ஆணையத்தால் அறிவிக்கப்பட்ட நடத்தை விதிகள் பொருந்துவதாகும் என்று தெரிவிக்கப்படுகிறது.

ஒம்/-

ஆணையர்

11/1/23

ஆணையருக்காக

நகல் : 1. அனைத்து மாவட்டத் தேர்தல் அலுவலர்கள்.
2. கணினி ஆளுமையாளர்.
3. இருப்புக் கோப்பு – 2023.

11/01/23

கூட்டுறவுத் தேர்தல்கள் - 2023

தேர்தல் மிக அவசரம்

**தமிழ்நாடு மாநில கூட்டுறவுச் சங்கங்களின் தேர்தல் ஆணையம் சென்னை – 600 018.**

**அனுப்புநர்**

திரு.தயானந்த் கட்டாரியா, இஆப.,
ஆணையர்,
தமிழ்நாடு மாநில கூட்டுறவுச் சங்கங்களின்
தேர்தல் ஆணையம்,
சென்னை – 600 018.

**பெறுநர்**

1. கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் / மாநில தேர்தல் அலுவலர்,
2. அனைத்து செயற்பதிவாளர்கள் / மாநில தேர்தல் அலுவலர்கள்

ந.க. 1111/2022/கூதே.5 நாள்: 11.01.2023

ஐயா / அம்மையீர்,

**பொருள்:** கூட்டுறவுச் சங்கத் தேர்தல்கள் 2023 – தேர்தல் நடவடிக்கைகள் பற்றிய புகார்கள் – புகார் மனுக்கள் மீதான நடவடிக்கைகள் – தேர்தல் புகார் மனு பதிவேடு (Register for Election Compliant petitions) பேணுதல் - அறிவுரை வழங்குதல் – தொடர்பாக.

*****

கடந்த 2018 ஒட்டு மொத்த தேர்தல் நடவடிக்கைகள் தொடர்பாக மாண்பமை சென்னை உயர்நீதிமன்றம் மற்றும் அதன் மதுரை அமர்வு மற்றும் மாண்பமை சென்னை உயர்நீதிமன்றத்தால் அமைக்கப்பட்ட கூட்டுறவு வழக்குகளுக்கான 4 சிறப்பு மண்டலக் குழுக்கள் முன்பாக பல்வேறு வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டன.

அவ்வழக்குகளில் மனுதாரர்கள் தாங்கள் ஏற்கனவே மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாநில தேர்தல் அலுவலர் ஆகியோருக்கு இம்மனுக்களில் தெரிவிக்கப்பட்ட புகார்களை அனுப்பியுள்ளதாகவும் ஆயின் அவற்றின் மீது அவர்கள் எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை எனவும், சில இனங்களில் தேர்தல் நடவடிக்கை முழுவதும் முடிவுற்ற பின்னர் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ள நிலையில் நீதி மறுக்கப்பட்டுள்ளதாகவும் (Justice delayed is Justice denied) தெரிவித்து இடைக்கால தடை ஆணை அல்லது தேர்தலை ரத்து செய்து ஆணைப்பெற்றுள்ளனர்.

இது தொடர்பாக தேர்தல் ஆணையம் மாநில தேர்தல் அலுவலர்கள் / மாவட்டத் தேர்தல் அலுவலர்கள் ஆகியோர்களிடம் புகார் மனுக்கள் பெறப்பட்டதா அவ்வாறாயின் அவற்றின் மீது மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் ஆகியவை குறித்து விபரங்கள் கேட்ட போது உரிய விபரங்கள் உரிய காலத்தில் கிடைக்கவில்லை.

இந்நிலை மனுதாரர்கள் தங்களுக்கு சாதகமான ஆணைகளை பெற ஒரு காரணமாக அமைந்தது.

இந்நிலையினை ஆணையம் மிகக் கவனத்துடன் பரிசீலனை செய்தது. பரிசீலனையில் புகார் மனுக்கள் மீது எவ்வித நடவடிக்கையும் எடுக்காதிருத்தல், தாமதமாக எடுத்தல், மனுதாரருக்கு மனு மீதான நடவடிக்கைப் பற்றி தெரிவிக்காது இருத்தல் போன்றவை முற்றிலும் தவிர்க்கப்பட வேண்டும் என்றும் எக்காரணம் கொண்டும் இந்நிலை தொடரக் கூடாது என ஆணையம் கண்டிப்பாக தெரிவிக்கவும் விரும்புகிறது.

தவிரவும் இது தொடர்பாக கீழ்க்காணும் அறிவுரைகளையும் ஆணையம் வழங்குகிறது.

1. தேர்தல் நடவடிக்கைகள் தொடர்பாக பெறப்படும் புகார் மனுக்களை தனியே ஒரு பதிவேடு (Register for Election Complaint Petitions) பேணப்பட வேண்டும்.

2. அப்பதிவேடு இணைப்பில் கண்ட படிவத்தில் இருத்தல் வேண்டும்.

3. இணைப்பில் கண்ட படிவத்தில் உள்ளபடி ஒரே மாதிரியாக தேர்தல் புகார் மனு பதிவேடானது (Register for Election complaint petitions) தேர்தல் ஆணையம், அனைத்து மாநில தேர்தல் அலுவலர்கள், அனைத்து மாவட்ட தேர்தல் அலுவலர்கள், மற்றும் அனைத்து தேர்தல் அலுவலர்கள் ஆகியோர் தங்கள் அலுவலகங்களில் வைத்து முறையாகப் பராமரித்தல் வேண்டும்.

4. இந்த தேர்தல் புகார் மனு பதிவேடு தேர்தல் ஆணையத்தின் ஒரு ஆவணமாக கருதப்பட்டு தேர்தல் ஆவணமாக (Election Records) தேர்தல் அலுவலரின் பொறுப்பில் பாதுகாப்பாக பராமரிக்கப்பட வேண்டும்.

5. கூட்டுறவுச் சட்டப்பிரிவு 90-ன் கீழ் தேர்தல் முடிவு அறிவித்த பின்னரே (Date of Declaration of Result) தேர்தல் தாவா தொடர மனு செய்ய முடியும் என்பதை கவனத்திற் கொண்டு பிரிவு 90-ல் தேர்தல் தாவா அல்லாத தேர்தல் நடவடிக்கைகள் பற்றிய புகார் மீது தேர்தல் முடிவு அறிவிப்பதற்கு முன்னரே ஒவ்வொரு நடவடிக்கைக்கும் இடைப்பட்ட கால அளவு குறைவாக உள்ளதால் அவற்றின் மீது உடனுக்குடன் நடவடிக்கையினை எடுத்து முடிவினை மனுதாரருக்கும் தெரிவித்திட வேண்டும்.

இந்த அறிவுரைகளை தவறாது கடைப்பிடித்து, கூட்டுறவுச் சங்கத் தேர்தல்கள் சுதந்திரமாகவும், நியாயமாகவும் நடைபெற அனைத்து வகை ஒத்துழைப்பையும் நல்கிட மாநில தேர்தல் அலுவலர்கள் அன்புடன் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

தவிரவும் இந்த அறிவுரைகளை தங்களது நிர்வாகக் கட்டுப்பாட்டிற்குட்பட்ட கூட்டுறவுச் சங்கத் தேர்தல் தொடர்பான அனைத்து அலுவலர்களுக்கும் உரிய நடவடிக்கைக்காக தெரிவித்திடவும், தெரிவித்த விபரத்தை 20.01.2023-க்குள் ஆணையத்திற்கு தெரிவித்திடவும் அன்புடன் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

ஒம்/-

ஆணையர்

12/1/23

ஆணையருக்காக

18/18

12/01/23

இணைப்பு : தேர்தல் புகார் மனு பதிவேடு படிவம்

நகல் : 1. அனைத்து மாவட்டத் தேர்தல் அலுவலர்கள்

2. கணினி ஆளுமையாளர்

3. இருப்புக் கோப்பு - 2023.

## படிவம் (FORMAT)

## தேர்தல் புகார் மனு பதிவேடு (REGISTER FOR ELECTION COMPLAINT PETITIONS)

**துறையின் பெயர்:**

| வ. எண் (S. No.) | தேதி (Date) | மாவட்டம் (District) | சங்கத்தின் பெயர் (Name of the Society) | புகார்மனு தாரரின் பெயர் மற்றும் முகவரி (Name and Address of the Petitioner) | புகாரின் சுருக்கம் (Brief note about Petition) | நடவடிக்கை எடுக்கப்பட்ட விவரம் (Action taken Report) | முடிவின் தன்மை (Nature of Conclusion) | தன் பதிவேடு எண் (PR No.) | குறிப்பு (Remarks) |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 |
| | | | | | | | | | |
| | | | | | | | | | |
| | | | | | | | | | |
| | | | | | | | | | |
| | | | | | | | | | |
| | | | | | | | | | |

(ஒம்)/–

ஆணையர்

[signature] 12/1/23

ஆணையருக்காக.

[signature] 12/01/23

## தமிழ்நாடு மாநில கூட்டுறவுச் சங்கங்களின் தேர்தல் ஆணையம், சென்னை-18

| | |
|---|---|
| அனுப்புநர் | பெறுநர் |
| திரு.தயானந்த் கட்டாரியா, இ.ஆ.ப., | பள்ளிக் கல்வி ஆணையர், |
| ஆணையர், | பள்ளிக் கல்வி இயக்குனரகம், |
| தமிழ்நாடு மாநில கூட்டுறவுச் சங்கங்களின் | 17, கல்லூரி சாலை, |
| தேர்தல் ஆணையம், | நுங்கம்பாக்கம், |
| சென்னை – 600 018. | சென்னை – 600 008. |

ந. க. எண் 134/2023/கூதே.3 நாள் : 25.01.2023

ஐயா,

பொருள்: கூட்டுறவுச் சங்கங்களின் தேர்தல்கள் – தேர்தல் நடவடிக்கைகளுக்கு பள்ளிக் கட்டிடங்கள் (School Buildings) பயன்படுத்துதல் தொடர்பாக.

*****

தமிழ்நாடு மாநில கூட்டுறவுச் சங்கங்களின் தேர்தல் ஆணையம் தமிழ்நாட்டிலுள்ள அனைத்து வகைக் கூட்டுறவுச் சங்கங்களின் தேர்தல்களை நடத்த 1983-ம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்களின் சட்டம் பிரிவு 33 – ன் கீழ் ஏற்படுத்தப்பட்ட ஒரு தனியான சட்டபூர்வ அமைப்பாகும் (Independent Statutory Body).

1988-ம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவு சங்கங்கள் விதிகள், விதி எண் 52 A (9) ன் கீழ் இத்தேர்தல்களை நடத்த ஆணையத்திற்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின்படி ஆணையம் அவசியமென கருதப்படும் இனங்களில் பொதுவான அல்லது சிறப்புக் கட்டளைகள் வழங்கலாம் என்றுள்ளது.

தற்போது கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் மற்றும் 15 இதர அரசு துறைத் தலைவர்களின் நிர்வாகக்கட்டுப்பாட்டிற்குட்பட்ட (Administrative Control) 23,149 கூட்டுறவுச் சங்கங்கள் தமிழ்நாடு முழுவதும் செயல்பட்டு வருகின்றன.

இச்சங்கங்களின் 5 ஆண்டுகள் பதவிக்காலம் முடிவடையும் சங்கங்கள் மற்றும் இதர வகையில் தேர்தல் நடத்தப்பட வேண்டிய சுமார் 7005 சங்கங்களுக்கான தேர்தலை மார்ச் 3-வது வாரம் 2023 முதல் பல்வேறு கட்டங்களாக (Phases and Stages) ஆணையம் நடத்த வேண்டியுள்ளது. இதற்கான தேர்தல் திட்டம் ஆணையம் விரைவில் அறிவிக்க உள்ளது.

தேர்தல் திட்டம் அறிவிக்கப்பட்ட சங்கங்களில் வாக்குப்பதிவு மற்றும் வாக்கு எண்ணுகை (Polling and Counting) நடவடிக்கை அனைத்து வாக்காளர்களும் வரக்கூடிய ஒரு பொது இடத்தில் (Public place) நடத்தப்பட வேண்டும் என்று சட்டத்தில் கட்டளை இடப்பட்டுள்ளது. எனவே போதுமான இடம் இல்லாத சில கூட்டுறவுச் சங்கங்களுக்கு தேவைப்படும் நேர்வுகளில் பள்ளிக் கட்டிடங்களில் இந்த நடவடிக்கையினை மேற்கொள்ள ஆணையம் உத்தேசித்துள்ளது. சென்ற 2013 மற்றும் 2018 கூட்டுறவுச் சங்கங்களின் ஒட்டு மொத்தத் தேர்தலின் போது இந்த நடைமுறையினையே ஆணையம் மேற்கொண்டது என்பதையும் இத்தருணத்தில் ஆணையம் தெரிவிக்க விரும்புகிறது.

எனவே விரைவில் நடக்க இருக்கும் 2023 கூட்டுறவுச் சங்கங்களின் தேர்தல் நடவடிக்கைகளுக்கு குறிப்பாக (வாக்குப்பதிவு, வாக்கு எண்ணுகை மற்றும் முடிவு அறிவித்தல்) ஆகிய இரண்டு நாட்களுக்கு தேவைப்படும் இனங்களில், கூட்டுறவுச் சங்கங்களுக்கான தேர்தல்களுக்கான மாவட்ட தேர்தல் அலுவலர்களின் (District Election Officers) கோரிக்கையின் பேரில் பள்ளிக் கட்டிடங்களைப் பயன்படுத்த உரிய அனுமதி அளித்திட அதற்கான மாவட்ட அளவிலான கல்வி அலுவலர்களுக்கு தக்க அறிவுரைகள் வழங்கிடவும் அதன் விபரத்தை ஆணையத்திற்குத் தெரிவித்திடவும் அன்புடன் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

ஒம்/-

ஆணையர்

25/1/23

ஆணையருக்காக

நகல் :

1. அரசு முதன்மைச் செயலாளர், பள்ளி கல்வித்துறை,
   தலைமைச் செயலகம், சென்னை – 9.
2. அனைத்து மாநில தேர்தல் அலுவலர்கள்.
3. அனைத்து மாவட்ட தேர்தல் அலுவலர்கள்.
4. கணினி ஆளுமையாளர்.
5. இருப்பு கோப்பு – 2023.

**தமிழ்நாடு மாநில கூட்டுறவுச் சங்கங்களின் தேர்தல் ஆணையம், சென்னை – 18**

| | |
|---|---|
| **அனுப்புநர்** | **பெறுநர்** |
| திரு.தயானந்த் கட்டாரியா, இ.ஆ.ப., | 1) கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் / |
| ஆணையர், | மாநிலத் தேர்தல் அலுவலர். |
| தமிழ்நாடு மாநில கூட்டுறவுச் சங்கங்களின் | 2) அனைத்து இதர செயற்பதிவாளர்கள் / |
| தேர்தல் ஆணையம், | மாநிலத் தேர்தல் அலுவலர்கள். |
| சென்னை – 600 018. | |

ந.க. 135/2023/கூ.தே.5 நாள்: 01.02.2023

ஐயா / அம்மையீர்,

பொருள்: கூட்டுறவுச் சங்கங்களின் தேர்தலகள் – தேர்தல் ஆவணங்கள் (Election Records) ஒப்படைத்தல், பெறுதல், பாதுகாத்தல் மற்றும் அழித்தல் – அறிவுரைகள் வழங்குதல் - தொடர்பாக.

பார்வை:
1. ஆணையத்தின் சுற்றறிக்கை ந.க. எண் 3944/2013/CE5 நாள் 17.07.2013, 29.07.2013, 12.09.2013 மற்றும் 30.11.2015.
2. ஆணையத்தின் சுற்றறிக்கை ந.க. 553/2021/கூ.தே5 நாள் 01.10.2021.

*****

ஆணையத்தால் சமீபத்தில் நடத்தப்பட்ட கூட்டுறவுச் சங்கங்களின் மாவட்ட தேர்தல் அலுவலர்கள் கூட்டத்தில் தேர்தல் ஆவணங்கள் தொடர்பான சில விபரங்கள், குறிப்பாக, தேர்தல் ஆவணங்களை எவ்வாறு முடிவு கட்டுவது (Dispose) என்ற விபரமும் கோரப்பட்டது.

பார்வை (1) மற்றும் (2)-ல் கண்ட ஆணையத்தின் சுற்றறிக்கையில், தேர்தல் ஆவணங்களை ஒப்படைத்தல், பெறுதல், பாதுகாத்தல், மற்றும் முடிவு கட்டுதல் / அழித்தல் (Disposal / Destruction) போன்ற தேர்தல் ஆவணங்கள் தொடர்பான அனைத்து இனங்கள் பற்றியும் மற்றும் தேர்தல் ஆவணங்கள் தொடர்பான பதிவேடு (Register of election records) பேணுதல் (Maintain) பற்றியும் தெளிவாக, விரிவாக அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன. இச்சுற்றறிக்கைகள் ஆணையத்தின் வலைத்தளம் www.coopelection.tn.gov.in இருந்தும் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

இருப்பினும் உடனடி கவனத்திற்காக தேர்தல் ஆவணங்கள் தொடர்பாக அவற்றில் தெரிவிக்கப்பட்டவற்றினை மீண்டும் வலியுறுத்தி கீழ்வரும் அறிவுரைகள் வழங்கப்படுகின்றன :

1) 1988-ம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் விதிகள், விதி எண் 52 (22) (a) (b) (c)-ன் கீழ் நிர்வாகக்குழு உறுப்பினர்கள் தேர்தல் தொடர்பான தேர்தல் ஆவணங்களும் விதி எண் 53 (13) (a) (b) (c) – ன் கீழ் தலைவர் / துணைத்தலைவர் தேர்தல் தொடர்பான ஆவணங்களும் எம்முறையில் முத்திரை இடப்பட்டு எவ்வாறு பாதுகாக்கப்பட வேண்டும், யாரிடம், எவ்வாறு ஒப்படைக்கப்பட வேண்டும், எவ்வளவு காலம் வைத்திருக்க வேண்டும், எப்போது அழிக்கப்படல் வேண்டும் என்று தெளிவாக, விவரமாகக் கூறப்பட்டுள்ளது. அவ்விதிகளில் கண்டுள்ளவாறு செயல்பட வேண்டும்.

2) ஒரு சங்கத்தின் தேர்தல் தொடர்பான ஆவணங்கள் அத்தேர்தல் பற்றிய தேர்தல் தகராறு இல்லாத நிகழ்வில் தேர்தல் முடிவு அறிவிக்கப்பட்ட தேதியிலிருந்து ஓராண்டு காலம் அல்லது ஒரு தகராறு மீது இறுதி தீர்ப்பு வழங்கும் வரை, இதில் எது பின்னதோ, அதுவரை பாதுகாப்பாக வைத்திருக்க வேண்டும்.

3) தேர்தல் சம்பந்தமான அல்லது சார்பாக வழக்குகள் இல்லாத நிலையில் ஓராண்டு காலம் மற்றும் தேர்தல் வழக்கு இருப்பின், வழக்கு இறுதி முடிவுக்கு வந்த பின்னர், இதில் எது பின் தேதியோ அதன் பின்னர் அந்த ஆவணங்கள் அழிக்கப்பட வேண்டும்.

4) ஒரு சங்கத்தின் தேர்தல் ஆவணங்கள் அழிப்பதற்கு ஆணையிடுமுன் மாவட்ட தேர்தல் அலுவலர் அத்தேர்தல் தொடர்பாக வழக்கு / தாவா எதுவும், எந்நிலையிலும், எந்த ஒரு நீதிமன்றம் மற்றும் நடுவர் முன்னிலையிலும் நிலுவையில் இல்லை என்பதை கண்டிப்பாக உறுதிபடுத்திக் கொள்ள வேண்டும்.

5) தேர்தல் ஆவணங்கள் பற்றிய பதிவேடு (Register of election records) ஆணையத்தால் தொடர்புறுத்தப்பட்ட வடிவத்தில் / படிவத்தில் பராமரிக்க வேண்டும். இப்பதிவேட்டில் ஆவணங்கள் ஒப்படைத்தல், பெறுதல், பாதுகாத்தல் மற்றும் அழித்தல் போன்ற அனைத்து விபரங்களும் முறையாகப் பதிந்து வர வேண்டும்.

மேற்காணும் அறிவுரைகளை தங்களது நிர்வாகக் கட்டுப்பாட்டிற்குட்பட்ட கூட்டுறவுச் சங்கங்களின் தேர்தல் தொடர்பான அனைத்து அலுவலர்களுக்கும் தெரிவித்திடவும், அதன் விபரத்தை 07.02.2023-க்குள் ஆணையத்திற்கு அனுப்பிடவும் அன்புடன் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

ஒம்/-

ஆணையர்

(கையொப்பம்)

ஆணையருக்காக

நகல் : 1) அனைத்து மாவட்ட தேர்தல் அலுவலர்கள். – மின்னஞ்சல் மூலமாக.

2) கணினி ஆளுமையாளர்.

3) இருப்பு கோப்பு – 2023.

01/02/23

தமிழ்நாடு மாநில கூட்டுறவுச் சங்கங்களின் தேர்தல் ஆணையர் அவர்களின் செயல்முறை ஆணை, சென்னை – 18.

முன்னிலை : திரு. தயானந்த் கட்டாரியா, இ.ஆ.ப.,
ஆணையர்.

ந.க.875/2022/கூதே1 நாள் : 01.02.2023

பொருள் : கூட்டுறவுச் சங்க தேர்தல் 2023 – நிர்வாகக்குழு உறுப்பினர்கள் தலைவர் மற்றும் துணைத்தலைவர் தேர்தல்கள் – கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் – மாவட்ட தேர்தல் அலுவலர் நியமனம் வழங்கியது – 2 புதிய சரகங்கள் தோற்றுவிக்கப்பட்டது – புதிய சரகங்களுக்கு மாவட்ட தேர்தல் அலுவலர்கள் நியமனம் செய்தல் – தொடர்பாக.

பார்வை :
1. தமிழ்நாடு மாநில கூட்டுறவுச் சங்கங்களின் தேர்தல் ஆணையத்தின் கடிதம் ந.க.875/2022/கூதே1, நாள் 12.09.2022.
2. அரசாணை (நிலை) எண் 107, கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் (கூதே1) துறை, நாள் 21.09.2022.
3. கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் அலுவலக கடிதம் ந.க.65375/2022/கூதே2, நாள் 19.01.2023

*****

ஆணை:

பார்வை 1–ல் காணும் ஆணையத்தின் செயல்முறை ஆணைப்படி, கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் அவர்களின் மாவட்ட/சரக அளவிலான நிர்வாகக் கட்டுப்பாட்டிற்குட்பட்ட கூட்டுறவு சங்கங்களுக்கான தேர்தல்களை நடத்திட மாவட்ட தேர்தல் அலுவலர்களை ஆணையம் நியமனம் செய்தது.

இந்நிலையில் பார்வை 2–ல் காணும் அரசாணையின்படி கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் கட்டுப்பாட்டில் செங்கல்பட்டு, கள்ளக்குறிச்சி, மயிலாடுதுறை, இராணிப்பேட்டை, தென்காசி மற்றும் திருப்பத்தூர் ஆகிய 6 மண்டல இணைப்பதிவாளர் அலுவலகங்களும் கள்ளக்குறிச்சி மற்றும் சங்கரன்கோவில் ஆகிய 2 சரகத் துணைப்பதிவாளர் அலுவலகங்களும் புதிதாக தோற்றுவிக்கப்பட்டுள்ளதாக பார்வை 3–ல் காணும் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் ஏற்கனவே பார்வை 1–ன்படி ஆணையத்தால் மாவட்ட தேர்தல் அலுவலர்களாக நியமிக்கப்பட்ட 71 மாவட்ட தேர்தல் அலுவலர்களோடு, தற்போது புதிதாக தோற்றுவிக்கப்பட்டுள்ள கள்ளக்குறிச்சி மற்றும் சங்கரன்கோவில் ஆகிய இரண்டு புதிய சரகங்களைச் சேர்த்து இணைப்பில் கண்டுள்ள பட்டியலின்படி தற்போதுள்ள 73

சரகத் துணைப்பதிவாளர்களை, மாவட்ட தேர்தல் அலுவலர்களாக நியமனம் செய்து ஆணை வழங்கிடுமாறு கோரப்பட்டுள்ளது.

மேற்கண்ட, கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் கோரிக்கையினை ஆணையம் கவனமுடன் பரிசீலித்து அதனை ஏற்று இணைப்பில் கண்டுள்ள அலுவலர்களை அவர்கள் நிர்வாகக் கட்டுப்பாட்டிற்குட்பட்ட கூட்டுறவுச் சங்கங்களின் மாவட்ட தேர்தல் அலுவலர்களாக நியமனம் செய்து 1988-ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் விதிகள், விதிஎண்.52-A(4)-இன் கீழ் தனக்களிக்கப்பட்ட அதிகாரத்தினை கைக்கொண்டு ஆணையம் ஆணையிடுகிறது.

இவ்வாறு நியமிக்கப்பட்ட மாவட்ட தேர்தல் அலுவலர்கள் நியமனம், அவை தொடர்பாக மாற்று **ஆணை ஏதும் பிறப்பிக்கப்படாத வரை, புதிய நியமன ஆணைகள் ஏதும் தேவைப்படாத,** கூட்டுறவுத் துறையின் மாவட்ட அளவிலான நிர்வாகக் கட்டுப்பாட்டின் கீழ் வரும் (Administrative Control) சங்கங்களின் ஒட்டுமொத்த தேர்தல் (Enmasse Elections) மற்றும் அவை தவிர்த்த இதர வகையிலான தேர்தல்கள் (Other than Enmasse Elections) மற்றும் காலியிடங்களுக்கான தேர்தல்கள் அனைத்திற்கும் பொருந்துவதாகும் என்றும் **அவர்கள் மாவட்ட தேர்தல் அலுவலர்களாக தொடர்ச்சியாக இருந்து வருவார்கள் (Shall continue as DEO's) என்றும்** அறிவிக்கப்படுகிறது.

இவ்வாறு விதி எண்.52-A(4)-ன் கீழ் ஆணையத்தால் நியமிக்கப்படும் மாவட்ட தேர்தல் அலுவலர்கள் அவ்விதியில் சொல்லப்பட்டபடி, தேர்தல் ஆணையத்தின் மேற்பார்வை, கட்டளைகள் மற்றும் கட்டுப்பாட்டிற்குட்பட்டு, அவர்கள் சம்மந்தப்பட்ட நிர்வாக கட்டுப்பாட்டின்கீழ் உள்ள கூட்டுறவுச் சங்கங்களை பொறுத்து, வாக்காளர் பட்டியல் தயாரித்தல், வெளியிடுதல் மற்றும் அச்சங்கங்களுக்கான நிர்வாகக்குழு உறுப்பினர்கள் மற்றும் அலுவல் நிர்வாகிகளுக்கான (Members of the Board and Office Bearers) தேர்தல் நடத்த ஒத்துழைத்து மற்றும் மேற்பார்வை செய்தல் வேண்டும் என்பதுடன், ஆணையத்தால் அவ்வப்போது அவர்களுக்கு ஒப்படைக்கப்படும் செயல்பாடுகளை செயற்படுத்துதல் வேண்டும் என்றும் ஆணையம் அறிவிக்கிறது.

இவ்வகையில் இது தொடர்பாக ஏற்கெனவே வழங்கப்பட்டுள்ள பார்வை 1-ல் காணும் ஆணையத்தின் செயல்முறை ஆணை ரத்து செய்யப்படுகிறது.

ஒம்/-
ஆணையர்

ஆணையருக்காக

இணைப்பு : மேற்கண்டவாறு.

பெறுநர்

மாவட்ட தேர்தல் அலுவலர்கள்

(கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் / மாநில தேர்தல் அலுவலர் மூலமாக).

நகல்

1. தலைமைச் செயலாளர், புனித ஜார்ஜ் கோட்டை, சென்னை–9.
2. அரசு முதன்மைச் செயலாளர், கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு துறை, சென்னை–9.
3. அலுவலக இருப்புக் கோப்பு – 2023.
4. கணினி ஆளுமையாளர்.

## இணைப்பு

### ந.க.எண் 875/2022/கூதே1

| வ.எண் | துறை | மாவட்டம் | சரகம் | பதவியின் பெயர் (Designation) |
|---|---|---|---|---|
| 1 | கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் | அரியலூர் | அரியலூர் | கூட்டுறவுச் சங்கங்களின் சரகத் துணைப்பதிவளார். |
| 2 | கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் | செங்கல்பட்டு | செங்கல்பட்டு | கூட்டுறவுச் சங்கங்களின் சரகத் துணைப்பதிவளார். |
| 3 | கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் | | மதுராந்தகம் | கூட்டுறவுச் சங்கங்களின் சரகத் துணைப்பதிவளார். |
| 4 | கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் | சென்னை | சென்னை (கடன்) | கூட்டுறவுச் சங்கங்களின் சரகத் துணைப்பதிவளார். |
| 5 | கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் | | சென்னை (கடனற்றவை) | கூட்டுறவுச் சங்கங்களின் சரகத் துணைப்பதிவளார். |
| 6 | கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் | கோயம்புத்தூர் | கோயம்புத்தூர் | கூட்டுறவுச் சங்கங்களின் சரகத் துணைப்பதிவளார். |
| 7 | கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் | | பொள்ளாச்சி | கூட்டுறவுச் சங்கங்களின் சரகத் துணைப்பதிவளார். |
| 8 | கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் | கடலூர் | கடலூர் | கூட்டுறவுச் சங்கங்களின் சரகத் துணைப்பதிவளார். |
| 9 | கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் | | சிதம்பரம் | கூட்டுறவுச் சங்கங்களின் சரகத் துணைப்பதிவளார். |
| 10 | கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் | | விருத்தாச்சலம் | கூட்டுறவுச் சங்கங்களின் சரகத் துணைப்பதிவளார். |
| 11 | கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் | தருமபுரி | தருமபுரி | கூட்டுறவுச் சங்கங்களின் சரகத் துணைப்பதிவளார். |
| 12 | கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் | திண்டுக்கல் | திண்டுக்கல் | கூட்டுறவுச் சங்கங்களின் சரகத் துணைப்பதிவளார். |
| 13 | கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் | | பழனி | கூட்டுறவுச் சங்கங்களின் சரகத் துணைப்பதிவளார். |
| 14 | கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் | ஈரோடு | ஈரோடு | கூட்டுறவுச் சங்கங்களின் சரகத் துணைப்பதிவளார். |
| 15 | கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் | | கோபிசெட்டிப்பாளையம் | கூட்டுறவுச் சங்கங்களின் சரகத் துணைப்பதிவளார். |
| 16 | கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் | கள்ளக்குறிச்சி | கள்ளக்குறிச்சி | கூட்டுறவுச் சங்கங்களின் சரகத் துணைப்பதிவளார். |
| 17 | கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் | | திருக்கோவிலூர் | கூட்டுறவுச் சங்கங்களின் சரகத் துணைப்பதிவளார். |
| 18 | கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் | காஞ்சிபுரம் | காஞ்சிபுரம் | கூட்டுறவுச் சங்கங்களின் சரகத் துணைப்பதிவளார். |
| 19 | கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் | கன்னியாகுமரி | நாகர்கோவில் | கூட்டுறவுச் சங்கங்களின் சரகத் துணைப்பதிவளார். |
| 20 | கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் | | தக்கலை | கூட்டுறவுச் சங்கங்களின் சரகத் துணைப்பதிவளார். |
| 21 | கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் | கரூர் | குளித்தலை | கூட்டுறவுச் சங்கங்களின் சரகத் துணைப்பதிவளார். |
| 22 | கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் | | கரூர் | கூட்டுறவுச் சங்கங்களின் சரகத் துணைப்பதிவளார். |
| 23 | கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் | கிருஷ்ணகிரி | கிருஷ்ணகிரி | கூட்டுறவுச் சங்கங்களின் சரகத் துணைப்பதிவளார். |

## இணைப்பு

## ந.க.எண் 875/2022/கூதே1

| வ.எண் | துறை | மாவட்டம் | சரகம் | பதவியின் பெயர் (Designation) |
|---|---|---|---|---|
| 24 | கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் | கிருஷ்ணகிரி | ஓசூர் | கூட்டுறவுச் சங்கங்களின் சரகத் துணைப்பதிவளார். |
| 25 | கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் | மதுரை | மதுரை | கூட்டுறவுச் சங்கங்களின் சரகத் துணைப்பதிவளார். |
| 26 | கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் | | உசிலம்பட்டி | கூட்டுறவுச் சங்கங்களின் சரகத் துணைப்பதிவளார். |
| 27 | கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் | மயிலாடுதுறை | மயிலாடுதுறை | கூட்டுறவுச் சங்கங்களின் சரகத் துணைப்பதிவளார். |
| 28 | கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் | நாகப்பட்டினம் | நாகப்பட்டினம் | கூட்டுறவுச் சங்கங்களின் சரகத் துணைப்பதிவளார். |
| 29 | கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் | நாமக்கல் | திருச்செங்கோடு | கூட்டுறவுச் சங்கங்களின் சரகத் துணைப்பதிவளார். |
| 30 | கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் | | நாமக்கல் | கூட்டுறவுச் சங்கங்களின் சரகத் துணைப்பதிவளார். |
| 31 | கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் | நீலகிரி | உதகமண்டலம் | கூட்டுறவுச் சங்கங்களின் சரகத் துணைப்பதிவளார். |
| 32 | கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் | புதுக்கோட்டை | புதுக்கோட்டை | கூட்டுறவுச் சங்கங்களின் சரகத் துணைப்பதிவளார். |
| 33 | கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் | | அறந்தாங்கி | கூட்டுறவுச் சங்கங்களின் சரகத் துணைப்பதிவளார். |
| 34 | கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் | பெரம்பலூர் | பெரம்பலூர் | கூட்டுறவுச் சங்கங்களின் சரகத் துணைப்பதிவளார். |
| 35 | கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் | இராமநாதபுரம் | இராமநாதபுரம் | கூட்டுறவுச் சங்கங்களின் சரகத் துணைப்பதிவளார். |
| 36 | கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் | | பரமக்குடி | கூட்டுறவுச் சங்கங்களின் சரகத் துணைப்பதிவளார். |
| 37 | கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் | இராணிப்பேட்டை | இராணிப்பேட்டை | கூட்டுறவுச் சங்கங்களின் சரகத் துணைப்பதிவளார். |
| 38 | கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் | சேலம் | சேலம் | கூட்டுறவுச் சங்கங்களின் சரகத் துணைப்பதிவளார். |
| 39 | கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் | | ஆத்தூர் | கூட்டுறவுச் சங்கங்களின் சரகத் துணைப்பதிவளார். |
| 40 | கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் | | ஓமலூர் | கூட்டுறவுச் சங்கங்களின் சரகத் துணைப்பதிவளார். |
| 41 | கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் | | சங்ககிரி | கூட்டுறவுச் சங்கங்களின் சரகத் துணைப்பதிவளார். |
| 42 | கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் | சிவகங்கை | சிவகங்கை | கூட்டுறவுச் சங்கங்களின் சரகத் துணைப்பதிவளார். |
| 43 | கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் | | காரைக்குடி | கூட்டுறவுச் சங்கங்களின் சரகத் துணைப்பதிவளார். |
| 44 | கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் | தென்காசி | தென்காசி | கூட்டுறவுச் சங்கங்களின் சரகத் துணைப்பதிவளார். |
| 45 | கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் | | சங்கரன்கோவில் | கூட்டுறவுச் சங்கங்களின் சரகத் துணைப்பதிவளார். |
| 46 | கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் | | பட்டுக்கோட்டை | கூட்டுறவுச் சங்கங்களின் சரகத் துணைப்பதிவளார். |

| இணைப்பு | | | | |
|---|---|---|---|---|
| ந.க.எண் 875/2022/கூதே1 | | | | |
| வ.எண் | துறை | மாவட்டம் | சரகம் | பதவியின் பெயர் (Designation) |
| 47 | கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் | தஞ்சாவூர் | தஞ்சாவூர் | கூட்டுறவுச் சங்கங்களின் சரகத் துணைப்பதிவளார். |
| 48 | கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் | | கும்பகோணம் | கூட்டுறவுச் சங்கங்களின் சரகத் துணைப்பதிவளார். |
| 49 | கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் | தேனி | உத்தமபாளையம் | கூட்டுறவுச் சங்கங்களின் சரகத் துணைப்பதிவளார். |
| 50 | கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் | | பெரியக்குளம் | கூட்டுறவுச் சங்கங்களின் சரகத் துணைப்பதிவளார். |
| 51 | கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் | திருவாரூர் | திருவாரூர் | கூட்டுறவுச் சங்கங்களின் சரகத் துணைப்பதிவளார். |
| 52 | கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் | | மன்னார்குடி | கூட்டுறவுச் சங்கங்களின் சரகத் துணைப்பதிவளார். |
| 53 | கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் | திருச்சிராப்பள்ளி | திருச்சிராப்பள்ளி | கூட்டுறவுச் சங்கங்களின் சரகத் துணைப்பதிவளார். |
| 54 | கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் | | முசிறி | கூட்டுறவுச் சங்கங்களின் சரகத் துணைப்பதிவளார். |
| 55 | கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் | | லால்குடி | கூட்டுறவுச் சங்கங்களின் சரகத் துணைப்பதிவளார். |
| 56 | கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் | திருநெல்வேலி | திருநெல்வேலி | கூட்டுறவுச் சங்கங்களின் சரகத் துணைப்பதிவளார். |
| 57 | கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் | | சேரன்மகாதேவி | கூட்டுறவுச் சங்கங்களின் சரகத் துணைப்பதிவளார். |
| 58 | கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் | திருப்பத்தூர் | திருப்பத்தூர் | கூட்டுறவுச் சங்கங்களின் சரகத் துணைப்பதிவளார். |
| 59 | கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் | திருப்பூர் | திருப்பூர் | கூட்டுறவுச் சங்கங்களின் சரகத் துணைப்பதிவளார். |
| 60 | கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் | | தாராபுரம் | கூட்டுறவுச் சங்கங்களின் சரகத் துணைப்பதிவளார். |
| 61 | கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் | திருவள்ளூர் | திருவள்ளூர் | கூட்டுறவுச் சங்கங்களின் சரகத் துணைப்பதிவளார். |
| 62 | கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் | | பொன்னேரி | கூட்டுறவுச் சங்கங்களின் சரகத் துணைப்பதிவளார். |
| 63 | கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் | | திருத்தணி | கூட்டுறவுச் சங்கங்களின் சரகத் துணைப்பதிவளார். |
| 64 | கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் | தூத்துக்குடி | கோவில்பட்டி | கூட்டுறவுச் சங்கங்களின் சரகத் துணைப்பதிவளார். |
| 65 | கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் | | தூத்துக்குடி | கூட்டுறவுச் சங்கங்களின் சரகத் துணைப்பதிவளார். |
| 66 | கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் | | திருச்செந்தூர் | கூட்டுறவுச் சங்கங்களின் சரகத் துணைப்பதிவளார். |
| 67 | கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் | திருவண்ணாமலை | செய்யாறு | கூட்டுறவுச் சங்கங்களின் சரகத் துணைப்பதிவளார். |
| 68 | கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் | | திருவண்ணாமலை | கூட்டுறவுச் சங்கங்களின் சரகத் துணைப்பதிவளார். |
| 69 | கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் | வேலூர் | வேலூர் | கூட்டுறவுச் சங்கங்களின் சரகத் துணைப்பதிவளார். |

| இணைப்பு | | | | |
|---|---|---|---|---|
| ந.க.எண் 875/2022/கூதே1 | | | | |
| வ.எண் | துறை | மாவட்டம் | சரகம் | பதவியின் பெயர் (Designation) |
| 70 | கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் | விழுப்புரம் | திண்டிவனம் | கூட்டுறவுச் சங்கங்களின் சரகத் துணைப்பதிவளார். |
| 71 | கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் | | விழுப்புரம் | கூட்டுறவுச் சங்கங்களின் சரகத் துணைப்பதிவளார். |
| 72 | கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் | விருதுநகர் | அருப்புக்கோட்டை | கூட்டுறவுச் சங்கங்களின் சரகத் துணைப்பதிவளார். |
| 73 | கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் | | ஸ்ரீவில்லிப்புத்தூர் | கூட்டுறவுச் சங்கங்களின் சரகத் துணைப்பதிவளார். |

ஒம்/-
ஆணையர்

ஆணையருக்காக

7/2/23

**தமிழ்நாடு மாநில கூட்டுறவுச் சங்கங்களின் தேர்தல் ஆணையம், சென்னை – 18.**

அனுப்புநர்

திரு. தயானந்த் கட்டாரியா, இ.ஆ.ப.,
ஆணையர்,
தமிழ்நாடு மாநில கூட்டுறவுச் சங்கங்களின்
தேர்தல் ஆணையம்,
273, அண்ணாசாலை, தேனாம்பேட்டை,
சென்னை – 600 018.

பெறுநர்

1) கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் /
மாநிலத் தேர்தல் அலுவலர்.

2) அனைத்து செயற்பதிவாளர்கள் /
மாநிலத் தேர்தல் அலுவலர்கள்.

ந.க. 136/2023/கூ.தே.5 நாள் : 03.02.2023

அய்யா / அம்மையீர்,

பொருள் : கூட்டுறவுச் சங்கங்களின் தேர்தல்கள் 2023 – நிர்வாகக்குழு உறுப்பினர்கள் மற்றும் தலைவர்/துணைத்தலைவர் தேர்தல்கள் – வாக்காளர் – அடையாளம் (Voter Identify) அறிவுரைகள் வழங்குதல் – தொடர்பாக.

பார்வை : ஆணையத்தின் சுற்றறிக்கை ந.க.297/2018/கூ.தே.5 நாள் 23.03.2018.

*****

பார்வையில் கண்ட ஆணையத்தின் சுற்றறிக்கையில் கூட்டுறவுச் சங்கங்களின் தேர்தல்களில் வாக்காளர் அடையாளத்திற்காக ஏற்றுக்கொள்ள 6 வகையான ஆவணங்கள் பட்டியல் தரப்பட்டிருந்தது. அதற்கு மாற்றாக வாக்காளர் அடையாளம் தொடர்பாக கீழ்வரும் அறிவுரைகள் வழங்கப்படுகின்றன. கூட்டுறவுச் சங்க தேர்தல்கள் சுதந்திரமாகவும், நியாயமாகவும், வெளிப்படைத்தன்மையுடனும் நடத்த வேண்டியது ஆணையத்தின் சட்டபூர்வ கடமையாகும்.

**தேர்தல் நடைபெறும் சங்கம் தனது உறுப்பினர்களுக்கு புகைப்படத்துடன் கூடிய அடையாள அட்டை வழங்கப்பட்டிருப்பின் அந்த அடையாள அட்டையினை (Identification Card with photo) வாக்குப்பதிவின்போது கட்டாய அடையாள ஆவணமாக காண்பிக்கப்பட வேண்டும்.**

மேற்படி அடையாள அட்டையினை காண்பிக்க இயலாத நேர்வுகளில் வாக்குப்பதிவின் போது வாக்களிக்க வரும் வாக்காளர் வாக்குச்சீட்டை பெற உரிமை உடைய தகுந்த நபரா, வாக்காளர் பட்டியலில் உள்ள நபரும் வாக்களிக்க வந்திருப்பவரும் ஒருவரே என தேர்தல் அலுவலர் அல்லது வாக்குப்பதிவு அலுவலர் முடிவு செய்வதில் வாக்காளரால் கொண்டு வரப்படும் கீழ்வரும் ஆவணங்களில் ஏதேனும் ஒன்றினையும் வாக்காளரின் அடையாளத்திற்காக ஏற்றுக் கொள்ளலாம்.

1. இந்திய தேர்தல் ஆணையத்தால் வழங்கப்பட்டுள்ள அடையாள அட்டை
2. கடவுச்சீட்டு (Passport)
3. ஓட்டுனர் உரிமம் (Driving License)
4. புகைப்படத்துடன் கூடிய குடும்ப அடையாள அட்டை (Smart Family Card)
5. ஆதார் அட்டை (Aadhaar Card)
6. பான் கார்டு (PAN CARD).
7. ஒன்றிய / மாநில அரசு, உள்ளாட்சி நிறுவனங்கள், கூட்டுறவுச் சங்கங்கள், பொதுத்துறை நிறுவனங்களால் தங்களது ஊழியர்களுக்கு வழங்கியுள்ள புகைப்படத்துடன் கூடிய அடையாள அட்டை
8. பொதுத்துறை / அஞ்சல் துறை, கூட்டுறவுத்துறை வங்கிகள் வழங்கியுள்ள புகைப்படத்துடன் கூடிய வங்கி புத்தகம் (Bank Book)
9. மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை வாய்ப்பு உறுதி திட்டம் (MGNREGA) புகைப்படத்துடன் கூடிய வேலை அட்டை (Job card)

தேர்தல் அலுவலர் / வாக்குப்பதிவு அலுவலரால் அடையாளம் காண்பதற்காக ஆவணம் தேவைப்படும் நேர்வுகளில், மேலே கூறப்பட்ட ஆவணங்களில் ஏதேனும் ஒன்றை வாக்காளர் காட்டத் தவறினால் அவருக்கு தேர்தல் அலுவலர் / வாக்குப்பதிவு அலுவலர் வாக்குச்சீட்டினை வழங்க மறுக்கலாம்.

மேற்கூறப்பட்ட அறிவுரைகளை தங்களது கட்டுப்பாட்டிற்குட்பட்ட கூட்டுறவுச் சங்கத் தேர்தல் தொடர்பான அனைத்து அலுவலர்களுக்கும் உரிய முறையில் வழங்கிடவும் இவ்விவரத்தை ஆணையத்திற்கு 10.02.2023–க்குள் தெரிவித்திடவும் அன்புடன் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

ஒம்/–
ஆணையர்

ஆணையருக்காக

15/18

03/02/23

நகல் :

1) அனைத்து மாவட்ட தேர்தல் அலுவலர்கள். – மின்னஞ்சல் மூலமாக.
2) இணையதளப் பதிவேடு
3) இருப்புக் கோப்பு – 2023.

கூட்டுறவுத் தேர்தல்கள் – 2023

மிக அவசரம்

**தமிழ்நாடு மாநில கூட்டுறவுச் சங்கங்களின் தேர்தல் ஆணையம், சென்னை–18.**

அனுப்புநர்

திரு.தயானந்த் கட்டாரியா, இ.ஆ.ப.,
ஆணையர்,
தமிழ்நாடு மாநில கூட்டுறவுச் சங்கங்களின்
தேர்தல் ஆணையம்,
273, அண்ணாசாலை, தேனாம்பேட்டை,
சென்னை-600 018.

பெறுநர்

மாநில தேர்தல் ஆணையர்,
தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையம்,
சென்னை – 600 106.

ந.க. 1436/2022/கூ.தே.5 நாள்: 07.02.2023

அய்யா,

பொருள்: கூட்டுறவுச் சங்கங்களின் தேர்தல்கள் 2023 – சங்க நிர்வாகக்குழு உறுப்பினர்கள் மற்றும் தலைவர்/துணைத் தலைவர் தேர்தல்கள் – தேவைப்படும் வாக்குப்பெட்டிகளை மாவட்ட நிர்வாகம் வழங்கிட உரிய நடவடிக்கை – மேற்கொள்ளுதல் – தொடர்பாக

பார்வை: 1) தமிழ்நாடு மாநில கூட்டுறவுச் சங்கங்களின் தேர்தல் ஆணையம் ந.க.எண். 1436/2022/கூதே.5 (1), நாள் 20.12.2022.
2) தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையம் அவர்களின் ந.க.எண். 10099/2022/ஊதே.2, நாள் 30.12.2022.

---****---

பார்வை 1–ல் காணும் கடிதத்தின் படி கூட்டுறவுச் சங்கங்களின் தேர்தலுக்கு தேவைப்படும் வாக்குப்பெட்டிகளை கூட்டுறவுச் சங்கங்களின் மாவட்ட தேர்தல் அலுவலர்கள் மாவட்ட நிர்வாகத்திடம் அணுகி பெற்றிடவும் அவ்வகையில் அவர்களுக்கு தேவையான வாக்குப் பெட்டிகளை மாவட்ட நிர்வாகம் வழங்கிட உரிய நடவடிக்கை மேற்கொள்ள கேட்டுக்கொள்ளப்பட்டது. இந்நிலையில் இப்பொருள் தொடர்பாக கூட்டுறவுச் சங்கங்களுக்கான தேர்தலுக்கு மாவட்டங்கள் வாரியாக தேவைப்படும் வாக்குப் பெட்டிகளின் எண்ணிக்கை குறித்த விவரங்களை தெரிவித்திட பார்வை 2–ல் காணும் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது பற்றி ஆணையம் தெரிவிக்க விரும்புவதாவது:

கடந்த 2018 கூட்டுறவுச் சங்கங்களின் ஒட்டு மொத்த தேர்தலில் முதற்கட்டம் முதல் நிலையில் தேர்தல் நடத்தப்பட்டு 02.04.2023 அன்று நிர்வாகக் குழு உறுப்பினர்களின் 5 ஆண்டுகள் பதவிக்காலம் முடிவுறும் 4287 கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் புதிதாக பதிவு செய்யப்பட்ட சங்கங்கள், ஏற்கனவே 5 ஆண்டுகள் பதவிக்காலம் முடிவுற்ற சங்கங்கள் மற்றும் செயலாட்சியரிடமிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட

நிர்வாகக்குழுவிற்கு மாறும் சங்கங்கள் என மொத்தமாக சுமார் 7005 கூட்டுறவுச் சங்கங்களின் புதிய நிர்வாகக்குழு உறுப்பினர்களுக்கான தேர்தலை விரைவில் ஆணையம் அறிவிக்க உள்ளது. இதற்கான கால அளவு மிகவும் குறைந்த அளவில் இருப்பதால், வாக்குப் பெட்டிகளின் எண்ணிக்கையினை மாவட்ட வாரியாக பெறுவதில் காலதாமதம் ஏற்படலாம் என ஆணையம் கருதுகிறது.

மேலும் ஆணையத்தால் 19.01.2023, 20.01.2023 மற்றும் 24.01.2023 ஆகிய தேதிகளில் முறையே மதுரை, திருச்சி, சென்னை மற்றும் கோயம்புத்தூர் ஆகிய மண்டலங்களில் நடத்தப்பட்ட அனைத்து மாவட்டங்களின் அனைத்துத்துறை கூட்டுறவுச் சங்கங்களின் மாவட்ட தேர்தல் அலுவலர்களுக்கான ஆலோசனைக் கூட்டத்தில் வாக்குப் பெட்டிகள் பயன்படுத்துதல் பற்றியும் விளக்கப்பட்டது. அதில் தேர்தலின் போது தங்களுக்கு தேவையான வாக்குப் பெட்டிகளை மாவட்ட நிர்வாகத்திடம் அணுகி பெற்றுக் கொள்ளுமாறும் இது குறித்து **மாவட்ட நிர்வாகத்திற்கு உரிய அறிவுரைகளை வழங்கிட மாநில தேர்தல் ஆணையத்துக்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது** என்பதையும் எடுத்துக் கூறப்பட்டது.

எனவே கூட்டுறவுச் சங்கங்களின் மாவட்டத் தேர்தல் அலுவலர்கள் தங்களது நிர்வாகக் கட்டுப்பாட்டிற்குட்பட்ட கூட்டுறவுச் சங்கங்களுக்கு **தேவைப்படும் வாக்குப் பெட்டிகளை மாவட்ட நிர்வாகம் வழங்கிட** அன்புடன் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

ஒம்/–
ஆணையர்

ஆணையருக்காக

நகல்:

1. கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் / மாநில தேர்தல் அலுவலர்.
2. அனைத்து இதர செயற்பதிவாளர்கள் / மாநில தேர்தல் அலுவலர்கள்.
3. அனைத்து மாவட்ட தேர்தல் அலுவலர்கள்.
4. அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்கள்.

**தமிழ்நாடு மாநில கூட்டுறவுச் சங்கங்களின் தேர்தல் ஆணையம் – 600 018.**

| அனுப்புநர் | பெறுநர் |
|---|---|
| திரு. தயானந்த் கட்டாரியா, இ.ஆ.ப., | கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர், |
| ஆணையர், | 170, பெரியார் ஈ.வெ.ரா.சாலை, |
| தமிழ்நாடு மாநில கூட்டுறவுச் சங்கங்களின் | கீழ்ப்பாக்கம், |
| தேர்தல் ஆணையம், | சென்னை – 600 010. |
| 273, அண்ணாசாலை, தேனாம்பேட்டை, | |
| சென்னை -18. | |

ந.க. 875/2023/கூ.தே.1 நாள் : 07.02.2023

ஐயா,

பொருள் : கூட்டுறவுச் சங்கங்களின் தேர்தல்கள் – எதிர்வரும் 2023 ஒட்டு மொத்தத் தேர்தல் நடவடிக்கைகளை ஒருங்கிணைத்தல் – கூட்டுறவுச் சங்கங்களின் மண்டல இணைப்பதிவாளர்களின சேவைகளை பயன்படுத்துதல்- தொடர்பாக.

******

ஐந்து கட்டங்களாக நடைபெற்ற 2018 ஒட்டு மொத்தத் தேர்தல்களில் முதற்கட்டத்தில் நடைபெற்ற சுமார் 18468 தொடக்க கூட்டுறவுச் சங்கங்களுக்கான தேர்தல்கள் மார்ச் 2018 முதல் ஆகஸ்டு 2018 வரையிலும் 4 நிலைகளாக நடைபெற்றன.

1983-ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் சட்டம் பிரிவு 33(10)(a)-இன்படி இச்சங்கங்களின் நிர்வாகக்குழுக்களின் 5 ஆண்டு பதவிக்காலம் ஏப்ரல் 2023 முதல் ஆகஸ்டு 2023 வரையிலான கால அளவில் முடிய உள்ளன.

இவ்வாறு 5 ஆண்டுகள் 02.04.2023 அன்று முடிவுறும் கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் புதிதாகப்பதிவு செய்யப்பட்ட சங்கங்கள் போன்ற வகையில் தேர்தல் நடத்தவேண்டிய சங்கங்களுக்கான நிர்வாகக்குழு தேர்தல்களை சட்டப்பிரிவு 33(11)(a) மற்றும் (b)-இல்

கட்டளையிட்டுள்ளபடி ஆணையம் நடத்த வேண்டியுள்ளது. இதற்கான பல்வேறு ஆரம்ப கட்ட நடவடிக்கைகளை ஆணையம் மேற்கொண்டுள்ளது.

அவ்வகையில் சமீபத்தில் கூட்டுறவுத்துறை மற்றும் கூட்டுறவுச் சங்கங்களை தங்களது நிர்வாகக் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுள்ள இதர துறைகளின் மாவட்ட தேர்தல் அலுவலர்களின் கூட்டங்கள் கூட்டப்பட்டன. இக்கூட்டங்களில் குறைந்த எண்ணிக்கை மற்றும் செயல்படாத (Dormant) கூட்டுறவுச் சங்கங்களை தங்களது நிர்வாகக்கட்டுப்பாட்டில் கொண்ட சில துறைகளின் மாவட்ட தேர்தல் அலுவலர்கள் தங்களது சங்க தேர்தல் நடவடிக்கை தொடர்பாக தேர்தல் அலுவலர்கள் நியமனம், தேர்தல் நடத்துவதற்கான இடங்கள், பயிற்சி (Training), தேர்தல் நடத்துவதற்குத் தேவையான வாக்குப்பெட்டி, வாக்குச்சீட்டு உள்ளிட்ட இதர பொருட்களை (Polling Materials) ஏற்பாடு செய்தல், வழங்குதல் போன்ற செயல்பாடுகளை (arrangements) தனித்தனியே ஒவ்வொரு துறையும் மேற்கொள்வதற்குப் பதிலாக அனைத்துத் துறைகளுக்கும் பொதுவான ஏற்பாடு (Arrangements in Common) மேற்கொள்வது நடைமுறைச் சிரமங்களைக் குறைக்க உதவிடும் என்ற கருத்து சில துறைகள் சார்ந்த மாவட்ட தேர்தல் அலுவலர்களால் தெரிவிக்கப்பட்டது.

இக்கோரிக்கையின் சாதக பாதக இனங்களை ஆணையம் மிகக் கவனமுடன் பரிசீலனை செய்தது.

அப்பரிசீலனையில், சில துறைகளின் மாவட்டதேர்தல் அலுவலர்கள் தெரிவித்தபடி, மாவட்ட அளவில் அனைத்துத்துறைகளுக்கும் உதவிடும் வகையில் ஒரு பொதுவான ஏற்பாடு / ஒருங்கிணைப்பு இருப்பது ஆணையத்திற்கேற்பட்ட சட்டபூர்வ கட்டளைகள்படி கூட்டுறவுச் சங்கத் தேர்தல்களை சுதந்திரமாகவும், நியாயமாகவும், (Free, Fair) வெளிபடைத்தன்மையுடனும் சிறப்பாக ஆணையம் நடத்திட மிகவும் உதவிடும் என்றும், இத்தகைய ஒருங்கிணைந்த செயல்பாட்டினை செயல்படுத்திட மாவட்ட அளவில் ஒரு ஒருங்கிணைப்பாளர் (Coordinator) தேவை எனவும் ஆணையம் கருதுகிறது.

அவ்வகையில் அடியிற்குறிப்பிட்ட பணிகள் மற்றும் அவ்வப்போது தேவையென ஆணையம் குறிப்பிடும் பணிகளையும் அனைத்து துறைகளின் மாவட்ட தேர்தல் அலுவலர்களும் இணைந்து செயல்படுத்துவது சிறப்புடையதாகும் என்றும் ஆணையம் கருதுகிறது.

இக்கருத்தின் அடிப்படையில், ஒவ்வொரு துறையின் மாவட்டத் தேர்தல் அலுவலர்களின் கட்டுப்பாட்டிற்குட்பட்ட தேர்தல் நடத்த வேண்டிய சங்கங்களின் எண்ணிக்கையினைக் கணக்கிற் கொண்டும், இவ்வகையில் ஒவ்வொரு மாவட்டத்திற்கும் கூட்டுறவுத் துறையின் மாவட்ட தேர்தல் அலுவலர்கள் கூடுதல் எண்ணிக்கையில் இருப்பதைக் கருத்திற்கு கொண்டும், மாவட்ட அளவில் உள்ள அனைத்து கூட்டுறவுச் சங்கங்களின் தேர்தல் நடவடிக்கைகளை ஒருங்கிணைத்துச் செயல்பட ஒவ்வொரு மாவட்டத்திலுமுள்ள கூட்டுறவுச் சங்கங்களின் மண்டல இணைப்பதிவாளர்கள் இவ்வாறான ஒருங்கிணைப்பாளராகச் செயல்படுவது கூட்டுறவுச் சட்டம் மற்றும் விதியின் கீழ் கூட்டுறவுச் சங்கத்தின் தேர்தல்களை ஆணையம் நடத்திட மிகவும் தேவையானதொன்று (necessary for the purpose of giving due effect to these rules or holding any Election under the Act and the Rules) என்றும் ஆணையம் கருதுகிறது. அவ்வாறே தீர்மானிக்கிறது.

இத்தீர்மானத்தின் அடிப்படையில் ஆணையம் உத்தேசித்துள்ள (Proposed) நடவடிக்கைகள் கீழே விவரிக்கப்பட்டுள்ளன.

(1) ஒவ்வொரு மாவட்டத்திலுள்ள கூட்டுறவுத்துறை கூட்டுறவுச் சங்கங்களின் மண்டல இணைப்பதிவாளர் (Regional Joint Registrar of Cooperative Societies) அம்மண்டலத்திலுள்ள அனைத்து துறைக்கட்டுப்பாட்டிற்குட்பட்ட தேர்தல் திட்டம் வழங்கப்பட்ட அனைத்து வகை கூட்டுறவுச் சங்கங்களின் தேர்தல்கள் சுதந்திரமாகவும், நியாயமாகவும் நடைபெறும் வகையில் அக்கூட்டுறவுச் சங்கங்களின் தேர்தல் நடவடிக்கைகளை ஒருங்கிணைத்து செயலாற்றி மாவட்ட கூட்டுறவுத் தேர்தல்

ஒருங்கிணைப்பாளராக (District Cooperative Election Coordinator) ஆக நியமிக்கப்படுகிறார். அவர் அவ்வாறே செயல்படுவார்.

(2) ஒவ்வொரு துறையின் கூட்டுறவுச் சங்கங்களின் மாவட்ட தேர்தல் அலுவலர்களும் சங்கத்தின் தேர்தல் நடவடிக்கைகளை பொருத்து தங்களுக்கேற்பட்ட சட்டபூர்வ கடமைகளையும் பொறுப்புகளையும் எவ்வித விடுதலுமின்றி தாங்களே மேற்கொள்ள வேண்டும்.

(3) எந்தெந்த இனங்களில் மாவட்ட கூட்டுறவுத் தேர்தல் ஒருங்கிணைப்பாளரின் ஒருங்கிணைப்பு, ஒத்துழைப்பு, தேவை என்று அவரால் கருதப்படும் இனங்களில், ஒருங்கிணைப்பாளரை உடனடியாகத் தொடர்பு கொண்டு தேர்தல் நடவடிக்கைகளுக்கு எவ்விதக் குறைபாடும் ஏற்படாவண்ணம் செயலாற்ற வேண்டும்.

(4) ஒருங்கிணைப்பு தேவைப்படலாம என்று கருதப்படும் இனங்கள் :-

(1) தேர்தல் அலுவலர்களுக்கான பயிற்சி

(2) தேர்தல் நடத்துவதற்கான இடவசதி

(3) தேர்தலுக்கான சுவரொட்டிகள் (Poster) மற்றும் வெளியீடுகள் (Pamphlets)

(4) வாக்குப்பெட்டி பெறுதல், வாக்குச்சீட்டு அச்சடித்தல், மற்றும் தேர்தல் நடத்துவதற்கான இதர சாதனங்கள் (Polling Materials)

(5) ஆள் பற்றாக்குறை (Man power), நிதிபற்றாக்குறை (Finance) போன்றவற்றில் தகுந்த ஆலோசனை பெறுதல்

(6) ஒட்டு மொத்த பாதுகாப்பு ஏற்பாடுகள்

(7) மாவட்ட கூட்டுறவு ஒன்றியத்தின் தேவைகளை தக்க முறையில் பயன்படுத்துதல்

(8) மாவட்ட நிர்வாகத்துடன் தேவைப்படும் இனங்களில் தொடர்பு கொள்ளுதல்

(9) மற்றும் சூழ்நிலைகேற்ப (Facts and Circumstances) தேவைப்படும் இனங்கள்

(5) மேற்கண்ட வகையில் செயலாற்றும் போது இடையூறுகள் (Difficulties in implementation) எவையெனும் இருக்கும் நிலையில் அவற்றினை உடனடியாக ஆணையத்தின் கவனத்திற்குக் கொண்டு வரவேண்டும்.

இந்நடவடிக்கைககளில் கூட்டுறவு மண்டல இணைப்பதிவாளர்களின் பங்களிப்பு மிக முக்கியமானதாக இருப்பதாலும் அவர்களது சேவையைக் குறிப்பிட்ட வகையில் ஆணையம் பயன்படுத்த உள்ளதாலும், கூட்டுறவுத் தேர்தல்கள் சிறப்பாக நடத்திட தங்களது ஒத்துழைப்பும் பங்களிப்பும் மிக முக்கியமானதும் அவசியமானதும் என ஆணையம் கருதுவதாலும் ஆணையம் உத்தேசித்துள்ள இந்த நடவடிக்கைகளை தங்களது அன்பான கவனத்திற்கும் ஆலோசனைக்கும், உரிய நடவடிக்கைக்கும் ஆணையம் தங்களுக்கு அனுப்புகிறது. இதற்கான உரிய அறிவுரைகளை கூட்டுறவுச் சங்கங்களின் மண்டல இணைப்பதிவாளருக்கு அனுப்பிடவும் அதுபற்றிய விவரத்தை 15.02.2023-க்குள் ஆணையத்திற்குத் தெரிவித்திடவும் அன்புடன் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

ஒம்/-

ஆணையர்

ஆணையருக்காக

7/2/2023

நகல் :

1. இதர செயற்பதிவாளர்கள் / மாநில தேர்தல் அலுவலர்கள்.
2. கூட்டுறவுச் சங்கங்களின் கூடுதல் பதிவாளர், சென்னை மண்டலம்.
3. அனைத்து கூட்டுறவுச் சங்கங்களின் மண்டல இணைப்பதிவாளர்கள்.
4. அனைத்துத்துறை மாவட்ட தேர்தல் அலுவலர்கள்.
5. அரசு முதன்மை செயலாளர், கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை, சென்னை – 9.
6. கூட்டுறவு தேர்தல் பிரிவு – 3.
7. இருப்புக்கோப்பு – 2023.

# தமிழ்நாடு மாநில கூட்டுறவுச் சங்கங்களின் தேர்தல் ஆணையம்,சென்னை-18

| அனுப்புநர் | பெறுநர் |
| --- | --- |
| திரு. தயானந்த் கட்டாரியா, இ.ஆ.ப., | கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர், |
| ஆணையர், | 170, என்.வி.நடராசன் மாளிகை, |
| தமிழ்நாடு மாநில கூட்டுறவுச் சங்கங்களின் | பெரியார் ஈவெரா சாலை, |
| தேர்தல் ஆணையம், | கீழ்ப்பாக்கம், |
| 273, அண்ணாசாலை, தேனாம்பேட்டை, | சென்னை - 600 010. |
| சென்னை – 600 018. | |

ந.க.77/2023/கூதே3 நாள் : 07.02.2023

ஐயா,

பொருள்: கூட்டுறவுச் சங்கங்களின் தேர்தல்கள் 2023 - நிர்வாகக்குழு உறுப்பினர்கள் தேர்தல்கள் - வாக்களிப்பது பற்றியும் மற்றும் புகார்/ஆலோசனை தெரிவிப்பது பற்றியும் சுவரொட்டிகள் வெளியிடுதல் - தொடர்பாக.

*****

கூட்டுறவுச் சங்கங்களின் நிர்வாகக்குழு உறுப்பினர்கள் தேர்தல்களில் அவர்களைத் தேர்ந்தெடுப்பதற்கான வாக்குச்சீட்டுகளில் வாக்காளர்கள் வாக்களிக்கும் முறைக்கும் பாராளுமன்ற, சட்டமன்ற மற்றும் உள்ளாட்சி தேர்தல்களில் வாக்காளர்கள் வாக்களிக்கும் முறைக்கும் பெறும் வேறுபாடுகள் உள்ளன.

கூட்டுறவுச் சங்க நிர்வாகக்குழு உறுப்பினர்கள் தேர்தலில் வாக்காளர்கள் தங்களுக்கு வழங்கப்படும் வாக்குச்சீட்டில் (Ballot Paper) சங்கங்களின் வகையினைப் (Class) பொறுத்து கூட்டுறவுச் சட்டம், விதி மற்றும் அச்சங்கத் துணைவிதியில் கண்டுள்ளபடி 7 முதல் 21 வரையிலான வேட்பாளர்களுக்கு, பெண்கள், பட்டியல் இனத்தவர், பட்டியல் பழங்குடியினர் மற்றும் பொது என்ற பிரிவுகளில் அந்த எண்ணிக்கைபடி வேட்பாளர்களுக்கு வழங்கப்பட்ட வரிசை எண்களில் முத்திரை இட (Affixing the seal) வேண்டியுள்ளது. இம்முறையில் வாக்காளர்கள் ஏதாகிலும் வாக்குச்சீட்டில் தவறாக முத்திரையிடும் நிலையில் அதிக அளவு வாக்குச்சீட்டுகள் செல்லாததாகும் வாய்ப்புகள் உள்ளன.

இதனைத் தவிர்ப்பதற்கு கூட்டுறவுச் சங்க நிர்வாகக்குழு உறுப்பினர் தேர்தல்களில் வாக்களிப்பது எப்படி? என்பது பற்றி வாக்காளர்கள் நன்கறிவதை மிகவும் அவசியம் எனவும் இவ்வகையில் அது பற்றிய சுவரொட்டிகள் சங்கங்கள்/வாக்குச்சாவடிகளில் வைத்தல் மிகவும் அவசியம் எனவும் ஆணையம் கருதுகிறது.

தவிரவும் சங்கத் தேர்தல் நடவடிக்கைகளில் பங்கு கொள்வோர்களில் புகார்/ஆலோசனை தெரிவிக்க விரும்புவோர் தொடர்பு கொள்ள வேண்டிய அலுவலர்கள் மற்றும் அவர்களது தொலைபேசி எண்கள் பற்றிய தகவல்கள் கொண்ட சுவரொட்டி சங்கங்கள்/வாக்குச்சாவடிகளில் வைப்பதும் அவசியமானதாகும்.

எனவே இணைப்பில் தரப்பட்ட சுவரொட்டிகளை அதில் கண்டுள்ளவாறு மாற்றம் ஏதுமின்றி ஒவ்வொரு மாவட்டத்திலும் தேர்தல் நடைபெற உள்ள அனைத்துத்துறை கட்டுப்பாட்டிலுள்ள அனைத்து வகைக் கூட்டுறவுச் சங்கங்களுக்கும் தேவையான எண்ணிக்கையில் அந்தந்த மாவட்ட கூட்டுறவு ஒன்றியங்கள் உடனடியாக அச்சிட்டு வழங்கிட உரிய அறிவுரைகளை மாவட்ட கூட்டுறவு ஒன்றியங்களுக்கு வழங்கிடவும் அதன் விபரத்தை 15.02.2023-க்குள் ஆணையத்திற்குத் தெரிவித்திடவும் அன்புடன் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

ஒம்/-

ஆணையர்

ஆணையருக்காக

07-02-23

இணைப்பு : மேற்கூறியவாறு (4 இணைப்புகள்)

நகல் :

1) அனைத்து செயற்பதிவாளர்கள்.
2) அனைத்து கூட்டுறவுச் சங்கங்களின் மண்டல இணைப்பதிவாளர்கள்.
3) தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியம்.
4) அனைத்து மாவட்ட கூட்டுறவு ஒன்றியங்கள்.
5) அனைத்து மாவட்ட தேர்தல் அலுவலர்கள்.

# தமிழ்நாடு மாநில கூட்டுறவுச் சங்கங்களின் தேர்தல் ஆணையம்

## கூட்டுறவுச் சங்கங்களின் நிர்வாகக்குழு உறுப்பினர்களின் தேர்தல் - 2023

### வாக்களிப்பது எப்படி?

1) உங்களது பெயர் உங்கள் கூட்டுறவுச் சங்க வாக்காளர் பட்டியலில் இருத்தல் வேண்டும்.

2) உங்களது அடையாளம் குறித்து உங்கள் சங்கத்திலிருந்து வழங்கப்பட்டுள்ள உறுப்பினர் அடையாள அட்டை மற்றும் பொதுவாக தேர்தலில் ஏற்றுக்கொள்ளப்படும் ஏதேனும் ஓர் ஆவணம் இருப்பது நல்லது.

3) வாக்குச் சாவடிக்குள் சென்றவுடன் உங்களுக்கு ஓர் வாக்குச்சீட்டு தரப்படும்.

4) வாக்குச்சீட்டு பெற்றதற்காக உங்களது கையொப்பம்/கைரேகை வாக்காளர் பட்டியலில் உங்களது பெயருக்கெதிரே பெறப்படும்.

5) **வாக்களிப்பது பற்றியும், வாக்குச்சீட்டை மடித்து எவ்வாறு பெட்டியில் இடுவது என்பது பற்றியும் வாக்குச் சாவடி அலுவலர் உங்களுக்கு நன்கு விளக்கிடுவார்.**

6) உங்களுக்கு தரப்படும் வாக்குச்சீட்டில் பின்வரும் விவரங்களும் இருக்கும்.

   i. சங்கத்தின் பெயர்,

   ii. வாக்குச்சீட்டின் வரிசை எண்,

   iii. பின்புறம் தேர்தல் அலுவலரின் முத்திரையுடன் கூடிய கையொப்பம்.

7) வாக்குச்சீட்டில் **வேட்பாளர்களின் பெயர்களும், வேட்பாளர்களுக்கு ஒதுக்கப்பட்ட** வரிசை எண்களும் இருக்கும்.

8) நீங்கள் வாக்களிக்க விரும்பும் **வேட்பாளர்களுக்கு ஒதுக்கப்பட்ட** எண்/வரிசை எண்களை நினைவில் கொள்ள வேண்டும்.

9) பின்னர் தடுப்பறைக்குச் சென்று நீங்கள் வாக்களிக்க விரும்பும் **வேட்பாளருக்கான வரிசை எண்ணுக்கு உரிய கட்டத்தில் -X- முத்திரை இடுங்கள்.**

10) நீங்கள் வாக்களிப்பது மிகவும் இரகசியமாக இருத்தல் அவசியம்.

11) பின்னர் வாக்குச்சீட்டை முன்பு போல் மடித்து வாக்குப் பெட்டியில் போடுங்கள்.

12) வாக்குப் பெட்டியில் வாக்குச்சீட்டினை தவிர ஏதேனும் பிற பொருட்களோ சீட்டுகளோ போடுதல் கூடாது. அவ்வாறு போடுவது குற்றமாகும்.

நாட்டின் முன்னேற்றத்திற்கும் உங்கள் சங்க முன்னேற்றத்திற்கும் உங்கள் பங்கினை அளித்திட்ட மன நிறைவுடனும், மகிழ்ச்சியுடனும் செல்லுங்கள்.

**இன்ப வாழ்விற்கு**  **இணைந்த கரங்கள்**

வெளியீடு
ஆணையர்
தமிழ்நாடு மாநில கூட்டுறவுச் சங்கங்களின் தேர்தல் ஆணையம்,
273, அண்ணாசாலை, தேனாம்பேட்டை,
சென்னை - 600 018.
இணையதள முகவரி : www.coopelection.tn.gov.in

## தமிழ்நாடு மாநில கூட்டுறவுச் சங்கங்களின்
## தேர்தல் ஆணையம்

**கூட்டுறவுச் சங்கங்களின் நிர்வாகக்குழு உறுப்பினர்களின் தேர்தல் - 2023**

**அன்பார்ந்த வாக்காளர் பெருமக்களே,**

**உங்கள் வாக்குச்சீட்டு**

**மிக மதிப்பு மிக்கது!** **அதனை சரியாகப் பயன்படுத்துங்கள்!**

**எப்போது ஒரு வாக்குச்சீட்டு செல்லாததாகிறது?**

**உங்கள் வாக்கு சீட்டில்**

1) பெண்கள்/பட்டியல் இனத்தவர் - பட்டியல் பழங்குடியினர், பொது ஆகிய மூன்று பிரிவுகளில் எந்த ஒரு பிரிவிலும், தேர்ந்தெடுக்கப்பட வேண்டிய நபர்களைவிட கூடுதலான நபர்களுக்கு வாக்களித்து இருந்தால் (அப்பிரிவு மட்டும்):
2) வாக்காளர் அடையாளம் தெரியும் வகையில் ஏதாவது குறியீடு அல்லது எழுத்து இருந்தால்:
3) அதில் வாக்கு ஏதும் பதிவு செய்யப்படாமலிருந்தால்:
4) தேர்தல் அலுவலராலோ, அல்லது வாக்குச்சாவடி அலுவலராலோ வழங்கப்படாத வேறு ஒரு வாக்குச்சீட்டாக இருந்தால்:
5) எந்த வேட்பாளருக்கு வாக்களிக்கப்பட்டுள்ளது என்று சந்தேகம் தரும் முறையில் முத்திரையிடப்பட்டிருந்தால்:
6) தேர்தல் அலுவலரின் முத்திரையுடன் கூடிய கையொப்பம் இல்லாதிருந்தால்:
7) உண்மையான (genuine) வாக்குச் சீட்டுதானா என்று அறிய முடியாத அளவிற்கு சிதைந்தோ, சேதமடைந்தோ இருந்தால்:
8) தொடர்புடைய (relevant) வாக்குச் சீட்டாக இல்லாதிருந்தால்:
    - உங்கள் மதிப்புமிக்க வாக்கு செல்லாததாகும்!

**முறையாக வாக்களிக்கத் தெரிந்திடுங்கள்!**

**வாக்குச்சீட்டினை சரியாகப் பயன்படுத்துவீர்!!**

**விரும்பும் நபரைத் தேர்ந்தெடுப்பீர்!!!**

**இன்ப வாழ்விற்கு**  **இணைந்த கரங்கள்**

வெளியீடு
ஆணையர்
தமிழ்நாடு மாநில கூட்டுறவுச் சங்கங்களின் தேர்தல் ஆணையம்,
273, அண்ணாசாலை, தேனாம்பேட்டை,
சென்னை - 600 018.
இணையதள முகவரி : www.coopelection.tn.gov.in

# தமிழ்நாடு மாநில கூட்டுறவுச் சங்கங்களின்
# தேர்தல் ஆணையம்

## கூட்டுறவுச் சங்கங்களின் நிர்வாகக்குழு உறுப்பினர்களின் தேர்தல் - 2023

### கூட்டுறவே நாட்டுயர்வு

பெண்கள், பட்டியல் இனத்தவர், பட்டியல் பழங்குடியினர் மற்றும் நலிந்தோர் முன்னேற்றத்திற்கும், பொதுவில் அனைத்து தரப்பினரின் சமூக மற்றும் பொருளாதாரத்தின் ஒட்டு மொத்த வளர்ச்சிக்கும், ஒவ்வொரு கூட்டுறவுச் சங்கமும், ஒவ்வொரு வகையில் உதவுகிறது.

நீங்கள் உறுப்பினராக உள்ள இக்கூட்டுறவுச் சங்கமும், அவ்வகையில் நீங்களும், நாட்டின் முன்னேற்றத்திற்கான பங்களிப்பைத் தருகிறீர்கள்.

எனவே இச்சங்கத்தின் நிர்வாகத்தை ஏற்க இருக்கும். உறுப்பினர்கள் தேர்தல் மிக முக்கியமானது அல்லவா?

யாருக்கு ஓட்டு போடணும்னு

எத்தனை முறை யோசிச்சாலும்,

ஏன் ஓட்டு போடணும்னு

ஒரு தடவை கூட யோசிக்காதீங்க!



வாருங்கள்! உங்கள் வாக்கினை அளித்து உங்களது சிறப்பான பங்கினை ஆற்றிடுங்கள்!

வாழ்க கூட்டுறவு! வளர்க சமூக, பொருளாதார முன்னேற்றம்!

**இன்ப வாழ்விற்கு**  **இணைந்த கரங்கள்**

வெளியீடு
ஆணையர்
தமிழ்நாடு மாநில கூட்டுறவுச் சங்கங்களின் தேர்தல் ஆணையம்,
273, அண்ணாசாலை, தேனாம்பேட்டை,
சென்னை - 600 018.
இணையதள முகவரி : www.coopelection.tn.gov.in

# தமிழ்நாடு மாநில கூட்டுறவுச் சங்கங்களின்

# தேர்தல் ஆணையம்

## புகார் / ஆலோசனை தெரிவிக்க

**தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி எண்கள்**

1. மாவட்ட ஆட்சித் தலைவர் :
2. மாவட்ட காவல் கண்காணிப்பாளர் :
3. தொடர்புடைய மாவட்ட தேர்தல் அலுவலர் :
4. தொடர்புடைய தேர்தல் பார்வையாளர் :
5. தொடர்புடைய வாக்காளர் பட்டியல் அலுவலர் :
6. தொடர்புடைய தேர்தல் அலுவலர் :

**தமிழ்நாடு மாநில கூட்டுறவுச் சங்கங்களின் தேர்தல் ஆணையம்**

தேர்தல் கட்டுப்பாட்டு அறை : 044-24351403

தொடர்பு கொள்ள வேண்டிய நேரம் : (முற்பகல் 10.00 மணி முதல் பிற்பகல் 5.30 மணி வரை)

வெளியீடு
ஆணையர்
தமிழ்நாடு மாநில கூட்டுறவுச் சங்கங்களின் தேர்தல் ஆணையம்,
273, அண்ணாசாலை, தேனாம்பேட்டை,
சென்னை - 600 018.
இணையதள முகவரி : www.coopelection.tn.gov.in

**தமிழ்நாடு மாநில கூட்டுறவுச் சங்கங்களின் தேர்தல் ஆணையம், சென்னை – 18**

| அனுப்புநர் | பெறுநர் |
|---|---|
| திரு. தயானந்த் கட்டாரியா, இ.ஆ.ப.,<br>ஆணையர்,<br>தமிழ்நாடு மாநில கூட்டுறவுச் சங்கங்களின்<br>தேர்தல் ஆணையம்,<br>273 அண்ணாசாலை, தேனாம்பேட்டை,<br>சென்னை – 600 018. | அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்கள். |

ந.க. 137/2023/கூ.தே.5　　　　நாள் : 10.02.2023

ஐயா / அம்மையீர்,

பொருள்: கூட்டுறவுச் சங்கங்களின் தேர்தல்கள் 2023 – தமிழ்நாடு மாநில கூட்டுறவுச் சங்கங்களின் தேர்தல் ஆணையம் – அச்சு மற்றும் மின்னனு ஊடகங்களின் செய்தியாளர்களுக்கு தனியான அடையாள அட்டை வழங்குதல் - தொடர்பாக.

*****

தற்போது தமிழ்நாட்டில் கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் மற்றும் 15 இதர அரசு துறைகளின் (Government Department) நிர்வாகக் கட்டுப்பாட்டின் கீழ் சுமார் 23,149 கூட்டுறவுச் சங்கங்கள் உள்ளன. இச்சங்கங்கள் சுமார் 2,22,97,890 / 2,01,76,638 உறுப்பினர் / வாக்காளர்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட சுமார் 2,35,062 நிர்வாகக்குழு உறுப்பினர்களால் நிர்வகிக்கப்பட்டு வருகிறது.

இவற்றில் 2018-ம் ஆண்டு ஒட்டு மொத்தத் தேர்தல் (Enmasse Election 2018) நடைபெற்று 02.04.2023 அன்று தேர்ந்தெடுக்கப்பட்ட நிர்வாகக்குழு உறுப்பினர்களின் 5 ஆண்டுகள் பதவிக்காலம் முடிவுறும் 4,221 கூட்டுறவுச் சங்கங்களுக்கும் புதிதாகப் பதிவு செய்யப்பட்ட மற்றும் இதர வகையில் தேர்தல் நடத்த வேண்டிய 2.772 கூட்டுறவுச் சங்கங்களுக்கும் ஆணையம் தேர்தல் நடத்த உத்தேசித்துள்ளது.

அவ்வகையில் முதற்கட்டம் ( I st phase) முதல் நிலையில் ( I st stage) 6,993 தொடக்கக் கூட்டுறவுச் சங்கங்களுக்குத் தேர்தல் நடத்தப்பட உள்ளது.

தமிழ்நாட்டின் மிகச்சிறிய கிராமங்களிலிருந்து பெரு நகரங்கள் வரை அனைத்து இடங்களிலும் பரவலாக உள்ள இக்கூட்டுறவுச் சங்கங்களில் உறுப்பினர்களாக உள்ள விவசாயப் பெருமக்கள், நெசவாளர்கள், மீனவர்கள், தொழிலாளர்கள், பணியாளர்கள், மகளிர், பட்டியல் இனத்தவர் மற்றும் பட்டியல் பழங்குடியினர் என அனைத்து தரப்பினரும் இத்தேர்தல்களில் உறுப்பினர் / வாக்காளர் என்ற வகையில் பங்கேற்க உள்ளனர்.

இத்தேர்தல்கள் அரசியல் வகையானதல்ல (apolitical) இருப்பினும் தற்போது இக்கூட்டுறவுச் சங்கத் தேர்தல்களில் / செயல்பாடுகளில் மக்கள் அதிக அளவில் ஈடுபாடு கொண்டுள்ளனர் என்பதை அறிய முடிகிறது. அவ்வகையில் அச்சு மற்றும் மின்னனு ஊடகங்கள் (Print, E- Media) இத்தேர்தல் நடவடிக்கைகளில் அதிக அளவு ஆர்வம் காட்டும் வாய்ப்புள்ளது.

எனவே கூட்டுறவுச் சங்கத் தேர்தல்கள் பற்றிய சரியான தகவல்கள் முறையான செய்திகள் ஒழுங்கான முறையில் மக்களுக்கு சென்றடைவதும் அவ்வகையில் ஆணையம் தனக்கேற்பட்ட சட்டபூர்வ கட்டளைப்படி கூட்டுறவுச் சங்கத்தின் தேர்தல்களை சுதந்திரமாகவும், நியாயமாகவும், வெளிப்படைத்தன்மையுடனும் வெற்றிகரமாக நடத்திட மாவட்ட நிர்வாகத்தின் பங்களிப்பு மிக முக்கியமானதும் தேவையானதும் என ஆணையம் உறுதியாக கருதுகிறது.

எனவே கூட்டுறவுச் சங்கத் தேர்தல்களுக்கு பொறுப்பான மாவட்ட தேர்தல் அலுவலர்கள் கூட்டுறவு சங்கத் தேர்தல்கள் தொடர்பாக ஏற்பாடு செய்யும் கூட்டங்கள் மற்றும் செய்தியாளர் சந்திப்பு போன்ற கூட்டுறவு தேர்தல் பற்றிய நிகழ்வுகளில் (Events) தங்களால் ஏற்பளிக்கப்பட்ட (accredited) அச்சு மற்றும் மின்னனு ஊடகங்களின் செய்தியாளர்கள் மட்டிலுமே அனுமதிக்கப்படும் வகையில் அவர்களுக்கென தனியான இணைப்பில் கண்டுள்ள மாதிரி அடையாள அட்டை (Model Media Person Pass) வடிவத்தில் மாவட்ட தகவல் மற்றும் மக்கள் தொடர்பு அலுவலர் மூலமாக வழங்கிட தங்களை ஆணையம் அன்புடன் கேட்டுக் கொள்கிறது.

ஒம்/-

ஆணையர்

(signature)

ஆணையருக்காக

(signature) 13/02/23

இணைப்பு : Media Person Pass - மாதிரி வடிவம்.

நகல் :

1. இயக்குநர், தகவல் மற்றும் மக்கள் தொடர்புத்துறை சென்னை- 600 009.
   - அனைத்து மாவட்ட தகவல் மற்றும் மக்கள் தொடர்பு அலுவலர்களுக்கு உரிய அறிவுரை வழங்கிட அன்புடன் கேட்டுக் கொள்ளப்படுகிறது.
2. கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் / மாநில தேர்தல் அலுவலர்.
3. இதர செயற்பதிவாளர்கள்/ மாநில தேர்தல் அலுவலர்கள்.
4. அனைத்து மாவட்ட தகவல் மற்றும் மக்கள் தொடர்பு அலுவலர்கள்.
5. அனைத்து மாவட்ட தேர்தல் அலுவலர்கள்.
6. கூ.தே. பிரிவு - 3
7. இருப்புக் கோப்பு - 2023.

இணைப்பு

(ந.க.137/2023/கூ.தே.5)

(Model Format for Media Person Pass)

**TAMIL NADU CO-OPERATIVE SOCIETIES ELECTION 2023**

## MEDIA PERSON PASS

PHOTO

| | | |
|---|---|---|
| ACCREDITATION No | : | |
| NAME | : | |
| NAME OF THE MEDIA | : | |
| MOBILE No | : | |
| VALID UPTO | : | 25.03.2023 |

HOLDER'S SIGNATURE (DISTRICT PUBLIC RELATIONS OFFICER)

(Seal with Signature)

கூட்டுறவுச் சங்கத் தேர்தல் - 2023

மிக அவசரம்

**தமிழ்நாடு மாநில கூட்டுறவுச் சங்கங்களின் தேர்தல் ஆணையம், சென்னை – 18**

| அனுப்புநர் | பெறுநர் |
|---|---|
| திரு. தயானந்த் கட்டாரியா, இ.ஆ.ப.,<br>ஆணையர்,<br>தமிழ்நாடு மாநில கூட்டுறவுச் சங்கங்களின்<br>தேர்தல் ஆணையம்,<br>273, அண்ணாசாலை, தேனாம்பேட்டை,<br>சென்னை – 600 018. | 1) கூட்டுறவுச் சங்கங்களின்<br>பதிவாளர்/மாநில தேர்தல் அலுவலர்<br>2) இதர செயற்பதிவாளர்கள்/<br>மாநில தேர்தல் அலுவலர்கள் |

ந. க. 223/2023/கூ.தே.3 நாள் : 10. 02. 2023

ஐயா / அம்மையீர்,

**பொருள் :** கூட்டுறவுச் சங்கங்களின் தேர்தல்கள் 2023 – நிர்வாகக்குழு உறுப்பினர்கள் மற்றும் தலைவர்/துணைத்தலைவர் தேர்தல்கள் - வாக்குச்சாவடிக்குத் தேவைப்படும் வாக்குப்பதிவுப் பொருட்கள் (Polling Materials) ஏற்பாடு செய்தல் - அறிவுரைகள் வழங்குதல் - தொடர்பாக.

*****

கூட்டுறவுச் சங்கங்களின் ஒட்டுமொத்தத் தேர்தல்கள் (Enmasse Election 2023) நடத்துவதற்கான ஆரம்ப கட்ட நடவடிக்கைகள் அனைத்தும் ஆணையத்தால் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

தேர்தல் நடவடிக்கைகளில் வாக்குப்பதிவு நடவடிக்கை சங்கங்களின் உறுப்பினர்கள், வாக்காளர்கள் நேரடியாகக் கலந்துகொள்ளும் மற்றும் பொதுமக்கள் ஆர்வம் காட்டும், மிக முக்கியமானதொரு நடவடிக்கையாகும். வாக்குப்பதிவு நடவடிக்கைகளில் ஏற்படும் தாமதம் (delay), குறைபாடு (deficiency), சிரமங்கள் (difficulties), தவறுகள் (Mistakes) மற்றும் தவறான செய்கைகள் (Misdeeds) ஆணையம் சுதந்திரமான, நியாயமான மற்றும் வெளிப்படைத் தன்மையுடன் கூடிய தேர்தல்களை நடத்துவதற்கு இடையூறாகவும் எதிர்மறைக் கருத்துகளுக்கு (Adverse comments) இடம் தருவதாகவும் அமையும் என ஆணையம் கருதுகிறது.

இவ்வகையில் வாக்குச்சாவடிக்கு பொறுப்பான தேர்தல் அலுவலர்கள், வாக்குப்பதிவு அலுவலர்கள் மற்றும் பணியில் ஈடுபடும் அலுவலர்களுக்கு வாக்குப்பதிவு தொடர்பாகத் தேவைப்படும் அனைத்துப் பொருட்களும் போதிய அளவில் வாக்குப்பதிவு

நாளுக்கு முன்னதாகவே கிடைத்திடுவதை தேர்தல் நடைபெறும் சங்கம் மற்றும் மாவட்டத் தேர்தல் அலுவலர்கள் கண்காணித்திட வேண்டும்.

வாக்குப்பதிவிற்குத் தேவைப்படும் வாக்குப்பதிவுப் பொருட்களின் பட்டியல் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. தவிரவும் தேர்தல் அலுவலரின் வாக்குப்பதிவு தொடர்பான நடவடிக்கைகள் பற்றிய துணைக் கையேடும் (துணைக் கையேடு எண்.3) மாவட்டத் தேர்தல் அலுவலருக்கான கையேடு சுற்றறிக்கைத் தொகுப்பும் ஆணையத்தால் வெளியிடப்பட்டுள்ளன. இவை ஆணையத்தின் வலைத்தளத்திலும் (www.coopelection.tn.gov.in) பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளன.

எனவே வாக்குப்பதிவு நடவடிக்கைகளுக்கு பட்டியலில் குறிப்பிட்ட பொருட்கள் உட்பட தேவைப்படும் இதர அனைத்து பொருட்களையும் வாக்குச்சாவடிக்கு வழங்கிடவும், எவ்விதத் தவறுகள் விடுதல்கள் மற்றும் புகார்களுக்கு இடமின்றி வாக்குப்பதிவு நடவடிக்கையினை அதற்குப் பொறுப்பான தேர்தல் அலுவலர்கள் மிகச் சிறப்பாக முடித்திடுவதை மாவட்ட தேர்தல் அலுவலர்கள் உறுதி செய்திடல் வேண்டும்.

இது குறித்து மாவட்ட தேர்தல் அலுவலர்களுக்கு தக்க அறிவுரைகள் உடனடியாக வழங்கிடவும் அது விபரத்தை 20.02.2023-க்குள் ஆணையத்திற்கு தெரிவித்திடவும் அன்புடன் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

ஒம்/-
ஆணையர்

ஆணையருக்காக

15/02/23

இணைப்பு :- வாக்குப்பதிவு பொருட்களின் பட்டியல்

நகல் :

1) அனைத்து மாவட்ட தேர்தல் அலுவலர்கள்
2) கூட்டுறவுச் சங்கங்களின் கூடுதல் பதிவாளர், சென்னை மண்டலம்.
3) அனைத்து கூட்டுறவுச் சங்கங்களின் மண்டல இணைப்பதிவாளர்கள்.
4) இருப்பு கோப்பு - 2023.

இணைப்பு (ந.க.223/203/கூ.தே.3)

## வாக்குச் சாவடிக்குரிய வாக்குப் பதிவுப் பொருட்களின் பட்டியல்

## (List of Polling Materials for a Polling Station)

| வ.எண் | வாக்குப் பதிவு பொருட்கள் | Polling Materials |
|---|---|---|
| 1 | தேர்தல் அலுவலரின் உலோக முத்திரை | Metal Seal for Election officer |
| 2 | வாக்குச்சாவடியின் பிரித்தறி சின்னம் அமைந்த ரப்பர் முத்திரை. | Rubber Stamp bearing Distinguishing Mark of Polling Station. |
| 3 | வாக்குச் சீட்டுகளை அடிச்சீட்டிலிருந்து பிரித்தெடுப்பதற்கான உலோகச் சட்டம். | Metal Rule for detaching Ballot papers from counter foils |
| 4 | வாக்குச்சீட்டுகளில் அடையாளமிடுவதற்கான அம்புக்குறி ரப்பர் முத்திரை. | Arrow Cross Mark |
| 5 | மையொற்று பெட்டகம் (ஊதா) | Self-Inking Pad (Purple) |
| 6 | மையொற்று பெட்டக மை (30 மில்லி) (ஊதா) | Stamp Pad Ink (Purple) (30ml) |
| 7 | வாக்களிப்பு அடைவுப் பகுதிக்கான பொருட்கள். | Voting Compartment |
| 8 | வாக்களிப்பு அடைவுப் பகுதிகளைப் பொருத்துவதற்கான கொண்டை ஊசிகள். | Drawing Pins |
| 9 | வாக்காளர் பட்டியல் | Electoral roll |
| 10 | வாக்குப் பெட்டி | Ballot Box |
| 11 | தாள் முத்திரை | Paper Seal |
| 12 | தாள் முத்திரை உறுதிப்பாட்டிற்கான கெட்டி அட்டை | Card Board for strengthening paper seal |
| 13 | ஜெம் கிளிப் | Gem Clip |
| 14 | தள்ளுகோல் | Pusher |
| 15 | வாக்குப் பெட்டிகளுக்கான விவரச் சீட்டுகள் | Labels for Ballot Boxes |
| 16 | முகவரி அட்டைகள் | Addressed Tags |
| 17 | உருள் முனை பேனா | Ball Point Pen |
| 18 | முழுத்தாள்கள் | Full scape papers |

| வ.எண் | வாக்குப் பதிவு பொருட்கள் | Polling Materials |
|---|---|---|
| 19 | கரிமத் தாள்கள் | Carbon papers |
| 20 | மையொற்றுத் தாள் | Blotting paper |
| 21 | குண்டூசிகள் | Pins |
| 22 | சிப்பம் கட்டுவதற்கான தாள் | Packing paper |
| 23 | முப்பட்டை ஊசி | Binding Needle |
| 24 | முறுக்குநூல் | While Twine |
| 25 | மென்கம்பி | Thin Wire |
| 26 | மெழுகுவர்த்தி | Candle |
| 27 | தீப்பெட்டி | Match Box |
| 28 | முத்திரை அரக்கு | Sealing Wax |
| 29 | பிளேடு | Blade |
| 30 | ஒட்டுப்பசை | Gum Paste |
| 31 | விளக்குகள், அவசியமாயின் | Lanterns, if necessary |
| 32 | அலுவலர் நாட்குறிப்பு | Presiding Officer's Diary |
| 33 | போட்டியிடும் வேட்பாளர்களின் பெயர்கள் காட்டும் அறிவிப்பு (விளம்பர ஏடு) | Poster showing the names of Contesting Candidates |
| 34 | வாக்குப்பதிவு தொடங்குவதற்கு முன்பு அடுத்தபடியாக வாக்குப் பெட்டியை பயன்படுத்தும் நேரத்தில் மற்றும் வாக்குப் பதிவின் முடிவில் தலைமை அலுவலர் அளிக்கும் உறுதி மொழிக்கான படிவம் | Form for declaration by Presiding Officer before commencement of the poll. During the poll and at the end of the poll. |
| 35 | வாக்குச் சீட்டு கணக்குப் படிவம் | Form of Ballot paper account |
| 36 | பயன்படுத்தப்படாத மற்றும் ரத்து செய்யப்பட்ட வாக்குச்சீட்டுக்கான உறை. | Covers for unused and cancelled ballot papers |
| 37 | பயன்படுத்தப்படாத மற்றும் சேதமடைந்த தாள் முத்திரை உறை | Covers for unused and damaged paper and seal |
| 38 | வாக்குச்சீட்டு கணக்குகளுக்கான உறை | Cover for Ballot paper account |

| வ.எண் | வாக்குப் பதிவு பொருட்கள் | Polling Materials |
| --- | --- | --- |
| 39 | வாக்காளர் பட்டியல் குறியீட்டுப்படிகளுக்கான உறை | Cover for marked copies of electoral rolls. |
| 40 | ஆய்வுக்குரிய வாக்குச்சீட்டுகள் மற்றும் ஆய்வுக்குரிய வாக்குச் சீட்டுகளின் பட்டியலுக்கான உறை | Cover for tendered ballot papers and list of tendered votes. |
| 41 | இதர பொருட்களுக்கான உறை | Covers for Miscellaneous materials |
| 42 | வாக்குப்பெட்டி அல்லது பெட்டிகளை வைத்திட கித்தான் பை மற்றும் பாலித்தீன் பை | canvas bag and polythene bag for placing ballot box or boxes. |
| 43 | வாக்குப் பெட்டிகள் மீது அனைத்துப் பக்கமும் சுற்றிக் கட்டிக் காப்புறுதி செய்வதற்கு போதிய அளவில் பட்டிகை அல்லது நாடா | Sufficient quantity of ribbon or tape for securing the ballot boxes by passing it on in all sides. |
| 44 | வாக்குப் பதிவு பொருள்களை வைப்பதற்கான கோணிப்பை | Gunny bag for keeping the polling materials. |
| 45 | சணல் கயிறு | Jute twine |
| 46 | காவல் நிலைய அதிகாரிக்கு அனுப்பும் புகார் கடிதம் | Complaint letter to Police Station |
| 47 | வாக்குப்பதிவுப் பகுதியைக் குறிப்பிடுகின்ற அறிவிப்பு (விளம்பர சுவரொட்டி) | Poster showing the polling area |
| 48 | உள்ளே மற்றும் வெளியே அட்டைகள் | 'IN and 'OUT' slips |
| 49 | வாக்குப் பதிவு அலுவலர்களுக்கான அடையாள அட்டைகள் | Badges for Polling Officers. |
| 50 | வாக்குச்சாவடி முகவர்களுக்கான அனுமதிச் சீட்டுகள். | Passes for Polling Agents. |

ஒம்/-
ஆணையர்

ஆணையருக்காக

கூட்டுறவுத் தேர்தல் - 2023

மிக அவசரம் - மின்னஞ்சல்

**தமிழ்நாடு மாநில கூட்டுறவுச் சங்கங்களின் தேர்தல் ஆணையம் சென்னை- 600 018.**

அனுப்புநர்

திரு.தயானந்த் கட்டாரியா, இ.ஆ.ப.,
ஆணையர்,
தமிழ்நாடு மாநில கூட்டுறவுச் சங்கங்களின்
தேர்தல் ஆணையம்,
273, அண்ணாசாலை, தேனாம்பேட்டை,
சென்னை -18.

பெறுநர்

அனைத்து மாவட்ட தேர்தல் அலுவலர்கள்.

ந.க. 1436/2022/கூ.தே.5 நாள் : 13.02.2023

ஐயா/அம்மையீர்,

பொருள் : கூட்டுறவுச் சங்கங்களின் தேர்தல்கள் 2023 - நிர்வாகக்குழு உறுப்பினர் மற்றும் தலைவர்/துணைத்தலைவர், தேர்தல்கள் - வாக்குச்சாவடிக்குத் தேவையான பொருட்கள் (Polling Material) வாக்குச்சீட்டுகள் வழங்குதல் - அறிவுரைகள் - தொடர்பாக.

பார்வை:
1) தமிழ்நாடு மாநில கூட்டுறவுச் சங்கங்களின் தேர்தல் ஆணையம் ந.க.251/2013/கூ.தே.5(1) நாள் 27.03.2013. (இணைப்பு)
2) தமிழ்நாடு மாநில கூட்டுறவுச் சங்கங்களின் தேர்தல் ஆணையம் ந.க.251/2013/கூ.தே.5(2) நாள் 27.03.2013. (இணைப்பு)

*****

வாக்குச்சாவடிக்கு வழங்க வேண்டிய பொருட்களில் அச்சாவடிக்குரிய வாக்குச்சீட்டுகள் முக்கியமானதாகும்.

வாக்குச்சீட்டுகள் தொடர்பாக கீழ்வரும் அறிவுரைகள் வழங்கப்படுகின்றன.

வாக்குச்சீட்டுகள் 1988-ம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் விதிகள், விதி எண்.52(10)(f)-ல் குறிப்பிட்டுள்ளபடியான விபரங்களைக் கொண்டுள்ளதாக இருத்தல் வேண்டும்.

அவற்றின் வடிவமைப்பு (Design), நிறம் (Colour), கனம் (Thickness) அச்சிடுதல் (Printing), பாதுகாத்தல் (custody) போன்றவை பார்வை 1ல் கண்ட ஆணையச் சுற்றறிக்கையில் குறிப்பிட்டதுபோல் இருத்தல் வேண்டும்.

ஒரு சங்கத்திற்கு அச்சிடவேண்டிய வாக்குச்சீட்டுகள் எண்ணிக்கை பார்வை (2)-ல் கண்ட ஆணையச் சுற்றறிக்கையில் குறிப்பிட்டதுபோல் கணக்கிடப்பட வேண்டும்.

வாக்குச்சாவடிக்கு (ஒன்றுக்கு மேற்பட்டிருப்பின்) ஒதுக்கப்பட்டுள்ள வாக்காளர்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப வாக்குச்சீட்டுகள் வழங்கப்பட வேண்டும்.

வழங்கப்பட்ட வாக்குச்சீட்டுகளில் தேர்தல் அலுவலர் கையொப்பம் இடும் விபரம் பற்றி தேர்தல் அலுவலர்களுக்கான பயிற்சிக் கூட்டத்தில் முறையாக விளக்கிட வேண்டும்.

தேர்தல் நடவடிக்கைகளில் போட்டியிடும் வேட்பாளர் இறுதி பட்டியல் வெளியிடும் நாளுக்கும் தேவைப்படும் நேர்வில் வாக்குப்பதிவு நடைபெறும் நாளுக்குமுள்ள கால அவகாசம் மிகக்குறைவாகவே இருக்கக் கூடிய நிலையில் வாக்குச் சாவடிக்குரிய வாக்குச்சீட்டுகளை தேர்தல் அலுவலருக்கு உரிய காலத்திற்குள் அச்சிட்டு வழங்கப்படுவதை மாவட்ட தேர்தல் அலுவலர் உறுதி செய்திடல் வேண்டும்.

ஒம்/-

ஆணையர்

ஆணையருக்காக

13/02/23

இணைப்பு : மேற்கண்டவாறு

நகல்

1) கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர்/மாநில தேர்தல் அலுவலர்
2) இதர செயற்பதிவாளர்கள்/மாநில தேர்தல் அலுவலர்கள்.
3) கூ.தே.3 (வலைத்தள பதிவேற்றம்)
4) இருப்புக் கோப்பு-2023.

.ECTION URGENT

Rc.No.251/2013/CE5-(2) Dated : 27.03.2013

To

The State Election Officers.

Sir,

Sub : Election – Election of Members of the Boards and Office Bearers of Co-operative Societies in the State – Certain Doubts – Publication of list of Contesting Candidates – Clarifications – Regarding.

Ref : Commission's Letter even number dated 27.03.2013.

****

I invite your kind reference to the letter cited, wherein detailed guidelines have been issued in the matter of ballot papers.

2) Under Para 4(A) (4) of the said instructions, it has been instructed, that the ballot paper should have three separate parts for (a) Women (b) S.C/S.T and (c ) General and strictly in that order.

3) Doubts have been raised as to the manner in which the list of contesting candidates has to be prepared and published.

4) In conformity with the instructions stated under Para (2) above, the following guidelines are issued in the matter of preparation and publication of the list of contesting candidates.

5) Rule 52(8) (i) read with Rule 52 (9) (b) requires that the Election Officer shall prepare a list of candidates whose nominations have been accepted and publish the same in Form No.20 allotting a serial number to each such candidate according to their names in the English language alphabetical order.

6) Accordingly, and in conformity with the guidelines issued earlier as stated under Para (2) above, and to facilitate easy understanding and clarity for the voter while choosing the numbers allotted to the candidates contesting for the reserved and non reserved seats, the following guidelines are issued.

(a) The Election Officer, should prepare a single list of contesting candidates split into three parts separately for (1) Women (2) S.C./ S.T and (3) General, and strictly in that order and also according to their names in the alphabetical order in English language.

(b) The serial numbers should be allotted to the Candidates, in the order of (1) Women, (2) SC/ST and (3) General, commencing from serial number 1 to the first name appearing under Women and ending with the name appearing last under General category. To illustrate, if there are 5-Women, 5-SC/ST and 6- General and in all a total of 16 candidates, the serial numbers allotted should be from 1 to 5 for Women, from 6 to 10 for S.C/S.T and from 11 to 16 to General Candidates.

(c) The segregation of parts in the order of (1) Women, (2) SC/ST and (3) General and arranging the names in English alphabets and allotment of serial numbers accordingly, should be attended to with utmost diligence and care.

The State Election Officers are requested to issue appropriate instructions in this regard and to kindly report the action taken at once.

**(Sd../-)M.R. Mohan**
**Commissioner**

ELECTION URGENT

## Tamil Nadu State Co-operative Societies Election Commission

From
Thiru. M. R. Mohan, I.A.S., (Retd.,)
Commissioner,
Tamil Nadu State Co-operative Societies
ElectionCommission, No. 273,
Anna Salai, Teynampet,
Chennai-600 018.

To
The State Election Officers

**Rc 251/2013/CE-5**

**Dated: 27.03.2013**

Sir,

Sub : Elections – Election of members of the Boards and Office Bearers of Co-operative Societies in the State – Arrangement of Polling Materials - Issue of Ballot Papers – Guidelines – Regarding.

****

1) As the process of publication of voters list for the Stages I & II in Phase-I has already been over, and that the next step in that process is filing of nomination and then publication of the final list of contesting candidates, in case of a contest, and which necessitates the process of Polling and Printing of Ballot Papers.

2) You also know, that the Commission has already introduced the use of Ballot Boxes and Paper Seals, as in the case of the elections to local bodies.

3) Now, as a follow up, the Commission desires that the issue of Ballot Papers should also be systematized and synchronized.

4) And towards that end and in order to maintain uniformity, to ensure safety and to enforce discipline, in the matter of designing, printing and safe custody of Ballot Papers till they are ultimately supplied to the Election Officer, the following guidelines are issued.

**[A]-DESIGNING:**

(1) The Ballot Paper should satisfy the statutory provisions under rule 52 (10) (f) which requires a Ballot Paper to contain.

(a) The name and address of the society and the constituency, if any, at the top of the Ballot Paper.

(b) Serial number of each Ballot Paper at the top or reverse of it.

(c) The Serial Numbers allotted to the candidates together with their names, the reserved/unreserved seat to which he is contesting and sufficient space for making the mark x or + on the Ballot Paper by the voter.

(2) The Ballot Paper should be white in colour and no other colour should be used.

(3) The thickness of the paper to be used for printing the Ballot Paper should be of good strength.

(4) The Single Ballot Paper to be printed should have three separate parts for –

(a) Women

(b) SC/ST and

(c) General

- and should be strictly in that order.

(5) The overall measurements of a Ballot Paper should be in accordance with the details specified in the Model Ballot Paper as in the Annexure. The measurements given are only the minimum required.

(6) The contents of the Ballot Paper should also be in line with the requirements as in (1) above and as in the Annexure.

**[B]-PRINTING:**

(1) The District Election Officer, immediately on the same day and date, after publication of the list of contesting candidates, should get a report from the Election Officers of the respective societies on the following points.

(a) The model draft Ballot Paper, incorporating all the details as required thereunder;

(b) The number of Ballot Papers required to be printed.

(2) On receiving the report as in (1) above and considering the short duration available, the District Election Officer, should, immediately and with no loss of time, arrange for the printing of Ballot Papers as required by each of the Election Officer.

(3) The printing of Ballot Paper should be entrusted only to Co-operative Printing Press/Government Press.

(4) Only in extraordinary circumstances, where the Ballot Papers could not be printed and get supplied in time, and which will ultimately affect the Polling as notified, the District Election Officer, should immediately arrange for printing the same with some other printing presses of repute, and of no controversy and if possible those already engaged for printing of Ballot Papers for local bodies, and the list of which could be obtained well in advance from the District Collectors.

(5) While ordering for printing, the District Election Officer should keep in mind that all precautionary and safety measures are in place and that the possibilities of fraudulent handling, wrong handling, tampering with and counterfeiting, etc in all its stages are completely ruled out and in any case not to compromise with any of the safety measures. The Election Officer should ensure 100% verification in the press.

**[C]-CUSTODY:**

(1) The District Election Officer should then arrange to get delivery of the Ballot Papers, after checking the accuracy and authenticity, from the printing press, through a safe mode of transport to the place already selected and fixed by him for this purpose and which should not be lacking in any of the security and safety aspects.

(2) The Ballot Papers should be kept in a safe place under the custody, control and command of the District Election Officer with utmost safety and security till such time the Ballot Papers are supplied to the Election Officer on the date prior to the date of poll or otherwise ordered by the Commission.

(3) In every stage, from the receipt to issue, correct and complete records and accounts should be maintained for the Ballot Papers by the District Election Officer.

The State Election Officers are requested to bestow their personal attention in this matter and to send their reports on the action taken on 30.03.2013.

**Sd../- XXX**
**Commissioner**

## கூட்டுறவுச் சங்கங்களின்
## தலைவர் / துணைத்தலைவர் (நிர்வாகிகள் - **Office Bearers)**
## தேர்தல் – **2013**
## மாதிரி வாக்குச் சீட்டு விவரம்

| ………………… கூட்டுறவுச் சங்க நிர்வாகிகள் (Officer Bearers)<br>தலைவர் / துணைத்தலைவர் தேர்தல் 2013<br>வாக்குச் சீட்டு | | | |
|---|---|---|---|
| போட்டியிடுகின்ற வேட்பாளரின் பெயர் | ஒதுக்கப் பட்ட வரிசை எண். | குறியிட வேண்டிய இடம் | |
| ___ (7 cm) ___ | __(2.5 cm) ___ | __(2.5 cm) __ | **2.5** cm } |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |

குறிப்பு:

1. மாதிரி வாக்குச்சீட்டில் கொடுக்கப்பட்டுள்ளது குறைந்த பட்ச அளவு ஆகும்.
2. வாக்குச் சீட்டின் பின்புறம் தேர்தல் அலுவலர் முத்திரையுடன் கையெப்பமிட வேண்டும்.
3. மாதிரி வாக்குச்சீட்டு Not to Scale.

மின்னஞ்சல் மூலம்

## தமிழ்நாடு மாநில கூட்டுறவுச் சங்கங்களின் தேர்தல் ஆணையம், சென்னை – 18

| அனுப்புநர்: | பெறுநர்: |
| --- | --- |
| திரு. தயானந்த் கட்டாரியா, இ.ஆ.ப., ஆணையர், தமிழ்நாடு மாநில கூட்டுறவுச் சங்கங்களின் தேர்தல் ஆணையம், 273, அண்ணாசாலை, தேனாம்பேட்டை, சென்னை – 600 018. | 1. கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் / மாநில தேர்தல் அலுவலர். 2. இதர செயற்பதிவாளர்கள் / மாநில தேர்தல் அலுவலர்கள். |

ந.க. 252/2023/கூ.தே.1 நாள் : 13.02.2023

ஐயா / அம்மையீர்,

பொருள் : கூட்டுறவுச் சங்கங்களின் தேர்தல்கள் 2023 – நிர்வாகக்குழு உறுப்பினர்கள் மற்றும் தலைவர் / துணைத்தலைவர் – தேர்தல் நடவடிக்கைகளை Whatsapp மூலம் கண்காணித்தல் – அலுவல் ரீதியான வாட்ஸ் ஆப் குழு (Whatsapp Group) உருவாக்குதல் - தொடர்பாக.

****

கடந்த 2018 – ஒட்டு மொத்த தேர்தலில் முதற்கட்டம் முதல் நிலையில் தேர்ந்தெடுக்கப்பட்ட நிர்வாகக்குழு உறுப்பினர்களின் 5 ஆண்டு பதவிக்காலம் 02.04.2023-ல் முடிவடைய உள்ள 4,221 கூட்டுறவுச் சங்கங்கள் இவை தவிர இதர வகையில் அதாவது புதிதாகப் பதிவு செய்யப்பட்ட 619 கூட்டுறவுச் சங்கங்கள், செலாட்சியர் பொறுப்பு என மொத்தம் 6,993 தொடக்கக் கூட்டுறவு சங்கங்களின் நிர்வாகக்குழு உறுப்பினர்கள் மற்றும் தலைவர்/துணைத்தலைவர் தேர்தலுக்கான முன்னேற்பாடுகளை ஆணையம் மேற்கொண்டு வருகிறது.

அவ்வகையில் இக்கூட்டுறவுச் சங்கங்களின் தேர்தல் நடவடிக்கையில் பங்கேற்கும் அனைத்து அலுவலர்களும் தேர்தலினை சுதந்திரமாகவும், நியாயமாகவும் மற்றும் வெளிப்படைத் தன்மையுடன் நடத்துவதற்கு ஏதுவாக ஆணையத்தால் அவ்வப்போது வழங்கப்படும் அறிவுரைகள் மற்றும் தெளிவுரைகளை தேர்தலில் ஈடுபடும் அனைத்து அலுவலர்கள் உடனுக்குடன் தெரிந்து கொள்ளவும் மேலும் தேர்தல் நடவடிக்கைகளை கண்காணித்திடவும் ஆணையத்தில் அலுவல் ரீதியான (Official Whatsapp Group) வாட்ஸ்ஆப் குழு "COOPERATIVE SOCIETIES ELECTIONS-2023" என்ற பெயரில் உருவாக்கப்பட்டுள்ளது.

இவ்வாட்ஸ்ஆப் குழுவில் தேர்தல் சம்பந்தமாக ஆணையத்தால் நியமனம் செய்யப்பட்டுள்ள மாநிலத் தேர்தல் அலுவலர்கள் மற்றும் இவர்களின் நிர்வாகக் கட்டுபாட்டிற்குட்பட்ட மாவட்ட தேர்தல் அலுவலர்கள், பார்வையாளர்கள், ஒருங்கிணைப்பாளர்கள் என்ற வகையில் அனைத்து மண்டலங்களின் இணைப்பதிவாளர்கள், ஆணையர், செயலாளர் மற்றும் ஆணையத்தின் அலுவலர்கள் அனைவரும் இக்குழுவில் இடம்பெறுவர்.

மேற்காணும் அனைத்து அலுவலர்களின் தொடர்பு எண்கள் (Contact Number) ஆணையத்தின் வலைத்தளத்தில் (www.coopelection.tn.gov.in) பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது.

வாட்ஸ் ஆப் பயன்படுத்துதலில் சில தெளிவுரைகள் பின்வருமாறு:

1. அலுவல் ரீதியான இக்குழுவில் மிகக்கவனமுடன் பதிவுகள் இடம்பெற வேண்டும்.
2. கூட்டுறவுத் தேர்தல் 2023 தொடர்பான பதிவுகள் மட்டுமே இடம்பெற வேண்டும். இதர வகையிலான பதிவுகள் கட்டாயம் பதிவிடக் கூடாது.
3. வெறுமனே Good Morning, Good afternoon போன்றவை மட்டுமே சொல்லுதல் மற்றும் தேர்தல் தொடர்பில்லாத புகைப்படங்கள் அனுப்புதல் போன்றவை முற்றிலும் தவிர்க்கப்பட வேண்டும்.
4. தேர்தல் தொடர்பில்லாத ' "Forward Message" கட்டாயம் தவிர்க்கப்பட வேண்டும்.

(ஒம்)/-
ஆணையர்

ஆணையருக்காக

நகல்

1) அனைத்து மாவட்ட தேர்தல் அலுவலர்கள்
2) அனைத்து பார்வையாளர்கள்
3) அனைத்து மண்டலங்களின் இணைப்பதிவாளர்கள்
4) கூ.தே பிரிவு 3
5) இருப்பு கோப்பு-2023

தமிழ்நாடு மாநில கூட்டுறவுச் சங்கங்களின் தேர்தல் ஆணையம், சென்னை – 600 018.

| அனுப்புநர் | பெறுநர் |
|---|---|
| திரு.தயானந்த் கட்டாரியா, இ.ஆ.ப.,<br>ஆணையர்,<br>தமிழ்நாடு மாநில கூட்டுறவுச்<br>சங்கங்களின் தேர்தல் ஆணையம்,<br>273, அண்ணாசாலை, தேனாம்பேட்டை,<br>சென்னை –18. | 1) கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் / மாநில தேர்தல் அலுவலர்,<br>2) இதர செயற்பதிவாளர்கள்/ மாநில தேர்தல் அலுவலர்கள் |

ந.க. 250/2023/கூ.தே.3 நாள் : 14.02.2023

ஐயா/அம்மையீர்,

பொருள் : கூட்டுறவுச் சங்கங்களின் தேர்தல்கள் 2023 – நிர்வாகக்குழு உறுப்பினர் மற்றும் தலைவர்/துணைத்தலைவர், தேர்தல்களை வாக்குச் சாவடிக்குத் தேவையான பொருட்கள் (Polling Material ) தாள் முத்திரை வழங்குதல் - தொடர்பாக.

*****

வாக்குச்சாவடிக்கு வழங்க வேண்டிய பொருட்களில் தாள் முத்திரை (Paper Seal) மிக முக்கியமானதாகும்.

கூட்டுறவுச் சங்கங்களின் தேர்தல்களுக்கான தாள் முத்திரை ஆணையத்தால் அச்சிடப்பட்டு ஆணையத்திடம் உள்ளது.

மாநிலத் தேர்தல் அலுவலர்கள் தங்களது கட்டுப்பாட்டிற்குட்பட்ட சங்கங்களில் வாக்குப்பதிவு இருக்கும் இனங்களில் அச்சங்கங்களுக்குத் தேவைப்படும் தாள் முத்திரை எண்ணிக்கை விபரத்தை மாவட்ட தேர்தல் அலுவலரிடமிருந்து உடனடியாகப் பெற்று அதனை அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர் (Authorised officer) ஒருவரை நேரில்(in person) அனுப்பி ஆணையத்திடமிருந்து பெற்று வழங்கிட கேட்டுக்கொள்ளப்படுகிறது.

வாக்குச்சாவடியில் பயன்படுத்தப்படும் வாக்குப்பெட்டி எச்சூழலிலும் தவறாகக் கையாளப்படவில்லை (Tampering) என்பதை உறுதிசெய்வது தாள் முத்திரை ஆகும்.

இவ்வகையில் தாள் முத்திரை மிக முக்கியமான ஆவணமாக இருப்பதால் அதனைப் பெறுதல், வழங்குதல், இருப்பு போன்றவைகளைக் காட்டும் பதிவேடு (Stock Register) கண்டிப்பாகப் பேணப்படுதல் வேண்டும்.

தேர்தல் முடிவடைந்த பின்னர் பயன்படுத்தப்படாத முத்திரைத் தாள்களை ஆணையத்திற்கு உடனே அனுப்பிட கேட்டுக்கொள்ளப்படுகிறது.

ஒம்/-
ஆணையர்

14/2/23
ஆணையருக்காக
14.02.23

நகல்

1) அனைத்து மாவட்ட தேர்தல் அலுவலர்கள்.
2) சஉதே3 - வலைத்தளம் பதிவேற்றம்
3) இருப்புகோப்பு - 2023.

கூட்டுறவுச் சங்க தேர்தல் 2023

மிக அவசரம் - மின்னஞ்சல்

தமிழ்நாடு மாநில கூட்டுறவுச் சங்கங்களின் தேர்தல் ஆணையம், சென்னை – 18

அனுப்புநர்:

திரு. தயானந்த் கட்டாரியா, இ.ஆ.ப.,
ஆணையர்,
தமிழ்நாடு மாநில கூட்டுறவுச் சங்கங்களின்
தேர்தல் ஆணையம்,
273, அண்ணாசாலை, தேனாம்பேட்டை,
சென்னை – 600 018.

பெறுநர்:

அனைத்து மாவட்ட தேர்தல் அலுவலர்கள்.

ந.க. 251/2023/கூ.தே.3 நாள்: 14.02.2023

ஐயா / அம்மையீர்,

பொருள்: கூட்டுறவுச் சங்கங்களின் தேர்தல்கள் 2023 – நிர்வாகக்குழு உறுப்பினர்கள் மற்றும் தலைவர் / துணைத்தலைவர் தேர்தல்கள் – வாக்காளர் பட்டியல் அலுவலர் (Electoral Officer) மற்றும் தேர்தல் அலுவலர் ஆகியோருக்கு பயிற்சி (Training) அளித்தல் – தொடர்பாக.

****

கூட்டுறவுச் சங்கங்களுக்கான ஒட்டு மொத்த தேர்தல் 2023 முதற்கட்டம் (I st Phase) முதல் நிலையில் (I st Stage) நடைபெற உள்ள சுமார் 6,993 அனைத்து வகைச் சங்கங்களின் தேர்தல்களுக்கான தேர்தல் திட்டம் ஆணையத்தால் விரைவில் அறிவிக்கப்பட உள்ளது.

இது தொடர்பாக மாவட்ட தேர்தல் அலுவலர்கள் அளவில் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகளில் வாக்காளர் பட்டியல் அலுவலர் மற்றும் தேர்தல் அலுவலர்களுக்கு பயிற்சி வழங்குவது மிக முக்கியமானதொன்றாகும். இவை குறித்து ஆணையரால் சென்னை, கோவை, திருச்சி, மதுரை ஆகிய இடங்களில் நடத்தப்பெற்ற மாவட்ட தேர்தல் அலுவலர்களுக்கான பயிற்சிக் கூட்டத்தில் மிக விரிவாகவும் தெளிவாகவும் எடுத்துக் கூறப்பட்டதுடன், மாவட்ட தேர்தல் அலுவலர்களின் பணிகள் (Role) தொடர்பாக ஆணையத்தால் வெளியிடப்பட்டுள்ள "மாவட்ட தேர்தல் அலுவலர்களுக்கான கையேடு" படி தேர்தல் நடவடிக்கைகள் மேற்கொள்ளவும் அறிவுறுத்தப்பட்டது.

வாக்காளர் பட்டியல் அலுவலர் மற்றும் தேர்தல் அலுவலர் ஆகியோர் மேற்கொள்ள வேண்டிய பணிகள் குறித்து ஆணையம் அடியிற் குறிப்பிட்ட கையேடுகள் வெளியிட்டுள்ளது. இக்கையேடுகளை ஆணையத்தின் வலைத்தளம் www.coopelection.tn.gov.in லிருந்து பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

1) தேர்தல் அலுவலர்களுக்கான கையேடு - 2023

2) தேர்தல் அலுவலர்களுக்கான துணைக்கையேடு - 1 - 2023(வேட்பு மனுக்கள்)

3) தேர்தல் அலுவலர்களுக்கான துணைக்கையேடு - 2 - 2023 (வாக்காளர் பட்டியல்)

4) தேர்தல் அலுவலர்களுக்கான துணைக்கையேடு - 3 - 2023 (வாக்குப்பதிவு)

5) தேர்தல் அலுவலர்களுக்கான துணைக்கையேடு - 4 - 2023 (வாக்கு எண்ணுகை)

6) தேர்தல் அலுவலர்களுக்கான துணைக்கையேடு - 5 - 2023 (தலைவர் / துணைத்தலைவர் தேர்தல் )

இக்கையேடுகளில் கூறப்பட்டவற்றை மாவட்ட தேர்தல் அலுவலர், அவர்கள் அளவில் பயிற்சிக்கு முன்பே நன்கு அறிந்து கொள்வதுடன் அவை பற்றி இப்பயிற்சியின் போது நன்கு தெளிவாகவும் விரிவாகவும் விளக்கிட வேண்டும்.

கூட்டுறவுச் சங்கங்களின் தேர்தல்களை ஆணையம் சுதந்திரமாகவும், நேர்மையாகவும், வெளிப்படைத்தன்மையுடனும், சட்டவிதிகள் படியும் வெற்றிகரமாக நடத்துவதில் வாக்காளர் பட்டியல் அலுவலர் மற்றும் தேர்தல் அலுவலர்களின் பங்களிப்பு மிக முக்கியமானதாகும்.

எனவே தங்களால் நியமனம் செய்யப்பட்டுள்ள வாக்காளர் பட்டியல் அலுவலர் மற்றும் தேர்தல் அலுவலர்களுக்கான பயிற்சியை உரிய வகையில் திட்டமிட்டு எவ்விதக்குறைபாடுகளுக்கும் இடமின்றி சிறப்பாகச் செய்திட உடனடி நடவடிக்கை மேற்கொள்ள ஆணையம் அறிவுறுத்துகிறது.

ஓம்/-
ஆணையர்

ஆணையருக்காக

14.2.23.

நகல்:

1. கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் / மாநில தேர்தல் அலுவலர்.
2. இதர செயற்பதிவாளர்கள் / மாநில தேர்தல் அலுவலர்கள்
3. கூதே.3 பிரிவு (வலைத்தள பதிவேற்றம்)
4. இருப்புக் கோப்பு – 2023.

கூட்டுறவுச் சங்க தேர்தல் - 2023

மிக அவசரம் (மின்னஞ்சல் மூலம்)

## தமிழ்நாடு மாநில கூட்டுறவுச் சங்கங்களின் தேர்தல் ஆணையம், சென்னை – 18

அனுப்புநர்

திரு. தயானந்த் கட்டாரியா, இ.ஆ.ப.,

ஆணையர்,

தமிழ்நாடு மாநில கூட்டுறவுச் சங்கங்களின்

தேர்தல் ஆணையம்,

273, அண்ணாசாலை, தேனாம்பேட்டை,

சென்னை - 600 018.

பெறுநர்

அனைத்து மாவட்ட தேர்தல் அலுவலர்கள்.

ந.க. 259/2023/கூ.தே.3 நாள் : 14.02.2023

ஐயா / அம்மையீர்,

பொருள் : கூட்டுறவுச் சங்கங்களின் தேர்தல்கள் 2023 – நிர்வாகக்குழு உறுப்பினர்கள் மற்றும் தலைவர் / துணைத்தலைவர் தேர்தல்கள் – வாக்காளர் பட்டியல் அலுவலர் (Electoral Officer) மற்றும் தேர்தல் அலுவலர் (Election Officer) நியமனம் பற்றிய அறிவுரைகள் வழங்குதல் – தொடர்பாக.

****

1988-ம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் விதிகள், விதி எண் 52 (1) (c)-ன் படி ஒரு சங்கத்தின் தேர்தல் நடவடிக்கைகள் மேற்கொள்ள வாக்காளர் பட்டியல் அலுவலர்களும் (Electoral Officer) விதி எண் 52 (3)(a)-ன் கீழ் தேர்தல் அலுவலர்களும் (Election Officer) மாவட்ட தேர்தல் அலுவலர்களால் நியமனம் செய்யப்படுகிறார்கள்.

இவ்வாறு நியமனம் செய்யப்படும் அலுவலர்கள் மேற்கொள்ள வேண்டிய தேர்தல் நடைமுறைகள் பற்றிய கையேடும் சில குறிப்பிட்ட நடவடிக்கைகள் பற்றிய துணைக்கையேடுகளும் ஆணையத்தால் வெளியிடப்பட்டுள்ளன. அவற்றினை அவர்கள் ஆணையத்தின் வலைதளத்திலிருந்து www.coopelection.tn.gov.in பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். இருப்பினும் இவ்வாறு அலுவலர்களை நியமனம் செய்யும்போது தேர்தல் பணி சுதந்திரமாகவும், நியாயமாகவும், சட்டவிதிகள் படியும் நடைபெறுவதை உறுதி செய்யும் விதமாகவும் முந்தைய தேர்தல் நடவடிக்கைகளின் போது தேர்தல் நடவடிக்கைகளை பற்றி கூறப்பட்ட புகார்கள் எதுவும் மீண்டும் எழாதவாறு கண்காணித்திடவும் அவர்களுடைய தேர்தல் நடவடிக்கைகள் பற்றி மாவட்ட தேர்தல் அலுவலர், மாநில தேர்தல் அலுவலர் மற்றும் ஆணையம் உடனுக்குடன் அறிந்து கொள்ள உதவிடும் வகையில் இணைப்பில் தரப்பட்ட

அறிவுரைகள் அவர்களின் பணி நியமன ஆணையுடன் வழங்கிடுவது அவசியமானது என்று ஆணையம் கருதுகிறது.

எனவே தேர்தல் நடவடிக்கைகள் மேற்கொள்ள வாக்காளர் பட்டியல் அலுவலர் / தேர்தல் அலுவலர் ஆகியோரை மாவட்டத் தேர்தல் அலுவலர் நியமனம் செய்யும் போது அதற்கான நியமன ஆணையுடன் இணைப்பில் கண்ட வழிகாட்டுதல் மற்றும் அறிவுரைகளையும் நியமன ஆணையின் ஒரு பகுதியாக வழங்கி அதற்கான ஒப்புதலை பெற்றிடுமாறும் ஆணையம் அறிவுறுத்துகிறது.

ஒம்/-
ஆணையர்

ஆணையருக்காக

14.2.23

இணைப்பு : மேற்கண்டவாறு

நகல்:

1. கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் / மாநில தேர்தல் அலுவலர்.
2. இதர செயற்பதிவாளர்கள் / மாநில தேர்தல் அலுவலர்கள்
3. கூதே.3 பிரிவு (வலைத்தள பதிவேற்றம்)
4. இருப்புக் கோப்பு – 2023.

இணைப்பு : ந.க. 259/2023/கூதே.3 நாள்:14.02.2023

தமிழ்நாடு மாநில கூட்டுறவுச் சங்கங்களின் தேர்தல்ஆணையம், சென்னை– 18

கூட்டுறவுச் சங்கங்களின் தேர்தல்கள் –2023

## தேர்தல் அலுவலர்களுக்கான வழிகாட்டுதல்கள் மற்றும் அறிவுரைகள்
## (Guidelines and Instructions)

1) தேர்தல் பணி தொடர்பான பணி அமர்த்தல் ஆணைகள் சட்டபூர்வமானது. அதை பெற மறுப்பதோ, அதன்படி செயல்பட மறுப்பதோ, துறை அளவு ஒழுங்கு நடவடிக்கைக்கு உட்பட்டதாகும்.

2) தேர்தல் பணிக்கு நியமனம் செய்யப்பட்டவர்கள் கூட்டுறவுச் சங்க நிர்வாகக்குழு உறுப்பினர்கள் மற்றும் தலைவர் / துணைத்தலைவர் தேர்தல் தொடர்பாக 1988–ம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவு சங்கங்கள் விதிகள், விதி 52 மற்றும் விதி 53 மற்றும் இது தொடர்பாக கூட்டுறவுச் சங்கங்களின் மாநிலத் தேர்தல் ஆணையம் வெளியிட்டுள்ள கையேடுகள் ஆகியவற்றை முழுவதும் படித்து அதன்படி செயலாற்றுதல் வேண்டும்.

(சட்டம் விதிகள், மற்றும் ஆணையத்தின் கையேடுகள், சுற்றறிக்கைகள் பற்றிய விபரங்களை ஆணையத்தின் இணையதளம் – www.coopelection.tn.gov.in – வழி அறிந்துகொள்ளலாம்)

3) தேர்தல் பணிக்கு நியமனம் செய்யப்பட்டவர்கள் தேர்தல் ஆணையத்தின் கண்காணிப்பு, கட்டளை மற்றும் கட்டுப்பாட்டிற்குட்பட்டு மற்றும் மாநில தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட தேர்தல் அலுவலரின் கீழான மேற்பார்வை மற்றும் வழிகாட்டுதலுக்குட்பட்டு சட்டம் மற்றும் விதிகளில் கண்டுள்ளவாறும், தேர்தல் ஆணையத்தால் அவ்வப்போது வழங்கப்படும் இதர உத்திரவுகள் மற்றும் வழிகாட்டுதல்கள் படியும் சரியான முறையில் தேர்தல்கள் நடத்துவதற்கு சட்டப்பூர்வமாக கடமைப்பட்டவராவர்.

4) விதி 52–(5)ன்படி தேர்தல் பணிக்கு அமர்த்தப்பட்டவர்கள் அத்தேர்தல் குறித்து அறிவிப்பு செய்யப்பட்ட தேதி முதல் மற்றும் அத்தகைய தேர்தல்கள் முடியும் வரை தேர்தல் ஆணையத்தின் கட்டுப்பாடு, மேற்பார்வை மற்றும் ஒழுங்கு முறைக்கு (Discipline) உட்பட்டவர்கள் ஆவர். அவர்கள் அக்காலத்தில் அயல்பணிக்கு (Deputation) அனுப்பப்பட்டவராகக் கருதப்படுவர். எனவே, தேர்தல் பணிக்காலத்தில் தேர்தல் ஆணையத்தின் அனுமதி இன்றி தேர்தல் பணியினைப் புறக்கணித்து எவ்வித விடுப்பிலும் செல்ல இயலாது.

5) சம்பந்தப்பட்ட சங்கங்களில் தேர்தல் தொடர்பான ஏற்பாடுகள் அனைத்தும் முழுமையாக மேற்கொள்ளப்பட்டுள்ளதை முன்கூட்டியே சென்று உறுதி செய்தல் வேண்டும். தனது பணி தொடர்பான அனைத்து விபரங்களையும் இதற்கென ஓர் குறிப்பேடு (Diary) வைத்து அதில் பதிவு செய்தல் வேண்டும்.

6) வாக்காளர் பட்டியல் அலுவலர் (Electoral Officer) மற்றும் தேர்தல் அலுவலர் (Election Officer) தங்களது நியமன ஆணைப்படி தங்களுக்கான சங்கங்களுக்கு தேர்தல் அறிவிப்பில் (Election Notification) கண்டுள்ளவாறு அறிவிக்கப்பட்ட இடங்களில், அறிவிக்கப்பட்ட நாட்களில், அறிவிக்கப்பட்ட நேரங்களில் கண்டிப்பாக இருத்தல் வேண்டும். தங்களைத் தொடர்பு கொள்ளும் வகையில் தங்களது கைபேசி எண்களை மாவட்ட தேர்தல் அலுவலர், மாநில தேர்தல் அலுவலர் மற்றும் மாநில தேர்தல் ஆணையத்திற்கு நியமன ஆணை பெற்றவுடன் தெரிவித்திட வேண்டும்.

7) இனம் (6)ல் சொல்லப்பட்டதை உறுதிப்படுத்தும் விதமாக பணி தொடங்குவதற்கு முன்னர் தனது 'அலைபேசி' மூலம் அல்லது சங்கம் மூலமாக, தான் பணி இடத்தில் இருக்கும் தகவலை மாவட்ட தேர்தல் அலுவலர், மாநில தேர்தல் அலுவலர் மற்றும் மாநில தேர்தல் ஆணையத்திற்கு கண்டிப்பாகத் தெரிவித்திட வேண்டும்.

8) இது போன்று அன்றாடம் அறிவிக்கப்பட்ட பணி முடிவுற்ற பின்னரும் இனம்(7)ல் குறிப்பிடப்பட்டோருக்கு தகவல் தெரிவித்திட வேண்டும்.

9) வாக்காளர் பட்டியல் வெளியிடுதல், திருத்தம் மேற்கொள்ளப்பட்ட இறுதி வாக்காளர் பட்டியல் வெளியிடுதல், வேட்பு மனு தாக்கல், பரிசீலனை, தகுதியுள்ள வேட்பாளர் பட்டியல் வெளியிடுதல், இறுதி வேட்பாளர் பட்டியல் (படிவம்–20) வெளியிடுதல், ஆகிய ஒவ்வொரு தேர்தல் பணியும் அதற்கென நிர்ணயிக்கப்பட்ட காலம் முடிவுற்ற உடன் **9003690936** என்ற ஆணையத்தின் அலைபேசி எண்ணிற்கு குறுந்தகவல் மற்றும் ஆணையத்தின் இணையத்தளத்திலும் (www.coopelection.tn.gov.in அதற்கென உருவாக்கப்பட்டுள்ள பக்கத்தில் (MIS) பதிவேற்றமும் செய்யப்பட வேண்டும்.

10) போட்டி இருந்து வாக்குப்பதிவு இருப்பின் வாக்குப்பதிவிற்கு முந்தைய நாள் அதற்கான இடம், வாக்குப்பெட்டி (Ballot Box), வாக்குச் சீட்டு (Ballot Papers) போன்றவற்றை தயார் நிலையில் வைத்திருக்கும் தகவல் தெரிவித்திடவேண்டும்.

11) வாக்குப்பதிவு அன்று வாக்குபதிவு தொடங்கும் நேரமும், தொடங்கிய பின்னர் ஒவ்வொரு மணி தோறும் பதிவாகிய வாக்குகள் விபரமும், வாக்குப்பதிவு முடிவுற்றபின் முடிவுற்ற நேரம் பற்றியும் தகவல் தெரிவிக்கவேண்டும். வாக்கு எண்ணுகையின்போது, ஆரம்பிக்கப்பட்ட நேரம், முடிவுகள் அறிவிக்கப்பட்ட நேரம் ஆகியவை அவ்வப்போது தெரிவிக்கப்படவேண்டும்.

12) ஒவ்வொரு தேர்தல் நடவடிக்கை முடிவுற்ற பின்னர் உரிய சட்டபூர்வ அறிக்கைகளை மாவட்ட தேர்தல் அலுவலர், மாநில தேர்தல் அலுவலர் மற்றும் மாநில தேர்தல் ஆணையத்திற்கு உடனுக்குடன் அனுப்பிடல் வேண்டும். (ஆணையத்தின் e-mail ID tnscsec.electcomn@gmail.com

13) தேர்தல் பணியின் போது எந்த ஒரு நிலையிலும் அசாதரணமாக ஏற்படும் உடல்நிலை பாதிப்பினாலோ, வேறு ஏதேனும் மிகவும் தவிர்க்க முடியாத காரணத்தினாலோ தேர்தல்

பணியில் தொடர்ந்து ஈடுபட முடியாத நிலை ஏற்படுமானால், மாற்றுத் தேர்தல் அலுவலர் (Alternative Election Officer) மூலம் அப்பணியினைத் தொடர்ந்து நடத்துவதற்கான ஏற்பாடுகளை மாவட்ட தேர்தல் அலுவலர் மூலமாக செய்திடல் வேண்டும்.

14) உடல் நலக்குறைவு போன்ற காரணங்களை திடீரென தெரிவித்து உரிய அறிவிப்பு மற்றும் மாற்று ஏற்பாடுகளை உறுதி செய்யாது தேர்தல் நடத்துவதை முடக்கம் செய்தால் கடுமையான ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

15) விதி 52 (18)(a) ல் சொல்லப்பட்டபடி கலகம் (Riot) அல்லது வெளிப்படையான வன்முறை (Open Violence) இயற்கை சீற்றத்தால் பேரிழப்பு ஆகிய காரணங்களில் ஏதாவது ஒன்று இருந்தால் ஆணையத்தின் முன்அனுமதி பெற்று மட்டுமே தேர்தல் நிறுத்தப்பட வேண்டும். மேலும் இது தொடர்பான ஆணையத்தின் சுற்றறிக்கை ந.க. 1153/2020/கூதே.3 நாள்:26.09.2022 படி செயல்பட அறிவுறுத்தப்படுகிறது. இவ்வாறு தேர்தலை நிறுத்தினால் அதனை உடன் அறிவிப்புச் செய்வதுடன் மாவட்ட தேர்தல் அலுவலர், மாநில தேர்தல் அலுவலர் மற்றும் மாநில தேர்தல் ஆணையத்திற்கு அறிவித்தல் வேண்டும். தேர்தல் அலுவலரால் இதற்கு மாறாக வேறு எக்காரணம் கொண்டும் தேர்தல் கண்டிப்பாக நிறுத்தப்படக்கூடாது. அவ்வாறு தேர்தல் நிறுத்தும் அலுவலர் மீது கடுமையான ஒழுங்கு நடவடிக்கைக்கு உட்படுத்தப்படுவார்.

16) தேர்தல் பணிகள் முடிவுற்ற பின்னர் அனைத்து தேர்தல் ஆவணங்களையும் (Election Records) மாவட்ட தேர்தல் அலுவலர் அல்லது அவரால் அதிகாரம் அளிக்கப்பட்டவரிடமோ முறையாக ஒப்படைத்தல் வேண்டும்.

17) தவிரவும் சட்டம், விதிகள் மற்றும் தேர்தல் ஆணையத்தின் அறிவுரைகளுக்குட்பட்டு, தங்களுக்கு ஒப்படைக்கப்பட்ட தேர்தல் பணிகளை நியாயமாகவும், சுதந்திரமாகவும் (Free and Fair) இந்த அலுவலர்கள் கண்டிப்பாக நடத்திட வேண்டும். தவறிழைப்போர் துறை அளவிலான கடும் ஒழுங்கு நடவடிக்கைக்கு உட்படுவதுடன், தமிழ்நாடு கூட்டுறவுச்சங்கங்களின் சட்டம் பிரிவு 157–ன் கீழும் நடவடிக்கைக்கு உட்படலாம்.

ஒம்/–
ஆணையர்

ஆணையருக்காக

14.2.23

**தமிழ்நாடு மாநில கூட்டுறவுச் சங்கங்களின் தேர்தல் ஆணையம், சென்னை – 18**

அனுப்புநர்:
திரு. தயானந்த் கட்டாரியா, இ.ஆ.ப.,
ஆணையர்,
தமிழ்நாடு மாநில கூட்டுறவுச் சங்கங்களின்
தேர்தல் ஆணையம்,
273, அண்ணாசாலை, தேனாம்பேட்டை,
சென்னை – 600 018.

பெறுநர்:
1. கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் / மாநில தேர்தல் ஆணையர்,
2. இதர செயற்பதிவாளர்கள் / மாநில தேர்தல் அலுவலர்கள்.

ந.க. 875/2022/கூ.தே.1 நாள் : 14.02.2023

ஐயா / அம்மையீர்,

பொருள் : கூட்டுறவுச் சங்கத் தேர்தல்கள் – நிர்வாகக்குழு உறுப்பினர்கள் மற்றும் தலைவர் / துணைத்தலைவர் தேர்தல் நடவடிக்கைகள் ஒருங்கிணைத்தல் – துறை ஒருங்கிணைப்பாளர் (Coordinator) ஒருவரை ஆணையத்திற்கு அனுப்புதல் (Depute) - தொடர்பாக.

****

2018 – ஒட்டுமொத்தத் தேர்தல்கள் நடைபெற்று தற்போது 2023-ல் நிர்வாகக்குழு உறுப்பினர்களின் 5 ஆண்டு பதவிக்காலம் முடிவடையும் 4,221 கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் புதிதாகப்பதிவு செய்யப்பட்டுள்ள சங்கங்கள் போன்று இதர வகையிலுமான கூட்டுறவுச் சங்கங்கள் என மொத்தமாக 6,993 தொடக்க கூட்டுறவு சங்கங்களின் புதிய நிர்வாகக்குழு உறுப்பினர்களுக்கான தேர்தல்கள் தலைவர் / துணைத்தலைவர் தேர்தல் நடத்த ஆணையம் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. இதற்கான தேர்தல் திட்டத்தையும் ஆணையம் விரைவில் வழங்க உள்ளது.

இவ்வகையில் பல்வேறு துறைகளின் நிர்வாகக் கட்டுப்பாட்டிற்குட்பட்ட சங்கங்களுக்கான தேர்தல் நடவடிக்கைகள், சங்கப் பட்டியல்கள், புள்ளி விபரம் பெறுதல் போன்ற அனைத்து வகையிலும் அத்துறைத்தலைவர் / மாவட்ட தேர்தல் அலுவலர்கள் ஆகியோர் உடன் ஆணையம் இணைந்து செயலாற்ற வேண்டியது அவசர அவசியமாகிறது.

எனவே தங்கள் துறையிலிருந்து அலுவலகக் கண்காணிப்பாளர் (Superintendent) பதவித்தரத்திற்குக் குறையாத ஒரு அலுவலரை ஆணையத்தில் ஒருங்கிணைப்பாளராகச் (Coordinator) செயல்பட 20.02.2023-க்குள் அனுப்பி வைத்திட (Depute) கேட்டுக் கொள்ளப்படுகிறது.

மேலும் அவர்களின் பெயர், பதவி விவரம் மற்றும் தொலைபேசி என் விவரங்களை 17.02.2023-க்குள் உடன் அனுப்பிட அன்புடன் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

ஒம்/-
ஆணையர்

ஆணையருக்காக

15/02/23

தமிழ்நாடு மாநில கூட்டுறவுச் சங்கங்களின் தேர்தல் ஆணையம், சென்னை – 18

**அனுப்புநர்**

திரு.தயானந்த் கட்டாரியா,இ.ஆ.ப.,
ஆணையர்,
தமிழ்நாடு மாநில கூட்டுறவுச்
சங்கங்களின் தேர்தல் ஆணையம்,
273, அண்ணாசாலை,
தேனாம்பேட்டை,
சென்னை – 600 018.

**பெறுநர்**

1. கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர்
2. அனைத்து செயற்பதிவாளர்கள்

**ந.க :** 773/2023/கூ.தே.1 **நாள் :** 14.06.2023

**ஐயா/அம்மையீர்,**

**பொருள் :** கூட்டுறவுச் சங்கங்களின் தேர்தல்கள் – ஒட்டுமொத்த தேர்தல்கள் 2023 – மாண்பமை சென்னை உயர்நீதிமன்றம் முன்பான W.P.No.5171/2023–ன் மீதான ஆணை – ஆறுமாத கால அவகாசத்திற்குள் உறுப்பினர் பட்டியல் சரிசெய்த பின்னர் ஆணையம் தேர்தல்கள் நடத்துதல் – உடனடி நடவடிக்கைகள் மேற்கொள்ளுதல் – தொடர்பாக.

**பார்வை :**

1) ஆணையத்தின் சுற்றறிக்கை ந.க.805/2022/கூதே2(1), நாள் 29.08.2022
2) ஆணையத்தின் சுற்றறிக்கை ந.க.805/2022/கூதே2(2), நாள் 29.08.2022
3) ஆணையத்தின் சுற்றறிக்கை ந.க.805/2022/கூதே2(3), நாள் 29.08.2022
4) திரு.K.S சண்முகம் என்பவரால் தாக்கல் செய்யப்பட்ட நீதிப்பேராணை எண் 5171/2023, நாள் 21.02.2023
5) மாண்பமை சென்னை உயர்நீதிமன்றத்தின் நீதிப்பேராணை எண் 5171/2023, தீர்ப்பு நாள் 28.04.2023

--//--

பார்வை (1) (2) மற்றும் (3) ஆகியவற்றில் குறிப்பிடப்பட்டுள்ள ஆணையத்தின் சுற்றறிக்கைகளில், 2023 ஒட்டுமொத்த (Enmasse) தேர்தல் 5 ஆண்டு பதவிக்காலம் முடிவடைந்த சங்கங்கள் மற்றும் இதர வகையிலும் தேர்தல்கள் நடத்த வேண்டிய கூட்டுறவு சங்கங்களுக்கான தேர்தல்கள் ஆகியவற்றை மார்ச் 2023 முதல், ஆணையத்திற்கேற்பட்ட சட்டபூர்வ கட்டளைப்படி, (Statutorily mandated) நடத்த வேண்டியுள்ளது பற்றியும், அவ்வகையில் உறுப்பினர் பட்டியல்களை சரி செய்தும், இதர வகையிலும் அனைத்துவகை ஆரம்ப கட்ட நடவடிக்கைகளையும் மேற்கொண்டு தயார்நிலையில் இருக்கும்படியும் அறிவுறுத்தப்பட்டது.

2) இந்நிலையில் சங்கங்களின் உறுப்பினர் பட்டியலை முழுமையாகச் சரிசெய்த பின்னரே கூட்டுறவு சங்கத் தேர்தல்களை நடத்திட வேண்டும் என்றும், அதற்கான உரிய ஆணை வேண்டியும் மாண்பமை சென்னை உயர்நீதிமன்றம் முன்பாக பார்வை(4)–ல் கண்ட நீதிப்பேராணை மனு தாக்கல் செய்யப்பட்டது.

3) இம்மனு மீது விசாரணை மேற்கொண்ட மாண்பமை சென்னை உயர்நீதிமன்றம், கூட்டுறவுச் சங்கங்களின் உறுப்பினர்/வாக்காளர் பட்டியல்களை சரிசெய்திட ஆறுமாத கால அவகாசம் வழங்கியும், அதன்பின்னர் அவற்றின் தேர்தல்களை ஆணையம் நடத்திட வேண்டும் என்றும் பார்வை (5)–ல் கண்டுள்ள ஆணை (நகல் இணைப்பு) வழங்கியது.

4) பார்வை (5)–ல் கண்ட மாண்பமை சென்னை உயர்நீதிமன்ற ஆணையில் உறுப்பினர்/வாக்காளர் பட்டியல் சரிசெய்திட வழங்கியுள்ள 6 மாத கால அவகாசம் என்பது மாண்பமை சென்னை உயர்நீதிமன்றத்தின் ஆணை தேதியான 28.04.2023 தேதியிலிருந்து தொடங்குகிறது என்று ஆணையம் தெரிவித்துக் கொள்கிறது.

5) மேலே பத்தி (4)–ல் தெவித்துள்ளபடி 6 மாத கால அவகாசம் 27.10.2023 வரை உள்ளதால் அக்கால அளவிற்குள் தங்களது நிர்வாகப்பொறுப்பிலுள்ள அனைத்து கூட்டுறவுச் சங்கங்களின் உறுப்பினர் பட்டியல்களில் உள்ள குறைபாடுகளைச் சரிசெய்திடுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது. 27.10.2023–க்கு பின்னர் கூட்டுறவுச் சங்கங்களின்

தேர்தல்களை ஆணையம் சுதந்திரமாகவும், நேர்மையாகவும் மற்றும் வெளிப்படைத்தன்மையுடனும் (Free, Fair and Transparent) நடத்திடும் வகையில், உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள ஆணையம் தங்களை அன்புடன் கேட்டுக்கொள்கிறது.

**(ஒம்)/-**
**ஆணையர்**

**ஆணையருக்காக**

**இணைப்பு** : மேற்கண்டவாறு.

**நகல்**

1) அரசு முதன்மைச் செயலாளர்,
   கூட்டுறவு உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை, சென்னை–9.
2) தொடர்புடைய அரசு செயலாளர்கள்.
3) அனைத்து மாவட்ட தேர்தல் அலுவலர்கள்.
4) இருப்பு கோப்பு – 2023.

IN THE HIGH COURT OF JUDICATURE AT MADRAS

DATED: 28.04.2023

CORAM

THE HON'BLE MR.T.RAJA, ACTING CHIEF JUSTICE
AND
THE HON'BLE MR.JUSTICE D.BHARATHA CHAKRAVARTHY

WP No.5171 of 2023
and WMP Nos.5174 and 5175 of 2023

K.S.Shanmugam ... Petitioner

-vs-

1. Tamil Nadu State Co-operative Societies Election Commission, rep. by its Commissioner, No.273, Kamadhenu Supermarket (1st Floor), Anna Salai, Chennai 600 018.

2. The Additional Chief Secretary to Government, Co-operation, Food and Consumer Protection Dept., Secretariat, Fort St. George, Chennai 600 009.

3. The Registrar of Co-operative Societies/ State Election Officer, N.V.N.Maligai, No.170, E.V.R. Periyar High Road, Kilpauk, Chennai 600 010.

4. A.A.226 Modakkurichi Primary Agricultural Cooperative Credit Society Ltd., rep. by its President/Secretary, Chinniampalayam Post, Modakurichi, Erode 638 104. ... Respondents

Prayer: Writ Petition under Article 226 of the Constitution of India praying for a Writ of Mandamus to direct the respondents 1 to 3 to obtain Form 16 from all eligible members of the 4th respondent and all other Cooperative Societies, by including their respective Aadhar Number and Family Card Number, to update the List of Members of the 4th respondent and all other Cooperative Societies, as of first day of January of each year, by including all the eligible members and by deleting the names of deceased/left/shifted members, including those who do not have the minimum shareholding, and notify the Final Members' List in the Notice Board of the 4th respondent and all other Cooperative Societies and thereafter conduct election to the 4th respondent and all other Cooperative Societies in the State of Tamil Nadu.



Gy0002511

Scanned with OKEN Scanner

For the Petitioner : Mr.V.Prakash
Senior Counsel
for Mr.P.V.Vinayakhamurthi

For the Respondents : M/s.M.Sneha (Standing Counsel)
for R1
Mr.J.Ravindran
Addl. Adv. General
assisted by Mr.A.Selvendran,
Spl.G.P. for RR 2 and 3

: Mr.P.Muthukumar
State Govt. Pleader for R-4

ORDER
(Made by the Hon'ble Acting Chief Justice)

Mr.K.S.Shanmugam, S/o.Songappa Gounder, has come up with this writ petition seeking issuance of writ of mandamus to direct respondents 1 to 3 to update the list of the members, notify the final members' list and thereafter to conduct election of the fourth respondent society and all other cooperative societies.

2. Today, the first respondent has filed a counter-affidavit and based on the averments in the counter-affidavit, Mr.J.Ravindran, learned Additional Advocate General appearing on behalf of the respondents 2 and 3, would submit that the second respondent has pointed out various shortcomings and irregularities in the electoral rolls and therefore, six months' time is sought to rectify the same and besides, the term had also expired on 02.04.2023 with respect to 4201 cooperative societies. Therefore, he would submit that the election will be conducted after the electoral rolls are rectified and are in strict compliance of the Act, Rules, bye-laws and circulars issued by the Commission to ensure fair and transparent elections.

3. Recording the averments made in the counter-affidavit and the submission of the learned Additional Advocate General, this writ petition is disposed of and six months' time is granted as undertaken in the counter-affidavit for the second respondent to rectify all the lapses and defects in the electoral rolls and thereafter, the first respondent shall hold the election. There will be no order as to costs. Consequently, WMP Nos.5174 and 5175 of 2023 are closed.

Sd/-
Assistant Registrar(CS-IX)

//True Copy//

Sub-Assistant Registrar

Gy0002512



Scanned with OKEN Scanner

sra

To

1. The Commissioner,
Tamil Nadu State Co-operative Societies
Election Commission, No.273, Kamadhenu
Supermarket (1st Floor), Anna Salai,
Chennai 600 018.

2. The Additional Chief Secretary to Government,
Co-operation, Food and Consumer Protection
Dept., Secretariat, Fort St. George,
Chennai 600 009.

3. The Registrar of Co-operative Societies/ State
Election Officer, N.V.N.Maligai, No.170,
E.V.R. Periyar High Road, Kilpauk,
Chennai 600 010.

4. The President/Secretary,
A.A.226 Modakkurichi Primary Agricultural
Cooperative Credit Society Ltd.,
Chinniampalayam Post, Modakurichi,
Erode 638 104.

+1cc to M/s.K.Arunagiri, Advocate, S.R.No.27265
+1cc to M/s.M.Sneha, Advocate, S.R.No.26955

WP No.5171 of 2023

CA(CO)
SB(06/06/2023)



Gy0002513

Scanned with OKEN Scanner

தமிழ்நாடு மாநில கூட்டுறவுச் சங்கங்களின் தேர்தல் ஆணையம், சென்னை – 18

| அனுப்புநர் | பெறுநர் |
|---|---|
| திரு. தயானந்த் கட்டாரியா,இ.ஆ.ப.,<br>ஆணையர்,<br>தமிழ்நாடு மாநில கூட்டுறவுச் சங்கங்களின் தேர்தல் ஆணையம்,<br>273, அண்ணாசாலை,<br>தேனாம்பேட்டை,<br>சென்னை – 600 018. | துணைப்பதிவாளர் (வீட்டுவசதி)<br>1. திருநெல்வேலி<br>2. திருச்சிராப்பள்ளி மண்டலம்<br>3. சேலம் மண்டலம்<br>4. கடலூர் மண்டலம் |

ந.க : 773/2023/கூ.தே.1 நாள்: 11.08.2023

ஐயா/அம்மையீர்,

**பொருள்:** கூட்டுறவுச் சங்கங்களின் தேர்தல்கள் – ஒட்டுமொத்த தேர்தல்கள் 2023 – மாண்பமை சென்னை உயர்நீதிமன்றம் முன்பான W.P.No.5171/2023–ன் மீதான ஆணை – ஆறு மாதகால அவகாசத்திற்குள் உறுப்பினர் பட்டியல் சரி செய்த பின்னர் ஆணையம் தேர்தல்கள் நடத்துதல் – உடனடி நடவடிக்கைகள் மேற்கொள்ள அறிவுறுத்தப்பட்டது – நினைவூட்டல் –தொடர்பாக.

**பார்வை:**
1) துணைப்பதிவாளர் (வீட்டுவசதி), திருநெல்வேலி அலுவலக கடிதம் ந.க.854/2023/ஈ1, நாள் 26.07.2023
2) துணைப்பதிவாளர் (வீட்டுவசதி), திருச்சி மண்டலம் அலுவலக கடிதம் ந.க.986/2022/சப, நாள் 01.08.2023
3) துணைப்பதிவாளர் (வீட்டுவசதி), சேலம் மண்டலம் அலுவலக கடிதம் ந.க.2987/2022/இ, நாள் 02.08.2023
4) துணைப்பதிவாளர் (வீட்டுவசதி), கடலூர் மண்டலம் அலுவலக கடிதம் ந.க.1200/2022/சப, நாள் 04.08.2023
5) மாண்பமை சென்னை உயர்நீதிமன்றத்தின் நீதிப்பேராணை எண் 5171/2023, தீர்ப்பு நாள் 28.04.2023
6) ஆணையத்தின் கடிதம் ந.க.773/2023/கூதே1, நாள் 14.06.2023

பார்வை (1) முதல் (4) வரை உள்ள கடிதங்களில் கூட்டுறவுச் சங்கங்களின் உறுப்பினர் பட்டியல்களை சரி செய்வதில் ஏற்படும் சிரமங்கள் மற்றும் இடர்பாடுகள் இருப்பதாகவும், இச்சிரமங்கள் மற்றும் இடர்பாடுகளை நீக்க ஆணைய அளவில் நடவடிக்கை மேற்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. இதுகுறித்து ஆணையம் தெரிவிக்க விரும்புவதாவது.

கூட்டுறவுச் சங்கங்களின் உறுப்பினர் பட்டியலில் ஆதார் எண் இணைத்தல், குடும்ப அட்டை எண் சேர்த்தல் மற்றும் இறந்த உறுப்பினர்களின் பெயர்களை நீக்குதல் போன்றவற்றை முழுமையாக சரிசெய்த பின்னர் 2023 ஒட்டுமொத்த கூட்டுறவுச் சங்கங்களின் தேர்தல்களை நடத்திட வேண்டுமென மாண்பமை சென்னை உயர்நீதிமன்றம் முன்பாக தாக்கல் செய்யப்பட்ட நீதிப்பேராணை எண் WP.No.5171/2023 மீது விசாரணை மேற்கொண்ட மாண்பமை சென்னை உயர்நீதிமன்றம், கூட்டுறவுச் சங்கங்களின் உறுப்பினர்/வாக்காளர் பட்டியல்களை சரிசெய்திட ஆறுமாத காலம் அவகாசம் வழங்கியும் அதன் பின்னர் அவற்றின் தேர்தல்களை ஆணையம் நடத்திடவேண்டும் என்றும் பார்வை (5)–ல் கண்டுள்ளபடி ஆணை வழங்கியது.

பார்வை (6)–ல் காணும் கடிதத்தில் மாண்பமை சென்னை உயர்நீதிமன்ற ஆணையில் கூட்டுறவுச் சங்கங்களின் உறுப்பினர்/வாக்காளர் பட்டியல்களை சரிசெய்திட வழங்கியுள்ள ஆறுமாத கால அவகாசம் 27.10.2023 வரை உள்ளது என்பது குறிப்பிடப்பட்டு, அக்கால அளவிற்குள் தங்கள் நிர்வாக பொறுப்பில் உள்ள அனைத்து கூட்டுறவுச் சங்கங்களின் உறுப்பினர் பட்டியலில் உள்ள குறைபாடுகளை சரிசெய்திடுமாறும் 27.10.2023–க்கு பின்னர் கூட்டுறவுச் சங்கங்களின் தேர்தல்களை நடத்திடும் வகையில், அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ள கேட்டுக்கொள்ளப்பட்டது.

**எனவே மாண்பமை சென்னை உயர்நீதிமன்ற ஆணையின்படி கூட்டுறவுச் சங்கங்களின் உறுப்பினர் பட்டியலை சரிசெய்திடுமாறும் மேற்படி மாண்பமை சென்னை உயர்நீதிமன்ற ஆணையின்படி நடைபெறும் இந்நடவடிக்கையினை**

உரிய கால அளவிற்குள் முடித்திடுமாறும், இப்பொருள் குறித்து ஆணைய அளவில் நடவடிக்கை ஏதுமில்லை என தெரிவித்து கொள்ளப்படுகிறது.

(ஒம்)/-
ஆணையர்

ஆணையருக்காக

நகல்

1) கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் (வீட்டுவதி)/ மாநில தேர்தல் அலுவலர், சென்னை-7.
2) இருப்பு கோப்பு - 2023.

தமிழ்நாடு மாநில கூட்டுறவுச் சங்கங்களின் தேர்தல் ஆணையம், சென்னை – 18

**அனுப்புநர்**

திரு. தயானந்த் கட்டாரியா, இ.ஆ.ப.,
ஆணையர்
தமிழ்நாடு மாநில கூட்டுறவுச் சங்கங்களின்
தேர்தல் ஆணையம்,
சென்னை – 600 018.

**பெறுநர்**

1) கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர்.
2) அனைத்து செயற்பதிவாளர்கள்.

**ந.க.1143/2023/கூ.தே1 நாள் : 19.09.2023**

**ஐயா,**

**பொருள் :** கூட்டுறவுச் சங்கங்களின் தேர்தல்கள் – ஒட்டுமொத்த தேர்தல்கள் 2023 – மாண்பமை சென்னை உயர்நீதிமன்றம் முன்பான W.P.No.5171–2023–ன் மீதான ஆணை – ஆறு மாதகால அவகாசத்திற்குள் உறுப்பினர் பட்டியல் சரி செய்த பின்னர் ஆணையம் தேர்தல்கள் நடத்துதல் – புதிய உறுப்பினர் சேர்க்கை பொறுத்த வரையில் கவனத்தில் கொள்ள வேண்டியவை – தொடர்பாக.

*****

ஒரு கூட்டுறவுச் சங்கத்தில், புதிய உறுப்பினர் சேர்க்கை பொறுத்த வரையில் கீழ்க்காணும் தகவல்களை கவனத்தில் கொள்ள வேண்டியது முக்கியமானதொன்றாகும்.

1988–ம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவு சங்கங்கள் சட்டம் பிரிவு 21(2)(i) வகையம் 2–ல் குறிப்பிடப்பட்டுள்ளதாவது.

*"எனினும் மேலும், சங்கத்தின் அலுவலகத்தில் விண்ணப்பம் பெற்றுக் கொள்ளப்பட்ட நாளிலிருந்து 60 நாட்களுக்குள்ளாக விண்ணப்பம் குறித்து நிர்வாகசபை (அல்லது பொதுக்குழு நேர்விற்கேற்ப) எடுத்த தீர்மானம் விண்ணப்பதாரருக்குத் தெரிவிக்கப்படவில்லையெனில், விண்ணப்பம், சங்க*

*அலுவலகத்துக்கு வரப்பெற்ற நாளுக்குப் பின்னர் 60–ஆம் நாளன்று, விண்ணப்பதாரர் அச்சங்கத்தின் அங்கத்தினராகச் சேர்த்துக் கொள்ளப்பட்டதாகக் கருத்தப்படவேண்டும்."*

எனவே ஒரு சங்கத்தின் புதிய உறுப்பினராக சேர்வதற்கான விண்ணப்பம் சங்கத்தின் அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளப்பட்ட நாளிலிருந்து 60 நாட்களுக்குள்ளாக விண்ணப்பம் குறித்து நிர்வாகசபை (அல்லது பொதுக்குழு நேர்விற்கேற்ப) எடுத்த தீர்மானம் விண்ணப்பதாரருக்கு கட்டாயம் தெரிவிக்கப்பட வேண்டும்.

அவ்வாறு தெரிவிக்கப்படவில்லையெனில், மேற்படி விண்ணப்பதாரரின் விண்ணப்பம் சங்க அலுவலத்துக்கு வரப்பெற்ற நாளுக்கு பின்னர் 60–ஆம் நாளன்று அச்சங்கத்தின் அங்கத்தினராகச் சேர்த்து கொள்ளப்பட்டதாகக் கருதப்பட (Deemed to have been admitted as a member of such society) வேண்டும் என்று சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. இச்சட்டப்பிரிவு 21(2)(ii)–ன்படி, இவ்வாரி பிரிவு 21(2)(i)–ன்படி சங்க அங்கத்தினராக சேர்த்துக் கொள்ளப்பட்டதாகக் கருதப்படும் அத்தகைய நபரை, பதிவாளர், தாமாகவோ அல்லது விண்ணப்பத்தின் பேரிலோ, எந்த நேரத்திலும், ஒரு ஆணை மூலம் அதற்கான காரணங்களை எழுத்து மூலமாக பதிவு செய்து, அவ்வாறு சேர்த்துக் கொள்ளப்பட்டதாகக் கருதப்படும் உறுப்பினர், சங்க அங்கத்தினராக சேர்த்து கொள்ளப்பட சட்டம், விதிகள் மற்றும் துணைவிதிகளின்படி தகுதி அற்றவராக இருக்கும்பட்சத்தில், உட்கூறு (i)–ன்படி சேர்த்துக் கொள்ளப்பட்ட அங்கத்தினர் நிலையில் இருந்து நீக்கப்படலாம். அவ்வாறு அவர் நீக்கப்படவில்லையெனில் அங்கத்தினராக சேர்த்துக் கொள்ளப்பட்டதாகக் கருதப்படும் அத்தகைய நபர் 1988–ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவு சங்கங்கள் விதிகள், விதி எண்.52(6)(a)–ன்படி வாக்குப்பதிவு தேதிக்கு 30 நாட்களுக்கு முன்பு எவர் சங்கத்தின் உறுப்பினர்களாக இருந்தார்களோ அந்த உறுப்பினர்களுக்கு தேர்தல் அறிவிப்பு அனுப்புதல் வேண்டும் என்ற விதிப்படி அங்கத்தினராக சேர்த்துக் கொள்ளப்பட்டதாக கருதப்பட வேண்டிய நிலை ஏற்படுவதோடு, அவர்களுக்கும் தேர்தல் அறிவிப்பு அனுப்ப வேண்டிய நிலையும்

மற்றும் 52(7)(a)–ன்படி வாக்குப்பதிவு தேதிக்கு முன்பான முப்பது நாட்கள் தேதியன்று சங்கத்தால் தயாரிக்கப்பட வேண்டிய வாக்களிக்க தகுதி பெற்றுள்ள உறுப்பினர் பட்டியலில் இடம் பெறும் நிலையும் ஏற்படும். எனவே பிரிவு 21(2)(i)–ன்படி சேர்த்துக் கொள்ளப்பட்டதாக கருதப்படும் உறுப்பினர்களை பிரிவு 21(2)(ii)–ன்படி நீக்க வேண்டியிருப்பின் அதற்கான ஆணையை தாமதமின்றி வழங்க நடவடிக்கை எடுக்க கேட்டுக்கொள்ளப்படுகிறது.

(ஒம்)/–
ஆணையர்

19/7/23
ஆணையருக்காக
19/7/23

**நகல்**

1) அனைத்து மாவட்ட தேர்தல் அலுவலர்கள்
2) அனைத்து மண்டல இணைப்பதிவாளர்கள்

வெளியீடு :

# தமிழ்நாடு மாநில கூட்டுறவுச் சங்கங்களின் தேர்தல் ஆணையம்


273, அண்ணாசாலை, தேனாம்பேட்டை,

சென்னை –600 018.